புற்றுடனே கரப்பானும் பிளவை யேது
ஏகுமே பவுத்திரங்கள் ரணங்க ளெல்லாம்
ஏழுதினம் தானருந்த சுருக்கு மெத்த
ஆகுமே பத்தியங்கள் இல்லை யில்லை
ஆகாத வஸ்துவெல்லாம் அருந்த வேண்டாம்
நாகமே தரித்தபிரான் உமைக்குச் சொன்னார்
நான்சொன்னேன் இப்போது நாடொண் ணாதே.

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு<br>பெருங்கிழங்கு<br>நிலப்பனை<br>பறங்கிப்பட்டை | வகைக்கு 12 விராகனெடை |

| | |
|---|---|
| முருங்கைப்பிசின்<br>ரூமிமஸ்து | வகைக்கு 12 விராகனெடை |

அசடுபோக்கிச் சுத்தித்த சேங்கொட்டை 16 விராகனெடை.

| | |
|---|---|
| நாய்க்கடுகு<br>குரோசானி ஓமம்<br>சதகுப்பை<br>ஓமம்<br>கருஞ்சீரகம்<br>கிருமாணி ஓமம் | வகைக்கு 8 விராகனெடை |

| | |
|---|---|
| இரசம் | 1 விராகனெடை. |
| பனைவெல்லம் | 4 விராகனெடை. |

வெற்றிலைக் காம்பு 500 எண்ணிக்கை

இம்மருந்துகளை நன்றாக உலர்த்திக்கொள்ள வேண்டும். மற்ற எல்லாச் சரக்குகளையும் உரலிலிட்டு ஆறுசாமமிடித்துச் சூரணித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு :** வெருகடி

**துணை மருந்து :** புளித்த மோர்.

**தீரும் நோய்கள் :** கிரந்தி, சூலை, குட்டம், திமிர்வாயு, அரையாப்பு, மேகவாயு, **புற்றுநோய்,** கரப்பான், பிளவை, பவுத்திரம், விரணங்கள்.

**உண்ணும் நாளளவு :** ஏழு நாட்கள்.

**பத்திரம் :** பத்தியம் இல்லை. ஆனால் ஆகாப்பொருள்களை உண்ணக்கூடாது.

### 3. கெந்தகச் சூரணம்:

**சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 2 (70 கிராம்), மஞ்சட் கடுக்காய்த்தோல் , தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், இலவங்கம், சந்தனம், கடலைப்பரு ப்புமா, சித்திரமூல வேர்ப்படை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சேராங்கொட்டைக் குழித் தைலம் 1/2 பலம், சர்க்கரை 10 பலம் (350 கிராம்).**

**செய்முறை : கெந்தகத்தைத் தூள் செய்து துணியில்வடி கட்டிக்கொள்ள வேண்டும். ம ற்றச் சரக்குகளையும் ஒன்றாக சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். பிறகு கெந்தகத்தூளை கல்வத்திலிட்டு சேராங்கொட்டைத் தைலத்தை விட்டு அரைத்து மற்ற சூரணங்களையும் சிறுகச்சிறுகச் சேர்த்து அரைத்து எல்லாம் சென்றபின்பு ஒருசாம நேர மை ரத்துச் செம்மையாக கலந்த பின்பு பத்திரப்படுத்தவும்.**

**அளவு : 1/2 முதல் 1 வராகன் எடை**

**அனுபானம் : வெண்ணெய், நெய் தேன் பறங்கிப்பட்டை, இளகம், வாதாம்பருப்பு இளக ம் முதலியவைகளாம்.**

**தீரும் நோய்கள் :** குட்டநோய்கள், நச்சுக்கடிகள், சந்துக்கடிகள், விக்கல், மார்ச்சிலந்தி, தலைவலி, வாதநோய்கள், கிராணி மூலம், பவுத்திரம், லிங்கப்புற்று, அல்குல்புற்று, மூத்திர கிரிச்சரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**பத்தியம் :** இச்சாபத்தியம், பால், நெய் முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவும்

## 4. வச்சிரவல்லிச் சூரணம்:

சண்ணுமே வச்சிரவல்லிச் சூரணத்தை சாற்றுகிறேன் கோப்பிரண்டை மெத்தநன்று, திண்ணமிகு கோப்பிரண்டை யுதவாவிட்டால் செயலாகக்கறிப்பிரண்டை முதியதாக, நண்ணவே வ நாலுபத்துப்பலந்தான் மைந்தா நறுக்கியே நரம்புதள்ளிக்கரணையாகப், பண்ணவேயொரு பாண்டத்துள்ளேவிட்டுப் பக்குவமாய்ப்பகருகிறேன் பாகங்கேளே.

பாகமாங்கல்லுப் புக்கறியுப்போடு பாறையுப்பு மிந்துப்பு வளையலுப்பு, ஆகமாங்கெந்தியுப்பு, சவுட்டுப்போடு, அட்டிப்பு, வெடியுப்போடொன் பதுப்பும், வேகமாம் வகையொன்றுக் கொரு பலந்தான் விரவியே பொடித்துப்பிரண்டைச்சாறூட்டி, ஏகமாய்ப் பிசறியே யூறவைத்து எழிலாவின்கொட்டத்திற் புதைத்திடாயே.

புதைத்துமே பட்சமொன்று சென்றுவாங்கி பொலிவாகரவியிலிட்டே மூறவைத்து, புதைத்திட்ட நீரெல்லா நன்றாய்வற்றிப் பொரியோலேயுலரந்தபின்பு புகலக்கேளு, புதைத்ததற்குத்திப் பிலியுங் கடுக்காய் சுக்குபொன்றத்தி திப்பிலியின் மூலஞ்சேரு, புதைத்ததற்கு வெண்காயம் செம்புமேலம் புகலரியவாய் விளங்க நவாச்சாரமாமே.

சாரமிகுமெவாச்சாரமன்னபேதி தாளிசையுஞ் சீரகமுவோமங்கள்ளி, வீரமா மாவிலங்குபுளிப்பெருக்கு விறல் சித்திரமூலமோடு, முருங்கைத்தோலும், ஆரமாம் மேனிவேர்த்தோல் வகைவகைக்கு அழகாகப் பலங்காலாய்ப் பிரண்டையோடு, சேரவே சேர்த்துமைந்தா விளவறுப் பாத்திறமாகச் சூரணந்தான் செய்வாய் நீயே.

செய்துமே யவ்வத்துள் கலசத்திட்டுச் சிறப்பாக மேனிச்சாறுவெள்ளாட்டுநீரும், ஐந்துமே மயிஞ்சிச்சாறு கரிசாலைச்சாறா மணக்கினிலைச்சாறு பேய்க்குமட்டிச்சாறும், எய்துமே முசுமுசுக்கைச்சதுரக்கள்ளி யிகுமான திருகுகள்ளிச் சாற்றோடொக்க பெய்துமே சங்குநொச்சி தழுதாழைச்சாறுபெட்புடனே வகைவகைக்குப்படியாழாக்கே.

அழகோடு சூரணத்தைப் பசறிமைந்தா அடல்பிட்டுப் போலாகவுண்டை செய்து, வழக்கமுடன் மேல்மூடிச்சிலை செய்து வண்மையுடன் புடன்போட்டு ஆறவிட்டு, சழக்கின்றி யெடுத்தத

**னைப் பதனம்பண்ணிச் சந்திமுதலந்தி வெருகடிதூள் கொண்டால், முழக்கமுடன் காய்ச்சல்பட் டி யட்டகுன்மம் முதண்டவாய்வுமுதல் தீதண்டாதே.**

**அண்டாது வாதமொடு வாய்வுச்சூலை ஆக்கிரமிகு கரி.... சந்திடுப்பும், அண்டாது திமிர் வாதகுளைவுகுத்து அசடுற்ற பித்த வாய்வு அக்கினிமந்தம், அண்டாது ரோசிகநோயுப்பசங்க ள் அனுகாது சீதளமுமன்ன தோஷம், அண்டாது சந்திகொள்ள புற்றும்போகும் ஆறாதநீராை ம கௌசிபோமே.**

# லேகியம்

## 1. சர்வ மேகத்திற்கு லேகியம்:

நீங்கு மேகம் நெருங்கியேயோடுதற்
காங்கு மிளகு கருதுங் கசகசா
வாங்கு கசகசா வகைக்குச் சரியெடை
தாங்குமே பூனைக்கால் விதைச் சேர்த்திடே.

சேர்த்துப் பதமாய் சிறக்க வறுத்துமே
பார்த்துச் சீனியும் பாங்காய் சரிசமன்
தூர்த்து லேகியந் துய்ய நறுநெய்யும்
ஆர்த்துப் பதமா யன்பாய்க் கிளறிடே.

கிளறி மண்டலங் கெட்டியாய்த் தானுண்ண
அளறு மேக மலறியே யோடிடும்
தளறு மேனி தடிந்து யிறுகிடும்
பளறு லேகியம் பாங்காக வுண்டிடே.

உண்டபோது முரையா மரையாப்பு
கண்டமாலை கதறியே யோடிடும்
அண்ட வாயு வபான பௌத்திரம்
துண்ட ரிணங்கள் துடித்தோடிப் போகுமே.

போகும் வெள்ளை பொருந்துங் குருதிப்புண்
ஏகுங் கிரந்தி யெழில் ரணஞ் சிலந்தியும்
வாகுஞ் சூலை வகுக்கும் யோனிப்புற்று
பாகு மார்த்தண்டன் பணிபோலே நீங்குமே.

நீங்கு பத்தியம் நேரிழையே கேளும்
பாங்கு முருங்கை பகரும் பசுப்பயர்
ஓங்கும் வெள்ளாட்டு யிறைச்சி யுப்புக்கண்டம்
தீங்கில்லாமல் திறமா யருந்திடே.

## 2. மேக குஷ்டத்திற்கு சேங்கொட்டை லேகியம்

**பாக்கதுபோற் பழுத்தநெல்லிக் காயின்சாறு**
**படியெட்டுக் கூவிளத்தின் வேர்தோல்தாமும்**
**தூக்கிரெண்டு நறுக்கியிரு மரக்காற்கியாழும்**
**சுகமாக ஆம்போது வெல்லந்தானும்**
**நோக்கமுடன் நூறுபலம் கரைத்துக்கூட்டி**
**நுணுக்கமாய்ப் பாகுசெய்து காட்டுச்சீரம்**
**காக்கவே கார்போகம் வாலுளுவை**
**கருஞ்சீர மோமங்குரோ சானிதானே.**

**கூவிளம்–வில்வம், சீரம்–சீரகம், கார்போகம்–கார்போக அரிசி, கருஞ்சீரகம் – கருஞ்சீரம்**

**பழுத்த நெல்லிக்காயின் சாறு எட்டுப்படி, கூவிளத்தின் வேரும் தோலும் இரண்டு தூாக்கு நறுக்கி–நெல்லிக் காய்சாற்றில் போட்டு கியாழம் வற்றி இரு மரக்கால் அளவு ஆகும் போது நூறுகலம் வெல்லம் கரைத்து பாகு காய வைத்து காட்டுச் சீரகம், கார்போகம், வாலுளுவை, கருஞ்சீரகம், குரோசாணி, ஓமம் முதலியவற்றுடன்.**

**தாணியுடன் திரிகடுக திருபலையும்மூன்று**
**தாணியடா துய்யுமந்தக் கிழங்குதானும்**
**ா னகத்தில் புங்கம்பூ வீழிப்பட்டை**
**காய்ந்தவகை பலமேழிற் பாதிகூட்டி**
**ஆனதினிப் பரங்கிப்பட்டை தூக்குஒன்று**
**அன்பாகச் சூரணித்துப் பாகிற்றூவி**

ஊனமிலா ஆவிநெய் படிதான் ரெண்டு
 உருக்கியிட்டுக் கிளறியதைக் கலையத்தேற்றே

திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) திரிபாலை (நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய்) இவற்றுடன் புங்கம்பூ, வீழிப்பட்டை, ஏழுபலம், பரங்கிப்பட்டை ஒரு தூக்கு இவற்றை நன்றாக காய வைத்து பொடித்துச் சூரணமாகச் செய்து வெல்லப்பாகில் தூவி கிண்டியபடி, இரண்டுபடி பசுநெய் விட்டுக்கிளறி ஒரு கலயத்தில் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

ஏற்றியதை நல்லதொரு சுபதினத்தில்
 இரு நேரம் மண்டலந்தான் புளிநல்லெண்ணெய்
மாற்றிவிடு ஆறாக இரணம்மேகம்
 வாதமொடு கிரந்திசொரி சிரங்குபுண்ணும்
ஆற்றிவிடுங் கடிவிங்கள் குட்டமோடு
 ஆறாத கைக்குத்தல் மேக ஊறல்
பூத்துடனே கடித்ததிமிர் வெடித்தபுத்தைப்
 போக்கிவிக்குந் தளிர்போல்நெய் யாகும்பாரே

ஒரு நல்ல நாள் பார்த்து உண்ணத் தொடங்கி ஒரு நாளைக்கு இரண்டு வேளைவீதம் நாற்பத்தெட்டு நாள் உண்ண ஆறாத ரணங்கள் ஆறும். மேகநோய்கள் தீர்ந்துவிடும். கிரந்தி, சொரி, சிரங்கு புண்கள் ஆறி விடும் வி-
க்கடிகள், குஷ்டநோய், தீராத கைக்குத்தல், மேக ஊறல், கடித்த புண்கள், வெடித்த புண்கள் யாவும் நீங்கி உடல் மாந்தளிர் போல் ஆகும்.

உண்ணஒரு மண்டலத்திற் கடிகள் தீரும்
 ஊறல்பெரு மேகவித ஊண்கள்புத்து
புண்ணதுகள் மண்டலமோ ரெண்டில் நீங்கும்
 பொய்யாது குட்டங்கள் ரெண்டிலப்பா
திண்ணமிதில் லோகமொடு நாகங்கூட்டித்
 தீர்த்துவிடுஞ் சக்கரமாய்த் தாரஞ்சூதம்
நண்ணுதலாய்ப் பற்பமே கூடிற்றானால்
 நசலுடம்பு தங்கம்போல் நன்மையாமே.

ஒரு மண்டல காலத்தில் அரிப்பு, எரிச்சல், ஊறல் நீங்கும் புற்றுப்புண்கள் இரண்டு மண்டலத்தில் தீரும் இதனுடன் நாகபற்பம் சேர்த்துப் சாப்பிட்டால் குஷ்ட நோய் தீரும் அரிதார பற்பம், இரசபற்பம் சேர்த்து உட்கொண்டால் எல்லாவித துன்பங்களும் அகன்று மேனி தங்கம் போல் ஆகும்.

## 3. குக்கில் வல்லாதி லேகியம்

. சீர்கெந்தி குக்கில் சிறக்கப் பலமெட்டுக்
காா்நந்திக் சத்துக் கனசீந்தில் – பேரெள்ளுங்
கொண்டு பலநான்கு கூறுங் கொடிவேலி
எண்ணீர் பலமாகு மிங்கு

இங்குத் திரிகடு கேற்றவிரு சீரகமும்
தங்குந் திரிபலையுக் தக்கோலம்–பொங்குமல்லி
கோட்டம் மதுரம் குரோசாணி வாலுழுவை
கூட்ட இருவரத்தைக் கொண்டு.

கொண்டு கிராம்பு குணமாஞ் சிறுதேக்குத்
தண்ணென் சிறுபட்டை சாதிக்காய்–குண்டேலம்
வெப்பாலை வாய்விளங்கம் வெள்ள வழுக்கரா
ஒப்பப் பறங்கியுட னோது

ஓதமுப் பத்திரியும் ஒப்பச் செவ்வியமும்
காத லிளங்கடுக்காய் கர்க்கட–மோ துசிங்கி
கண்டு பறங்கியுடன் காலிவித்துக் கூகைநீர்
விண்ட வதிவிடயம் வேண்டு

. வேண்டுங்கோ ரைக்கிழங்கு வித்தாகும் வால்மிளகு
கண்டானைத் திப்பிலியும் காண்பூவின் – தண்பனையும்
சாரப் பருப்போடு சார்கூத மோர்பலமாய்ச்
சேரத் துகளாகச் செய்.

செய்தே நிறைகொண்டு செப்ப சமன்வெல்லம்
தொய்ய விடித்ததனைத் தோகையரே–மெய்யாகச்
சுண்டைக்காய் போலளவு சொல்ல விருவேளை
கொண்ட தனிற்பயனால் கூறு.

. கூறுந் திமிர்குட்டம் குய்யக் குழிரணங்கள்
வீறுஞ் சொறிசிரங்கு வேதனையாய்–ஊறுறவே
கண்டத் துறுமாலை காண்புற் றரையாப்பு
உண்ட வுடனோடு மோது.

(க–து) கந்தகம், குக்கில் வகைக்குப் பலம்8, சேங்கொட்டை சீந்தில், சர்க்கரை என், வகைக்குப் பலம்–1, கொடுவேலி, பலம்–2, சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், தக்கோலம், தனியா, கோஷ்டம், அதிமதுரம், குரோசாணி ஓமம், வாலுமுழுவை, சித்தரத்தை, பேராத்தை, கிராம்பு, சிறுதேக்கு, சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், ஏலக்காய், வித்து, வெட்பாலையரிசி, வாய்விளங்கம், அமுக்கரா கிழங்கு, பறங்கிச்சக்கை, தாளிசப்பத்திரி, ஜாபத்திரி, லவங்கப்பத்திரி, செவ்வியம், பிஞ்சிக்கடுக்காய், கடுக்காய்ப்பூ, கண்டுபறங்கி, பூனைக்காலிவித்து, கூகைநீர், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வால்மிளகு, ஆனைத்திப்பிலி, கிலப்பனை, சாரைப்பருப்பு, வாலைரசம், வகைக்குப் பலம்–1.

**செய்பாகம் :** சேங்கொட்டை, கந்தகம், இவைகளைச் சுத்தி செய்து சூதத்தைக் கந்தகத்துடன் உறவாகும்படி நன்றாய் அரைத்துப் பின்னர் மற்றவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து, சிறு கண்களையுடைய சல்லடையால் அரித்து மேற்படி கந்தகத்துடன் கூட்டிக் கல்வத்திலிட்டு இரண்டொருநாள் கலக்கும்படியாக நன்றாய் அரைத்துச் சமனெடை பனைவெல்லம் கூட்டி, 2,3–சாமத்திற்குக் குறையாமல் எல்லாச் சரக்குகளும், உறவாகும்படி நன்றாய்ப் புரட்டிப் புரட்டி இடிக்கவும், பின்னர்ச் சேதப்படாமல் சாடியில் பத்திரப்படுத்துக. இதை வேளைக்குச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் இருவேளை அரை அல்லது ஒரு மண்டலம் உட்கொள்ள

**திமிர், குட்டம் குழிரணங்கள், சொரி சிரங்கு, கண்டமலை, புற்று, அரையாப்பு முத லிய மேகசம்பந்தமான ரோகங்கள் யாவும் நீங்கும்.**

# செந்தூரம்

## 1. கருவங்கச் செந்தூரம்:

மூன்று பலம் கருவங்கத்தை, இரும்புக் கடாயிற் போட்டு, அடுப்பிலேற்றி எரித்து, உருகின பதத்தில், பச்சை முருங்கைப் பட்டையைப் பஞ்சுபோல் இடித்து அதனுடன் 1½ – பலம் வெடியுப்புத் தூளைக் கூட்டிப் பிசரிக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அயக்கரண்டி கொண்டு தேய்க்கவும். இப்படி நான்கு அல்லது ஆறுசாமம் தேய்த்து எடுக்கப் பற்பமாகும். இதனைச் சீலையில் அரித்துத் திப்பியை நீக்கி அடியில் உள்ள பற்பத்தில் இரண்டு பலம் அளவிற்குக் கல்வத்தில் போட்டு சோற்றுக் கற்றாழையின் பால் விட்டு, இரண்டு சாமம் நன்றா யரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து, அகலில் பரப்பி மேலகல் மூடிச் சீலை செய்து காய்ந்த பின் 20–வறட்டியில் புடமிடவும். இப்படியே ஒவ்வொரு முறையும் சோற்றுக் கற்றாழையின் பாலால் இரண்டிரண்டு சாமம் நன்கு அரைத்து முன்போல் வில்லை தட்டிப் புடமிட்டுக் கொண்டு வர 10–புடத்தில் நல் செந்தூரமாகும். இச்செந்தூரத்தில் 4, 5 குன்றியெடை ஒரு அயக்கரண்டியில் போட்டுச் சிறிது நல்லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து எரித்து எண்ணெய் பற்றி எரிந்தபின் ஆறவிட்டுக் கரண்டியிற் பார்க்கச் செந்தூரமானது உருகி மணிகளாக இருக்கப் பெறின் உபயோகிப்பதற்குத் தகுதியான நல்ல மீண்டும் அதனை இரண்டு மூன்று புடம் கத்திலாம லிருக்கும் பொருட்டுப் போட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டுபோது வேளைக்கு 2,3– அரிசியெடை தினம் 2–வேளை தேனில் அனுபானம் செய்து 5–நாள் கொடுக்க மது மேகம், ஆறாத வீரணம், குழிவிழும் புண்கள், புற்று, புரைபோடும் ரணங்கள், கருமேகம், செம்மேகம், தடிப்பு முதலியவைகள் குணமாகும். இம் மருந்து, சரீரத்தில் வியாபித்துக் குணத்தைக் காட்ட ஏறத் தாழப் பத்து நாட்கள் செல்லும். சரிவரக் குணமில்லையென்று ஏற்படின்,

மீண்டும் முன்போல் 5–நாட்கள் கொடுக்கவும். இம்மருந்தைக் கொடுக்குங் காலத்தில் புளி தள்ளி இச்சா பத்தியமாக விருத்தல் நன்று.

**2. பஞ்ச பாடாண செந்தூரம் :**

தூய்மை செய்த பாடாணம், தூய்மை செய்த இலிங்கம், தூய்மை செய்த மனோசீலை, தூய்மை செய்த கெந்தகம், தூய்மை செய்த இரசக்கற்பூரம் இவை வகை 1–க்கு 1 பலம் (35 கிராம்), வெற்றிலைச் சாறு பருத்தியிலைச் சாறு, வெள்ளறுகு 1 (35 கிராம்), சமூலச்சாறு, துளசி சமூலச்சாறு, வேலிப்பருத்தி சமூலச்சாறு பொடுதலை சமூலச்சாறு இவை வகை 1–க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :– மேற்படி ஐந்து சரக்குளையும் தனித்தனி அஞ்சம் போல் பொடித்தும் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மறுபடியும் ஒரு சாம (3 மணி) நேரமரைத்து மேற்படி முறையே ஒவ்வொன்றாகச் சிறுகச் சிறுகவிட்டு நந்நான்கு சாம மரைத்து ஒரே வில்லையாகச் செய்து நான்குநான் வெய்யிலில் உலர்த்தி இரண்டு சட்டியை வாய் பொருந்தத் தேய்த்துக் கீழ்ச் சட்டியில் வெற்றிலையைப் பரப்பி அதன்மீது மேற்படி வில்லையை வைத்து மேலும் வெற்றிலையைப் போட்டு மூடி மேற் சட்டி மூடி ஏழு சிலை மண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக நான்கு சாம நேரம் (12 மணி) எரித்துக் குளிர ஆறின பின்புக் கவசத்தைப் பிரித்து மேற்சட்டியிலிருப்பதை சுரண்டி யெடுத்துக் கொள்ளவும். இது சிவந்து செந்தூரமாகி இருக்கும்.

**அளவு:** 1 முதல் 2 அரிசி எடை

**துணைமருந்து:** தேன், இஞ்சிச்சாறு, நெய், விளக்கெண்ணெய்,

இளகங்கள்ஆகியவைகளாம்.

**தீரும் நோய்கள் :** சன்னி, சுரம், வெண்குட்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், பெருங்கழிச்சல், கை கால் முடக்கு, பிளவை, கண்டமாலை, அரிகரப்பான், பெருநோய், தேமல், வண்டு கடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாதம், வலிப்பு, **கன்னப் புற்று,** கபாலகுட்டம், பவுத்திரம், முளை மூலம், மேகரணங்கள், முடிச்சுநோய், அரையாப்பு, கபாலசூலை முதலியவை தீரும்.

**குறிப்பு :** இது சிலசமயம் வெண்ணிறமான பதங்கமானகவும் இருக்கும் வண்ணம் எப்படியிருந்த போதிலும் குணம் செய்வதில் சந்தேகமில்லை.

**3. நாகச் செந்தூரம் :**

துத்தநாகம் (முத்திரைக் கட்டியாய்) பலம் – 10 இலுப்பை நெய்யையும், பசுவின் வெண்யெயையும் சமபாகமாகச் சேர்த்து இரும்புக் கரண்டியில் தடவி, மேற்படி நாகத்தைப்போட்க கொல்லுலையில் வைத்தூதி உருக்கி வெள்ளாட்டுப் பாலில் சாய்க்க வேண்டும். பாலானது இந்த நாகம் அமிழ்ந்து கிடக்கும்படியாகவு மிருக்க வேண்டியது. குளிர ஆறின பின்பு நாகத்தையெடுத்து மன்போற் கரண்டியில் இலுப்பை நெய்யையும், பசுவின் வெண்ணெயையுங் கலந்து கடவி நாகத்தைப்போட்டு உருக்கி வேறு புதிய பாலில் சாய்ய வேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி இருபது தடவையுருக்கிச் சாய்த்தாற் நாகமானது சுத்திபாகிவிடும். இதனை யெடுத்து வைத்துக்கொள்ளவும். இதுவே இங்கு வேண்டிய நாகசுத்தியாம்.

வெடியுப்பு பலம் – 20, ஓமம் பலம் – 10, மேற்றோல் சீவன சுக்கு பலம் – 1, மஞ்கள் பலம் – 1, இவையெல்லாவற்றையுந் தனித்தனி யிடித்துத் தூள் செய்து முடிவில் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்.

முன் சுத்தி செய்த நாகம் பலம் – 4, இதனை ஒரு புதுச்சட்டியிலிட்டு உருக்கி, முன் கலந்து வைத்திருக்குந் தூளைச் சிறுகச் சிறுகக் கிராசங் கொடுத்து வறுத்து

வர வேண்டும். இந்த தூளைல்லாஞ் சென்ற பின்பு நாகமானது தூளாகியிருக்கும். பிறகு செந்நாயுருவியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து வைத்துக்கொண்டு, முன்போல் சிறுகச்சிறுகக் கிராசங் கொடுத்து வரவேண்டும். மாதளம்பூப்போல வருணமான பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றை விட்டு நான்கு ஜாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை பறட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கச் செந்தூரமாயிருக்கும். சீஷா விற்பத்திரப்படுத்தவும்.

**அனுபானமும், உபயோகமும் :** மேற்றோல் சீவின சுக்கு, மிளகுஅரிசித்திப்பிலி இவற்றைத் தனித்தனி இளவறுப்பாக வறுத்திடித்த தனித்தனி சூரணம் வகை ஒன்றுக்குச் சமனெடை. மேற்படி சூரணங்களை ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதுவே திரிகடுகுச் சூரணம். இந்தத் திரிகடுகுச் சூரணம் விராகனெடை அரை, தேன் விராகனெடை ஒன்று, இரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தில் 2 குன்றிமணியெடை அனுபானித்துட் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலையிரண்டு வேளையுமாக 40 நாள் உபயோகித்து வந்தால், ஈழை, இருமல், எலிகடி, மந்தாரகாசம், க்ஷயசுவாசம், சுவாசகாசம், காசம், அரிகுரல், நெஞ்சுநோவு, சுபரோகங்கள், பித்த ரோகங்கள், உஷ்ணரோகங்கள், சுக்கிலப் பிரமிய ரோகங்கள், இந்திரியகண்டி ரோகங்கள், கல்லடைப்பு சதையடைப்பு, நீரடைப்பு, குன்மரோகங்கள், சோம ரோகங்கள், பவுத்திர ரோகங்கள், முகமெரிச்சல், காலெரிச்சல் ஆகியவைகள் தீரும்.

சித்திரமூலவேர்ப்பட்டைச் சூரணம் விராகனெடை அரை, தேன் விராகனெடை; இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி அனுபானித் துண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக 20 நாள் உபயோகித்தால், சத்திகுன்மம், ஆம்பல் ரோகம், ஆம்பல் பைத்தியம், ஈழைரோகம், இருமல் ரோகம், வாயுரோகங்கள், வாதரோகங்கள், குஷ்டங்கள், சிரங்குகள், சொறிகள், சேத்தும ரோகங்கள், வயிற்றுக் கட்டிகள்,

உள்ளங் காலிலுண்டாம் கறுப்பு, தேகத்திலு.ண கருத்தழும்புகள், முலைக்குத்து, **முலைப்புற்று** ஆகியவைகள் தீரும்.

**4. பாலரசச் செந்தூரம் :**

தேரன் குருமொழி திசையிலும் பொய்யாது
வேல செந்தூரம் விரும்பி யுரைக்கிறேன்
கூற கெந்திக் குறித்திடு மாற்பலம்
தீற தாரந் திரிபலந் தூக்கிடே.

தூக்குமே ரசந் துகள விருபலம்
தாக்கு வம்மியில் தகிக்கப் பொடித்துமே
பாக்கு வண்டத்தில் பதியப் பொதிந்துமே
வாக்கு தப்பாமல் வாகாய்ப் புடம்போடே.

போட செந்தூரம் பொருந்தும் பணவிடை
நீட வெண்ணெயில் நேர்மையாயுண்டிட
சடரோகங் குஷ்ட ரோகங் கிரந்தி
ஓட சூலையொழிந்து தானோடுமே.

ஓடும் நஷ்ட முறையும் லிங்கப்புற்று
தேடு மாலை தெறிக்கு மரையாப்பு
நீடுங் காசம் நெகிழும் விப்பிருதி
மூடுஞ் சன்னி முறையு மிட்டேங்குமே.

### 5. கருவங்கச் செந்தூரம் :

தூய்மைசெய்த கருவங்கம், நற்பவழம், சிலாசத்து வகைக்கு **1** பலம், சூதம் அரைப்பலம் இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றால் **3** நாளாட்டி வில்லைசெய்து காயவைத்துப்புடம் போட்டு எடுத்து நான்கில் ஒரு பாகம் கெந்தி சேர்த்துப் பொற்றலையின் சாற்றால் ஆட்டிச் சிவக்கும்வரை புடம் போட்டு அமிர்தசஞ்சீவி இளகத்தில் உட்கொள்ள கழிச்சல், கடுப்பு, இரத்தமாய்க் கழிதல், எருவாய்க் காந்தல், **இலிங்கப்புற்று** முதலான கொடிய மேக நோய்கள் தீரும்.

### 6. இரசச் செந்தூரம் :

பாரப்பா யின்னமொரு செந்தூரந்தான்
        பரிவாகச் சூதமடா பலந்தான்வாங்கி
சேரப்பா யிலுப்பை நெய்யிற் சுத்திபண்ணி
        சீராகத் தானெடுத்து வைத்துக்கொண்டு
ஆரப்பா யெனைப்போலச் சொல்வாரப்பா
        அப்பனே நானுனக்குச் சொன்னேன்பாரு
சேரப்பா சொல்லுகிறேன் காரம்பூரம்
        திறமாகத் தானிரண்டு விராகன்கூட்டே

கூட்டியபின் கஸ்தூரி மஞ்சளப்பா
        குமுறவே மரமஞ்சள் விராகனொன்று
கூட்டிக்கொள் ளாட்டிவிடு வெற்றிலையின் சாற்றில்
        குறிப்பாக வரைத்துவிட மூன்றுசாமம்
தீட்டியே மயேஸ்வரிக்குப் பூசைமார்க்கம்
        திறமாகச் செய்துமே பீசம்போடு
மாட்டியே வில்லைபண்ணி ரவியில்வைத்து

மைந்தனே மயிற்புடத்தில் செந்தூரமாமே

செந்தூரந் தானேடுத்து வைத்துக்கொண்டு
திறமாக வெண்ணெயிலே கொடுக்கும்போது
மந்தார காசமுடன் புண்புரைகள் போகும்
மயக்கமுடன் பித்தத்தால் வந்தமேகம்
தொந்தரைகள் செய்கின்ற காசரோகம்
துடியான வாதமுடன் முடக்குச்சூலை
சிந்தைதப்பா குடைச்சலோடு முடக்குசூலை
தீர்ந்துவிடுஞ் சொல்லுகிறேன் திறமாய்த் தானே.

சொன்னேனப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது
துடியான சூலையெல்லாம் பறந்துபோகுஞ்
சொன்னேனான் வெல்லத்திற் கொள்ளும்போது
கரசன்னி மார்க்கமா சூடாய்த்தீரும்
சொன்னேனே திரிகடுகில் கொள்ளும்போது
சூலைமுதல் **அரையாப்பு புற்று**ப்போகும்
சொன்னேனா னிதுபோலே செந்தூரத்தைச்
சொல்லவில்லை மெய்ஞ்ஞானச் சூட்சந்தானே

### 7. பஞ்ச பாஷாணச் செந்தூரம் :

சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், தாரம், கெந்தி, இரசகர்ப்பூரம், வெள்ளைப்பாஷாணம், இவை வகைக்குப் பலம் 1 (35 கிராம்) இவைகளைச் சுத்தி செய்து, குப்பைமேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளருகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை, இவைகளின் சாற்றால் வகைக்கு நாலு சாமம் (12 மணி) ஆட்டி, வில்லை செய்து நிழலிலுலர்த்தி, அதற்கு வெற்றிலையால் கவசஞ்செய்து, ஒரு

சட்டியில் வைத்து, மேற்சட்டி கொண்டு மூடி, ஏழு சீலைமண் செய்து நன்றாகக் காயவைத்து அடுப்பேற்றி தீபம் போல நாலு சாமம் (12 மணி) எரித்தாற்றிப் பார்க்க மேற்சட்டியில் சிந்தூரம் பற்றியிருக்கும். அதை எடுத்துப் பணவெடை (488 மி.கிரா) தேன், இஞ்சிச்சாறு இவைகளில் அனுபானித்துக் கொடுக்க சன்னி, சுரம், வெண்குட்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், கிராணி, கை கால் முடக்கு, பிளவை, புற்று, கண்டமாலை, குறைநோய், அரிகரப்பான், தேமல், வண்டுக்கடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாழை, வலிப்பு, **கன்னப்புற்று**, கபாலகுட்டம், பவுத்திரம், மூலமுளை, காசரோகம், மேகப்புண்கள், கிரந்தி, அரையாப்பு, கபாலச்சூலை முதலான வியாதிகள் தீரும்.

**8. வங்கச் செந்தூரம் :**

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த வங்கப் பொடியில், நாகமல்லியிலைச்சாறு, வாழைக் கிழங்கின்சாறு இரண்டையும் தனித்தனியாக நான்கு பலம் (140 கிராம்) வீதம் விட்டு, நான்கு நாளரைத்து, வில்லை செய்து மூன்று நாள் உலர்த்திக் கவசித்து, ஒரு நாள் உலர்த்தி முப்பது வரட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாம்.

| **துணைமருந்து** | **தீரும் நோய்** |
|---|---|
| வெல்லம் | பித்த சன்னி |
| பால் | கழலை (புரை குழல்) |
| ஆலம்பால் | சலவியாதி |
| **கருப்பஞ்சாறு** | **கழுத்தில்வருகிற விரணப்புற்று (கண்டமாலை)** |
| சந்தனக் குழம்பு | சத்தி குன்மம். |
| சர்க்கரை | நேத்திரவாயுக் கபம். |
| வன்னியிலைச்சாறு | தலைக்காங்கை, பித்த வறட்சி |
| கள் | சேத்ம விக்கல் |
| சிறுநீர் | காசரோகம் |

தேன் தேமல்

ஒரு பலம் (35 கிராம்) காரீயத்தைச் சட்டியிலிட்டு உருக்கி, உருக்கு முகத்தில் எட்டுப்பலம் (280 கிராம்) பச்சை மஞ்சள் தூளைச் சிறிது சிறிதாகக் கிராசம் கொடுத்துக்கொண்டு, நாயுருவிச் சமூகத்தால் பதினைந்து நாழிகை வறுத்துப்பிறகு காற்பலம் (8.75 கிராம்) சவுக்காரம் இட்டு வறுத்து, பின்பு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) வெடியுப்புச் சேர்த்து வறுத்து, முடிவில் ஒரு கழஞ்சு (5.1 கிராம்) அரிதாரம் சேர்த்து வறுத்தொடுக்கச் செந்தூரமாம்.

## 9. கருவங்க செந்தூரம் :

**தூய்மை செய்த கருவங்கம் 1 பலம் (35 கிராம்), நாகமல்லிகை, இலைச்சாறு செல்லத்தக்க அளவு, வாழைக் கிழங்குச்சாறு செல்லத் தக்க அளவு.**

**செய்முறை : மேற்படி வங்கத்தை அரத்தால் இராவசித் தூளாகச் செய்து கொள்ள வேண்டும், இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி நாகமல்லிகை இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதைனத் தொடர்ந்தார்போல் அரைக்க வேண்டுமென்னும் நிபந்தனையில்லை. சாவகாசமான காலங்களிலெல்லாம் அரத்துக் கொள்ளலாம்.**

**ஆனால், எவ்விதமும் நான்கு சாமம் அரைப்பாக வேண்டியதே பிரதானம். பிறகு வில்லை செய்து உலர்த்தி ஓட்லிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி ஐம்பது பலம் விராட்டியிற் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்து முன்போலவே முன் சாற்றில் அரைத்து அரைத்து மடக்கி மடக்கி இன்னும் நான்கு புடமும் போட்டுக் கொள்ள வேண்டும்.**

**இவ்விதமே வாழைக் கிழங்குச் சாற்றில் அரைத்து அரைத்து மடக்கி மடக்கி ஐந்து புடம்போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகக்கூடிய பத்துப் புடமுமிட்டுத் தீர்ந்தால் வாலறிவன் அருளால் மிகமேலான செந்தூரமாகி இருக்கும்.**

**அளவு :** 1/2 முதல் 1 குன்றிமணி எடை

**தீரும்நோய்கள் :** தகுந்த துணைமருத்துகளிலிட, சன்னி நோய்கள், இர ண நோய்கள், நீரிழிவு, நீர்பெருக்கு, நீரறுகுதல், நீர்க்கோவை, நீரேற்றம், கழுத்து இரணப்புற்று, சத்திகுன்மம், நேத்திரவாயு, கபால உஷ்ணம், பித்த வறட்சி, வாதவிக்கல், காசநோய்கள், சயகாச நோய்கள், அழுக்குத் தேமல், தேமல் முதலிய அநேக நோய்கள் தீரும். உபயோகிப்பது உத்தமம், நோய் பலத்திற்குத் தகுந்தபடி ஏற்படுத்திக்கொள் ள வேண்டியது. சூலை, குன்மம், குடல்வாதம், முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு :** நோய் வலிமைக்குத் தகுந்தபடியும், உடல் தன்மைக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

**10. உத்தர இரசசெந்தூரம் :**

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய் க்கெந்தகம் 4 1/2 பலம் (157 1/2 கிராம்), தூய்மை செய்த நாபி 3 பலம் (105 கிராம்), தூய்மை செய்த சாதிலிங்கம் 1 1/2 பலம், தூய்மை செய்த மனோசிலை 1 பலம் (35 கிராம்), செருப்படிச்சாறு, கற்றாழஞ்சாறு மாதளம்பூச்சாறு அல்லது இலைசாறு இ வை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** இரசத்தையும், கெந்தகத்தையும், சேர்த்தரைத்துச் செம்மையா கக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து இதனுடன் சேர்த் து ஒரு மணிநேரம் அரைத்துச் செருபடிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சா ம நேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். பிறகு, சே ாற்றுக்கற்றாழைச் சாற்றில் ஒரு சாமமரைத்து முன் போல் உலர்த்திக் கொள்ளவும் . பிறகு, மாதளம்பூச் சாற்றில் பன்னிரண்டு சாமமரைத்து உலரத்திப் பொடிபண்ணி ஏழு சீலைமண் செய்துலர்த்தின கைக்குப்பியில் அரைவாசியிட்டு வாய்க்குப் பலப்ப க்கல்காரக்கிட்டுச் சீலைமண் செய்து அடிகனத்த பானையில் நான்கு விரற்கடை மணலிட்டு அதன்மேல் குப்பியை வைத்துக் குப்பிக் கழுத்து வரை மணலிட்டுத் தா ன் வழிபடுங் கடவுளைப் பூசித்து தீபாக்கினி ஒரு சாமம், கமலாகக்கினி இரண்டு சா

மம், காடாக்கின் இருபத்தோரு சாமமாக எரித்து ஆறவிட்டு அன்னதான முதலிய வைகள் செய்து தான் வழிபடும் கடவுளே துதித்துக் குப்பியை உடைத்துக் பார்கக்க கடவுள் அருளினால் செந்தூரமானது முருக்கம்பூப் போலே இருக்கும். இதனைப் பு ட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1/2 முதல் 1 குன்றி எடை

**மருத்துணவும், தீரும்நோய்களும் :** மேற்றோல் சீவின சுக்கு மிளகு, அரிசி த்திப்பிலி இம்மூன்றையும் தனித்தனியே வெதுப்பித்தனித்தனியாக இடித்தத்தூள் வகைக்கு 4 குன்றிமணியெடை, தேன் 1 வராகன் எடை (3 1/2 கிராம்). இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி அனுபானித்து. காலை, மாலை இர ண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள, பதினெட்டுவகைக் குட்டங்கள், குறை நோய்கள், காணாக்கடி, நச்சுக்கடி, எலிக்கடி, வாதநோய், காலில் கடிநஞ்சு, செய் யான் கடி, அட்டைக்கடி, செவ்வட்டைக்கடி, புழுக்கடி, கீரைச்சோறு, புழுக்கடி இவற் றின் நஞ்சுகளெல்லாந் தீரும்.வெண்ணொச்சிச் சாறு 1 1/2 வராகன் எடை, தேன் 1 1/2 வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செய்தூரத்தை அளவு ப்படி கலந்த இரண்டு வேளையும் நாற்பதுநாள் உட்கொள்ள எண்பதுவகை வாத நோய்கள், பதின்மூன்று வகை சன்னி நோய்கள், ஏழுவகைத் தோடங்கள், வாயுக ள், விகாரங்கள் ஆகியவை எல்லாம் தீரும்.

ஆவாரம் விதைத்தைலம் 1 வராகனட எடை ( 3 1/2 கிராம்), வங்கபற்பம் 1 கு ன்றிமணியெடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி இரண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள, இருவதுவகை நீரிழிவுநோய், மூ த்திரக்கிரிச்சரம், இந்திரகண்டி நோய், பன்னிரண்டுவகை சோமநோய்கள், ஆறவ கை நடுக்குநோய், எட்டுவகை நாக்குளறல் நோய், நாவின் கழலே, நாவின் சிலந் தி, நாவின் பட்டி, உண்ணாக்குவிழ்தல், உண்ணாக்கு சிறுத்தல், தொண்டைக்கட்டு **,தொண்டைப்புற்று**, மண்டைச்சூலை, செவிக்காளான், செவிப்பொருமல், **லிங்கப்பு ற்று, அல்குல்புற்று** ஆகிய இந்த நோய்களெல்லாம் தீரும்.

## 11. கருவங்கச் செந்தூரம் :

காரிபலமு நாலு எடுத்துக்
கனிய வேயதை யுருக்கிப்பின்
கண்டாயவ்வெடை யிணங்கன் பொடித்து
நன்றாவரிப் பாலினில்
வாரியாகவே சாமம் நாலு
வலுக்க வரைத்து உருட்டியே
வகையுடன் சுண்டக் காயின்பிரமாணம்
துகையாய்க் கிராசமிட்டிட
நாரியாக்கேளுங் குமரிப் பாலை
நாடி யூற்றிக் கட்டியே
நலமதாகவே வில்லை கட்டியே
பெலமதாய்ப் புடம் போட்டெடு
காரிசிவந்து முருக்கம் பூவெனப்
பாரினிநே வாத மெல்லாம்
கதிந்து முனிவர் தானுரைத்தது
பதிந்துபாரும் பள்ளீரே.

தூய்மை செய்த கருவங்கம் 4 பலம் (140 கிராம்), வெடியுப்பு 4 பலம் எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, சோற்றுக்கற்றாழை அடிமரத்தின் பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** வெடியுப்பைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து சுண்டக்காய் அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். கருவங்கத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி உருக்கி நன்றாயுருகின பின்று முன் சித்தப்படுத்தியிருக்கிற வெடியுப்பு மாத்திரைகளை ஒவ்வொன்றாக சுருக்கிட்டு இரும்புக் குச்சி பால் துழாவி வரவேண்டும். எல்லா மாத்திரைகளும் சென்று விட்டால் கருவங்கமானது நொறுங்கிக் களங்கமற்றதாகிவிடும். பிறகு, இதனைக் கல்வத்திலிட்டுக் குமரிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒட்டிவிட்டு மேலோடு மூடி ஐந்து சிலைமண் செய்து இருநூறுபலம் விராட்டியிற்புடமிட்டு ஆறினபின் எடுக்க முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

**அளவு :** 1 1/2 முதல் 2 குன்றியெடை

**துணைமருந்து :** தேன், நெய், வெண்ணெய், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த இளகம் முதலியவைகளாகும்.

**தீரும் நோய் :** பிரமேகம், குனம நோய், பறங்கிச்சூலை, வாத நோய், பித்த ே நாய், அதிசாரம், மூல சயம், இருமல், வெட்டை, அரையாப்பு, **புற்றுகள்,** இந்திரிய ஒழுக்கு நோய் மேக நோய் முதலியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி, உடல் வலிமை முதலியவைகள் உண்டாகும்.

குறிப்பு : இது வாதமுறைகளுக்கு காகுமென மூலத்திற்சொல்லி இருப்பினும், இது நோய்களுக்கே சிறப்பாக உபயோகப்படுத்தப் படுகின்றபடியால் இதனை மருத்துவ முறைகளுடன் சேர்த்தெழுதி இருக்கின்றோம்.

### 12. வங்கச் செந்தூரம் :

குமரிச் சோறுதனை யெடுத்திடுநீ
 கூட்டிக் கடுக்கா யுடைத்திடு
குணமதாயதைப் போட்டுப் பிசைந்து
 கூர்ந்துபிழிய நீரதாம்
அமரிக் கையுடன்வங் கத்திலிடு
 அரைத்து விலை ரவியிடு
அடவதாகவே பொரியப் புடமுந்
 திடமதாகப் போட்டெடு
தமரிக் கையுடனஞ்சு புடத்தில்
 தாக்கச் சிவக்கு முருக்கம்பூ
நாக்கியேயெடு சிலையுஞ் சூதமுந்
 தாகநேரெடை யிட்டிடு
நமரிக் கைவரிப்பா லைநேரிடு
 நாட்டியே மெள்ளப் பூட்டிடு
நலம் தாகவே வில்லைகட்டியே
 உலரவேபுடம் போட்டிடே.

போட்டெடுக்க முருக்கம் பூப்போல
 நாட்டிற் பண்டித ரெல்லாரும்
பொருந்த மதுவிற் பணவெடையிட
 அருந்தச் சயமுங்காசமும்
கேட்டுவாத மெண்பதும் போகும்
 நாட்டு மேவலி குன்மமும்

சுருத்த சூலைபதி னெட்டும்போகும்
 கருதியாய்ப் பித்தம்நாற்பதும்
வாட்டுங்கார் மேக முமனை

யாட்டியரை யிற்புத்தும்
வளிம கோதரம் பவுத்திரம்முதல்
ஒழியுமேழுரை நாளினில்
பாட்டுதனக் கரியப் தியமரைக்
கீரைப் பிஞ்சு மாங்கொட்டை
பதியவே கட்ட வத்தலையாவின்
பாலுங் கூட்டி யுண்டிடே.

கருவங்கம் 1 பலம் (35 கிராம்) பேரண்ட ஓடு, அல்லது சிற்றண்ட ஓடு 1 பலம், இதனைப் பொடித்துத் தூள் செய்துக்கொள்ள வேண்டும். வங்கத்தைச் சட்டியிலிட்டு உருக்கி உருக்கு முகத்தில் மேற்படி அண்டத்தூளைச் சிறுகச் சிறுகச் சுருக்கிட்டு இரும்புக் குச்சியால் துழாவிவர வேண்டும். எல்லாத் தூளும் சென்று வங்கமும் நொறுங்கித் தூளான பின் எடுத்து கொள்ளவும்.

சோற்றுக்கற்றாசைச் சோற்றில் கடுக்காய்த்தூளைப் போட்டுப் பிசைந்து வடிகட்டின நீர் செல்லத்தக்க அளவு. மேற்படி வங்கத்தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி ஒட்விட்டு மேலோடு மூடி, மூன்று சிலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை விராட்டியிற் புடமிட்டுஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

பிறகு மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு முன் போலரைந்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து புடமிடச் சிவந்து போகும். அப்படிச் சிவக்காவிட்டால் சிவக்கிற வரையில் இன்னும் இரண்டொரு புடமிடவும்.

பிறகு இச்செந்தூரம் ஒரு பங்கு, மனோசிலை ஒரு பங்கு, தூய்மை செய்த இரசம் ஒரு பங்கு, இம்மூன்றையும் கல்வத்திலிட்டரைத்து எல்லாம் ஒன்றாய்க் கலந்தபின்பு எருக்கும்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒட்டுவிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியில் புடமிட்டெடுக்க, முருக்கம் பூப்போன்ற செந்தூரமாகி இருக்கும்.

**அளவு :** 1 முதல் 1 1/2 குன்றியெடை

**துணை மருந்து :** தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :** சயம், காசம், வாநோய்கள், குன்மநோய்கள், சூலை நோய்கள், பித்த நோய்கள், கருப்பு மேகங்கள், அரைப்புற்று, இலிங்கப்புற்று, மகோதரம், பவுத்திரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :** முருங்கைப் பிஞ்சு, அரைக்கீரை, அவரைப்பிஞ்சு, மாங்கொட்டை, சுட்டபுளி, பசுவின் பால் ஆகியரைகள் ஆகுமெனினும், நோய் வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்கு தகுந்தபடி உடலியல்பிற்கு ஏற்கும் பண்டங்களைச் சேர்த்தும், ஏற்காத பண்டங்களை நீக்கியும் பத்தியம் வைக்கவேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 13. வங்கச் செந்தூரம்:

வங்கமது உருக்கையிலே கொத்தமல்லி
வலுவம்மன் பச்சரிசி விஷ்ணுகாந்தி
பங்கமது சாமம்ரெண்டு வருக்கத்தூளாம்
பற்பமதைக் கதலித்தண்டு சாற்றாலாட்டி
அங்கியதிற் புடமாறு தீர்ந்தபின்பு
அதைக்குமரி அன்னமிட்டு அரைத்து நான்கு
வெங்கனிலிற் புடம்போடத் தோம் நீங்கும்
வேண்டியதோ ரனுப்பான விதத்திலீயே
கதலித்தண்டு–வாழைத் தண்டு
குமரி அன்னம் – சோற்றுக்கற்றாழைச் சோறு
அங்கி – நெருப்பு
அங்கியதில் புடமாறு தீர்ந்த பின்பு –நெருப்பில் ஆறுபுடன் போட்ட பிறகு

ஈயத்தை உருக்கும் போது கொத்தமல்லு, அம்மான் பச்சரிசி, விஷ்ணுகாந்தி இவற்றுடன் சேர்த்து இரண்டு சாம நேரம் வறுத்தால் தூளாகும். அந்த தூளை வ ாழைத்தண்டு சாறு விட்டு நன்றாக அரைத்து புடம் போடவும், மறுபடியும், மறுபடியு ம் வாழைத்தண்டு சாறு விட்டு அரைத்து புட் போட வேண்டும். ஆறு முறைபுடம் போ ட்டபின் அதை எடுத்து சோற்றுக்கற்றாழை சாறு விட்டு அரைத்து சூரிய வெப்பத்தில் நான்கு முறை புடம் போட்டால் அதன் தோங்கள்யாவும் நீங்கி விடும்

சேர்க்கையதின் குணங்கேளீர் பத்தோர்மேகம்
சீரியதோர் கவிசைவலி லிங்கப்பத்து
நீர்க்கடுப்பு மணிகரைதல் தாதுநஷ்டம்
நீரிழிவு யெலும்புருக்கி அஸ்திமேகம்
மூர்க்கபிர வாதவலி யையத்தாலே
முடியவந்த பிணியகற்றிச் சுகமுண்டாக்கும்
பார்க்க உடல் தங்கநிற மாகும்மேனி
பத்திவந்த நீரிழிவு பாழதாமே.

பிறகு அதை தக்க அனுபானத்துடன் கொடுக்க கொடிய மேக ரோகங்கள், க விசை வலி, லிங்கப்புற்று, நீர்க்கடுப்பு, தாது நஷ்டம், நீரிழிவு, எலும்புருக்கி, எலும் பில் பற்றிய மேக ரோகங்கள், கபக்கட்டினால் ஏற்பட்ட கொடிய ரோகங்கள் யாவும் நீங்கும். உடல் தங்க நிறமாகும்.

## 14. வெள்ளீயச் செந்தூரம்:

காணப்பா வெள்ளீயங் சுத்தி செய்து
கசகாம லுருக்கியே கல்வத் திட்டு
பூணப்ப வெடி யுப்பு ரோமப் பூவும்
புகழாகப் பலத்துக்குக் கழஞ்சி வீதம்
தோணப்பா ராசிவங்கம் பலந்தா னொன்று
துடிகொண்ட கெந்தகந்தான் பலந்தான் ரெண்டு
நாணப்பா பழச்சாற்றா லிரண்டு சாமம்
நன்றாகவ ரைத்துவைப்பா யெருக்கம் பாலே

வெள்ளீயத்தை சுத்தி செய்து ஒரு பலம் எடுத்து உருக்கி கல்வத்திலிட வேண்டும். இதனுடன் வெடியுப்பு ஒரு கழஞ்சி உரோமப்பூ ஒரு கழங்சி, கந்தகம் இரண்டு பலம் ஆகியவற்றை ஒன்றாயகச் சேர்த்து எருக்கம் பாலால் நன்கு அரைக்க வேண்டும்.

பாலாலே சாமம்ரெண்டு ஆட்டிக் கொண்டு
பதைப்படங்கா நவாச்சார பலமுங் கால்தான்
வாலாகப் பொற்றலையின் சாற்றா லாட்டி
மாட்டுவாய் சாமம் ரெண்டு மடங்குமப்பா
சேலாக வில்லை செய்து ரவியிற் போடு
திடமாக மூன்றுநாள் காய்ந்த பின்பு
காலாக நூறெருவிற் புடத்தைப் போடு
கைமுறையாய் ராசிவங்கங் கனகந் தானே.

எருக்கம்பாலால் இரண்டு சாமம் அரைத்துக் கொணடு பிறகு நவாச்சாரம் கால்பலம் போட்டு மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்து விலைசெய்து வெயிலில் போடவும். மூன்றுநாள் காய்ந்த பின்பு நூறு எருவில் புடத்தைப் போட வெள்வங்கம் தங்கம் போல்மாறிவிடும் செந்தூரமாகும்.

கனகந்தான் ராசிவஞ்கஞ் செந்தூ ரத்தைக்
கைமுறையா யெட்டிலொன்றுஞ் சூதங் கூட்டிக்
கனகந்தான் றேகமப்பா சீனியிற் கொள்ளக்
கண்துலங்குங் கபாலபுற்றுக் கபாலவாய்வு
கனகந்தான் அஸ்தியிலே பாய்ந்த வெட்டை
கசுமாலக் குன்மமொடு கண்ட மாலை
கனகம்போ லுறைந்ததிருந்த நோய்க ளெல்லாங்
காணாதே கடல்புக்குங் கருத்துள் ளோர்க்கே

இந்த வங்கசெய்துரத்துடன் இரசபற்பம் எட்டில் ஒரு பங்கு கூட்டி சீனி சர்க்கரையில் கொள்ள கண்கள் ஒளி துலங்கும், கபாலபுற்று, கபால வாய்வு, அஸ்திவெட்டை, குன்மம், கண்டமாலை போன்றவைகள் அனைத்தும் தீரும்.

கருத்துறவே வாதிமகன் வயித்தியஞ் செய்தால்
கதிகெட்ட நோயாளி பணிய வேணும்
கருத்துறவே மருந்துக்குப் பத்தியம் வேணுங்
கைமுறையாய்ச் செய்கின்ற வைத்தி யர்க்கும்
கருத்துறவே மனது வர நடக்க வேணுங்
கழுதைபோ லேயிருந்தால் பலியா தொன்றுங்
கருத்துறவே யிதுக்கெல்லோ சித்தர் சாபங்
கட்டினார் மனதுவர நடந்து கொள்ளே

வாதிமகன் வைத்தியம் செய்தால் நோயாளி பணிந்து இருக்க வேண்டும். மருந்துண்ணும் பொழுது பத்தியம் இருக்க வேண்டும். கழுதை போல் இருந்தால் மருநது பலிக்காது. இதற்காகத்தான் சித்தர் அனைவரும் சாபம் இட்டு வைத்துள்ளனர். முறையாக நடக்காவிட்டால் மருந்து பலிக்காது.

பாங்கியே வடுகனுட சாத்தி யந்தான்
பார்பிரமன் மாயனொடு பகரக் கேளே

மருந்தை வாங்கி விசுவாசமாகக் கொண்டால் வைத்தியன் கைப்பட்டாலே போதும். வைத்தியனின் சாபத்துக் நிவர்த்தி கேளு விந்துவிடன் நாதம் கூட்டி ஓங்கிலியோம் சிங் என்று ஒரு லட்சம் ஒரு செபிக்கவும் வடுகன், பிரமன், மாயன் ஆகியோர் துணையிருந்து நோயை தீர்ப்பார்கள்.

கேளப்பா வைத்தியந்தான் சொற்படியே கேட்கும்
செடியாகச் சித்தருட மறைப்பை யெல்லாம்
வெளியில் விட்டேன் வயித்தியத் துக்காக
மாநிலத்து நோயாளி மயங்கா மலய்யா
கோளப்பா வாராமற் சாப கோபங்
கூறினேன் வாதிமகன் வயித்தி யானாகில்
தேளப்பா கெட்டுதல்போல் பூனீறு
சேராட்டால் செய்துரஞ்சோப் பாச்சே

முறையாக மருந்துட்கொண்டால் வைத்தியன் சொல்படி மருந்து கேட்டும். சித்தர்களுடைய மறைப்பை எல்லாம் வெளியில் சொல்லிவிட்டேன் வாதிமகன் வைத்தியன் ஆனால் நோயாளி பிழைப்பான். பூநீறு சேராவிட்டால் முறையாக முடியாது.

போச்சுதென்று மலையாதே சொல்லக் கேளு
புகழான் பூநீறு பவந்தா னொன்று
காய்ச்சென்றேன் சுத்தசலந் தன்னிற் காய்ச்சிக்
காய்ச்சுவது கடுவெயிலில் நீரே வற்றி
வாச்சென்றே யிருக்கும்பூ மாதளங்காய்
மகதான பூவப்பா விந்தச் சுன்னம்
பாச்சென்றேன் நிலவுப்பு மந்த சுத்தி
பண்ணப்பா பாறையுப்பு மந்தப் பாங்கே

செந்தூரம் போச்சுதென்று மலையாதே. பூநீறு ஒரு பலத்தை எடுத்து சுத்த நீ ரில் காய்ச்சி கடுவெயிலில் வைக்க நீர் வற்றும். இந்த பூநீறுடன் நிலவுப்பையும் இ து போலவே சுத்தி செய்யும். பாறையுப்பையும் இதுபோலவே சுத்தி செய்யவும்.

## 15. பவள வங்க செந்தூரம் :

தானென்ற பவளவங்கச் செந்தூரம் கேளு
சார்வான வங்கமது பலந்தா னொன்று
கானென்ற நற்பவளம் பலந்தா னொன்று
கைமுறையாய் சிலாசத்து கலந்தா னொன்று
வேனென்ற பழச்சாற்றால் மூன்று நாள்தான்
விடிகாலை மாலைரெண்டு சாம மாட்டி
கோனென்ற வில்லைசெய்து ரவியிற் போட்டு
கூறாக உலர்ந்த பின்பு புடத்தைப் போடே

பவளவங்க செந்தூரத்தைக் கேட்பாயாக. வங்கம் ஒரு பலம், பவளம், ஒரு ப லம் சிலாசத்து ஒரு பலம் இம்மூன்றையும் தினமும் காலை மாலை இரண்டிரண்டு சாம மாட்டி வில்லை செய்து வெயிலில் போடவேண்டும். பிறகு நன்கு உலர்த்த பி ன்பு புடத்தை போட வேண்டும்.

போட்டெடுத்து நாலிலொன்று கெந்தி கூட்டிப்
புகழான பொற்றலையின் சாற்றா லாட்டி
மீட்டெடுத்து வில்லைதனை உலர்ந்த பின்பு
வெகுசுருக்கா யைம்பதெருப் புடத்தைப் போடு
மூட்டெடுத்த கருவங்கஞ் செந்தூ ரந்தான்
மோசமில்லை முக்காலும் புடத்தைப் போடு
சூட்டெடுத்துப் பொடிசெய்து பதனம் பன்னு
துடியாகக் குன்றியெடை கொள்ளு கொள்ளே

புடமிட்டு எடுத்த பிறகு அந்த எடைக்கு நாலில் ஒரு பங்கு கந்தகம் கூட்டி மஞ்சள் கரிசாலை சாற்றில் ஆட்டி வில்லையை உலர்த்தி பின்பு ஐம்பது எருவில் புடமிட வேண்டும். கருவங்கம் செந்தூரமாகும். இதனை குன்றிஎடை உட்கொள்ள வேண்டும்.

கொள்ளப்பா அமிர்தசஞ் சீவி தன்னிற்
கொண்ட பின்பு சலக்கழிச்சல் கருப்பு ரத்தம்
விள்ளடா குறியெரிப்பு லிங்கப் புற்று
மேகத்தி னாலெழுந்த தோஷ மெல்லாம்
எள்ளடா அணுவளவு கற்பத் தாலே
யெழுந்ததொரு மேகசல முறிந்து போச்சு
தள்ளடா எமனானனை வாசி கொண்டு
சாற்றடா மண்டலந்தான் சித்தியாமே

குன்றியெடை பவள வங்கசெந்தூரத்தை சீந்தில் சர்க்கரையில் உட்கொள்ள சலக்கழிச்சல், கடுப்பு, இரத்தம், குறி எரிவு, லிங்க்புற்று, மேகத்தினால் எழுந்த தோஷமெல்லாமும் கற்பத்தினால் உண்டான மேக சலமும் தீரும். ஒரு மண்டலம் உண்ண அனைத்தும் சித்தியாகும்.

## 16. நாராயணச் செந்தூரம் :

சரக்கு :

| | | |
|---|---|---|
| வாலைரசம் | வராகனெடை | 30 |
| கந்தகம் | ,, | 12 |
| இலிங்கம் | ,, | 15 |
| தாளகம் | ,, | 10 |
| மனோசிலை | ,, | 4 |

**செய்பாகம் :** மேற்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் கல்வத்தில் போட்டு நவலவண திராவகம்விட்டு நான்கு சாமம் அரைத்து நன்றாய் ரவியில் உலர்த்தி ஒரு மண்ணோட்டில் பொடித்துப்போட்டுக் கரிநெருப்பனலில்வைத்துச் சிறிதுநேரம் கறுத்தபுகை கிளம்பும்வரையில் வறுத்து ஆறவிட்டு அரைத்து ஏழுமண் சீலைசெய்த குப்பியில் போட்டு வாய்க்குப் பலப்பக்கல் கார்க்கிட்டு 7–8 மண்சிலை செய்து ரவியில் உலர்த்தி வைத்துக்கொள்க. அப்பால் முக்கால் அடி அகலமும் 1/2–அடி உயரமு

ம் உள்ள இரண்டு சட்டிகளைக் கொண்டு வந்து வாய் பொருந்தும்படி தேய்த்து ஒன்றில் 2–3 விரற்கடை உயரமிருகப் பெருமணல் கொட்டிப்பரப்பி நடுவில் முன் சித்தப்படுத்திய ருப்பியை வைத்துக் குப்பிமறைய மணலைக் கொடி மேல்சட்டி மூடிசந்து வாய்க்கு மண்பூசி மண்சிலை 7 செய்து உலரவிட்டு அடுப்பிலேற்றி நான்கு சாமம் தீபாக்கினியாகவும் கமலாக்கினியாகவும் எரித்து அன்றிரவு அடுப்போடு ஆறவிடுக. மறுநாள் காலையில் மீண்டும் நான்கு சாமம் கமலாக்கினியாகவும் காடாக்கினியாகவும் எரித்து அடுப்போடு ஆறவிடுக. அதற்கு அடுத்தநாள் காலையில் நான்கு சாமம் காடாக்கினியாக உரித்து ஒருநாள் ஆறவிட்டு பார்க்கக் குப்பியிலிட்ட சரக்குகள் சிவந்திருக்கும். எரிப்புக் குறைவால் கருஞ்சிவப்பாக இருந்தாலும் குற்றமில்லை. கறுத்து இருக்கக் அரைத்து உலர்த்திப் பொடித்து முன்போல் சிலை செய்த குப்பியில் போட்டு நான்கு சாமம் காடாக்கினியாக எரித்தல் வேண்டும். எவ்விதத்திலும் நிறம் சிவந்து காணும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இது ஏறத்தாழ 68 1/2–வராகனெடை தேரும்.

**பிரயோகம் :** இந்தச் செந்தூராத்தில் வேலைக்குத் துவரம்பருப்புபளவு அந்தி சந்தி தகுந்த அனுபானங்களில் கொடுத்து வருக.

**தீரும் வியாதி :** கண்டங்கத்திரி, ஆடாதோடை, தூதுவளை வகைக்கு ஒரு கைப்பிடி அளவு எடுத்துப் பிட்டு அவியலாக அவித்துக் கசக்கிப் பிழிந்த சாற்றில் 1–2 தேக்கரண்டி அளவு எடுத்து அதிலரைபாகம் தேன் கூட்டிச் செந்தூரமிட்டுக் கலக்கி தினம் இரு வேலை 10–15 நாள் கொடுக்கக் கப சம்பந்தமான பல பிணிகள் நீங்கும். திப்பிலியை நெருப்பனலில் வெதுப்பி இடித்து எடுத்த சூரணம் இரண்டு மூன்று குன்றி எடையுடன் செந்தூராம் சேர்த்துத் தேன்விட்டு மத்தித்து தினம் 2–வேளை 20 நாள் கொடுக்கச் சூலை, குட்டம், மோகணம், கடிவிஷம், அரையாப்பு, புற்று, கபாலசூலை, பீநசம், நெஞ்சுநோய், நெஞ்சு அடைப்பு, முதலியவைகள் நீங்கும். அரை தேக்கரண்டி வெள்ளைக் காட்டாமணக்குப் பாலில் செந்தூராம் கூட்டித் தினம் இரு வேளை 20–40 நாள் கொடுக்க வெண்குட்டம் தீரும். வெள்ளுள்ளியைத் தோலுரித்து 10–15 நாள் நிழலில் நீர்கண்ட ஆசப்போட்டுப் பழுப்பு நிறம் கண்டவுடன் நல்லவேளை வேர்ப்பட்டை கூட்டி இடித்து ஒரு சீலையில் முடிச்சுக் கட்டி நெருப்பனில் வாட்

டிப் பிழிந்தெடுத்த தைலத்தில் வேளைக்கு 5–6 துளிவீதம் தினம் ஒரு வேளை செந் தூரம் கூட்டி 10–நாள் கொடுத்துவர வாத மூர்ச்சை, பித்தமூர்ச்சை, சந்வி மூர்ச்சை, கரப்பான், சந்நிதோஷம் முதலியவைகள் நீங்கும். நெற்பொரி, ஓமம், சுக்கு, மிள கு இவற்றைச் சிறிது வெதுப்பி இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வே ளைக்கு இரண்டு மூன்று குன்றியெடை சூரணத்தில் செந்தூரம் கூட்டி முருங்கைப் பட்டைச்சாறுவிட்டு மத்தித்து தினம் இருவேளை ஏழுநாள் கொடுக்கப் பக்கவாதம், சர்வாங்கவாதம், தோள்வாதம், ஈடுக்குவாதம், முட்கவாதம், கெண்டைவாதம், இடுப்புவாதம், உதிரவாதம் முதலியவைகள் குணமாகும். இவ்வாறு நோய்க்கு ஏற் றவாறு அனுபானம் செய்து கொடுக்கப்புகின் சர்வரோகமும் குணமாகும்.

**பத்தியம் :** இச்சாபத்தியமாகவும் பசுவின்பால், மோர், நெய் முதலியவற்றை மருந்தின் வீறு தணியும்படியாகவும் ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

**இம்முறையில் உபயோகப்படுத்த வேண்டிய நவ உப்பு திராவகத்தின் செய்மு றை :** வெடியுப்பு பலம் – 15, வெங்காரம் பலம் –1, படிக்காரம் பலம் –10, தூரிசு பலம் – 1/2, நவச்சாரம் பலம்–1, இந்துப்பு பலம்–1/2, பூநீறு பலம் – 1, கல்லுப்பு பலம்–1/2, அன்னபேதி பலம் –1, ஆக முப்பதரைப்பலம் உப்பைக் கல்வத்திலிட்டு அரைத்து ஒரு நாள் ரவியில் உலர்த்தி வாலையிலிட்டு திராவகம் வடித்து வாங்கிக்கொள்ளவும்.

## 17. காள மேக நாராயண செந்தூரம் :

வெங்காரம் சீனம் வெடிகறி யுப்புடனே
மங்காத பூநீறு மன்னுகெந்தி–சிங்காக்
கடனுடை யோரிடையாய் கண்டுபனி நீரில்
இடப்பெருகுங் காரநீர் இங்கு.

இங்கதனை யப்படியே ஏற்றுச் சமாதிவைத்
தங்க ணடைத்துக் கொள் ளன்பாகப்–பொங்குமுயர்
கந்திலிங்கம் தாரம் கருதிரசம் மண்ணுசிலை
சந்தமுறக் கொண்டிடுவாய் தான்.

தானே முறையாகச் சாற்றவி ராகனென
மானே பனிரண்டு வார்பத்தைந்–தேனே
பதுமுப் பதுநான்கு பார்த்திடநீ கொண்டே
மதுகைபெற பின்கேள் வழி.

வழியான முன்நீரால் வாழுநாற் சாமம்
கழிய வரைந்தபின் கண்டு–செழியச்
சிறுகண் குடுவை செறியமணல் வைத்தா
றிரண்டுசா மங்க னெரி.

எரித்தவிதே மேலோர் இயம்புபெரு சீரின்
தரித்தவுயர் சிந்தூரம் தானே – விரிகாள
மேகநர ராயணப்பேரி மேன்மையுறக் கொண்டதென
நீகருத ரோகமிலை நேர்.

நேரக்கா லோரரையே நீட்டச்செங் குன்றிநிகர்
கோரச்சி லேத்துமம் சூட்டொழியும்–சேரும்
வலிகுன்மம் சன்னிசுரம் வாதமுடன்
பொலிய திதன்முன்னே போற்று

(க–து) செங்காரம், படிகாரம், வெடியுப்பு, கரியுப்பு, பூநீர், செந்தி, கடல்நுரை வகைக்கு பலம், 1 இவை தம்மைப் பொடித்துசெய்து ஒரு பீங்கானில் போட்டு பணிசலத்தையேனும், சிறு நீரையேனும் விட்டுக்குழம்பு பதமாக கரைத்து வாய்மூடிச் சீலை செய்து சமாதியில் 21–நாள் வைத்தெடுத்து தெளிந்துள்ள நீரை சீசாவில் வடித்துக்கொள்க. இதற்கே ‘‘காரநீர்’’ என்று கூறுவர்.

கந்தகம் 12, இலிங்கம் 15, அரிதாரம் 10, சூதம் 30, மனோசிலை 4 ஆகிய இவற்றை விராகனெடையாகக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து முன் சித்தப்படுத்தியுள்ள காரநீர் விட்டு நான்கு ஜாமத்திற்குக் குறையாமல் அரைத்துதுவர்த்தி எண்ணெய் குடுவை என்று வழங்கும் சிறு வாயையுடைய குடுவை யொன்றில் போட்டு வாய்க்குப் பொருத்தமான வட்டமான மண்ணோட்டை மூடிச் சீலைசெய்து பின்னர், குடுவை முழுவதும் 4,5 சீலை வறுவாகச் செய்துலர்த்தி முற்கூறிய வண்ணம் வாலுகா இயந்திரத்திலிட்டு 12–சாமம் எரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டுக் குடுவையிலிட்ட மருந்தைப் பார்க்க முன்னிட்ட சரக்குள் யாவும் உருகி மேலேறிச் சிவந்து மேலுங் கீழுமாக உருகி விற்கும். இவைகளைக் கல்வத்திலிட்டு அரைவின் முருக்கம்பூ வர்ணமாகத் தோற்றும். இதனைச் சீசாவில் பத்திரப்படுத்துக ;

தூதுளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவற்றை ஓர் நிறையாய் இடித்துப் பிட்டவீழ்த்துப் பிழிக்கெடுத்த ஒரு பலம் சாற்றில் ஒரு வீராகனெடைத் தேனும், அரைகுன்றி எடை செந்தூரமும் கலந்து தினம் இருவேளை 15நாள் கொடுக்க கபசம்பந்தமான மந்தாரகாசம், இறைப்பு, ஈளை, எலிகடியினா லுண்டான இருமல், ஜன்னி, மூர்ச்சையாகவும் குணமாகும்.

திப்பிலியை வெதுப்பி பொடித்த திரிகடி பிரமாணச் சூரணத்துடன் அரைக்குன்றி எடை சிந்தூரம் சேர்த்து, தேன்ட்டு மத்தித்துத் தினம் இருவேளை 15–நாள் உட்கொள்ள சூலை, குட்டம், விரணம், கடிவிஷம், அரையாப்பு, புத்து, பீனிசம், நெஞ்சு நோய், காதடைப்பு, மாரடைப்பு முதலியவைகள். தீரும்.

வெள்ளுள்ளித் தைலத்தில் அரைக்குன்றி எடை தினம் இருவேளை 10நாள் உட்கொள்ள வாதரோகங்கள் வாதசீதளத்தினா லூண்டான கரம்பு சம்பந்த வலி மூர்ச்சைகள், பித்த சீதளத்தினா லுண்டான சந்தி மூர்ச்சைகள் தீரும்.

நெய்பொறி, அசமதாகம், சுக்கு, மிளகு இவை தம்மை வெதுப்பிப் பொடித்த திரிகடிகைப் பிரமாணம் சூரணத்துடன் அரைக்குன்றி எடை சிந்தூரம் சேர்த்து முருங்கைப்படைசுரசம் சேர்த்துக் கலக்கிச் சாப்பிட சன்னி வாதம், பக்கவாதம், சர்வாங்கவாதம், தோள்வாதம், எரிவாதம், உதிரவாதம், ஈடுக்குவாதம், பிடிவாதம், முடக்குவாதம் எனக் காரணப்பெயர்களை இடுகுறியாகப் பெற்ற சகலவித வாயுக்களும்

குணமாகும். நிலவாகைச் சாற்றில் அரைக்குன்றி எடை சிந்தூரம் சேர்த்து ஒன்றை விட்டொருநாள் தினம் ஒரு வேளையாகக் கொள்ள கர்ப்ப விப்புருதி, மடுவிப்புருதி, விலாவிப்புருதி, உழைமாந்தம், பக்கவாய்வு, அண்டவாய்வு, கழாவாதம், துடைவாதம், இடிசூலை, பக்கசூலை, வாதசூலை, யோனிசூலை, நாபிசூலை, கிருமிசூலை முதலான வியாதிகள் தீரும். மற்ற வியாதிகளுக்கும் சமேயாசிதமாக ரோகத்தின் வன்மை மென்மைன் கேற்றவாறு பொருத்தமான கியாழும், சூரணம், முதலியவற்றை அனுபானம் செய்துகொடுக்க அளவற்ற நற்பலனை யுண்டாக்கும்.

## 18. முத்துச் செந்தூரம் :

பாரப்பா முத்துமணிப் பலந்தா னொன்று
    பதைப்படங்கா நாகமது பலந்தா னொன்று
சேரப்பா சூதமொரு பலந்தா னொன்று
    சிறப்பான வீரமொரு பலந்தா னொன்று
வாரப்பா முலைப்பாலி வரைப்பாகோர் நான்
    வாககாக வில்லைசெய்து ரவியிற் போடு
வேரப்பா பூக் கழுஞ்சி கெந்த கந்தான்
    விளங்கவே ரெண்டு பலங் கூட்டி யாட்டே

முத்துஒரு பலம், நாகம், இரசம், வீரம் ஆகியன வகைக்கு ஒரு பலம், கெந்தகம் ரெண்டு பலம் இவற்றை கல்வத்திலிட்டு தாய்ப்பால்விட்டு ஒரு நாள் அரைக்கவேண்டும். பிறகுவில்லை செய்து வெயிலில் காயப் போடவேண்டும்.

ஆட்டியே புடம் போடு கோழி யப்பா
    அரகரா முத்துமணிச் செந்தூர ந்தான்
நாட்டவே கிரந்தியுறும் யோனிப் புற்றும்
    நல்லிலிங்கப் புற்றுடனே கண்ட மாலை

மூட்டவே மூலங்கள் பிளவை யரையாப்பு

மூக்கினினுள்ளே சதைத்துணுக்காம் பீனி சங்கள்

காட்டவே செந்தூரங் கண்ட போதிற்

காணப்பா கெதி கலங்கி யோடுந் தானே

வில்லைகாய்ந்த பின் பத்தெருவில் புடமிடவும் முத்து செந்தூரமாகும் கிரந்தி, யோனிப்புற்று லிங்கப்புற்று, கண்டமாலை, மூலம், பிளவை அரையாப்பூ மூக்கிலுள் உண்டாகும் சதைத்துணுக்கு பீனிசங்கள் ஆகியன செந்தூரத்தை கண்டவுடன் வெகுதூரம் ஓடும்.

## 19. கெந்தக செந்தூரம் :

கட்டிய கெந்தகம் 2 பலம் (70 கிராம்), பொன்னாங்கண்ணிச் சாறு செல்லத் தக்க அளவு. சிவகரந்தைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை : மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு பொன்னாங்காணிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி மூன்று பலமுள்ள ஐந்து வராட்டியிற் புடமிடவும். அதனையெடுத்து முன்போல் முன்சாற்றாலரைத்து முன்போல் புடமிடவும். ஆனால், ஒரு வராட்டியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினைந்து புடமிட வேண்டும். ஆனால், ஒவ்வொரு வராட்டியை உயர்த்திக் கொண்டுவர வேண்டும். செம்பரத்தம்பூப் போன்ற செந்தூரமாகும்.

**அளவு :** 1/4 முதல் 1/2 குன்றிமணி எடை

**அனுபானம் :** தேன், நெய், பசுவெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :** குட்டநோய்கள், காசம், சயம் முதலிய சுபசம்பந்த நோய்கள், நுரையீரல் விரணம், குடல் விரணம், அல்குல் புற்று, கருப்பை விரணம் முதலிய உள் அவயங்களிலுள்ள விரணங்கள் ஆகிய அநேக நோய்கள் தீரும். இது ஒரு கற்பத்திற்குச் சமமானது. ஆனால் இதனைச் செய்வதும் சிரமந்தான்.

**பத்தியம் :** சமயோசிதம் போலவும், நோயிற்குத் தகுந்தபடியும் உபயோகிக்க வேண்டியது.

## 20. பஞ்சபாணச் செந்தூரம் :

தின்னவேசருவநோ யெல்லாந்தீரச் செப்புகிறேன்பஞ்ச பாணச் செந்தூந்தான், அன்னவே சாதிலிங்கமனோ சீலைக்காந்தம் அரிதாரகெந்திரசபூரம் வெள்ளை, சொன்னதொரு பாஷாணம்பல மொன்றாகச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு மைந்தா, நன்னயமா, மேனிச்சாறு சாமம்நாலு, நாகவல்லிச்சாறு மொரு சாமம்நாலே.

நாலோடு பருத்திச்சாறு சாமமம்நாலு நலமான வெள்ளறுகுசாமம்நாலு, மேலோடு துளசிச்சாறு சாமம்நாலு மிக்க வழுதலைச் சாறு சாமம்நாலு, ஏலோடு மிந்தவண்ணம் நன்றாயாட்டி யியலாக வில்லைதட்டி நிழலுலர்த்தி, மாலோடுகட்டி யென்றில் வைத்தபின்பு மைந்தனே நாகவல்லியிலே பரப்பே.

பரப்பியே மேல்வில்லை வைத்துமூடு பக்குவமாயேழுசீலை மண்ணுஞ்செய்து, அப்பியே யிடுப்பேற்றியறுவிறகு தன்னால் அப்பப்பா தவறாமல் சிறுதீயாக, சுரப்பியே சாமம் நாலெரித்துவிட்டார் தோன்னுமடா சட்டியெல்லாஞ் சிவந்துகாணும், நிரப்பியே பதமென்று பூசைசெய்து நீமகனே யடுப்பாற்றி யெடுத்துப்பாரே.

பாரேநீ செந்தூரபற்பந்தன்னை பகர்ந்திட்டால் சருவ நோ யெல்லாம்போகும், சீரேநீயிஞ்சிச்சாறு தேனில்விட்டு கியாழகற்பம் நோயறிந்து அனுபானஞ்சேர், வீரேநீ சன்னிப தின்மூன்றுமெங்கே வீறிடுமே குட்டமொடுபதினெண்சூலை, காரேநீவாயவென்றதிருபத்தொன்றும் கனமானவாத சுரம்கதித்தோடும்மே.

ஓடுமேமேகமென்று திருபத்தொன்றும் ஓரெட்டுக்குன்மமொது கிராணியாகும், வாடுமேகைகாலின் முடக்குச்சூலை மாராததேக சூலை பிளவைப்புற்று, சாடுமேகள்ளகமுங்கண்டமாலை தனிக்குட்டம்குலைநோயும் அரிகரப்பான், தேடுமேயம்புரத்தைச் சொறிகரப்பான் தீராதவண்டுகடிதே மல்போமே.

போமேதான் கழல்வாதம் வலிகடுப்பு, புகலாதகுழிவாரை அழுகண்ணிற்புண், காமேதான்கண்ணோசி கன்னப்புற்று சாந்றியதோர் கபாலகுஷ்டம் பவுத்திரரே

ாகம், வேமேதான் முள்ளிவீழை விரணசரோகம் வெருண்டோடுங்கயரோகம் நாக்கில் ரோகம், தாமேதானந்திடுப்புக்கீலுச்சூலை தளராதகபாலவாயு நீங்குந்தானே.

நீங்குமடாமெய்க்குடைச்சல் கைக்குடைச்சல் நிலைபெற்ற குலைநோயுங்குன் மக்கட்டி, வாங்குமடாகுடைச்சலொடு உளைவு குத்து மகத்தான கருமநோயெல்லாமைந்தா, ஏங்குமடா பரிதிகண்ட பனியைப்போல எல்லோர்க்கும்கிட்டா வல்லோர்சொன்னார், ஓங்குமடாவடுகனை நீ பூசித்தேதான் உலகத்தில் வயித்தியஞ் செய்பறந்துபோமே.

## 21. மன்மதசிந்தாமணி இரசசெந்தூரம் :

சுத்தி செய்த இரசம் 6 பலம் (210 கிராம்), சுத்திசெய்த கெந்தகம் 6 பலம் (210 கிராம்), சாதிலிங்கம் 6 பலம் மாணிக்கப்பொடி 6 பலம் (210 கிராம்). சுத்தி செய்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த மனோசிலை 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த அரிதாரம் 1/2 பலம் (17 1/2 கிராம்), செம்முள்ளி இலைச்சாறு, மாதுளையிலைச்சாறு, கஞ்சா இலைச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு

**செய்முறை :** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துக் செம்மையாகக் கறுத்த பின்பு செம்முள்ளியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு வாமமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, மாதுளையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, கஞ்சா இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ள வேண்டும். முடிவாக கூத்தன் குதம்பைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்துலரத்தி கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்றாயுலர்ந்த பின்பு வைத்துக் கொள்க.

ஏழு சீலைமண் செய்துலர்த்தின கெங்கை நீர்க்குப்பியில் அரைபாகம் மேற்படி பொடியைப் போட்டு வாய்க்குப்பலப்பக் கல்லால் கார்க்குச் செய்திட்டுச் சீலைமண்

செய்துலர்த்தி சற்று வாயகன்ற குடத்தில் நான்கு விரற்கனம் மணலிட்டு அதன் மீது குப்பியை வைத்துக் குடத்தின் வாய்மட்டம் மணலிட்டு நிறைத்து தான் வழிபடும் கடவுளைப் பூசித்து, தீபாக்கினியாக ஒரு சாமமும், கமலாக்கினியாக இரண்டு சாமமும், காடாக்கினியாக இருபத்தொரு சாமமும் எரித்துப் பார்க்க சித்தர் அருளால் செந்தூரமானது முருக்கம்பூப் போலே சிவந்திருக்கும். பிறகு, அன்னதானம் முதலியவைகளும் செய்து தான் வழிபடும் கடவுளைப் பூசிக்கவேண்டும்.

**அளவு :** 1 முதல் 2 குன்றி எடை.

**அனுபானமும் :** தீரும்நோய்களும், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியேத் தூள் செய்து வகைக்கு 4 குன்றி மணி எடை தேன் 1 வராகன் எடை ( 3 1/2 கிராம்). இவற்ரறைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி காலை, மாலை இரண்டு வேளையும், நாற்பது நாள் உட்கொள்ள ஈளை, இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், சுவாசகாசம், உளைமாந்தை, சுரமாந்தை, சுரமாந்தை, காசகாமாலை, இளைப்பு, துரப்பு, சிலேத்தும மூர்ச்சை ஆகிய நோய்கள் தீரும்.

முத்தெருக்கஞ் செவியிலைச் சாறு, சுழற்ச்சியிலைச்சாறு இவை வகைக்கு 2 வராகனெடை (7 கிராம்), தேன் 3 வராகனெடை (10 1/2 கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் காலை மாலை இரண்டு வேளையும் பத்து நாள் உட்கொண்டுவர, அண்டவாதம் அண்டபவுத்திரம், அண்டப்பிளவை, அண்டப்புற்று, அண்டசந்துவாதம், கழலெரிவாதம், கொடிவாதம், கொடிபவுத்திரம், நுரைவாதம், பக்கபவுத்திரம் ஆகியவை ெல்லாம் தீரும்.

# பற்பம்

## 1. செம்புத்தொட்டிப் பற்பம்:

பிளவைமுதல் கரப்பானீ ரெல்லாந்தீரும்

பெருமைதரும் வைத்தியந்தான் புதுமைமெத்த

இளமையாஞ் செம்புதொட்டிப் பற்பங்கேளு

இயலான மருத்துதனைக் கவசஞ்செய்து

வளமையாய் முக்குரட்டைக் கவசங்கட்டி

வைத்திடவே வெள்ளையாம் வைத்துக்கொண்டு

தளமையாங் குடல்வாதம் **ஈரல்புத்து**

சதையடைப்பு சதைவளர்த்தி சாந்தமாமே.

## 2. இரச பற்பம்:

காட்டுள்ளியும் (நரிவெங்காயம்), கெந்தகமும ஓர் எடையாய் அரைத்து வில்லை தட்மடிக் கலசத்திலிட்டுத் தைலம் இறக்கி வாலை இரசத்தில் விட்டுப் பரிதியில் வைக்க நீறும். அதை அந்தத் தைலத்தால் ஆட்டி, வில்லை செய்து கொண்டு நன்றாய் வெந்த செங்கல்லை மாவுபோல் அரைத்து, ஒரு குண்டு சட்டியில் அரைப்பாகம் போட்டு, அதன்மேல் ஒரு படி உப்புக் கொட்டிப் பாத்திரத்தில் மேற்படி வில்லையை வைத்து, மூடி ஏழு சீலைமண் செய்து, அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்று சாமம் எரித்து ஆற்றி எடுக்கப் பதங்கித்திருக்கும். அதை எடுத்து ஒரு காசு எடை வெல்லம் முதலான துணைமருந்துகளில் 7 நாள் உட்கொள்ள குட்டம், குலைநோய், பவுத்திரம், கழலை, (காமாலை), விப்புருதி, **இலிங்கப்புற்று**, வெள்ளை படருதல், அரையாப்பு, அல்குல்புற்று, மூலமுளை, கண்டமாலை, கிரந்தித்தடிப்பு, வெள்ளை, கருங்கரப்பான்; வண்டுகடி, மேகம், வாயு, குன்மம் ஆகிய நோய்கள் தீரும்; வாய் வேகாது.

## 3. சண்டரசபற்பம்:

நாடுகின்ற சண்டரச பற்பந்தன்னை
நாட்டுகிறேன் வெடியுப்பு பலந்தானூறு
ஆடுகின்ற சவுக்கார மைம்பதாகும்
அப்பனே யிரண்டையுந்தான் அரைத்துக்கொண்டு
கூடுகின்ற கலசத்தில் அரைவாசியிட்டு
கூர்மமா மெந்திரத்தைக் கவிழ்த்துமூடித்
தேடுகின்ற சீலைமண் ஏழுசெய்துலர்த்தி
திறமாக அடுப்பேற்றித் திராவகத்தைவாங்கே.
வாங்கியே குப்பிதனில் அடைத்துக் கொண்டு
வாகான லிங்கமது பலந்தானாலு
தாங்கியே கல்வத்தி லிட்டுக்கொண்டு
சாமமது திராவகத்தா லாட்டிவாங்கி
ஓங்கியே வில்லைதட்டி சட்டிதனிலிட்டு
ஒப்புரவாய் சட்டிக்கு முருக்கம்பூச்சாறு
ஏங்கியே போகாமல் பூசிமுடி
எழுசிலை மண் செய்து அடுப்பிலேற்றே.

ஏற்றியே சாமமது எரித்திட்டாற்றி
எடுத்துப்பார் பதங்கமது மேலேநிற்கும்
தேற்றியே மயிற்குச்சால் துடைத்துவாங்கி
திறமாக அடிச்சுட்டி மருந்துசேர்த்து
மாற்றியே திராவகத்தில் சாமமாட்டி
வாங்கிவில்லை செய்து முன்போ லெரித்துப்போடு
சாற்றியே ஏழுதர முன்போலப்பா
தப்பாது செயரசந்தான் தவளமாமே.

தவளநிற மாகியதோர் தளபற்பத்தைத்

தாலவெல்லந்த தனிற்பணந்தான் வைத்துக்கொள்ள

துவளுகின்ற வாதமொடு பக்கசூலை

தொலையாத கிரந்திப்புற்று குட்டந்தானும்

நுவளுகின்ற சூலையொடு கரப்பான்தானும்

நொடிக்குமுன்னே கொல்லுகின்ற ருத்திரவாயு

புவனமதி லண்டாது பத்தியமேவேணும்

புகலுகிறே னின்னமொன்று புகலக்கேளே

| | |
|---|---|
| சுத்தித்த வெடியுப்பு | 100 பலம் |
| சுத்தித்த சவுக்காரம் (வழலை) | 50 பலம் |

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்தெடுத்து ஒரு கலசத்தில் அரைவாசியிருக்கும்படியிட்டு கூர்ம ஏந்திரத்தைக் கவிழ்த்து மூடி ஏழு சீலைமண் செய்துலத்திக் கெண்டு அடுப்பேற்றி, எரித்து, திராவகத்தை வடித்து ஒரு குப்பியில் வைத்துக்கொள்ள வேண்டும். சுத்தித்த இலிங்கம் 4 பலம் எடுத்துக் கல்வத்திட்டு, முன்பு தயாரித்து வைத்துளள திராவகத்தைத் தேவையான அளவுவிட்டு ஒரு சாம நேரம் நன்கு நெகிழ வரைத்து, வழித்து, வில்லை தட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் மேற்படி வில்லையை வைத்து, முருக்கம் பூச்சாறு பூசி, உலர்ந்த வேறொரு சட்டியால் மூடி, ஏழுசீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு, பின்பு அடுப்பேற்றி ஒரு சாமநேரம் எரித்தெடுத்து ஆறியபின் பார்க்க மேற் சட்டியில் மருந்து பதங்கமாக ஒட்டியிருக்கும். இதை மயிற்குச்சியால் துடைத்து எடுத்துக்கொண்டு பின்னர் அடிச்சட்டியில் தங்கியுள்ள மருந்தையும் சேர்த்து கல்வத்லிட்டு முன்போல் திராவகம் விட்டரைத்து, வழித்து வில்லை செய்து, முருக்கம்பூச்சாறு பூசி உலர்ந்த சட்டியில் சட்டியால் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி எரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஏழுமுறை முன்போல்

செய்தெடுக்க செயரசம் வெண்மையான பற்பமாகயிருக்கும். இதுவே சண்டரச பற்பமாகும்.

**அளவு:** பணவெடையளவு என்ற கூறப்பட்டிருப்பினும் 1 அரிசியெடை கொடுப்பதே சிறப்பாகும்.

**துணை மருந்து:** பனைவெல்லம்

**தீரும் நோய்கள்:** வாதநோய், பக்கசூலை, கிரந்திநோய், **புற்றுநோய்,** குட்டநோய், சூலைநோய், கரப்பன், உருத்திரவாயு.

**பத்தியம்:** பத்தியமாக உண்ண வேண்டும் என்பதால் இரசமருந்துகளுக்கு உள்ள பத்தியங்களை மேற்கொள்ள வேண்டும்.

## 4. தாளக பற்பம்:

எண்ணரிய தாளகத்தைப் பற்பம்பண்ண
எவராலும் முடியாது சித்தர்க்காகும்
ஒண்ணரிய நாதாக்க ளாடுமாட்டம்
உத்தமனே வா தத்தி லுயர்ந்தவேதை
உண்ணரிய மாணிடர்க்கு நோய்களேது
உத்தமமாம் வித்தையிது உயர்த்திமெத்த
பண்ணரிய சுந்தரமே சொல்லக்கேளு
பாசமற்ற ஞானிகள்தான் பண்ணுவாரே.

பண்ணப்பா மேனிச்சாற் படிதான்ரெண்டு
பழங்காடி ரெண்டுபடி கல்லுச்சுண்ணங்
கண்ணப்பா தேங்காயின் அளவாயிட்டு
கல்வமத்தால் கடைந்திடுவாய் கடிகைரெண்டு
நண்ணப்பா தாளகந்தான் பலமிரண்டு
நடுநிற்க துலாந் திரமாகக் கட்டி

எண்ணப்பா அடுப்பேற்றி எரிநேர்ப்பாக
இருந்ததண்ணீர் வற்றினபின் எடுத்துக் கொள்ளே.

எடுத்தபுளி பலம்பத்து பாண்டத்திட்டு
இரவிநீர் படிநா லுங் கூடவிட்டு
அடுத்ததினம் மூன்றங்கே கடைந்துவாநீ
அப்பனே தாளகந் துலாந்திரங்கட்டிக்
கொடுத்தசிறு தீயிட்டுக் கனிபோலானால்
குலாவியதோர் தாளகத்தை எடுத்துக்கொண்டு
கடுத்தஅப்பைச் சாற்றினிலே சாமம்ரெண்டு
கனகமென்ற தாளகத்தை அரைத்திடாயே.

அரைத்திட்டு ரூபாய்போல் வில்லைதட்டி
அப்பனே உலரவைத்துப் பின்புகேளு
நிரைத்திட்ட முன்களியை அடுப்பிலேற்றி
நீர்வற்ற வறுத்திரண்டு பங்குசெய்து
உரைத்திட்ட சட்டிதனில் பங்கொன்றிட்டு
ஒப்புரவா யமுத்தியதில் வில்லைவைத்து
மறைத்திட்ட மறுபஞ்சு மேலேயிட்டு
வாய்க்கிணங்கு சட்டிகொண்டு கவிழ்த்துமூடே

மூடியே சீலைமண்ணேழ் செய்துவர்த்தி
மூதண்ட வயிரவர்க்கும் திருவாணிக்கும்
தேடியே பானமது கத்திவைத்து
செபஞ்செய்து அடுப்பேற்றி எரிநேர்ப்பாக
கூடியே எண்சாம மானபின்பு
குளிர்ந்தபின்பு எடுத்துப்பார் கறுத்துப்போகும்

வாடியே மயங்காதே அப்பைச்சாற்றில்
மாட்டியரை வில்லைதட்டி உலரப்போடே.

உளர்ந்தபின்பு முன்சாம்ப லமுரியாலே
ஒப்புரவாய் பதங்கெடுத்து சட்டிநடுக்குவித்து
மலர்ந்திடவே அடுப்பேற்றி எரிப்பாய் சாமம்
மைந்தனே விபூதிபோல் நீறிப்போகும்
மலர்ந்த அண்ட நீராலே அரைத்துவாங்கி
அகலிரண்டு செய்துலர்த்தி வில்லை வைத்து
புலர்ந்தஅகல் மேல்மூடிச் சீலைசெய்து
புகழாகக் குக்குடமாய்ப் புடத்தைப்போடே.

போடவே நீறியது வெள்ளையாகும்
பொன்னை வயிரவனைப் பூசைபண்ணு
வாடவே வேண்டா நீ கலிவராது
மக்களே பணவெடைகால் நிறுத்துக்கொண்டு
கூடவே சண்டரச பற்பஞ்சேர்த்து
கொடுத்திடவே குட்டமொடு குறைநோயெல்லாம்
ஓடவே கொல்லுமடா கிரந்தியேது
உடல்கெடுத்த சூலையோடு வாதம்போமே.

வாதமொடு பவுத்திரங்கள் கண்டமாலை
வளருகின்ற புற்றுடனே பிளவைப்புருதி
காதமென்ற தூரமல்ல வோடும்வேகம்
கலங்காதே பத்தியத்தைக் காருகாரு
ஆதியென்ற வழலைதன்னை அணைத்தாயானால்
அப்பனே காட்டு முன்னே அலறிவாங்கும்

பேதமென்ற மூடருக்குக் கருச்சொல்லாதே

பித்தர்களைப் போலிருக்கப் பிழைப்பாய் நீயே.

| | |
|---|---|
| தாளகம் | 2 பலம் |
| கல்கண்ணம் | ஒரு தேங்காயளவு |
| குப்பைமேனிச்சாறு | 2 படி |
| பழங்காடி | 2 படி |

இவற்றில் குப்பைமேனிச்சாற்றையும் பழங்காடியையும் ஒரு பாத்திரத்திலிட்டு, அதில் கல்சுண்ணத்தையிட்டு மத்தால் இரண்டு கடிகை நேரம் நன்றாக கடைந்து கொள்ள வேண்டும். பின்னர் நாளகத்தை அச்சட்டியின் மத்தியில் தூலாந்திரமாகக் சட்டி, அடுப்பேற்றி பாத்திரத்தில் உள்ள நீர் சுண்டும் வரை எரித்துப் பின்னர் தாளகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் 10 பலம் புளியிட்டு அதில் 4 படி இரவிநீர் (இரவிசெய நீர்) வார்த்து மூன்று நாட்கள் மத்தால் கடைந்து கொள்ள வேண்டும். பின்னர் தாளகத்தை மறுபடியும் தூலாயந்திரமாகக் கட்டி சிறுதீயிட்டெரிந்து புளியும் இரவி நீரும் களி போல் பக்குவத்திற்கு வந்ததும் அடுப்பை விட்டிறக்கி தாளகத்தை எடுத்துக் கொண்டு, பாத்திரத்திலுள்ள களியையும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் இவ்வாறு பாகப்படுத்தப்பட்ட தாளகத்தை குழிக்கல்லிலிட்டு தேவையான அளவு அப்பைச்சாறு விட்டு இரண்டு சாமநேரம் நன்றாக நெகிழ வரைத்து வழித்தெடுத்து ரூபாய் நாணயத்தைப் போல் வில்லை தட்டி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்பு தனியே எடுத்து வைக்கப்பெற்றுள்ள களியை ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி அதிலிருக்கும் நீர்வற்றும் வரை வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதை இரண்டு பங்காக்கி ஒரு பங்கை சட்டியிலிட்டு அதில் முன்பு சித்தப்படுத்தி வைத்திருக்கிற வில்லையை யழுத்தி வைத்து, அதன் மேல் மறு பங்கு வறுத்தெடுத்த சாம்பலையும் இட்டு மேல்சட்டி கொண்டு மூடி ஏழு சீலைமண்

செய்துலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் இதை அடுப்பேற்றி ஒரே தீயாக எட்டுசாம நேரம் எரித்தெடுத்து ஆறிய பின் பார்க்க மருந்து கருமை நிறமடைந்திருக்கும். இவ்வாறு கருமை நிறமடைந்த மருந்தைக் கல்வத்திலிட்டு அப்பைச்சாறு விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

முன்பு சட்டியில் வில்லையை வைத்தெரித்த சாம்பலுடன் அமுரி நீர் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி ஒரு சாமநேரம் எரித்தெடுக்க விபூதியைக் போல நீற்றிருக்கும். இதை முட்டை வெண்கரு விட்டரைந்து பதத்தில் இரண்டு அகல் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வகையில் மேலே சித்தப்படுத்தி வைத்திருக்கிற வில்லையை வைத்து மேலகல் கொண்டு மூடி, சீலை மண் செய்து உலர்த்திக் கொண்டு குக்குட புடமிட்டெடுக்க தாளகம் சிறந்த முறையில் பற்பமாகியிருக்கும்.

**அளவு : 1/4** பணவெடை

**தீரும் நோய்கள்** : சண்டரசபற்பம் சேர்த்து உட்கொள்ள பெருநோய், குறைநோய், கிரந்தி, சூலை, வாதநோய், பவுத்திரங்கள், கண்டமாலை, புற்றுநோய், பிளவை விப்புருதி ஆகிய நோய்கள் தீரும்.

**குறிப்பு :** பத்தியமாக இருந்து மருந்து சாப்பிட வேண்டும் இம்மருந்தோடு வழலை (முப்பூ) சிறிது கூட்டிக் கொடுக்க மிகச் சிறந்த பலனை கொடுக்கும்.

### 5. கெந்தகபற்பம் :

கண்டுநீ கெந்தகத்தின் பற்பங் கேளு
கனமான கெந்தகத்தைக் கல்வத் திட்டு
மண்டுதான் சிற்றெடுவை சாறு விட்டு

மாட்டியரை இருசாமம் வில்லை செய்து
கொண்டுதா னிலையரைத்துக் கவசங் கூட்டி
கூறுசீலை மண்செய்து வுலர்த்திக் கொண்டு
விண்டிடவே மணவரையிற் புடந்தா னைந்து
வெளியேற்றிப் புடமைந்தில் பற்ப மாச்சே.

ஆச்சப்பா வெடைகுறையா பற்பந் தன்னை
அப்பனே பணவெடைதா னுண்டு தேறு
வாச்சப்பா குட்டமொடு கிரந்தி சூலை
வந்தபுற்று பிளவையொடு கண்ட மாலை
போச்சப்பா கரப்பனோடு வூற லெல்லாம்
போகுமப்பா பால்சீனி நெய்யுங் கூட்டிப்
பேச்சப்பா ஒன்றுமில்லைப் புளியைத் தள்ளு
பேறான வாலைரசம் பேசு வேனே

கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு சிற்றொடுவைச் சாறுவிட்டு இரண்டு சாம நேரம் நன்கரைத்து வில்லை செய்து (சிற்றொடுவை) இலையை அரைத்து, கெந்தகத்தைக் கவசித்து சீலைமண் செய்துலர்த்திக்கொண்டு, மணல் மறைவுப் புடம் ஐந்து இட்டெடுக்க கெந்தகம் பற்பமாகும். இக்கெந்தகப் பற்பம் எடை குறையாமலிருக்கும்.

**அளவு :** பணவெடை

**தீரும் நோய்கள் :** குட்டநோய், கிரந்தி, சூலை, **புற்று,** பிளவை, கண்டமாலை, கரப்பன், ஊறல்

**உணவு :** பால், சீனி, நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பத்தியம் :** புளிநீக்கவும்

### 6. காந்த ரசபில்லை :

அடியில் சொல்லுகிறபடி தூய்மை செய்த காந்தம் (இது குறைந்த அளவு இரண்டு ஊசியாகிலும் பிடிக்கும் சத்துள்ளதாயிருக்கவேண்டியது. (ஏழு ஊசி பிடிக்கும் காந்தம் அகப்பட்டால் மிகவும் மேன்மையாக இருக்கும்.) தூய்மை செய்த வாலைரசம், தூய்மை செய்தஉலாந்தாலிங்கம், அரிசத்திப்பிலித் தூள், மற்றாலைச் சீவியிடித்து துணியில் வடிகட்டிய சுக்குத் தூள், மஞ்சிட்டி,

(அதனைப் பொடித்துப் பார்த்தால் உள்ளும் புறமும் சிவப்பாய் இருக்கவேண்டும் ; வெளுத்திருப்பதும் மற்றவகை வண்ணமுள்ளதாய் இருப்பதும் உதவாது.) கார்போகரிசித்தூள், வால்மிளகுத்தூள் இவை வகை 1–க்கு 2 வராகனெடை (7 கிராம்) கீழ்க்கண்டபடி தூய்மைசெய்யப் பட்ட வெள்ளைப் பாடாணம், சூடன் இவை வகை 1–க்கு 1 விராகனெடை ( 3 1/2 கிராம்)

**காந்தத் தூய்மை :**

காந்தத்தைக் கரிநெருப்பில் காய்ச்சிக் கொள்ளுக் கியாழத்தில் தோய்க்க வேண்டும். இந்தக் கியாழமானது காந்தம் றநான்றாக ஆழ்ந்து கிடக்கும்படியான அளவி இருக்க வேண்டியது. நன்றாய் ஆறினபின் எடுத்து முன்போல் கரி நெருப்பில் காய்ச்சி முன்போல் தோய்க்கவேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி 5 தடவை காய்ச்சித்தோய்க்கவும். ஒவ்வொரு தடவையும் கொள்ளுக் கியாழத்தைப் புதிது புதிதாக விட்டுக்கொள்ள வேண்டும். பிறகு மெல்லிய துணியால் துடைத்து வெள்ளில் வைத்து ஈரமில்லாமலுலர்த்தி மேற்கண்ட நிறை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

வெள்ளைப் பாடாணத் தூய்மை :– தாளித்த கற்சுண்ணாம்பு அல்லது கிளிஞ்சிற் சுண்ணாம்பு 1/2 படி. இதனை ஒரு மண் பாண்டத்திலிட்டு ஒருபடி தண்ணீரவிடம் நன்றாகக் கலக்கி மூன்று மணிநேரம் வைத்துப் பிறகு மேற்றெளடிவை இ

றுத்துக்கொள்ள வேண்டும். இதனை ஒரு சிறு மண்பானையில் விட்டு 5 விராகன் எடை (17 1/2 கிராம்) பாடாணத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து மெல்லிய துணியில் முடித்து கிழிகட்டி மேற்படி மண் பாத்திரத்தில் தொங்கவிட வேண்டும். இந்த முடிப்பானது பானையின் அடியில் படாமல் சுமார் 1 அங்குல உயரத்தில் அந்தத் தண்ணீருக்குள் ஆழ்ந்திக்க வேண்டும். இதை அடுப்பேற்றித் சிறுதீயாயெரித்துச் சுண்ணாம்பு நீரெல்லாஞ் சுண்டியபின் கீழே இறக்கி வைக்கவும். சூடாறினபின் பாடாணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு ஒரு பருமனான கொம்புப்பாகற் பழத்தைக் கீறி அதற்குள் முன் பாடாணத் துண்டுகளைச் செலுத்தி நூலால் சுற்றிச் சந்தில்லாமல் பொருத்தப்பார்த்து இரண்டு மண்சீலை செய்துகொள்ளவும். அரைப்படி உமியை வாய்குறுகின சிறு மண்சட்டியில் போட்டு அதன் நடுவில் முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து நெருப்பிட்டுப் புடமிட வேண்டியது. குளிர ஆறினபின் எடுத்து முன்போல் புடமிட்டுக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்தெடுக்க பாடாணம் தூய்மையாகிவிடும். ஈரமில்லாமல் உலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

செய்முறை : மேற்கண்ட பத்து வகைகளுள் இரசம், லிங்கம், பாடாணம் ஆகிய மூன்றையும் முன்னர் அரைத்து இரசம் மடிந்தபின் காந்தத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு மற்ற தூள்களையும் சேர்த்து அரைக்க வேண்டும். சுமார் மூன்றுமணி நேரம் அரைத்துப் பிறகு குளிர்ந்த நீரைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதனைக் கைவிடாமலும் தொடர்ச்சியாகவும் அரைக்கலாம். விட்டு விட்டும் அரைக்கலாம். எவ்விதமும் நான்குசாமம் அரைத்துத் தீரவேண்டியது முக்கியம். பிறகு ஒவ்வொரு விராகனெடையுள்ள வில்லைகளாகச்செய்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு மெல்லிய துணியில் இந்த வில்லைகளைப் பரப்பி மேலும் மெல்லிய துணியால் மூடி 45 நாள் தானியப்புடம் வக்க வேண்டும். அதாவது சுமார் 20 படி நெல்லில் 10 படி நெல்லை ஒரு பாண்டத்தில் போட்டு அதன் நடுவில் முன் சித்தப்படுத்தியிருக்கிற வில்லைகளை வைத்து அதன்மேல் மற்றப் பத்துப்படி நெல்லையும் போட்டுப் பானை வாயை ஓட்டால் மூடி ஈரமில்லாத நிலத்தில் குழிதோண்டி அந்தப் பானையை புதைத்துவிட வேண்டும். 46

நாள் சென்றபின் விழிப்பாக எடுத்து விழிப்பாக மேலுள்ள நெல்லை எடுத்துவிட்டுப் பத்திரமாக மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். வில்லைகளைப் பொடிக்காமல் அப்படியே குப்பியில் போட்டுவைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு :** 1 முதல் 2 ஊளுந்து நிறை, இது ஒரு சிறந்த மருந்தாயினும் இதின் அளவை உடலின் தன்மைபோல் ஏற்படுத்துவதற்கு கொஞ்சம் பழக்கமும் வேண்டியதாய் இருக்கிறது; இதில் கொஞ்சம் அனுபவப்பட்டு இதனை உபயோகிக்கும் விதமும் தெரிந்துவிட்டால் அறுவை மருத்துவத்தினாலேயே தீரவேண்மென்னும் அநேக நோய்கள் இதனால் தீர்ந்து போகும். இந்த மருந்தினது பெருமைக்கு எதிராக இதற்கு ஏற்பட்டிருக்கும் பத்தியமானது கடினமாய் இருக்கிறது. அதுவும் இம்மருந்திற்கு ஒருவிதமான குறை. ஆகையால் இதன் அளவையும் பத்தியபாகத்தையும் இத்தனை நாள் உபயோகிக்க வேண்டியதென்ற நாட்கணக்கையும் மருத்துவர்கள் தம் மருத்தறிவு நுட்பத்தினாலும், அனுபோகத்தினாலும் நிச்சயித்துக்கொண்டால் பெருங்கீர்த்திக்கு ஏதுவாகும்.

**துணைமருத்து :** திறமான பனைவெள்ளம் 1 விராகனெடை (3 1/2 கிராம்). இதனை உள்ளங்கையில் வைத்துப் பெருவிரலால் தேய்த்தாலும் அல்லது சந்தனக் கல்லில் வைத்து நசுக்கி அரைத்தாலும் நைப்பாய் மெழுகுபோலாகிவிடும். அதனை உருண்டையாகக் செய்து மேற்கண்ட மருந்தை பொடித்து அளவுப்படி அதற்குள் வைத்துருட்டி வாயில் போட்டு விழுங்கிவிட வேண்டும். அதன்மேல் 1 விராகன் எடை (3 1/2 கிாம்) பனைவெல்லத்தையும் போட்டு மென்று சாப்பிட வேண்டும். இவ்விதம் உடல்வளமை, நோய்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏழு, பதிநான்கு, இருபத்தொரு நாள் உபயோகிக்க வேண்டும். நோயாளி வலிவற்றவராய் இருந்தால் ஏழுநாள் கொடுத்து இடையில் ஒருவாரம் அல்லது பந்துநாள் விட்டு மறுபடியும் கொடுக்க வேண்டும். இதுவும் மருத்துவர்களின் புத்தி நுட்பத்தையும், பழக்கத்தையும் சார்ந்தது.

**தீரும் நோய்கள் : லிங்கப்புற்று, அல்குல்புற்று, கன்னப்புற்று**, கபாலக்கிரந்தி கள்ளிப்பூக்கிரந்தி, நுணாக்காய்க் கிரந்தி முதலிய பதினெட்டுவகைக் கிரந்திகளும் தீரும். மேகசூலை வெடிசூலை, கரட்டுச்சூலை, முரட்டுச்சூலை முதலிய பதினெட்டு

வகைச்சூலைகளும் தீரும். நரித்தலை வாதம், முடக்குவாதம், கரட்டுவாதம் முதலி ய வாத நோய்களும் தீரும்.

**மருத்துணவு :** உப்பில்லாமல் கடும் பத்தியமாக இருக்க வேண்டியது. இதனை உபயோகிக்கும்போது சிலருக்கு கக்கல்காணும். அத்றாக அஞ்சிப் பயந்து நடுங்கிவிடாமல் தைரியமாய்க் கொடுத்துவர வேண்டும். சிலருக்கு கொஞ்சமும் கக்கல் காணவே காணாது. மருந்தைவிட்ட மறுநாள் ஓமத்தை அரைத்துத் தேய்த்து வெந்நீரில் தலைமுழுக்குச் செய்யவேண்டும். பிறகு உப்பை வெடியடங்க வறுத்துக் கூட்டிக்கொள்ள வேண்டும். பச்சைப்பயறு, துவரம்பருப்பு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, மிளகு, மிளகாய், மஞ்சள் ஆகியவைகளை முன் மருந்து சாப்பிட்ட மறு ஏழுநாள்(அதாவது) ஏழுநாள் சாப்பிட்டால் மறு ஏழுநாள் வரையிலும், பதினான்கு நாள் சாப்பிட்டால் மறு பதினான்குநாள் வரையிலும் சேர்த்துக் கொண்டு மறு பத்தியம் இருக்கவேண்டியது. மேற்கண்டவை கொண்டு மறு பத்தியம் இருக் வேண்டியது. மேறகண்டவைகளைத் தவிர மற்றவைகளும் தாவிதமும் ஆகாது. மறுபத்தியமான பின்பு புளியைச் சுட்டுச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மருந்து சாப்பிட்டு விட்டவுடனே உடலில் வலி, கடுப்பு, இல்லாதிருந்தால் அடுத்தநாள் ஓமம் தேய்த்து முழுகினபின் விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்கச் செய்ய வேண்டும். இவ்விதம் மறுபத்தியத்திற்குள் விளக்கெண்ணையில் இரண்டு மூன்று தலைமுழுக்குச் செய்யும். உடலில் வலி கடுப்பிருந்தால் மறுபத்தியமானபின் விளக்கெண்ணையில் தலைமுழுக்குந் செய்ய வேண்டியது. மருந்தை விட்டவுடன் உடலில் வலி கடுப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஓமத் தலைமுழுக்குச் செய்ய வேண்டியதவசியம். விளக்கெண்ணெய் தலைமுழுக்குக்கு மாத்திரந்தான் இந்த நிபந்தனை. பிறகு வழக்கம்போல் நல்லெண்ணெய் தேய்த்து தலைமுழுக்குச் செய்துவர வேண்டியது. இந்த மருந்தை உபயோகித்தபின் கை, காலில் திமிர்காணுமாயினும், மேற்கண்டபடி ஏதேனும் தீயகுணம் காணுமாயினும் அவரிவேர் 2 விராகனெடை (7 கிராம்), மிளகு 2 விராகனெடை (7 கிராம்) இவ்விரண்டையும் சிதைத்து ஒரு ஆழாக்கு தண்ணீரிலிட்டுக் காய்ச்சி அர ஆழாக்காகச் சுண்டவைத்து வடிவட்டித் திப்பிநீக்கிக் குடிக்க செய்யவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் ஐந்து ந

ாள், ஏழுநாள் சமயோசிதம்போல் செய்யவும். எல்லாவிதத் தீயகுணங்களும் தீரு ம்.

**குறிப்பு :** இது மிகவும் சிறந்த முறைகளிலொன்று. இதில் உள்ள சரக்குகளி ல் வெள்ளைப் பாடாணமொன்றே கொடிய சரக்கு. அதுவும் திறமான தூய்மை செ ய்யப்பட்டிருக்கிறது. மேலும் வீசம் முதல் அரைக்கால் உளுந்து நிறை, பாடாணத்தை த உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

## 7. இரசபற்பம் :

பற்பமென்ற ரசபற்பமென்றுகேளு பாலகனே ரசமதனைப் புளிக்காய்ப்பாலி ல், அற்பமென்று நினையாமல் கையிற்றேய்க்க யகங்கையிலாட்டுமடா ஈயம்போலே, துப்புறவாய்த் தேய்த்து மெள்ளக் கழுவச் சுத்திசெய்த கங்கழஞ்சு பன்னிரண்டு, நிற்புழுமாய்க் கல்லிலிட்டுக் கொண்டு நினைவாகத் தாளரைக்கத் தயிலங்கேளே.

தயிலமென்றால் கெந்தகத்தின் தயிலமப்பா தன்னுடன் இறக்கும் வகை தய வாய்க்கேளு ஒயிலாககெந்தகத்தை தூளாயாட்டி புண்மையுள்ள கலயத்தில்பாதி போட்டு, மயலாகக்கலசம் வாய்க்கேற்றாற்போலே மைந்தனேமண்ணாலே புனலுண்டாகி, அயிலமென றகலயத்திலமூடிச் சீலையஞ்சாறுமண வலுகக்செய்து கொண்டே.

கொண்டபின்பு வடிவுயர்ந்த குப்பிவாங்கி குமாகச்சல நிரப்பி யடைத்துப்போட்டு, அண்டையிலே ஒருவனைத்தான் பிக்கச்சொல்லி அடியப்பா அரும்பாணிநூரிலேகாண, மண்டையிலேயோ ரடியிற்றமருண்டாகும்பாலகனே புனல்மூக்குத்தமரு ள்விட்டு, ஓடையிலே மண்பூசி புகையோடாம லுத்தமனே சிறுவடுப்பில் தீபம்போலே.

தீபம்போல்மேலலகுப்பி கனல்படாமல் தீயெரித்தநாழிகை தானிரண்டுக்குள்ளே, தூபமென்ற கெந்தகத்தின் புகைதான் குப்பி சுற்றிலுமே திராவகமாய் நிற்கும் பாரு, தாமென்ற மறுகுப்பிக்கேற்றிக்கொண்டு தயவாக நாற்கழஞ்சிதயிலம்விட்டு, சோபமென்றுரசமான வரைத்துருட்டிச் சுருக்காகமேற்கவசஞ் சொல்லக்கேளே.

சொல்லக்கேள்பூவரசம் பட்டைபலமிரண்டு சுத்திசெய்து நெல்லிக்காய் கெந்தபலமிரண்டு, அல்லக்கேள் சிறுதும்பைச் சாறுவிட்டாட்டி யப்பனேரசமெழுகி லணிந்துருட்டி, நல்லாயக்கேள் வாய்பொதுந்துந் தாளிரண்டு நன்னயமாயடித்தாள் தன்னிலுப்பும், வல்லக்கேன் செங்கல்னுமே பொடித்துப்பாதி வகையாகத் தான் செய்து மருந்தைவையே.

வைத்தப்பா மூன்றுநாள் மறையமூடி மார்க்கமுடன் மேற்றோளி தூரிலேதான், கைத்தப்பாகையான்சா றேழுவிசைபூசி காயவைத்து மேல்மூடி யேழுமண்செய்து, சுத்தப்பாவெடித்தயிட மண்ணும்பூசிச் சதானந்திபதம்போற்றி வாலுகைமீதேற்றி, கைத்தப்பாகாடாக்கிளி மூன்றுசாமம் நலமாகத்தானெரித்து வடுப்போடாற்றே.

ஏழுநாள் தான்கொடுக்கத் தீரும்நோய்கேள் என்மகனே குறை நோயுங்குன்மநோயும், ஆழுமேகுஷ்டமுஞ்சூலையரை யாப்பு அபானத்தில் சூலையுடன் யோனிப்புற்று, கேழுமே முளை மூலை கண்டமாலை கிரந்தயுடன் றடிப்பு வெள்ளைக் கருங்கரப்பான், பழுமேவண்டுகடி. சிலவிடமுந்தீரும் பத்தியந்தானுப்பாகா பசும்பாலாமே.

பாலாகும்வெந்நீரும் பதினாலாநாள் பாலகனேவோமநீர் ஸ்தானம்பண்ணி, நாலாகும்உபதனை வறுத்துக்கூட்டு நன்மையுடன் மறுநாளுமே கூடச்சொல்லு, ஆவானஸ்ரீபோக மண்டலமாகாது அப்பனேச கலநோய் அகலும்பாரே.

## 8. வெள்ளி பற்பம் :

கேளப்பா வெள்ளியது தகடுதட்டிக்
 கெடியான ரசபற்பம் வங்கபற்பம்
நாளப்பா நாகமெடு மூன்றுநேராய்
 நலமாக வாய்நீரா வரைத்துக்கொண்டு
கேளப்பா வெள்ளிக்குச் சமனாய்ப்போடு
 விருதான ரவியுலர்த்திச் சீலைசெய்து
சூளப்பா சுண்ணாம்புக்குள்ளே வைத்து
 துடியாக முழப்புடத்தில் தூக்கிவாங்கே.

வெள்ளியைச் சுத்தி செய்து தகடுபோல் தட்டிச் கொண்டு ரச கற்பம், வங்க கற்பம், நாகபற்பம் இவை மூன்றையும் நாதநீரால் அரைத்து வெள்ளித் தட்டின் மேல் இருபுறமும்சமமாக பூசி வெய்யிலில் உரை வைத்து சுண்ணாம்புச் சீலை செய்து சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து முழப்புடம் ஒன்று போட்டால் வெள்ளி பற்பமாகும்.

வாங்கிடதோர் பற்பமதைப் பதனம்பண்ணு
வகையாக பணவெடைதான் தேனிற்கொள்ள
தேங்கியதோர் பல்லடைப்புச் சதையடைப்புத்
தீராத திரிச்சுரங்கள் தீரும் தீரும்
ஏங்கியதோர் காசமோ டிளைப்புத் தீரும்
மிளைக்குமே லிங்கப்புற்று யோனிப்புற்று
பாங்கியே கிரந்தி யரிமேகமெல்லாம்
பறக்குமடா வின்னமொரு பற்பங்கேளே.

இவ்வெள்ளி பற்பத்தை பத்திரமாக வைத்துக் கொண்டு பண எடையளவு தேனில் உட்கொண்டால் கல்லடைப்பு, சதையடைப்பு, வாத, பித்த சிலேத்தும சுரங்கள், காசம், ஈளை, இளைப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கிரந்தி அரிமேகம் போன்றவை விலகும் இனி மற்றொரு பற்பத்தை கேள்!

கேளப்பா தங்கமொரு பலன்தான் வாங்கி
கிருபையாய்த் தகடுகட்டிச் சொல்லக் கேளு
நாளப்பா படிச்சாற்றில் பூங்காவி யாட்டி
நலமாகத் தகட்டின் மேற் பூசிக்காய்ச்சி
தாளப்பா வைத்து தரங் காய்ச்சிக்கொண்டு
தளமாக வங்கபற்பம் நாகபற்பம்
கேளப்பா ரசபற்பம் வீரம் வெள்ளை
கோசமனா யண்டத்தி நீராலாட்டே.

## 9. சூதபற்பம் :

சொல்லுகிறேன் வெண்முள்ளிப் பழத்தின் சாறு
தோன்று றுகண்டங் கத்தரியின் பழத்தின்சாறு
வெல்லுகிறேன் நீர் முள்ளி காவெள் ளுள்ளி
விளங்கவே குறட்டையுட பழத்தின் சாறு
மல்லுகிறேன் படியொன்று வகை யொன்றப்பா
வஞ்சுபத்துப் பலங்கெந்திக் கல்வத் தாட்டு
கொல்லுகிறே னென்னு கொல்லுங் கெந்தி யைத்தான்
குருவிதிலே கழஞ்சியஞ்சு கூட்டி யாட்டே

வெண்முள்ளி பழத்தின் சாறு, கண்டங்கத்திரி பழத்தின் சாறு, நீர் முள்ளி பழத்தின் சாறு, வெள்ளுள்ளிசாறு, குறட்டைப்பழச்சாறு ஆகியனை வகைக்கு ஒரு படி எடுத்து ஐம்பது பலம் கெந்தியிட்டு கல்வத்தில் இட்டு சாறுகளைவிட்டு அரைக்கவும். கெந்தியைக் கொல்லும் குருவிதிலே ஐந்து சுவட்டி அரைக்கவும்.

ஆட்டவே சாறெல்லாம் வற்ற வற்ற
ஆச்சரியங் காசுபோல் வில்லை செய்து
மூட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு
முறையோடே கைமுறையாய்த் தயிலம் வாங்கு
நாட்டுவாய் சூதமொரு பலந்தா னீயம்
நலமாகக் கல்வத்தில் வாரு வாரு
சுவட்டுவாய் கெந்தியுட தயில மப்பா
குறையாமற் பலமொன்று சுூட வாரே

சாறுகள் அனைத்தும் வற்ற வற்ற அரைத்து காசுபோல வில்லை செய்து வெய்யிலில் வைத்து உலர்த்த பின்பு முறையோடு அதனைத் தயிலம் வாங்கவும். இரசம் ஒரு பலம் விட்டு கெந்தகத் தயிலம் ஒரு பலம் சேர்த்து கல்வத்திலிடவும்.

வாரப்பா குட்டித்தக் காளிச் சாறு
வகையாகப் படியொன்று மாள மாளச்
சேரப்பா தயிலமொடு சூதந் தானுஞ்
சேர்ந்தரைக்க மூன்றுநாள் மாண்டு போகும்
சுரப்பா குகையிலிட்டுச் சில்லு செய்து
குக்குடத்தில் நீறியது கொடுஞ் சூதந்தான்
பேரப்பா யிதுக்குபேர் இரச கற்பூரம்
பெரிதான கிரந்தி யெல்லாம் பறந்து போமே

கல்வத்திட்டு மருந்துகளை குட்டித் தக்காளி சாறு ஒரு படிவிட்டுமான மாள அரைக்கவும். மூன்று நாளில் மாண்டுபோனபின் குகையில் இட்டு சில்லுசெய்து சீலைமண்ணிட்டு பத்து வரட்டியில் புடமிட இரசம் சாகும். இதற்கு பெயர் இரச கற்பூரம் ஆகும். கிரந்தி வகைகள் எல்லாம் பறந்துபோகும்.

போமடா வாயுவென்ற தெல்லாங் கேளு
புற்றரையாப் போடுகடி தடத்தின் புற்று
ஆமடா லிங்கப்புற்றுச் சூலை மேகம்
அளவற்ற நோய்களெல்லா மகலு மப்பா
நாமடா புடஞ்சயமாய் ரசகற் பூரம்
நாட்டினோ மிதுவன்றிப் பதங்கஞ் செய்வார்
தாமடா கொண்டாக்கல் வாயைக் கட்டு

தந்தம்போம் பொறுத்தெல்லாஞ் சாருங் காணே

வாயுக்கள் அனைத்தும் போகும். புற்று, அரையாப்பு, கடிதடப் புற்று, லிங்கப் புற்று, சூலை, மேகம், மற்ற நோய்களும் தீரும். இவ்வாறு இல்லாமல் பலரும் பத ங்கித்தே செய்வார்கள். அவ்வாறு செய்து உட்கொண்டால், வாயை கட்டும் பல் கொ ட்டும், மூட்டுகளில் வலி உண்டாகும்.

## 10. அவிழ்த வகை :

கேளென்ற சேதியென்ன கற்பூரந்தான்
கிருபையுள்ள வெருக்கின்பால் விட்ட ரைத்துக்
கூளென்ற மைபோலே யாட்டிக் கொண்டு
கொடியதோர் பிளவையிலே பூசிக் கொண்டு
வேளென்ற குதிரைலத்திக் கனப்புப் போட்டு
மிகுந்தபுகை பிடித்தவுடன் புழுக்கள் வீழும்
நாளன்ற வேப்பந்தோல் கியாழஞ்செய்து
நலமாகப்புண்ணில் விட்டுக்கழுவிப் போடே

போட்டபின்பு கருப்பூரக் குழம்புபூசு
புகழாக மறுநாளுங் கழுவிப்போடு
ஆட்டபின்பு சிவக்குமட்டும் போடப்போட்டு
அழகாகச் செய்துவரி லாறிப் போகுங்
கேட்டபின்பு வுள்ளுக்கோர் மருந்துசொல்வேன்
கெந்தகந்தான் பலமைந்து சுத்திசெய்து
நாட்டபின்பு வெண்கருநீர் விட்டரைத்து
நலமாற ஒட்டில் வைத்துச் சிலைசெய்யே

சீலைசெய்து மணல்மறைவிற் புடத்தைப்போடு
செயமாக விப்படிமூன்று புடம்போட்டு
ஆலயமாம் வில்வரசம் விட்ட ரைத்து
அப்பனே குக்குடந்தான் வெளியிற்போடு
வாலையாங் கெந்தகந்தா னீறிப் போகும்
வளமான சருக்கரையிற் றேனிற்கொள்ளச்
சூலையென்ற கழலையொடு பிளவை கட்டுஞ்
சூழ்ந்திருந்த வியாதியெல்லாஞ் சுழன்று போமே

சுழன்றுதடா லிங்கப்புற்றும் யோனிப்புற்றுஞ்
சொல்மார்பி லாணியொடு கண்டமாலை
கழன்றுடலிற் றிரண்டுவத்த வியாதியெல்லாந்
தான்கெட்டோ மென்றுநீர்வற்றிப்போகு

முழன்றுநின்ற புழுக்களெல்லா முருண்டுபோகு
மொருநாளும் வாராது வுடவ்வச்ரகாய
மழன்ற கந்தி பற்பமிது கொள்ளும்போதி
லானசிறு பயறுடனே யாவின் பாலே

பாலாருங் தூதளங்காய் முருங்கைக் காயாம்
பச்சைமீ னிறைச்சிதனைப் பார்க்க லாகா
நானாகும் நாற்பதுநாள் கொண்ட பின்பு
நல்லசந்த னாதிவைத்து முழுகச் சொல்லி
வேலான விழிமடவா ராசை யாகா
விட்டுவிடு நூறுநாள் மெய்த்தொ டாதே
காலான நோய்தீர்த்த பண்டி தர்க்குக்
கனகதா னங்கொடுத்துக் கருதிக்கொள்ளே

## 11. கெந்தி பூர பற்பம் :

கெந்தகத்தை மடக்கி மடக்கி ஏழு தடவை பசுவின் பாலில் ஆவிப்புடம் அல்லது தூமப்புடம் போட்டுத் தூய்மைசெய்து கொள்ளவும். அல்லது மருதச்சாம்பலில் அல்லது மருதச்செயநீரால் கட்டிக்கொள்ளவும். பிறகு இதைக் கல்வத்திவிட்டு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்தி மறுபடியும் கல்வத்திலிட்டு பொடித்து முன்போல் இஞ்சிச்சாற்றை விட்டு இரண்டு சாமநேரமரைத்து முன்போல் இஞ்சிச்சாற்றை விட்டு இரண்டு சாமநேரமரைத்து முன்போல் உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதமே மூன்றாந்தடவையும் இஞ்சிச்சாற்றிற் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரசகர்ப்பூரம் தேவையான அளவு இதனை முலைப்பாலில் மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி முலைப்பாலில் நான்கு சாமநேரம் சுருக்குக் கொடுத்துச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்படி கெந்தகம் 1 பங்கு, இரசகர்பூரம் காற்பங்கு, இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு வெண்ணிறமான வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு, ஒருசாம நேர மரைத்து எடுத்துப் பில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் பொடித்துப் பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1 முதல் 1 1/2 குன்றிமணி எடை

**அனுமானம் :** கருஞ்சீரக இளகம், எள் இளகம், பறங்கிச்சக்கை இளகம், வல்லாதிஇளகம், வெண்ணெய், நெய், தேன் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள் :** இதனைக் காலை, மாலை இரண்டு வேளையும், ஏழுநாள் உபயோகித்தால், யோனிப்புற்று, லிங்கப்புற்று, அங்குள்ள புண்கள், ரணங்கள், பவுத்திரம், மேகப்புள்ளிகள், மேகப்படை, வெண்குட்டம், கண்டமாலை, மேகநோய்கள், கிரந்திநோய் ஆகியவை தீரும்.

**பத்தியம் :** புகை, புளி, புணர்ச்சி நீக்குவதுடன், நோயின் பலத்திற்குத் தகுந்தபடி பத்தியம் கொள்வதே சிறப்புடையதாகும்.

## 12. வாலைரசம் :

சொன்னதொரு வாலைரசஞ் சொல்லக்கேளு துடியான செய்தூரக் குளிகைபற்பம், வண்ணமொடு வாதங்கள் வயித்தியங்கள் மற்று முதலெவைகட்கும் மெத்தநன்று, கன்னமாஞ்சாதிலிங்கம் பலந்தானொன்று கனமாகவாங்கிப் பழச்சாற்றினாலே, கன்னவே சுயம்புரசமாக வேண்டும் கடையிலுள்ள ரசமேனுஞ் சுத்திசெய்யே.

செய்துமே சட்டிதனிற் கொடிவேலித்தூள் சிறப்பாகப்பரப்பி யதின்மேலேகேளு, பையவே சாதிலிங்கம் பொடித்து மேலே பரப்பியே சட்டியிலூ மத்தஞ்சாற்றை, துய்யவே மூன்றுதரம் பூசிக்கவசம் துடியாகச் செய்தடுப்பி லொருவிறகு தன்னால், ஐயவே நாற்சாம மெரிக்கும்போது அப்பனே பதங்கித்து நிற்கும் பாரே.

பதங்கித் தரசமெல்லா மெடுத்து வைத்துப் பரிவாக நோயறிந்தனுபானத்திலாட்டு, பதங்கித்தபதினெட்டு சூலை குன்மம் பறங்கிப் புண்ணரையாப்புக் கண்டமாலை, பதங்கித்தவாயு வென்ற திருபத்தாறும் பௌத்திர முங்கீற்சூலை பிளவைபுற்று, பதங்கித்த சிரங்குசொறி கைகால் முடக்குப் பல்லூறல் மேகவெடிபறக்குக்காணே.

## 13. காந்தரச வில்லை

காந்தரச வில்லைதனைச் சொல்லக்கேளு
கனவிரத மிலிங்கந்திப் பிலிநற்சுக்கு
நேர்ந்திடுகார் போகரிசி வாய்விளங்கும்
நினைவான மஞ்சிஷ்டி நிகழ்த்துகாரம்
சுவர்ந்திடுவால் மிளகுவகைக் கிருவிராகன்
கொடுமையுள பாஷாண மொன்றுகூடன்
ஆர்ந்தவொன்று காந்தமிரண் டதைந்ததண்ணீ
ரழகுடனே விட்டுநாற் சாமாட்டே

ஆட்டியொன்றே முக்கால் விரான்பில்லை
யன்புடனே செய்துலர்த்தி யோட்டிலிட்டே
ஓட்டினால் மேன்மூடி யிரண்டுசிலை
யொழுங்குறவே செய்துநாற் பத்தைந்தேநாள்
நாட்டியதா னியபுடத்தில் வைத்துப்பின்பு
நலமான சீசாவில் பதனஞ்செய்யே
வேட்டகுன்றி யெடையிற்கா லரைமுக்காலா
மிருகாலை மாலையெழு தினம்வரைக்கும்

பனைவெல்லம் சர்க்கரைதே னெய்யில்வாழைப்
பழத்தில்லைத்துக் கொடுத்துவிட்டா லிலிங்கப்புற்று
நினைக்கவொண்ணாக் கிரந்திவகை மேகசூலை
நேற்மையற்ற வெடிசூலை வாய்யும்போகும்
கனைக்குமுயர் வாதமிர ணங்கள்போகும்
கடினமுற்ற வியாதிகட்கோ வுப்பைத்தள்ளி
இனையாமல் பதினான்கு நாள்வரைக்கு

மேற்றகடும் பத்தியத்தைக் கைக்கொள்வாயே

**(வி–ம்)** சுத்திசெய்த இரசம், சுத்தசெய்த இலிங்கம், அரிசித்திப்பிலிச் சூரண ம், மேற்றோல் சீவின சுக்குச்சூரணம், மஞ்சிஷ்டிச்சூரணம், கார்போகரிசிச்சூரணம் , வாய்விளங்கச்சூரணம், வால்மிளகுச்சூரணம் இவை வகைக்கு விராகனெடை– 2, வெள்ளைப்பாஷாணம் (இதனைச் சுண்ணாம்பைக் கரைத்த ஜலத்தில் கிழிக்க ட்டித் தொங்கவிட்டு இரண்டுசாமநேரம் எரித்து எடுத்துக்கொம்புப்பாகற்பழத்திற்குட் செலுத்தி இரண்டு சீலைமண் செய்து பழம் வேகும்படியாகக் கொஞ்சம் உமியில் புட மிட்டு ஆறினபின் எடுத்து) விராகனெடை–1, சூடன் விராகனேடை–1, கார்தம் (இத னைக் கொள்ளு வேகவைத்த ஜலத்தில் ஐந்து தடவை காய்ச்சித் தோய்த்துக் கொ ள்ளவும்) இவ்விதம் சுத்திசெய்த மேற்படி காந்தம் விராகனெடை–2, குளிர்ந்த ஜல ம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** இரசத்தையும் பாஷாணத்தையும் தொந்தித்தரைத்து இரசம் ம டிந்தபின்பு பொடிக்கவேண்டிய சரக்குகளைத் தனித்தனியொடித்தும் மற்றசூரண ங்களை ஒன்றாகக் கலந்தும் கல்வங்திலிருக்கிற மருந்துடன் சேர்த்து ஒரு மணிே நரம் அரைத்து எல்லாம் மிஸ்ரமான பின்பு பச்சைத் தண்ணீரைச் சிறுகச்சிறுக வா ர்த்து நான்கு சாமநேரமரைத்து ஒன்றே முக்கால் விராகனெடையுள்ள பில்லைக ளாகச் செய்துலர்த்தி மெல்லிய ஓட்டில் பரப்பி மேலோடுமூடி இரண்டு சிலை மண்ெ சய்து நாற்பத்தைந்து நாள் தானியபுடம் வைக்கவேண்டியது. பிறகு அதனை யெ டுத்துப் பொடித்துப் புட்டியிற் பத்திரப்படுத்தவும்.

**பிரமாணம் :** குன்றி மணியெடை –1/4–1/2–3/1–1. ஏழுநாள் காலை, மாலை உபயோகிக்கவும்

**அனுபானம் :** பனைவெல்லம், சர்க்கரை, தேன், நெய், வாழைப்பழம் முதலி யவைகளாம்.

**உபயோகம் :** இலிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று முதலிய புற்று ரே ாகங்கள், கன்னக்கிரந்தி, கபாலக்கிரந்தி ஆகிய பல கிரந்தி ரோகங்கள், மேகசூல

ல, வெடிசூலை, காட்டுச்சூலை முதலிய பதினெட்டுவகைச் சூலைகளும் வாயுவகை ளும், வாதவதைகளும், இரணவகைகளும் ஆகிய பலரோகங்கள் தீரும். சிறுபய று, துவரை, முறுங்கைப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, மிளகு, மிளகாய், மஞ்சள் ஆகிய வைகொஞ்சம் சேர்த்துப் பதினான்கு நாள்வரையில் சாப்பிடவேண்டும். மற்ற மசா லை தாளிதம் ஒன்றும் ஆகாது. பதினைந்தாம் நாள் புளியைச்சுட்டுச் சூட்டிக்கொள் ளவும் மருந்து சாப்பிட்ட ஏழாம் நாள் வலிகடுப்பில்லாம லிருந்தால் மாத்திரம் மேற் கண்டபடி எட்டாம் நாள் ஓமம் தேய்த்து முழுகவேண்டியது. வலிகடுப்பிருக்கிறவரை யில் ஓமம் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டியது. இவ்விதம் மூன்று ஸ்நானம் செய்யவும். யிறகு வழக்கம்போல் நல்லெண்ணெயில் ஸ்நானம் செய்து வரலாம். இந்த மருந்தினால் கைகால்களில் திமிர்கண்டால், அவுரிவேர் விராகனெடை, 1 1/4 மிளகு, விராகனிடை – 1 1/4 இவ்விரண்டையும் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்தி ற் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிப்பானம் செய்ய வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று நாட்கள் செய்யின் இந்த மருந்தினால் கண் ட திமிர் நீங்கிய போகும்.

# எண்ணெய்

## 1. மேககாதி எண்ணெய்

புங்கம்பட்டை, பிராயன்பட்டை, மாம்பட்டை, இலுப்பைப் பட்டை, அழிஞ்சல் பட்டை, எட்டிப் பட்டை, ஒதியம் பட்டை, சங்கம்பட்டை, குவளைப்பட்டை, புரசம்பட்டை, ஊழலாற்றி பட்டை, வேப்பம் பட்டை, பூவரசம் பட்டை, நில விளாப் பட்டை, சிவனார் வேம்பு ஆக இப்பதினைந்து பட்டைகளையும் வகைக்கு பலம் 10 ஆக இடித்து ஒரு பெரிய மண கடத்தில் போட்டு 16 படித் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து 2 படித் தண்ணீராக இருக்கும் சமயத்தில் பிசைந்து வடிகட்டி மறுபாண்டத்தில் வைத்துக்கொள்க.

இரண்டாவது ஆடுதின்னப்பாளை வெள்ளறுகு, கழச்சி இலை, சங்கங்குப்பியிலை, செருப்படை, கொட்டைக்கரந்தையிலே, பொடு தலையிலை ஆகிய இவற்றின் சாற்றை வகைக்குப் படி 1/4 ஆகப் பிழிந்தெடுத் வடிகட்டி முன் சித்தப்படுத்திய பாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றி எரித்து குழம்பு பதமானவுடன் இரண்டு படி நல்லெண்ணெய் கூட்டி எரிக்கவும். அத்தருணம் பறங்கிச் சக்கை பலம் 2, குமிழ் போக்கி சேங்கொட்டை பலம் 1, இடித்துத் தெள்ளி ஓடுபோக்கித் தூவி எண்ணெய் பதம் கண்டவுடன் இறக்கி ஆறவிட்டு சீசாவில் அடைத்து நெற்புடத்தில் 3–மாதம் வைத்து உபயோகப்படுத்தவும்.

**பிரயோகம்:** வேளைக்கு உச்சிக்கரண்டி வீதம் தினம் இரு வேளை சாப்பிடவும். இதனால் கைகால் முடக்கு, தடிப்பு, குஷ்டம், விரணம், மதுமேகம், சொறி, சிரங்கு, படை, தேமல், பவுத்திரம், **புத்துகள்,** கிரந்தி, அரையாப்பு, கண்டமாலை, கற்றாழை நாற்றம், மலடு முதலிய பல ரோகங்களும் தீரும். இதன் பெருமையைச் சொல்ல வேண்டியதென்றால் சகல ரோகங்களும் இவ்வெண்ணெயைக் கண்டவுடன் சரணம்புகு மென்பதாம்.

**பத்தியம்:** இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** இந்தப் பாகத்தில் பசுவின் நீர், வெள்ளாட்டு நிர், கேசரி நீர் வகைக்கு படி – 1/2, கேசரி சாணி பலம், 10 போட்டுக் கரைத்து வடிகட்டி முன் எண்ணெய் எரிக்கும் போது சேர்த்துக் காய்ச்சுவதும் உண்டு.

## 2. கெந்தகத் தைலம்

முன்னர் இதிற் சேருகிற சரக்குளைக் கீழே கண்டிருக்கிறபடி சுத்திசெய்து கொள்ள வேண்டும்.

**கெந்தக சுத்தி:** நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் – 30, ஒரு இரும்புக் கரண்டியிற் கொஞ்சம் பசுவெண்ணெயைப் போட்டு அது உருகினவுடன் மேற்படி கெந்தகத்தைப் பொடித்துப்போட்டுச் சிறுதீயாக எரித்துக் கெந்தகம் உருகினவுடன் சோற்றுக்கற்றாழைச் சாற்றிற் சாய்க்க வேண்டும். இந்தச் சாறானது சுமார் ஒருபடி யிருக்க வேண்டும். குளிர ஆறினபின்பெடுத்து மறுபடியும் முன் போலுருக்கி முன்போற் சோற்றுக்கற்றாழைச் சாற்றிற் சாய்க்க வேண்டும். இவ்விதம் 7 தடவை மடக்கி மடக்கிச் சோற்றுக் கற்றாழைச் சாற்றிற் சாய்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் இந்தச் சாறானது புதிதாக விருந்தால் உத்தமம். இதன் பிறகு மேற்கண்டவாறே வெள்ளைப்பூண்டுத் தனிச்சாற்றில் 7 தடவைகள் சாய்த்துக்கொள்ள வேண்டும். பிறகு 1 படி பச்சைப்பயற்றினமாவை ஜலம்வார்த்துக் குழைத்து இரண்டையாகச் செய்து ஒரு அடையின்மீது 20 பலம் பூண்டையிடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அகன்மீது பரப்பி அதன்மீது கெந்தகத்தை வைத்து அதன்மீது பாதி வெள்ளைப்பூண்டைப் பரப்பி அதன்மீது மறுஅடையை வைத்து உதடுகளைச் சந்தில்லாமற் சேர்த்து அதன்மீது 2 சீலை மண் செய்து அது கொள்ளும்படியான ஒரு பள்ளந்தோண்டி அதிலொரு அங்குல கனம் மணலைப்பரப்பி அதன்மீது முன் கவசத்தை வைத்து அதன்மீது இரண்டு அங்குல

மணலைப் பரப்பி விடவேண்டும். இது பூமிக்குச் சமமாயிருக்க வேண்டும். பிறகு 30 பலம் வறட்டியை அதன் மீது வைத்துப் புடமிட வேண்டும். குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்துக் கெந்தகத்தையெடுத்துக் கொள்ளவும். மறுபடியும் முன்போற் புடமிடவேண்டும. இவ்விதம் மடக்கி மடக்கி 7 தடவைகள் செய்து கொண்டால் கெந்தகமானது சுத்தியாய் விடும். இவ்விதம் சுத்தி செய்யப்பட்ட கெந்தகமானது தனியாகவு முபயோகப் படுத்தப்படுகிறது. இதனால் சரும ரோகங்கள், புண்கள், சொறி, சிரங்குகள், கிரந்திரோகங்கள் முதலியவைகளுந் தீரும்.

**இராசுத்தி:** பாலரசம் பலம் 5, இதனைக் கல்வத்திலிட்டுக் கம்மாருவெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்து இரசமெல்லாம் மாண்டபின்பு பதங்கப் பாத்திரத்திலிட்டுப் பதங்கித்துக்கொள்ள வேண்டும். பதங்கமேறின இரசத்தையெடுத்து முன் போல் வெற்றிலைச்சாற்றை விட்டு முன்போலரைத்து முன்போற் பதங்கித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 7 தடவைகள் செய்துகொண்டால், இரசமானது சுத்தியாகி ஜெயரசமாயிருக்கும்.

**நாகசுத்தி:** இதற்குமுன் 23 நெம்பரில் நாக செந்தூரத்திற் சொல்லியிருக்கிறபடி சிறுகண் நாகத்தைச் சுத்திசெய்து கொள்வது உத்தம மானதாம். அப்படிச் செய்ய ஏலாதவர்கள் வாழைக்கிழங்குச் சாற்றில் நாகத்தை மடக்கி மடக்கி 21 தடவை சுத்தி செய்து கொள்வதினாலும் நாகம் சுத்தியாகும். ஆனால் முன் முறைதான் இந்த முறைக்காக அதிகப் பொருத்தமானது.

**அண்டத்தைலம்:** 21 கோழி முட்டைகளை வெந்நீரைக் குமிழெழும்படியாகக் கொதிக்க வைத்துச் செம்மையாகக் கொதித்தபிப்பு மேற்படி முட்டைகளை அதிற்போட்டு 10 நிமிஷநேரம் மூடிவைத்திருந்து ஆறின பின்னெடுத்து முட்டைகளை யுடைத்து மஞ்சட் கருவை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு இரும்புச் சட்டியைக் கொஞ்சம் ஒருபக்கம் சாய்வாக வைத்து உயர்ந்திருக்கிற பக்கத்தில் மேற்படி மஞ்சட் கருக்கனை வைத்து அடுப்பை மெதுவாக எரித்து வந்து கருக்களெல்லாங் கருகினபதத்தில் 2 விராகனெடைபூநீரைப் பொடித்துத் தூவி மெதுவாக யெரிந்துவர எண்ணெய் புறப்படும். எல்லாக் கருக்களிலுமிருந்து எண்ணெய் புறப்பட்ட பின்பு அதையெல்லாமிறுத்து வடிகட்டிச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும். இதுவே இங்கவசியமான அண்டத்தைலமாம்.

**கெந்தகத்தைலம் முறை விபரம்:**

மேற்கண்டபடி சுத்திசெய்த இரசம் விராகனெடை 10, மேற்கண்டபடி சுத்தி செய்த சிறுகண் நாகம் விராகனெடைடி 10, மேற்கண்டபடி, சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனெடை 20, மேற்படி அண்டத்தையும் செல்லத்தக்க அளவு, மேற்படி கட்டின நவச்சாரம் விராகனெடை 1.

**செய்முறை:**

ஒரு சிறு மண் கிண்ணத்தில் கொஞ்சம் நல்லெண்ணெயை விட்டு அதில் இரசத்தை விட்டு வைக்க வேண்டும். நாகத்தில கொஞ்சம் வெண்ணெயை அல்லது ஆட்டுக்கொழுப்பைச் சேர்த்துருக்கி மேற்படி ரசத்தில் விட்டுப் புகைபோகாமல் சட்டி முதலிய பாண்டத்தினால் மூடிவிட வேண்டும். ஆறின பின்டெுத்தால், ரசமும் நாகமும் தொந்தித்துச் சேர்ந்திருக்கும். இதனையெடுத்துத் துணி முதலியவைகளினால் எண்ணெய்ப் பசையை நீக்கிச் சுத்தி செய்ய வேண்டும். பிறகு அதனைக் கல்வத்திலிட்டுக் கெந்தகத்தையும் நவச்சாரத்தையுஞ் சேர்த்தரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரவான பின்பு மேற்படி அண்டத்தைலத்தைச் சிறுகச் சிறுக வார்ர்த்துப் பனிரெண்டு சாமநேர மரைத்துக் கால் விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் வைக்க வேண்டும். பிறகு மணற்றவளை அல்லது, பச்சைத்தவளை கொண்டு வந்து ஒவ்வொரு தவளையிலும் இரண்டிரண்டு விராகனெடை மாத்திரைகளைச் செலுத்தி அவற்றின் வாயையும்

ஆசனத்தையுந் தைத்துக் காலில் கயிற்றைக் கட்டி வேறொரு கயிற்றிற் றொங்கவிட்டு வெயிலிலுலர்த்த வேண்டும். காக்கை முதலியவைகள் கொண்டு போகாமலும் எறும்பு முதலியவைகள் சேராமலும் ஜாக்கிரதை செய்ய வேண்டியது. செம்மையாக வுலர்ந்த பின்பு ஒரு இரும்புக் கம்பியில் இரண்டிரண்டு தவளையாகச் கோத்துக் கொள்ள வேண்டும். ஒருசிறு தோண்டியின் அடியில் 4–5 துவாரமிட்டு மேற்படி கம்பிகளை உட்புறத்திலிருந்து துவாரங்கள் மூலமாகச் செலுத்தி வெளியில் 4 அல்லது 5 அங்குலமிருக்கும் படியாக விட்டுத் தோண்டியின் வாயின் குறுக்கில் ஒரு கட்டையைப் போட்டு மேற்படி கம்கிகளின் மறுமுனையை அதில் சுற்றிவிட வேண்டும். இப்படிச் செய்து, தவளைகள் தோண்டிக்குள் மத்தியிலிருக்க வேண்டும். அதாவது தோண்டியின் பங்கங்களிற் படாமல் மத்தியிலிருக்கும்படி யாகச் செய்ய வேண்டியது. பிறகு தோண்டியின் வாய்க்கு ஓடிட்டி அதைச்சுற்றிலும் 7 சீலைமண் செய்தும் தோண்டியினடியில் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைத்து அதற்குள் மேற்படி கம்பகளின் கீழ்ப்பாகமிருக்கும் படியாகப் பார்த்து தோண்டியோடு பீங்கான் பாத்திரத்திற் பொருந்தும்படியாகச் சீலைமண் செய்தும் வெயிலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். ஈரமில்லாம லுலர்த்தபின்பு ஒரு சிறு பள்ளந்தோண்டி அதற்கு மத்தியில் கீழிருக்கும் பீங்கான் பாத்திரங் கொள்ளும்படியாகக் குழிதோண்டி அதற்குள் பீங்கான் பாத்திரத்தை வைத்து அதன் வாய்மட்டம் வரையில் மண்ணைத்தள்ளி விட வேண்டும்.

இன்னுந் தோண்டியைச் சுற்றிலு சுமார் 4–5 அங்குலம் இடைவெளியிருந்தால் போதுமானது. தோண்டியின் வாயானது பூமியின் மட்டத்திற்குச் சரியாயிருக்க வேண்டியது இந்தப் பள்ளக் கொள்ளும் வரையில் வறட்டியைப் பெடித்தடுக்கிப் புடமிடத் தைலமிறங்கிப் பீங்கானில் வடிந்திருக்கும். குளிர ஆறினபின்பு அதிக ஜாக்கிரதையுடனெடுத்துச் சீலைமண்ணைப் பிரித்துப் பீங்கான் பாத்திரத்திலுள்ள தைலத்தைச் சீஷாவிற் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

**பிரமாணம்:** துளிகள் 3, 5

**அனுபானம்:** பொரியரிசிமா, சீனிசர்க்கரை முதலியவைகளாம்.

**உபயோகம்:** சாத்தியமான எல்லாவகைக் குஷ்ட ரோகங்களுந் தீரும். கிரந்திப் புண்கள், மேகப்புண்கள், அழிரணங்கள், புரை ரணங்கள் முதலிய எல்லாவகை ரணங்களுந் தீரும். இன்னும் பிரமியரோகங்கள், வெட்டைரோகங்கள், கன்னப்பிளவை, **கன்னப்புற்று, லிங்கப்புற்று, யோனிப் புற்று** முதலிய ரோகங்களுந் தீரும். இதைத் தொடர்ச்சியாக ஒவ்வொரு துளி சாப்பிட்டு வந்தால், தேகத்தி லெந்த வியாதியையும் அணுகவொட்டாமல் தேகத்தைப் பாதுகாத்து வரும். இன்னுமிந்தத் தைலத்தால் அநேகவியாதிகள் தீருமாகையால் அவரவர்கள் தம்தம் அனுபத்தால் தெரிந்து கொள்ளக்கூடும். ஆகையால் இதைப்பற்றி விசேஷமாயெழுதாது நிறுத்தியிருக்கின்றோம்.

## 3. மேக ராசாங்க எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 4 படி, ஈருள்ளி, கழுதைலத்தி, வரிக்கொம்மட்டி, கையாந்தகரை, புளியாரை, சங்கு, வல்லாரை.பொடுதலை, செருப்படை, கருநொச்சி, பொன்னாங்காணி, நுணா, ஆடாதோடை, கிரந்திநாயகம், வெள்ளறுகு, சிவனார்வேம்புச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து கொடிவேலி, பூவரசு, நிலவாகைவேர், கருந்துத்திவேர், கிளிமூக்குக்கிழங்கு என்னும் கருடன் கிழங்கு, அப்பை கோவைக்கிழங்கு, சங்கங்குப்பிவேர் வகைக்கு 1 பலம் இடித்துக் குறுணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீரையும் கூட்டி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், சன்ன லவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், கோட்டம், திப்பிலிமூலம், வெண்காரம் குரோசாணிஓமம், தான்றிக்காய் கருஞ்சீரகம், கார்போகரிசி, கஸ்தூரிமஞ்சள், அரத்தை, சுக்கு, அதிவிடையம், அக்கிராகாரம், கடுகுரோகணி, சடாமாஞ்சில், தாளிபத்திரி, கசகசா, கஞ்சா, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை, அழிஞ்சில்பட்டை, வாலுளுவையரிசி, சிறுநாகப்பூ, தக்கோலம், வசம்பு, அபின், வசுவாசி, சீரகம், ஆனைத்திப்பிலி, குங்குமப்பூ சாத்திரபேதி, வாளம், சேங்கோட்டை, சத்திச்சாரம், எவாச்சாரம், நவச்சாரம் வகைக்கு 4 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து

வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் கடும்பத்தியமாய் மூன்று நாள் ஆறு வேளை உண்ண கிரந்தி, அரையாப்பு, சூலை, விப்புருதி, கண்டமாலை, மேகம், காங்கை, சோகை, பாண்டு, கழல்வாதம், அண்டவாதம், கீல்வாதம், பக்கவாதம், பவுத்திரம், **முலைப்புற்று,** மண்டைச்சூலை, வாயு இரணம், சூலை ஆகிய நோய்கள் தீரும். ஓட்டில் வறுத்த துவரம்பரப்பு கூட்டவும்.

**4. சரமாரித்தைலம்**

| | |
|---|---|
| அழுஞ்சிவிதை | புன்னைவிதை |
| கடுக்காய்விதை | புங்கம்விதை |
| தாணிக்காய்விதை | கார்கோலரிசி |

இந்த ஆறுவித்துகளையும் சமபாகமாய் நிறுத்தெடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு சிறுவர்களின் சிறுநீர்விட் (20) நாள் ஊறியபிறகு (21) வது நாள் யெடுத்து நிழலில் உலர்த்தி யெடுத்து அத்துடன் மிளகு நாழிபோட்டு கலந்துக்கொண்டு (5) தமருள்ளபாண்டத்தில் சரக்குளைப்போட்டு வாய்ப்பாட்டுக்கு பானைகவிழ்த்து சீலைமண் செய்து உலர்ந்தபிறகு அடியிலுள்ள தமருக்குநேராய் சிறுபாண்டம் பொருந்தச்செய்து பூமியில் அடிபாண்டம் தெரியாமல் புதைத்து சரக்குள்ள பாண்டம் துவக்கி வரட்டியடிக்கி குழித்தயிலம் யிறக்க வேண்டும்.நடுபாண்டத்திலிருந்தே வரட்டியடுக்க வேண்டியதான போதிலும் மூன்று பாண்டங்களும் பூமிக்குள் இருக்கும்படி பெரும்பாள்ளமாக வெட்டி சுற்றளவுக்கும் பாண்டத்திற்குப் பொருத்தமாக வரட்டிகள் அடுக்கி குருத் தியானத்துடன் அக்கினியிட வேண்டியது.அவ்வாறுகசிகரத்துடன் பிறர் சஞ்சரிக்காத மறைவிடமான யிடத்தில் வைக்கவேண்டிய குழிப்புடத்தின் அருகில் தயிலம் யிறங்குமளவும் நிர்வாணிபூசை செய்ய வேண்டியது. என குழியின் நிதானம் அறிந்து தயிலம் இறங்குமளவும் இந்த ஒன்பது வாக்கியமும் புருவநிதானத்துடன் ஓதியிருந்து பிறகு தயிலத்தை சீசாவில்யிருந்து வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்:**

வைத்திருந்த தயிலத்தை கொஞ்சந்தொட்டு
மயிர்நுனியில் தடவிவிடக் கருத்துபோகும்
எய்த்திருந்தவெடிசூலை கண்டமாலை
எண்ணூறுசொரிசிரங்கு கரப்பானெல்லாம்
உய்த்திருந்து கெட்டோடுந் தயிலந்தன்னை
ஒடிகுறவு நோய்களுக்கு பூசிப்பாரு
மொய்த்திருந்த நோய்களெல்லா மோடிப்போகும்
முழித்திருந்த தயிலத்தை மூழ்குவாயே.

மூழ்கையிலே விஷநீரு முடிசிரங்கு
மூர்க்கமுள்ள தலைவெட்டி ரோகந்தீரும்
மாய்கையிலே புழுவெட்டி ரோகந்தீரும்
மகிமையிலே வயிரதுவுங்கறுத்துபோகும்
மூழ்கையிலே யசாந்தியநோய் நடுக்கல்தீரும்
முடிசிரங்கு குருந்தடிப்பு வினையுந்தீரும்
ஆழ்கையிலே பாம்பரணை கடியுந்தீரும்
அரணைகடிச்சிலந்திகடி * வாளம்போமே.

போனமென்றகுழிவாழை மூட்டுவாழை
புடைத்தெழுந்த துடைவாழை முதுகுவாழை
ஆமையடி ஊமையடி சிலந்திவாழை
அப்பனே சொல்லுகிறே னன்பாய்த்தானே
வேமென்றகண்ணோசி யிடுப்புசிட்டை
இருபுடரி நுணிநாசி சிலந்திபுத்து
தாணுங்கிமிள வையிமை கண்மேல்வாதம்

சரிநேத்திரபிளவையிதில் தணியும்பாரே.

தணிவான பெண்குறிமேல் கரப்பான் கட்
தடர்சிலந்திபடர்சிலந்தி யல்குல்புத்து
பிணியான பவுத்திரமும் முளைமூளந்தான்
பின்கரப்பான் முன்கரப்பான் அண்டபுத்து
துணிவாத உந்திப்புண் துடையில்புத்து
துடிசூலையிடிசூலை மேகசூலை
கெணியாத அலைகடிமேல் யிலைமேற்புண்கள்
கீழ்நாக்கு மேல்நாக்கு புத்துப்போமே.

புத்து போம்யிருபிளவை நகத்தின்சூலை
புரைவிழுந்தபடுஞ்சிரங்கு நிறுத்தும்பாரு
அத்துப்போம் நாக்குண்ணி மூக்குண்டபுண்ணு
அகலாத நோய்களெல்லா மகன்றுபோகும்
வெத்துப்போம் முளையான நோய்களெல்லாம்
விழிமுழிங்கியிமை முழிங்கி வெகுநாள்புண்கள்
செத்துப்போம் யித்தனைக்கும் பூசும்போது
தீர்ந்துப்போம் யின்னமுண்டு சொல்லக்கேளே.

சொல்லக்கேள் நல்லரவம் விரியன்பாம்பு
சூழெலிகள் குருட்டெலிகட் புடையன்மூக்கன்
வெல்லக்கேள் தேளோடு நட்டுவாக்காலி
விஷமுள்ளுதைத்தாலும் பூசுபூசு
இல்லக்கேள் ஒழிந்துவிடும் விஷங்களெல்லாம்
இத்தயிலம் வெகுசுருக்கு மெத்தநன்று
சொல்லக்கேள் விஷங்களோடு நோய்கள்யாவும்

கொல்லவென்றேயித்தயிலம் கூறினேனே.

கூறினேன் புகையிலையும் புளியுந்தள்ளு
கூரரியப்பச்சைமீன் தள்ளுதள்ளு
மீறியேதிண்ணாதே அசனத்தைத்தான்
மிழுங்காதேயுரங்காதே மிகச்சொல்லாதே
ஏறினேன்யென்றவரை யிகழ்ந்திடாதே
யேசாதேவையாதே திட்டாதேநீ
ஆயியேபதமாக உண்டால் மைந்தா
அமுர்தமது தன்னிலையாய் நிலைக்கும்பாரே.

* வாளம் என்பது வாளவிரியன் ஓர் பாம்பு

## 5. மகாசந்தனாதித் தைலம்

போகமது மிகுந்தவர்க்கு நாபி சூடாம்
புண்ணாகிக் கபாலமது வெந்து சீழாம்
ஆகமதிற் கிரந்திபதி னெட்டு முண்டாம்
அடங்காத சூலையது மூன்று மாகி
மேகமது மூவேழு கிரிச்சனங்க ளாறும்
வெந்துவரு கின்றகெந்தத் தாளி மூன்றுள்
தாகமே பெருத்தபீ னிசங்க ளாறுந்
தலைநோவு பிடரிவலி சயங்களை ந்தே.

சயகாசச் சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறுந்
தசையடைப்பு நீரடைப்புத் தேகக் காத்தல்
பயமொப்பாய் நொந்தவிந்து தாது நஷ்டம்

பணைத்தெழுந்த சுரங்களறு பத்து நாலும்
நயந்துவந்த வாய்வோடு ரத்த பித்தம்
நாடிவாதம் திமிர்வாதந் தீர்வ தற்கு
தயவுகந்து சொன்னனடா தயில மொன்று
சந்தன மிலா மிச்சாதி தன்னைக் கேளே.

சாதியென்ற சந்தனந்தான் பலமோ பத்து
தானமிர்த வள்ளிகூ விளம்சீர முத்தம்
சீதமென்ற சகாதேவி யசுவ கெந்தி
சிற்றமுட்டி பேராமுட்டி வெருகின் மூலம்
பேதமென்ற குறுந்தொட்டி வகைப்பலந்தா னஞ்சு
பேறான கொம்பரக்குப் பலந்தான் பத்து
ஆதியென்ற அறுகம் வேர் மதுரங் கோஷ்டம்
அகிலோடு நன்னாரி தார மாமே.

ஆமென்ற விலாமிச்சு வெட்டிவேரு
அரியசிறு தேக்குடனே சிறுகாஞ் சோரி
நாமென்ற வகையொன்று பலந்தா னாலு
நறுக்கியே இடித்தனைப் பாண்டத் திட்டு
காமென்ற சத்தசலங் கலந்தான் வாரு
காட்டமது ஒருவிறகா லெரியா றாமல்
வேமென்ற ஆறுபடி குறுக்கி வாங்கி
விரிந்தவாய்த் தாழிதனில் விட்டி டாயே.

. விட்டிடுவா பெள்ளெண்ணெய் படிதா னாறு
வெண்பசுவின் பாலதுவும் படிதா னாறு
அட்டியில்லா அறுகினுடைக் கஷாய மூன்று

அப்பனே நாழிக்குக் காப்புக் கட்டி
இட்டநெருப் பாறாமல் புளித்தி டாமல்
இயம்புகிறேன் கற்கவகை இயல்பைக் கேளு
மட்டில்லா சந்தனமு மஞ்ச ளேல
மஞ்சிட்டி கொத்தமல்லி மகரப் பூவை.

பூவான நாகப்பூச் சிற்ற ரத்தை
பொன்மெழுகு பூலாவேர் மதுரங்கோஷ்டம்
காவான செண்பகப்பூ வெட்டிவேருங்
கடுகுரோகிணி தகரம் விலாமிச்சம்வேர்
தாவான பச்சிலைகச் சோலமாஞ்சி
தக்கோலஞ் சதகுப்பை சாத்திரபேதி
தேவான தாரமகி லிலவங்கப்பத்திரி
சிவந்த கொந்தஞ் சாதிக்காய் கிராம்பு காணே.

கானா பத்திரியும் லவங்கப் பட்டை
கரும்பிசினும் நறுமிளகும் வெள்ளி லோத்திரங்
கானென்ற அசுவகெந்தி வேரி னோடு
கடிதான நன்னாரி செவ்வள்ளி தானும்
மானென்ற வகைக்கிரண்டு கழஞ்சி வீதம்
மாட்டியரை மை போலே ஆட்டின் பாலில்
கோனென்ற கலக்கிவிட்டுக் கொதித்தா றாமல்
குளிராம லைந்து நாள் வைதப் பாதே.

தப்பாதே ஆறாதான் மயனபதந் தன்னில்
சார்ந்த பச்சைக் கற்பூரம் புழுகு சட்டம்
செப்பாதே ரோசனையுங் குங்கு மப்பூ

திறமான கோஷ்ட்மது கழஞ்சி ரண்டு

மெய்ப்பாகப் பொடித்துவடி கலசத் திட்டு
விமலரோடு கணபதிக்குப் பூசை செய்து
அப்பாகேள் வடித்திறுத்து தான்யந் தன்னில்
அழகாகத் திங்களொன்று வைத்தி டாயே.

வைத்ததொரு கயிலமதை முழுகும்போது
மைந்தனே சீயக்கர் யரைப்பு வெந்நீர்
மைத்தொன்று மாகாது தீரு நோயை
வழுத்துகிறேன் மாணாக்காள் மகிழ்ந்து கேளு
அத்திசுர முள்ளுருக்கி தாப சோபம்
அரோசிவிட சுரமாந்தை உள்ளு ருக்கி
சக்தியோடு பெரும்பாடு பீனி சங்கள்
சயகாசங் கிருச்சிசுரந் தாகம் போமே.

போமப்பா மேகநீ ரெலும்பு ருக்கி
பொல்லாத கிரந்திவெட்டை சூலை வாய்வு
தாமப்பா பித்தசிலேற் பனந்தொந் திப்புத்
தந்தசிங்கி குத்துமுதல் **புற்றுத் தீரும்**
ஆமப்பா கன்னோசி **கன்னப் புற்று**
அடிநாவில் **சூலைப்புத்துக்** கண்ட மாலை
நாமப்பா கைகண்டோம் அறுநூ றாக
நவின்றிட்ட தின்னமுமே நவிலக் கேளே.

நவிலக்கேள் நீர்ச்சூலை ரத்தசிங்கி
நயனமதில் தோஷங்கள் தொண்ணூற்றாறுந்
தவிருமே தாதுநஷ்டந் திமிர்வாதங்கள்

தளர்ச்சியுற வாதமொடு சத்துவாதம்

புவியதனி லிரவிகண்ட பனிபோல் நீங்கும்

புண்ணியர்களித்தயிலம் புகழ்ந்து செய்வார்

குவிமுலையாய் வயிர்த்தியர்க்கு வயித்திய பாகம்

கொடுத்திடுவாய் வெகுமானங் கொடுத்தி டாயே.

கொடுத்தக்கா லவன்தனக்கு வியாதி தீருங்

குவலயத்திற்கு பெரும்பிணிகள் குடிபோம் பாரு

கடுத்தாக்கால் கருமவினை தீரு மோசொல்

கனமான வைத்தியர்க்கு மனம் நோகாமல்

தடுத்துரைகள் சொல்லாதே விசுவாச மாகத்

தாள்வணங்க கருமவினை சமுத்திரம்புக் கோடும்

மடந்தனமாய்த் திரியாதே பிணிதீ ராது

வல்லமைகள் போதே வணங்கிக் காவே.

## 6. மகாஏலாதித் தைலம்

வேண்டுமகா யேலாதித் தயிலங்கேளு

மிகுத்தபித்த காசமொடு சிரசு நோய்க்கு

பூண்டதொரு யேலம்விலாமிச்சம் வேரும்

புகழ்வெட்டி வேருடனே மருதம்பட்டை

நீண்டகுறுந் தொட்டிவேர் கொன்றைப்பட்டை

நேரிலந்தை வேப்பந்தோல் ஆவரைவேர்ப்பட்டை

ஆண்டஅத்தி ஆலரசு ஆயிலின்பட்டை

ஆற்றரசம் பட்டைநாவல் பட்டையாமே.

ஆமடா அழிஞ்சிலொடு கடம்பம் பட்டை

அமுதவல்லி பதினெட்டு வகையுங் கேளு
தாமடா வகைக்கைந்து பலமி டித்துத்
தண்ணீரு மரக்காலெட் டளந்து விட்டு
நாமடா யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நலமாக வடிகட்டித் தாழி சேர்த்து
ஓமடா நல்லெண்ணெய் குறுணி வாரு
உத்தமனே ஆவின்பால் குறுணி தானே.

தானா யிளநீர்தான் படிதா னெட்டுத்
தான்விட்டுக் கற்கவகை சாற்றக் கேளு
கானான யேலமதி மதுர மஞ்சள்
கடுகுரோ கிணிஅரத்தை செண்ப கப்பூ
ஊனான கண்டில்வெண்ணெய் சிற்ற ரத்தை
உடன்வசம்பு செவ்வள்ளி தேவ தாரந்
தேனான சீரகமு மகரப் பூவுந்
திரிகடுகு மரமஞ்சள் சிறுதேக் காமே.

ஆமப்பா அதிவிடையம் கஸ்தூரி மஞ்சள்
அமுக்கிரா நன்னாரி குறுந்தொட்டி வேரும்
தாமப்பா வசுவாசி கிராம்பு முத்தத்
தக்கோலங் கார்போகங் கடுகு கோஷ்டம்
நாமப்பா பச்சிலைவா லுளுவை யோடு
நாகப்பூ மஞ்சனம் வெட்பாலை யோடு
போமப்பா குறிஞ்சானுடன் முப்பத் தாறும்
பொருந்தவே வகைஇரண்டு கழஞ்சு தூக்கே.

தூக்கியே அரைத்தெண்ணெய் தன்னிற் சேர்த்து

துமபிமுகன் பூசைசெய்து அடுப்பி லேற்றி
தாக்கியே சிறுதீயா யெரித்துக் கிண்டி
தான்கடுகு பதந்தன்னில் வடித்துக் கேளு
பாக்கியே பொன்மெழுகு புழுகு சட்டம்
பச்சைக்கற் பூரமொடு சாம்பி ராணி
நீக்கியே வகை கழஞ்சி நிறுத்துக் கொண்டு
நிசமான கஸ்தூரி விராகனெடை யரையே.

அரைத்துநீ வடிகலசந் தன்னி லிட்டு
அப்பனே கயிலத்தை வடித்துக்கொண்டு
சிரத்திலே தான் பொருந்திக் கடிகை ஐந்து
சென்றபின்பு சீயக்கா யரைப்பு வெந்நீர்
நிரைத்துமே தான்முழுகு பத்தியமே வேணும்
நிலை நயனரோகத்துக் காவின் பாலாந்
துரத்துமே மற்றுள்ள நோய்க்கு வெந்நீர்
சோற்றுக்குச் சிறிதுப்பு வறுக்துக் கூட்டே.

கூட்டுவாய் சிறுகீரை முருங்கைப் பிஞ்சு
கொத்தமல்லி வழுதலம்பிஞ் சவரைப் பிஞ்சு
தீட்டுவாய் துவரையுடன் பருப்பு மாகும்
சிறுபயற்றின் பருப்போடு புடலம் பிஞ்சாம்
தேட்டவே மற்றதொன்று மாகா தப்பா
தீண்டாதே மீனிறைச்சி புளிப்பு மங்கை
நாட்டியே நான்குநாட் கொருக்கால் மூழ்க
நலமாகத் தீருநோய் சூட்டக் கேளே.

கேளடா மண்டையிட கபாலக் குத்து

கெடியான கிறுகிறுப்புச் சுவாச காசந்
தாளடா தனிலிறங்கு தந்த சூலை
தலைநீருங் கன்னோசி கன்னப் புற்று
கேளடா விப்புருதி கண்ட மாலை
கெடிசூலை குவளைவருங் கபால சூலை
நாளடா நயனத்திற் படலங் காசம்
நாடறியப் பித்தத்தின் காசம் போமே.

போகுமே கண்டத்தின் மேலே வந்த
பொல்லாத நோய்கள் ஆயிரத்து எட்டு
ஏகுமே கர்மத்தை நிவர்த்தி செய்தால்
எழுந்தநோய் தீருமடா ஏழை மக்காள்
நோகவே கர்மங்கள் தீரா விட்டால்
நோய்க்கந்த மருந்தையுண்டுந் தீராதப்பா
ஆகுமே அறமதுசெய் திருந்தாராகில்
அவர்களுக்குக் கர்மமில்லை அறிந்து செய்யே.

செய்யவே நயனநோ யெல்லாந் தீரும்
சிரசிலே வந்தபிணி யனைத்தும் போகும்
நய்யவே தேகத்தின் மேல்வியாதி யெல்லாம்
நாலுநாள் மாறலொடு வெதுப்புந் தீரும்
பய்யவே வாதபித்தஞ் சிலேத்துமம் போகும்
பாங்காகச் சுவாசமது பறக்குங் கண்டாய்
அய்யனே கையில்நெல்லிக் கனி யிருக்க
அலையவே வேண்டாங்கா ணறிந்து பாரே.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏலம் | 10 | அத்திப்பட்டை |

| | | | |
|---|---|---|---|
| 2 | விலாமிச்சம்வேர் | 11 | ஆலம்பட்டை |
| 3 | வெட்டிவேர் | 12 | அரசம்பட்டை |
| 4 | மருதம்பேட்டை | 13 | ஆயிலின்பட்டை |
| 5 | குறுந்தொட்டிவேர் | 14 | ஆற்றரசன்பட்டை |
| 6 | கொன்றைப்பட்டை | 15 | நாவல்பட்டை |
| 7 | இலந்தைப்பட்டை | 16 | அழிஞ்சில்பட்டை |
| 8 | வேப்பம்பட்டை | 17 | கடப்பம்பட்டை |
| 9 | ஆவாரம்பட்டை | 18 | அமிர்தவல்லி |

வகைக்கு பலம் ஐந்து

மேற்கண்ட சரக்குளை ஒரு தாழியில் சேர்த்து அத்துடன் எட்டு மரக்கால் தண்ணீர் ஊற்றி அதை எரித்து ஒரு மரக்காலாகக் குறுக்கி வாங்கி வடிகட்டி தாழியிலிட்டு இரண்டு மரக்கால் என நெய் இரண்டுபடி பசும்பால், எட்டுபடி இளநீர் சேர்ப்பதுடன்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏலம் | 10 | அதிவிடயம் |
| 2 | அதிமதுரம் | 11 | கத்தூரி மஞ்சள் |
| 3 | மஞ்சள் | 12 | அமுக்கிரா |
| 4 | கடுகுரோகிணி | 13 | நன்னாரி வேர் |
| 5 | பேரரத்தை | 14 | குறுந்தொட்டிவேர் |
| 6 | செண்பகப்பூ | 15 | சாதிபத்திரி |
| 7 | கண்டில்வெண்ணெய் | 16 | கிராம்பு |
| 8 | சிற்றரத்தை | 17 | முத்தக்காசு |
| 9 | வசம்பு | 18 | தக்கோலம் |

| | | | |
|---|---|---|---|
| 19 | செவ்வல்லி | 28 | கார்போகம் |
| 20 | தேவதாரம் | 29 | கடுகு |
| 21 | சீரகம் | 30 | கோட்டம் |
| 22 | மகரப்பூ | 31 | பச்சிலை |
| 23 | சுக்கு | 32 | வாலுளுவை |
| 24 | மிளகு | 33 | நாகப்பூ |
| 25 | திப்பிலி | 34 | நுணா |
| 26 | மரமஞ்சள் | 35 | வெட்பாலை |
| 27 | சிறுதேக்கு | 36 | குறிஞ்சான் |

ஆகியவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து அரைத்து எண்ணெயில் கரைத்து எடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்துக்கிண்டி கடுகு பதத்தில் வடிகட்டிக் கொள்ளவேண்டும். பின்னர் மஞ்சள், மெழுகு, புனுகு, பச்சைக்கற்பூரம், சாம்பிராணி இவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சாகச் சேர்த்துக் கொண்டு அரைவிராகனெடை கத்தூரியும் சேர்த்து அரைத்து தாழியில் இட்டு மற்றும் ஓர்முறை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை:** தைலத்தைத் தலைக்கு தேய்த்து மூழ்குவதற்கு சிகைக்காய், அரைப்பு, வெந்நீர் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

**பத்தியம்:** கண் நோய்களுக்கு பசுவின் பாலும் மற்ற நோய்களுக்கு வெந்நீரும் பயன்படுத்த வேண்டும். சோற்றுக் உப்பை வறுத்துக் கூட்ட வேண்டும்.

சிறுகீரை, முருங்கைப்பிஞ்சு, கொத்தமல்லி, கத்தரிப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, துவரம்பருப்பு, சிறுபயறு, புடலம்பிஞ்சு இவை ஆகும். மீன், இறைச்சி, புளிப்பு, பெண்போகம் இவை ஆகா. இவ்வாறு பத்தியம் காத்து நான்கு நாட்களுக்கு ஒரு முறை முழுக வேண்டும்.

**தீரும் நோய்கள்:** மண்டையிடி, கபாலக்குத்து, கிறுகிறுப்பு, சுவாசக்காசம், பல்வலி, தலைநீர், கன்னோசி, **கன்னப்புற்று,** விப்புருதி, கண்டமாலை, சூலை, கண்குவளையினின்றுவரும் சூலை, கண்படலம், கண்காசம், பித்துகாசம், கழுத்திற்கு மேலே வருகின்ற பல நோய்கள், பழஞ்சுரம், வெப்பம், முக்குற்றங்கள், சுவாசகாசம்.

## 7. கனனரோகத்திற்குத் தைலம்

பாரப்பா கன்னத்தின் ரோகமெல்லாம்
பறந்தோடத் தயிலமொன்று பகரக்கேளு
சாரப்பா நொச்சியோடு முருக்கூமத்தை
தைவேளை பச்சைமஞ்ச ளிஞ்சிச்சாறு
நேரப்பா வாழையுடைக் கிழங்குச்சாறு
நிலப்பனையின் கிழங்குகையான், தகரைச்சாறு
காரப்பா பெருங்குரும்பை வெள்வெங்காயம்
கனத்துளசி வகைக்குச் சாறு படிகாலாமே.

காலாரும் நல்லெண்ணெய் படிதான் ரெண்டு
கலந்துவிடு பாண்டத்திற் கற்கங் கேளு
மேலாகுந் திரிகடுகு சித்திர மூலம்
மிக்கநாய்க் கடுகுகோஷ்ட மிந்துப் போடு
மாலாகும் வகைக்கிரண்டு கழஞ்சு தூக்கி
மைந்தனே யரைத்திட்டு கலக்கிக் காய்ச்சி
நாலாநாள் மெழுகுபதந் தன்னில் வாங்கி
நன்றாக வடித்துவைத்துச் சொல்லக் கேளே.

சொல்லுவேன் காதில்விடு சிரசில் தேய்த்து
சுடுவெந்நீர் சீயக்கா யரைப்பு மாகும்

அல்லாவே கன்னோசி சுன்னப் புற்று
        அழற்கன்னச் சூலையோடு அரிகி ரந்தி
கொல்லவே வந்ததொரு கரப்ப னோடு
        கொடுமைசெய்யும் விப்புருதி பிளவை தானும்
இல்லையே கன்னத்தி லிருபத் தொன்று
        யெழுரோகங் காதிற்சீ யில்லை தானே.

1. நொச்சிச்சாறு
2. கலியாணமுருங்கைச்சாறு
3. ஊமைத்தையின் சாறு
4. தைவேளைச்சாறு
5. பச்சைமஞ்சள்சாறு
6. இஞ்சிச்சாறு
7. வாழைக்கிழங்குச்சாறு
8. நிலப்பனைக்கிழங்குசாறு
9. கரிசாலைச்சாறு
10. தகரைச்சாறு
11. பெருங்குரும்பைச்சாறு
12. வெள்ளைப்பூண்டுச்சாறு
13. துளசிச்சாறு

இவை வகைக்கு கால்படி

மேற்கண்ட சாறுகளுடன் நல்லெண்ணெய் இரண்டுபடி கலக்க வேண்டும். மேலும் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், நாய்க்கடுகு, கோட்டம், இந்துப்பு ஆகிய இவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் எடுத்து அரைத்து அப்பாண்டந்தன்னில் இட்டுக்காய்ச்சி நாலாம் நாளில் மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக்கொள்ள வேண்டும். இத்தைலத்தைக் காதில்விட்டு, தலையில் தேய்த்து சீயக்காய், அரைப்பு தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:**

கன்னோசி, **கன்னப்புற்று**, கன்னச்சூலை, அரிகிரந்தி, கரப்பன், லிப்புருதி, பிளவை ஆகியவையும் கன்னத்தில் வருகின்ற இருபத்தொரு வகை நோய்களும் காதில் வருகின்ற சீழும் தீரும்.

## 8. புடத் தைலம்

நன்மையில்லாப் பவுத்திரங்கள் பிளவைக் கெல்லாம்
நலமாகும் புடத்தயிலம் நவிலக் கேளு
வன்மையில்லா மனிதனுடை மண்டை யோடு
வளர்சிற்றா மணக்குமுத்து புங்க முத்து
தன்மையில்லா யிலுப்பைவிரைப் பருப்புங் கூட்டி
சாற்றுபுளி மரத்தினுடை வயிரச் சீவல்
புன்மையில்லா திந்தவகை மருந்து ஐந்தும்
பொருந்தவகை ஒன்றுபலம் ஐம்ப தாமே.

ஐம்பதுதா னிறுத்திடித்துத் தூளதாக்கி
ஆட்டுவாய் புங்கன்வேர்ப் பாலைவிட்டு
தென்பதால் பாக்குபோல் விலைதட்டித்
திறமாக ரவிதனிலே காய்ந்தபின்பு
இன்பமாய் பானைதனி லடைத்துக் கொண்டு
என்மக்கான் வேம்புபுங்கு குச்சிதன்னைப்
பண்பதாய் மேல்பரப்பிப் பானைவாய்க்குப்
பலக்கவே சட்டிகொண்டு கவிழ்த்துமூடே.

மூடினதோர் சட்டிநடுத் தமர்தான் மூன்று
முன்னிட்டுச் சீலைமண்செய் துலர்ந்த பின்பு
நாடினதோர் குழிவெட்டிப் பழக்கஞ் செய்த
நற்கலசந் தனில்வைத்துக் கலசவாயில்
தேடினதோர் மருந்தடைந்த பாண்டஞ்சட்டி
சேரடா தமர்க்கலச நடுமய்யத்தில்
கூடினதோர் தமரிட்ட சட்டித்தூரு

கூறுவோங் கலசவாய் கூட்டித்தானே.

கூட்டியே சாணிமண்ணும் பிசைந்துஅப்பிக்
கொடுந்தீயாய் சாமமட்டு மெரித்தாயானால்
காட்டியே பானையடி சிவந்தபோனால்
கனலாறிக் குளிர்ந்தபின்பு பிரித்துப்பாரு
நீட்டியே கீழ்க்கலசந் தயிலம் நிற்கும்
நினைவாக வெடுத்தந்தத் தயிலாந்தன்னில்
பூட்டியே சமன்சிற்றா மணக்குஎண்ணெய்
புகட்டியே நீர்சுண்டக் காய்ச்சு காய்ச்சே.

காய்ச்சியே குப்பிதனி லடைத்துக்கொண்டு
கருத்துடனே யிருக்குமந்தப் பாண்டத்திட்டு
வாச்சுதே அதில் தயிலம் விட்டுமைந்தா
வாயில்வே யாங்குழலை வைத்துக்கட்டி
பாச்சவே புரைவாயில் குழல்வாய் சேர்த்து
பதறாம லதைப்பித்துக்கத் தயிலஞ்சென்று
போச்சுதே புரைகளற்றுப் புண்ணுமாறிப்
போகுமே கண்களிலுந்த தடவச் சொல்லே.
சொல்லவே யொன்றைவிட்டு வொருநாள்பாய்ச்சு
துயர்தீரும் வியாதியின்னஞ் சொல்லக்கேளு
அல்லவே புரையோட்டம் பவுத்திரங்கள்
அரையாப்பு விப்புருதி கண்டமாலை
செல்லவே பிளவைதொடை வாழைகுட்டந்
தீருமே மூலபுற்று ஒடுவைப்புண்கள்
கொல்லவே வருமமொடு விப்புருதிமுதலாய்
கொண்டபலவிரணங்க ளெல்லாம் போமே.

போகுமே புண்புரைகள் எல்லாந்தீரும்

புரைவாயில் பஞ்சுவைத் தடைக்கவேண்டும்.

சாகுமே ஆறாத அழி புண்களெல்லாந்

தடவவே யுலருமடா சாற்றக்கேளு

ஏகுமே புளிபுகை கரப்பன்பண்டம்

ஏற்றாதே சடுதியிலே யிடுக்கண்தீரும்

ஆகுமே பத்தியந்தான் அறிந்து செய்தால்

அவர்களுக்குப் பிணிநில்லா தகலுந்தானே.

1. மனிதமண்டையோடு
2. சிற்றாமணக்குப் பருப்பு
3. புங்கன் பருப்பு
4. இலுப்பைப் பருப்பு
5. வயிரம்பாய்ந்த புளியமரத்தின் பட்டை

வகைக்கு ஐம்பது பலம்

இவற்றை எடுத்து இடித்துத்தூளாக்கி, புங்கன்வேர்ப்பாலை விட்டு அரைத்துப் பாக்குபோல் வில்லை தட்டி வெயிலில் காய வைக்க வேண்டும். பின்பு அவற்றை ஒரு பானையில் அடைத்து வைக்க வேண்டும். பின்பு அவற்றை ஒரு பானையில் அடைத்து வேம்பு, புங்கு, இவற்றின் குச்சிகளை அதன் வாய் மேல் பரப்பி அதன் மேல் மேற்சட்டி கொண்டு கவிழ்த்து மூடிச் சீலைமண் செய்ய வேண்டும். மருந்திட்ட கலசத்தின் அடிப்பாகத்தில் மூன்று தொளை போட வேண்டும். இதற்கு ஏற்றாற் போன்று ஒரு குழி வெட்டி அதில் ஒரு பழகிய மண்சட்டியை அமைத்து முன் மருந்து கலசத்தைக் கீழ் சட்டியில் பொருத்துமாறு அமைக்க நன்றாகப் பூசி, மெழுகி, பிறகு அடிச்சட்டியும் மருந்துச் சட்டியின் அடிப்பாகமும் மறையும் அளவுக்கு மண்ணைத்தூர்த்து ஒரு சாமம் கொடுந்தீயால் அடிப்பானை சிவக்குமளவு எரிக்க வேண்டும். ஆறிய பிறகு பிர்த்துப்பார்த்தால் கீழ்கலசத்தில் தைலம் இறக்கி நிற்கும்.

அத்தைலத்திற்கு சமன் அளவு சிற்றாமணக்கெண்ணெயைக் கலந்து நீர்சுண்டக் காய்ச்சி ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

**பயன்படுத்தும் முறை:** தக்க கருவிகள் மூலம் தைலத்தைப் புரைகளின் உள்ளே செலுத்த வேண்டும். புரைபுண்களின் வாயிலும் இத்தைலத்தைத் தடவவேண்டும். இவ்வாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்து வரவேண்டும். புரைவாயிலில் பஞ்சு வைத்து அடைக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** புரையோட்டம், பவுத்திரங்கள், அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை, பிளவை, தொடைவாழை, குட்டம், **மூலப்புற்று,** ஒடுவைப்புண்கள், ஓடுவிப்புருதி, பலவகை விரணங்கள், புண்புரைகள், ஆறாத அழிபுண்கள்.

**பத்தியம்:** புளி, புகையிலை, கரப்பான் பண்டங்களை நீக்க வேண்டும்.

### 9. சகலநோய்க்குமெண்ணெய்

தெளிவதென்ன நல்லெண்ணெய் படிதானெட்டு
சீந்தில்வேர் கொடிவேலி தில்லம் பாலே
பாலான திருகுகள்ளி சதுரக்கள்ளி
பாடாண கொடிக்கள்ளி எருக்குகொன்றை
வேலாலுங் கருவேலும் புங்குசங்கு
வெள்ளறுகு நன்னாரி நத்தைச்சூரி
ஆலாவேர் அரசத்தி இத்திவேம்பு
அமுக்கிரா ஆடுதின்னா மூலிதானும்

பூலாவேர் நீர்ப்பூலாக் குப்பைமேனி
பொடுதலை கையாந்தகரை பீளைவேரே.
பீளையொடு இலைக்கள்ளி சிவனார்வேம்பு

பொற்றலைக் கையாந்தகரை சின்னியோடு
கோழையறுந் தேற்றான்வேர் காக்கரட்டான்
கொடிதூது வளையும்செஞ் சூரைப்பட்டை
வேளைவேர் நாய்வேளை முடக்கொற்றான்வேர்
விடத்தலைவேர் உசிலம்வேர் வெள்ளைக்குன்றி

காளையே தேள்கொடுக்கு கரந்தைரெண்டு
கழற்சிவே ரழிஞ்சிகரு டன்கிழங்கே.
கிழங்கென்ற சாரணைமா வெருக்கினோடு
கேள்புரசு முருக்குமுன்னை யிண்டுதோடை
வழங்கிநின்ற கற்றாழை காட்டுமல்லி
வன்னி ஆ யிலியமொடு கருக்குவாயும்
புழுங்கிநின்ற பொன்முசுட்டை அவுரியோடு
பூவரசு நிலவாகை அப்பைக்கோவை

முழங்குகின்ற கொளுஞ்சிமகிழ் புன்னையோடு
முத்தெருக்கஞ் செவிசங்கன் குப்பிவேரே.
வேரென்ற அரளிஉள்ளி மிளகுநாபி
வெந்தோன்றி நிர்விடம்மந் தாரங்கெந்தி
காரென்ற சீரகமும் நாலுசுக்கு
கார்போகம் ஏலம்கத் தூரிமஞ்சள்
பாரென்ற பீநாறி கரப்பன்பட்டை
பார்கெவுரி லீரமொடு சூதம்பூரஞ்

சீரென்ற வலம்புரிக்காய் வசம்புவானஞ்
சேருநீ ரெட்டிமுத்து பூவந்திக்காயே.
காயான சாதிக்காய் கிராம்புபத்திரி

காராவின் ரோசனை ஊ மத்தின்வித்து
தாயான அகில்சுட்டை தேவதாரம்
சந்தனமுந் திரிபலையும் திரிவல்லாதி

தீயான சடைக்கஞ்சா அபினிக்காயுந்
திப்பிலியுமூன்றுசெந்நா யுருவிசேரு
பேயான தும்பையொடு கவிழ்த்தும்பைநொச்சி
பெருந்தும்பை வகையொன்று பலந்தானொன்றே
பலமொன்று வேர்வகைகள் நிறுத்துக் கொண்டு
பாச்சடா கடைச்சரக்கு பலத்திற்பாதி
செலஞ்சற்று மில்லாம லுலர்த்திக்கொண்டு
சேரவே யிடித்துத்தூ ளாகவாங்கி

பிலமென்ற பூரவல்லிக் கொடிசேங்கொட்டை
பேசாதே பலம்பத்துப் பச்சையாகத்
தலமென்ற கல்லுரலி லிடிக்கும்போது
தாக்கப்பா முன்தூ ளைச் சிறுகத்தூவே.
சிறுகவே தூவியிடித் தெடுத்துக்கொண்டு
சேரவே வெள்ளாவிச் சட்டிதன்னில்
இறுகவே தூளையிட்டு எண்ணெய்விட்டு
இரவிமுகங் காணவைப்பாய் மண்டலந்தான்

குறுகவே பெரும்பாம்பு சாரைப்பாம்பு
கொடியநல்ல பாம்பினுடை மூன்றுகண்டம்
மறுகவே கண்டிதனி லெண்ணெய்விட்டு
மடியாமல் சர்ப்பகண்டஞ் சிவக்கக்காய்ச்சே.
காய்ச்சியே சட்டிதனில் மருந்தோடிட்டு

கலந்துரவி காணயிலே தெளிந்தயெண்ணெய்
வாச்சுதே யென்றுசொல்லிப் பதனம்பண்ணி
வாரப்பா கால்கழஞ்சி அந்திசந்தி

பேச்சேது மண்டலமே கொண்டபோது
பிணியெல்லாந்த தீர்ந்ததடா பெருமைமெத்த
பாய்ச்சியே கால்கரங்கள் விரலுக்கெல்லாம்
பழுத்ததொரு வாழையிலை போட்டுக்சுட்டே.
கட்டடா காற்றுடனே வெய்யிலாகா
காலையந்தி யெண்ணெயிட்டுக் காக்கச் சொல்லு
விட்டுவிடு புளியுப்பு குளிர்ந்த தண்ணீர்
விதமான பதார்த்தமெல்லாம் விரைந்துதள்ளு
மட்டடா புதுப்பாண்டத் தனிலேபொங்கி
வார்த்துண்ணப் பசுவின்பால் வெந்நீராகும்
மெட்டடா யெண்ணெயுட வாசம்பட்டால்
மேதினியோர் நோயெல்லாம் விலகிபோமே.

விலகுமடா விரிகுட்டம் குறைகுட்டங்கள்
வெண்புள்ளி அழிகுட்டம் முதலாயுள்ள
பலகுட்டம் அழிகிரந்தி வளரும்புற்று
பறங்கிப்புண் வெடிசூலை பலவிடங்கள்

இலகுமே மேனியது பொன்போலாகும்
என்மக்காள் சண்டரச பற்பத்தோடு
நலதுஅரி தாரபற்பம் கட்டிக்கொள்ளு
நாடாது பிணியனைத்தும் நாடிக்காணே.
காணவே வெண்ணாத்திச் சற்பந்தன்னை

கண்டித்து உலர்த்திவிடு கருத்திக்கேளு
தோணவே யிதற்குநேர் பூரஞ்சாரந்
துத்திவெள்ளை வீரபற்பம் சமனே தூக்கி

நாணவே யிதையுலர்த்திஇடித்துக்கொண்டு
நன்றாக குழித்தயில மிறக்கிவாங்கி
பேணியே பாண்டத்தில் கருக்கைவாங்கி
பின்சார நீர்விட்டு இடித்திடாயே.
இடித்ததொரு மருந்தெடுத்துப் புடத்தைப்போடு
என்மக்காள் வெந்நீரா யிருக்கும்பாரு
கடுத்ததொரு நீரதனிற் கழஞ்சிவாங்கி
கண்டாயே முன்தயிலங் காலகழஞ்சிவிட்டு

விடுத்ததொரு அந்திசந்தி மண்டலந்தான்
விரும்பியே கொண்டவர்க்கு விரணகுட்டம்
மடுத்ததொரு பதினெட்டு மகன்றுபோகும்
மார்க்கமாய்ப் பத்தியந்தா னறையக்கேளே.
அறைகிறே னுள்ளியோடு கடுகாகாது
அப்பனே புளியுமாசா தறிந்துகொள்ளு
பறைகிறேன் கட்டினதோ ருப்புமாகும்
பாலாகும் பொன்பழம் புளியுமாகும்

நிறைகிறேன் சீரகமுங் கொந்தமல்லி
நேரான அவரையுடன் முருங்கைப்பிஞ்சுங்
குறையறவே தூதுவளை மணத்தக்காளி
குரவையொடு வெள்ளாட்டு வற்றல்கூட்டே.

### 10. சகலநோய்களுக்குமெண்ணெய்

நவிலுகிறேன சிறுபுடலங்காய் பலந்தானூறு
 நன்னாரி முத்தக்காசு விலாமிச்சம்வேர்
புகலுகிறேன் சித்திரப்பா வாடையல்லி
 புண்ணாக்குப் பூடுடனே பனையின்வேரும்
நுவலுகின்ற மா தளையுமோ ரிதழ்த்தாமைரையும்
 நுகர்சதா வேரியொடு பூலாவேரும்
அகலுகிற ஆல்விழுது நெருஞ்சிக்கொற்றான்
 ஐம்பதடா வகையொன்றுக் கிடித்துவாங்கே.

வாங்கியே கலந்திரண்டு பாண்டத்திட்டு
 வார்த்திடுவாய் ஆற்றுநிர் படியெண்ணான்கு
தாங்கியே தீயெரித்து எட்டொன்றாக்கி
 தாழிதனில் வடித்துவிட்டுத் தனிஎள்ளெண்ணெய்
தேங்கியே இளநீரும் பசுவின்பாலும்
 சீதாசெங் கழுநீர்வில்வம் வல்லாரைச்சாற்
ஓங்கியே அவரை சிறு கீரைகொற்றான்
 ஓரிதழ்த் தாமரை அல்லி செங்கழுநீர்ச்சாறே.

சாறாகு மானையுடை நெருஞ்சிச்சாறும்
 தப்பாமல் வகைவகைக்கு நான்குபடிவிட்டு
மாறாம லடுப்பில்வைத்து அனலைமூட்டி
 மைந்தனே நவதினந்தா னூறவைத்து
வீறான கற்கமது மலாக்காய் கெந்த
 மிளகுடனே வசுவாசி மதுரமேலங்
கூறான சாதிக்காய் பத்திரிகிராம்பு

குன்றிவேர் பாகமசுவ கெந்திசேரே.

சேரப்பா சீரகமுங் கொத்தமல்லி
சிறுநாகப் பூலிடையஞ் சாத்திரவேதி
காரப்பா செஞ்சந்தன மகரப்பூவுங்
காட்டாத்திப் பூவபினி கஞ்சாவித்து
ஆரப்பா தக்கோலஞ் சுக்குநாவி
அத்திதிப் பிலிவைங்க மாசிக்காயும்
நேரப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
நீயாட்டுப் பால்தனிலே கரைத்துவாரே.
கரைத்துவிட்ட மூன்றுநாள் வடிக்கும்போது
கலசத்தி லிடிமருந்து கழறக்கேளு
உரைத்துவிட்டேன் குங்குமப்பூ கத்தூரியல்லால்
உற்றகோ ரோசனையும் புழுகுதானும்
நிரைத்துவிட்டேன் கழஞ்சிரண்டு பொடித்துப்போடு
நீமெழுகு பதந்தன்னில் வடித்துக்கொண்டு
குரைத்துவிட்ட கழஞ்சொன்று அந்திசந்தி
கொள்ளவே வேகமெல்லாம் குடிபோம்பாரே.

குடிபோகுங் கிராணிபத்தும் அதிசாரங்கள்
குலுமுறையாய் வருகின்ற மூலரோகம்
அடிபோகும் பெரும்பாடு சலகிரிச்சு
அரிகிருமி இவையெல்லா மகலும்பாரு
துடிபோகும் கரப்பனோடு கண்டமாலை
சூலையொடு மார்பாணி பிளவைகட்டி
கடிபோகும் குட்டமொடு கிரந்திப்புற்று
காணாத குடற்படுவன் பிளவைக்காணே

பிளவையொடு பவுத்திரங்கள் வங்குவெள்ளைப்
பெலங்கெடுக்கும் விப்புருதி அண்டவாயு
அளவதென்ன நசிகா பீடத்தோடு
அரிகிரந்தி வெடிசூலை ஆணியெல்லாம்
கழிவதில்லை யென்றுசொன்ன மாரோகங்கள்
கட்டோடே போகவென்று கழறக்கேளு......

| | |
|---|---|
| சிறுபுடலங்காய் | 100 பலம் |
| நன்னாரி | 50 |
| முத்தக்காசு | ஒரிதழ்தாமரை |
| விலாமிச்சம்வேர் | சதாவேரி |
| சித்தரப்பாலாடை | பூலாவேர் |
| அல்லி | ஆலம்விழுது |
| புண்ணாக்குப்பூண்டு | நெருஞ்சி |
| பனைவேர் | முடக்கொற்றான் |
| மாதுளை | |

வகைக்கு 50 பலம்

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு இடித்துபாண்டத்திலிட்டு, ஆற்றுநீர் 32 படிவிட்டு அடுப்பேற்றியெரித்து 4 படியாகக் குறுக்கி ஒரு தாழியில் வடித்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் | சிறுகீரைச்சாறு |
| இளநீர் | முடக்கொற்றான்சாறு |
| பசுவின் பால் | ஒரிதழ்த்தாமரைச்சாறு |
| சீதேவிசெங்கழுநீர்ச்சாறு | அல்லிச்சாறு |
| வில்வச்சாறு | செங்கழுநீர்ச்சாறு |
| வல்லாரைச்சாறு | ஆனைநெருஞ்சில்சாறு |
| அவரைச்சாறு | |

வகைக்கு 4 படி

மேற்படிச்சாறு வகைகள், எள்ளெண்ணெய், இளநீர், பசும்பால் முதலியவற்றை முன்பு குடிநீர் வைத்துள்ள தாழியில் சேர்த்து ஒன்பது நாட்கள் ஊறவைத்துக் கொள்ள வேண்டும்.

மலாக்சாய் கிழங்கு
மிளகு
சாதிபத்திரி
அதிமதுரம்
ஏலம்
சாதிக்காய்
இலவங்கப்பத்திரி
கிராம்பு
குன்றிவேர்
அசுவகெந்தி
சீரகம்
கொத்தமல்லி
சிறுநாகப்பூ
அதிவிடயம்
சாத்திரவேதி
செஞ்சந்தனம்
மகரப்பூ
காட்டாத்திப்பூ
அபினி
கஞ்சாவிதை
தக்கோலம்
சுக்கு
நாபி
அத்தி
திப்பிலி
இலவங்கம்
மாசிக்காய்

வகைக்கு 2 கழஞ்சு

இவற்றைக்குழிக்கல்லிலிட்ரைத்து, பாலில் கலக்கிக்கொண்டு, முன் மருந்துகளிட்டு ஊறவைத்துள்ள தாழியின் சேர்த்து, அடுப்பேற்றி மூன்று நாட்கள் எரித்து,

குங்குமப்பூ
கஸ்தூரி
கோரோசனை

புனுகு

வகைக்கு இரண்டு கழஞ்செடுத்துப் பொடித்து ஒரு வடிகலந்திலிட்டுக் கொண்டு மேலே தாழியிலுள்ள மருந்து மெழுகு பதம் வந்தவுடன் இவ்வடிகலத்தின் வடித்தெடுத்துக்கொள்ளவே வேண்டும்.

**அளவு :** ஒரு கழஞ்சு இருவேளை

**தீரும் நோய்கள்:** மேகநோய்கள், 10 வகை, கிராணி, அதிகாரங்கள், மூலநோய், பெரும்பாடு, நீர்க்கிச்சார், அபிகிருமி, கரப்பன், சண்டமாலை, சூலை, மார்பாணி, பிளவை, கட்டி, குட்டம், கிரந்திப்புற்று, குடற்படுவன், பிளவை, பவுத்திரம், வங்கு, வெள்ளை, விப்புருதி, அண்டவாயு, நாசிகாபீடம், அரிகிரந்தி, வெடிசூலை, ஆணி.

## 11. செங்கத்தாரி எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, செங்கத்தாரிவேர்ப்பட்டை, பூதகரப்பான் பட்டை, வேப்பம்பட்டை, பெருமரத்துப்பட்டை, கண்டங்கத்திரிவேர், நன்னாரி வேர், கழற்சிவேர், கிரந்திநாயகம், வேலிப்பருத்திவேர், கடுக்காய், சுக்கு, திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு காசு எடை வீதம் கரப்பான் உணவுப் பொருள்களை நீக்கிச் சாப்பிட்டுவர **தொண்டைப்புற்று,** நாவுபுற்று, வாய்ப்புற்று, நாக்குவெடிப்பு, உதடு வெடிப்பு, நாக்குக் கொப்பளம், பல்லெறிவு, ஈறில் சீழ்வடிதல், வாய் நாற்றம், வாய்க்கிரந்தி ஆகிய நோய்கள் தீரும்.

## 12. மேகத்தெண்ணெய்

**கேளப்பா மேகமென்ற தெல்லாந் தீரக்**
**கெடியான வெண்ணெ யொன்று சொல்லக்கேளு**
**நாளப்பா கோவைச் சாறு காணிச்சாறு**
**நலமான வல்லாரை செருப்படையின்சாறு**

வேளப்பா யானையிட தண்டுச் சாறு

...................

வேளப்பா யானைவிட நெருஞ்சிச்சாறு

வெகுசூறுக்காஞ் சீந்தியிட தண்டுச்சாறு

ஆளப்ப அரசனிட பட்டைச்சாறு

அப்பவே வகைக்குப்படி யரையதாமே.

மேகநோய்கள் தீருவதற்கு எண்ணெய் ஒன்று சொல்கிறேன் கேள். கோவைசாறு, பொன்னாங்காணிச்சாறு, வல்லாரைச்சாறு, சிற செருப்படிச்சாறு, யானைத்தண்டுச்சாறு, யானை நெருஞ்சிச் சாறு சீந்தில் தண்டுச்சாறு, அரசன் பட்டைச் சாறு போன்ற சாறு வகைகளை வகைக்கு அரைப்படி எடுத்துக்கொண்டு.

ஆமப்பா வாணக்கனெண்ணெய் படிமுக்கால்

அப்பனே வதளோடு யின்ன்கேளு

சாமப்பா சாற்றிலே வீட்டுக் கேளு

சதுரான சாதிக்காய் சாதிபத்திரி

வசமப்பா மாசிக்காய் கற்கடகரிங்கி

வளமான சண்பகப்பூ காட்டத்திப்பூ

வேமப்பா சிறுநாக மேலங் குரோசானி

வெகுசூறுக்காய் கழஞ்சி ரெண்டெடைநான்தூக்கே

இதனுடன் ஆமனக்கு எண்ணெயை முக்கால் படியும் கூட்டி கலந்துக் கொண்டு பிறகு, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகச்சிங்கி, சண்பகப்பூ, காட்டத்திப்பூ, சிறுநாகப்பூ, குரோசாணி போனற கடைசரக்குகளை வகைக்கு இரண்டு கழஞ்சளவு வீதம் எடுத்து.

தூக்கியே யாவின் பால் விட்டேயாட்டிச்

சுறுக்காக வெண்ணெயிலே கரைத்து விட்டுத்

தாங்கியே சித்திரமூலி வேரின் பட்டை

சாதகமாம் பலமென்று கூடப்போட்டுத்

தேக்கியே யடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்து

திறமாக வடித்ததனைக் கலசத்துள்ளே

ஆக்கியே கற்கண்டு பலம் ரண்டிட்டு

அப்பனே கரண்டி நிறை கொள்ள கொள்ளே.

பசுவின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றுடன் சேர்த்துக் கொண்டு இதில் சித்திர மூலம் வேரின் பட்டையை, ஒருபலம் இடித்துபோட்டு அடுப்பில் வைத்து மெழுகுபதமாக காய்ச்சி மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு இதனுன் இரண்டு பலம் கற்கண்டை இடித்துப்போட்டு நாள் ஒன்றுக்கு கரண்டியளவு வீதம்.

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாயானால்
கூறுகெட்ட மேதமெல்லாங் குளிர்ந்து போகும்
தள்ளப்பாரை ணகிரந்தி லிங்கப்புற்று
தள்ளுமே யோனிபுற் றரிகிரந்தி
தள்ளப்பா வெடிசீலை மேக வூறல்
நலமான சொரி சிரங்கு நாடா தோடும்
தள்ளப்பா சீழிரத்தம் பிரமியங்கள்
தவறுண்டே போகுமடா சார்ந்து பாரே.

ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் மேக நோய், ரணகிரந்தி லிங்கபுற்று, யோனிபுற்று அறிப்பு கிரந்தி, வெடி சிலை, மேகவூறல் சொரி, சிரங்கு, சீழ்பிரம்மியம் ரத்த பிரம்மியங்கள் போன்றவை தீரும்.

லேசாகத் தகடுபோல் தட்டி நாகப்பற்பமும், தானகப்பமும் சமஅளவு எடுத்து நாததீரால் அரைத்து தாம்பிரத் தகட்டின் மேல் இருபுறமும் சமஅளவாக பூசி வெயிலில் உலர்த்தி கண்ணச்சீலை செய்து உலர்த்தி சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து

வைத்தப்பா களயுடமாய் போடவெடுக்க
வாகான தாம்பிர பற்பமாகும்
கைத்தப்பா போகாது வெருசுருக்காய்
காணடா வனுபான மறந்துபோடு
குத்தப்பா குன்மமெட்டும் சூலைபதிவெட்டும்
குடிபோகுத் திரிகடுகு தேனிற்கொள்ளச்
சித்தப்பா டீளையோ டிருமலெல்லாஞ்
சிதறிப்போம் வெள்ளியிட பற்பங்கேளே.

கனபுடம் ஒன்று போட்டால் தாம்பிரமானது நீறி பற்பமாகும். இப்பற்பத்தை அனுபானமறிந்து உட்கொண்டால் எட்டு வகையான குனமங்களும், பதினெட்டு வகையான சூலைகளும் ஓடிபக்போகும். இப்பற்பத்தை திரிகடுகு சூரணத்துடன் கூட்டி தேனில் உட்கொண்டால் ஈளை, இருமல் போன்றவை
நீங்கும்.

## 13. கெற்ப சூலைக்கு பெருங்காய யெண்ணெய்

பெருங்காயம் சுழற்சிவிரை யெட்டேயாகும்
பேசரிய முத்தெண்ணெய் நாழிதன்னில்
பருந்தந்தி தோல்போக்கிப் பலமுங்கால்தான்
பரமன்விந்து விராகனிடை ஐந்துங்கூட்டித்

தருகாமல் தானரைத்துச் சட்டியிட்டுத்
தயங்காம லதையெடுத்து திரிநாள்வைத்து
உருங்காம லடுப்பேற்றி மெழுகதாக்கி
உண்மையுடன் நான்வடித்து உறுதிகேளே.

தந்தி–தேர்வாளம், பரமன் விந்து–ரசம்
கழற்சி விதை எட்டு, பெருங்காயம் நேர்வாளம் (தோல் போக்கியது) கால்பலம், இரசம் விராகன் எடை இவற்றை ஒரு தாழி ஆமணக்கெண்ணெயில் கலந்து நன்றாக அரைத்து சட்டியில் இட்டு மூன்று நாள் வைத்திருந்து பிறகு அடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

உறுதியாய் துட்டிடைதான் கொண்டபோது
உகந்துநின்ற வாயுவறு மண்டவாதம்
அருதியாஞ் சூலைமுதல் யோனிப்புற்று
அடைவான குதிவாத மடங்காத்தாகம்
பெருகிநின்ற மகோதரங்கள் ஆம்பற்கட்டி
பேசரிய உதிரிவலி கெற்பச்சூலை
நிருதிஅஸ்தி சுரமோடு யிவைகள் தீரும்
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே

இந்த எண்ணெய் காசெடை வீதம் உட்கொண்டால் அண்டவாதம், சூலை, யோனிப்புற்று, குதிவாதம், அடங்காத்தாகம், மகோதரங்கள், ஆம்பல், கட்டி, உதிரவலி, வெப்பச்சூலை, அஸ்திசுரம் யாவும் நீங்கும்.

## 14. பித்த காமாலைக்கு யெண்ணெய்

வனத்தில்நிற்கு மாவாரைப் படிதூள்ஒன்று
வளமையாய்ப் பாணிபடி யெட்டுவிட்டு
இனத்திலொரு படியாக வற்றக்காய்ச்சி
எடுத்தபின்பு கொட்டைமுத்து பதக்குவாங்கிக்
கனத்துடனே காடிதனில் அவித்தெடுத்துக்
காயவைத்து உடைத்திடித்துப் பானையிட்டு
நினைத்திடுமுன் முத்தவித்துக் காடிவார்த்து
நேராக யெரித்துவடித் தெண்ணெய்வாங்கே
வனத்தில் நிற்குமாவாரை – ஆவாரைச்செடி
பாணி – தண்ணீர்

ஆவாரைச் செடி சமூலமாகப் பிடுங்கி இடித்து தூள் செய்து அதனுடன் எட்டு ப்படி தண்ணீர் விட்டுக் காயவைத்து ஒருபடியாக வற்றக் காய்ச்சி எடுத்துக் கொள் ளவும். ஒரு பதக்கு கொட்டைமுத்து காடியில் வைத்துஅவித்து எடுத்து உலரப் போட் டு உடைத்து நன்றாக இடித்து அதனைப் பானையில் இட்டு காடி வார்த்து அடுப்பில் வைத்து எரித்து எண்ணெய் எடுத்துக் கொள்ளவும்.

எண்ணெய்தனிற் கலக்குதற்கு மருதைக்கேளு
இயல்பரங்கிப் பட்டைபலம் நாலதாகும்
நண்ணயமாம் வெள்ளுள்ளி பலம்நாலாகும்
நவிலுவேன் நேர்வாளம் பலங்கால்கூட்டி
உண்மையுட னிம்மூன்றும் அரைத்தெடுத்து
உறுதிபெற முன்னெண்ணெய் தனிற்கலக்கிப்
பிண்ணமில்லா தடுப்பேற்றிப் பதமாய்க்காய்ச்சிப்
பிரபலமாய்க் கரண்டிகொள்ளப் பிணிகள்போமே

நான்குபலம் பரங்கிப்பட்டை, வெள்ளைப்பூண்டு நான்கு பலம், நேர்வாளம் க ால்பலம் சேர்த்து அரைத்து அதை முன்வடித்து வைத்துள்ள எண்ணெயில் கலக் கி அடுப்பில் வைத்து பதமாகக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

வாதத்தி லெழுந்ததொரு சூலைபோகும்
வருகாங்கை பித்தங்கா மாலைபோகும்
நீதத்த மகோதரங்க ளற்றுப்போகும்
நேரான விப்புறுதிக் கட்டிப்போகும்
பாதத்தி லுண்டான புத்துப்போகும்
பவுந்திரங்க ளரையாப்பும் பறந்துபோகும்
தீதுற்ற கன்னத்தின் புற்றும்போகும்
சில்வித்தால் வந்தரணந் தீருந்தானே

இந்த எண்ணெய் தினசரி ஒரு கரண்டி வீதம் கொள்ள வாதத்தினால் எழுந் த கொடிய வலிகள், காங்கை, பித்தம், கனாமாலை, மகோதரங்கள், விப்புருதிக்க ட்டிகள், பாதத்தில் உண்டான புற்றுநோய்கள், கன்னப்புற்று வி–
த்தால் உண்டான ரணம், பவுந்திரங்கள், அரையாப்பு எல்லாமே பறந்து போய்டும்.

தாட்டிகமா யெண்ணெய்யுண்ட பலனைக்கேளு
சலமேக மதுமேகந் தந்திமேகம்
வாட்டவருங் கிரீச்சனங்கள் ரத்தமேகம்
வயிற்றுவலி குலையெரிவு மாந்தம்சோகை
கூட்டமரு மிடுப்புவலி கால்கைக்குத்தல்
கொடுமையுள்ள நெஞ்சடைப்பு மூர்ச்சைவாய்
நாட்டமுடன் யெண்ணெய்யிதைக் கொண்டபோது

நவிலாம லோடிவிடும் புளியாகாதே

இந்த எண்ணெயை உட்கொள்வதால் நீரால் உண்டான மேகநோய்கள், மது மேகம், தந்திமேகம், ரத்தமேகம், வயிற்றுவலி, குலை எரிச்சல், மாந்தம் சோகை, இடுப்புவலி, கால் கை குத்தல், நெஞ்சடைப்பு, மூர்ச்சை எல்லா நோய்களுமெ சொ ல்லாமல் ஓடிவிடும். இதற்குப் பத்தியம் புளி ஆகாது.

## 15. குட்டக்குழித் தைலம்

(a) நீரடிமுத்துப்பருப்பு படி–1, வாலுழுவையரிசி, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுகரணையாகத் துண்டித்த விறலிமஞ்சள், மிளகு, சிறுகாணையாகத் துண்டித்த கொடிவேலி வேர்ப்பட்டை, இந்த ஆறுவகைகளும் வகை–1க்குப் படி 1/2 கத்திசெய்த சேராங் கொட்டை கத்திசெய்த எட்டிக்கொட்டை இவ்விரண்டுவகையும் வகை 1க்கு 10 எண்கள், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு–20 எண்கள், (b)நெல்லிக்காய் கந்தகம், மடலரிதாரம், இவ்விரண்டும் வகை 1க்குப் பலம், 1/2 வெண்ணொச்சி இலைச்சாறு படி –2, 1/2 முதல் 5, சுத்திசெய்த ரசம். சுத்திசெய்த மடலரிதாரம், (c) சுத்திசெய்த சாதிலிங்கம், சவுக்காரம், நாட்டு வெண்காரம், (இதனைப் பொரித்துக் கொள்க) இந்த அஞ்சு சரக்குகளும் வகை–1க்கு வராகனெடை – 1 1/2

எட்டிக்கொட்டியை ஒருநாள் தண்ணீரில் ஊற வைத்துத் தோல்போக்கிப் பகம் பாலில் வேகவைத்துலரத்திக் கொள்ள வேண்டும். முன்பாகத்தில் சொல்லியிருப்பது போல அரத்தால் இராவித் தூள்செய்தல் இப்பாகத்தில் அசவியமில்லை. ஆயினும் ஒவ்வொரு கொட்டைகளையும் சிறு தூண்டுகளாகத் துண்டித்துக் கொள்ள வேண்டியது.

**செய்முறை :** (b)யிலுள்ள இரண்டுசரக்குகளையும் முன்னர் தனித்தனிமை போலப் பொடி செய்து பின் பிரண்டையும் சேர்த்தரைத்து நன்றாய்க் கலத்தபின் கொஞ்சம் வெண்ணொச்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு–1, சாமமரைத்து, வழித்து மேற்படி சாற்றிற்கரைத்து (a) யில் உள்ள சரக்குகளை அதிற்போட்டு, இரண்டொரு நாள் ஊறவைக்க வேண்டும்

. பிரதிதினமும் மூன்று நான்கு தடவைகள், நன்றாய்க் கிளறியும் வரவேண்டும். சா றெல்லாம் கவறினபின்பு, காற்றோட்டத்திற்போட்டு உலரவைத்து முடிவில் வெய்யி லில் இரண்டொருநாளும் காயவைத்து இனம் பதமாயிராமலும், முருகிப்போகாம லும் பதமாய்ச் செய்து கொள்ள வேண்டும்.

பின்பு சுமார் ஆறுபடி கொள்ளத்தக்க வாய் சிறுத்த மண்பானையின் அல்ல து தோண்டியின் அடியில் சக்கராகாரமாய் ஒன்பது பத்து சிறு துவாரங்களிட்டு அ வற்றில் தலை சுருட்டப்பட்ட இரும்புக்கம்பிகளை அப்பாத்திரத்திற் குள்ளாகத் தொ ங்கவிட்டு, அப்பாத்திரத்திற்குள் முன் சித்தப்படுத்தின சரக்குகளைப் போட்டு, அதன் வாய்க்கு அகலிட்டு, 7மண் சிலை செய்து, சதுராகாரமான குழியொன்று தோண் டி அதன் நடுவில் வேறொரு சிறுகுழி அகழ்ந்து அதில் வேறொரு சிறு பாத்திரத்தை வைத்து, முன் சித்தப்படுத்தின பாத்திரத்தில் அடங்கியிருக்கும் படியாக வைத்து பெ ாறுத்தி, இரண்டொரு சிலை மண் செய்து கீழ் பாத்திரத்தின் வாய்க்கு மேல் 1 1/2 அ ன்குளம் உயரம் மண்ணைத் தள்ளி சமப்படுத்தி விட வேண்டும். கீழுள்ள சிறு பாத் திரம்மானது சுமார் 1 1/2 – 2 –படி கொள்ளதக்கதாக இருக்க வேண்டும். சரக்குள் ள பாத்திரத்தை சுற்றிலும் அதன் மேலும் சுமார் முக்கால் அடி அளவு விசாலமிரு க்க வேண்டும். பின் குழிநிறைய வராட்டியை அடுக்கி தீயிட்டு குளிர ஆறின பின் ெ மதுவாய்ப் பிரித்து, மண், சாம்பல் முதலியவைகளை விழ வொட்டாமல் ஜாக்கிரதை தயுடன் கீழ்பாத்திரத்தையெடுக்க அதில் தைலமிறங்கியிருக்கும். இதுவே குழித்தை தலமாம்.

பின்பு (C)யிலுள்ள சரக்குகளில் ரசத்தை தவிர மற்றவைகளை முன்னர் த னித்தானியாக மைபோல் பொடித்து ரசத்துடன் தாரம், லிங்கம் ஆகிய இவற்றின் பொடியைச் சேர்தரைத்து முன் குழித்தைலத்தில் கொஞ்சம் வார்த்தும் நன்றாயரை ரத்து ரசம்மடித்த பின்னர் மற்றச்சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து முன் குழித்தைலத்தில் கலக்கி, கற்காரச்குள்ள சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

**பிரமாணம் :** வாரகனெடை – 1 1/4 தேனில் அநுபானித்துட்கொள்க. இவ்வி தம் காலை, மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம். மேலும் இத்தைலத்தை மே ற்பூச்சாகவும், பூசிவரவும் வேண்டும்.

**தீரும் நோய்கள் :** கிரந்திகள், சூலைகள், குட்டங்கள், புள்ளிவண்டு முதலா ன பலவகை வண்டு கடிவிஷங்கள், சில்விஷங்கள், திமிர்கள், எட்டுவகைக்கரப்பா ன்கள், அரைப்புற்று, பேய்ச்சொறி, நாச்சொறி, முதலிய பலவகை சொறிகள், தேக வெழுப்பு, முகவெழுப்பு, முதலிய வெண்குஷ்டங்கள், பலவகை படர் தாமரை ரோக ங்கள், கைகால் வெடிப்பு, தேக வெடிப்பு முதலிய பலவகை வெடிப்பு ரோகங்கள், இ ன்னும் இதிற் சொல்லப்படாத அனந்த ரோகங்கள் ஆகியறை தீரும்.

**பத்தியம் :** பகவின்பால், பசுவின்நெய், தேன், பாற்சாதம், நெய்சாதம் ஆகிய வைகளாம். புளி, உப்பு, புகை, பெண் முதலியவைகளாகா. மேற்சொல்லப்பட்ட பதா ர்த்தங்களை வேளைக்கு வேளை மாற்றிச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.பதார்த்த ங்களை யெல்லாம் நீக்கி வைப்பதே உத்தமம்.

**குறிப்பு:** இந்தக் குட்டக்குழித் தைலமானது அனேக வியாதிகளுக்கு, முக்கிய மாய் அதிகமாய் உபயோக மாகிறபடியாலும், இவ்வித முறைகளில் இது மிகவும் சு லபமானதும் விசேஷ குணத்தைக் கொடுக்கத்தக்கது மாகையாலும் இதனைக் க வனித்துக் கைபாகமாவும் சாக்கிரதையாகவும் முடித்துச் வைத்திருக்க வேண்டும். இந்தப் பாகமானது கற்றோர் மற்றோர், அநுபவமில்லாதவர்கள் முதலிய யாவருக் கும் பிரயோசனப் படியாகக் இச்செய்யுளில் ஒரு பிரதியின் பிரகாரம் கடுகவிடி குன் றியின் சாற்றில் யென அச்சிடப்படிருக்கிறது. வேறு சில பிரதிகளில் குண்டியென காணப்பட்டிருக்கிறது. குன்றியென்பது குன்றிமணியிலை யென அர்தமாமம். கு ண்டி அதாவது நிர்க்குண்டியென்பது வெண்ணொச்சியென அர்த்தமாம். அந்தப் ப ாகத்தில் அநுபவமாகச் சேர்க்கப்படுவது மேற்கண்ட வெண்ணொச்சியேயாம். ஆ கையால் இங்கு பெரும் பாலார்களின் கருத்து, அநுபவம் முதலியவைகளை யனு சரித் தெழுதப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபமுள்ளவர்கள் தங்களிஷ்டம் போல ஒருமுை ற குன்றிமணி யிலைச் சாற்றைச் சேர்த்துச் செய்தும் மறு முறை வெண்ணொச்சி

யிலைச் சாற்றை சேர்த்துச் செய்தும். உபயோகித்து அநுபவசித்தமாக மேற்கண்ட இரண்டின் வித்தியாசங்களையும் கண்டு தெரிந்து கொள்ளலாம்.

## 16. சேராங்கொட்டை தைலம் :

(அ) சாணிப்பாலில் ஏழு தடவையும், புனியிலைச்சாறு, பசுவின் பால், இளநீர் முதலியவைகளில் ஒவ்வொரு தடவையும் அவித்துலர்த்தித் சுத்திசெய்த சேராங்கொட்டை 100 பலம் (3500 கிராம்). (இதனை சுத்தி செய்வது முன் சொல்லப்பட்டிருக்கிறது). அந்த முறைப்படியும் செய்து கொள்ளவும்) இவ்விதம் சுத்தி செய்த சேராங்கொட்டையைக் குழித்தைலமிறக்கிக் கொள்ளவும்.

நீரடிமுத்து 10 பலம் (350 கிராம்), இதனைச் சாணிப்பாலில் வேகவைத்து உலர்த்தி மறுபடியும் சாணிப் பாலில் வேகவைக்க வேண்டியது. (இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்து நன்றாயுலர்த்தி உடைத்துப் பருப்பெடுத்து அதன் மீதுள்ள சருகையும் அதைப் பிளந்து நடுவிலிருக்கிற பருப்பிலையையும் நீக்கிக் சுத்தி செய்து கொள்ளவும்.)

பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்) இதனை இடித்துத் தூள் செய்து ஒரு மண்பாண்டத்தில் ஒரு வடி பசுவின் பாலை விட்டுப் பாண்டத்தின் வாய்க்கு வேடுகட்டி அதன் மீது மேற்படி தூளை வைத்து மேற்சட்டி மூடி அடுப்பின் மீதேற்றி மெதுவாஎரித்துப் பால் சுண்டின பதத்தில் எடுத்து நிழலில் உவரத்தி மறுபடியும் இடித்துத்தூள் செய்து கொள்ளவும்)

(ஆ) பிரப்பங்கிழுங்கு, கருஞ்சீரகம், சீரகம், வசம்புசுட்ட கரி, வாதகரப்பான் பட்டை, சிவனார்வேம்பு, சங்கம் வேர்ப்பட்டை, கொல்லன் கோவைக் கிழங்கு. அமுக்குராக் கிழங்கு, உலர்த்தின வெள்ளறுகு, எருக்கம்வேர்ப்பட்டை, அத்திப்பட்டை, குமிழும் வேர்ப்பட்டை, சத்திச்சாரணைக் கிழங்கு, மின்சரணைக் கிழங்கு, செங்கத்தாரிப்பட்டை, செந்தொட்டி வேர், வேப்பம்கொட்டைப், பருப்பு, வெட்பாலரிசி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்). இவைகளுள் உலர்த்தவேண்டியவைகளை உலர்த்தி

யும் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் இடிக்க வேண்டியவைகளை இடி த்தும் தூள் செய்து ஒன்றாகக் சேர்த்துக் கொள்ளவும்.

(இ) துருசு, பால்துத்தம், சுத்தி செய்த கெந்தகம், சுத்தி செய்த இரசம் வகைக்கு 5 வராகன் எடை (17 1/2 கிராம்) இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகத் கறுத்து தூளானபின்பு மற்றவைகளையும் சேர்த்தரைத்துத் தூள் செய்து கொள்ளவேண்டியது.

(ஈ) கழுவி மேற்றோல் போக்கின எள் 8 பலம், (280 கிராம்) பனைவெல்லம் 40 பலம் (1400 கிராம்). இந்த வெல்லத்தை நீரில் கரைத்துக் கொதிக்கவைத்து. ஒரு கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பியை நீக்கி மறுபடியும் பாய்ச்சிக் கெட்டிப் பதமான பதத்தில் இறக்கிவைத்து கொள்ளவும்.

**செய்முறை :** (ஈ)யிலுள்ள எள்ளை அம்மியில் வைத்து மை போலரைத்துக் கொள்ளவும். (அ) லிலுள்ள நீரடிமுத்துப்பருப்பை அம்மியில் வைத்து மைபோலரைத்துக் கொள்ளவும். இந்த இரண்டையும் (அ)வி லுள்ளவைகளையும் (ஆ)விலுள்ள வைகளையும் (இ) யிலுள்ளவைகளையும் ஒன்றாகக் செம்மையாகச் சேர்த்துக் கல்லுரவில் போட்டு மேற்படி வெல்லப்பாகைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கைவிடாமல் நான்கு சாமம் இடித்து மைபோலான பின்பு பீங்கான் சாடியில் வைத்து மூடிக் காற்றுப் போகாமல் பத்திரப்படுத்த இடிக்கிறவர்கள் முகத்திலும் தலையிலும் மூக்கிலும் ஊள்ளின வேண்டியது. இப்படிச் செய்யாவிட்டால் சில உடலினர்க்குச் சில நேரங்களில் வீக்கங்காணும். அதனால் பாதமொன்றுமில்லை, அப்படி வீக்கங்கண்டால் விளக்கெண்ணெயை மேலே பூசினாலும் அதைத் தேய்த்து குளிக்கச் செய்தாலும் வீக்கம் வடிந்துவிடும். ஆனால், ஏதேனும் கொடிய நோயாக இருந்தாலும் அது நீங்கி விடும்.

**அளவு :** 1 முதல் 2 வராகன் எடை

**அனுபானம் :** சிறுவர்களுக்கு சமன் விளக்கெண்ணெயுடன் அல்லது நெய்யுடன் சேர்த்துக் கொடுத்தால் தீயகுணங்கள் ஒன்று ஆகாது.

**தீரும்நோய்கள் :** பதினெட்டு வகைச் சூலைகள், பதினெட்டு வகைக் கிரந்திகள், சொறி கிரந்தி, அரி கிரந்தி, அத்திக்காய் கிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, பறங்கிப் பு

ண், அல்குல்புற்று, தந்திமேகம், நீர் மேகம், வெட்டை, மஞ்சள் பிரமேகம், நீர்ப்பிரமேகம், இரத்தப் பிரமேகம். வெட்டை, மஞ்சள் பிரமேகம், நீர்ப் பிரமேகம், இரத்தப் பிரமேகம் முதலிய பிரமேகங்கள், முடக்குவாதம் கைகால் பிடிப்பு வாதம், முகவாதம், வாய்க்கோணு வாதம், நாச்குப் புரட்டல் முதலிய நாக்கு வாதங்கள், தனுர் வாதம், இளம்பிள்ளை வாதம், துடி வாதம், செங்குட்டம், கருங்குட்டம், வெண்குட்டம், கை உதடு, கால் இவற்றிலுள்ள வெண்குட்டங்கள், வெடிசூலை, கண்டமாலை, கால்வெடிப்பு, திமிர், படர்தாமரை, இலிங்கப்புற்று, குத்து, தரிப்பு, விரிகுட்டம், குறைநோவு, தோலுரி, சொறி, சிரங்கு, ஆனைச்சொறி, குதிரைச் சொறி, தவளைச்சொறி, புழுவெட்டு, வண்டுகடி, செய்யான்கடி, செவ்வட்டைக்கடி, எலிக்கடி முதலான அநேக கொடிய நோய்கள் தீரும்.

**பத்தியம் :** பாசிப்பயறு, துவரம்பருப்பு, மிளகு, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அறைக்கீரை, முளைக்கீரை, பசும்பால், பசுவின் நெய், பசு மோர், வெள்ளாட்டு நெய், வெள்ளாட்டு வற்றல், வரால் கருவோடு, வெந்நீர் இவை ஆகும். மருந்து சாப்பிட்டுவிட்ட பிறகு ஒரு மாதம் வரையில் கோழி, வாயு உணவுப் பண்டங்கள் ஆகியறைகள் ஆகாது.

**குறிப்பு :** இந்த மருத்தைச் சாப்பிடும் போது சில உடலினர்க்கு முகம் அல்லது உடலெங்கும் வீக்கம் காண்பது உண்டு. அதற்காக பயப்படவேண்டிய அவசியமில்லை. இந்த மருந்திற்கு மாற்று விளக்கெண்ணெயாகையால் அதனை தேய்த்து நீராடச் செய்விக்கலாம் அல்லது மருந்தை நிறுத்தி மறுநாள் உள்ளுக்கு எண்ணெய் சாப்பிட வேண்டியது. எந்த உடலினராம் இந்த மருந்தை உபயோகிக்கும் போது இரண்டு வேலையும் பசுவின் பாலைக் குடித்து வந்தால் எந்தவித தீய குணமும் காணாது. அல்லது நான்கு நாளைக்கு ஒரு தடவை அல்லது எட்டு நாளைக்கு ஒரு தடவை கழிச்சலாகும்படி விளக்கெண்ணெய்ச் சாப்பிட்டு வந்தால் நாலைந்து தடவை கழிச்சலாகி உள்ளிருக்கின்ற துர்நீர்கள் நீங்கி இன்னும் சிறப்புடைய குணமுண்டாக ஏதுவாகும். இது ஒருவகை சிறந்த மருந்தாகையால் பயப்படாமல் சமயோகிதம் போல தக்க அனுபானங்களுடன் உபயோகித்து வந்தால் மனிதர்களை வாழ்நாள் முழுவதும் துன்பப்படுத்தும் கொய நோய்களையும் அறரே நீக்கி வெற்றிக் கெ

ாடிகட்டி முழக்கலாம். சிறந்த வைத்தியர்களிடத்தில் இவ்வித மருதொன்று அவசி யமிருக்க வேண்டியது.

## 17. சிங்கித் தைலம்

கஞ்ச கிமிளை காந்தமுடன்
கடிய சூதம் அரிதாரம்
மிஞ்ச மிருதார் குக்கிலுடன்
விளங்கும் பச்சை வெட்டுடனே
அஞ்சும் வசம்பு உள்ளிவெள்ளை
அடைவாம் வகைக்குக் கழஞ்சொன்று
வெஞ்சம் புங்கு உதியம்பால்
மேலா மெண்ணெய் படியொன்றே.

எண்ணெய் பதத்தில் பார்தெடுத்தே
இறங்காச் சிங்கி பிளவைரண்டும்
அண்டப் புற்று அரையாப்பும்
ஆறா ரணங்கள் நீறாகும்
விண்டே பட்டா பவுத்திரமும்
விரைந்தே சூரை வெடிநாசம்
கண்டே புரைகள் முளைநாசம்
கடிதாரம் சிங்கித் தைலமிதே.

| | | |
|---|---|---|
| காகநிமிளை | விராகனிடை | கவ |
| சிமிணை | ,, | கவ |
| பாதரசம் | ,, | கவ |
| அரிதாரம் | ,, | கவ |
| குக்கில் | ,, | கவ |
| பச்சைவெட்டு | ,, | கவ |
| வசம்பு | ,, | கவ |
| வெள்ளைப்பூண்டு | ,, | கவ |
| வெள்ளைப் பாஷாணம் | ,, | கவ |

இந்தத் தினுசுகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு நன்றாய்ப் பொடிசெய்து புங்கம்பால் கால்படி சிறுதுதசிறிதாக விட்டு அரைத்துப் பின் உதியம்பால் கால்படி கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைத்துக் கலந்து தேங்காயயெண்ணெய் படி 1/2 விட்டுக் கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி எடுத்து வைத்துக்கொண்டு பீஜப்புற்று, லிங்க

ப்புற்று, அரையாப்பு, ஆறாதபுண்கள், பவுத்திரம், புரையோடும் ரணங்கள், வெடிசூலை இவைகட்குத் துணியில் நனைத்துப் புண்கள் மீது போட்டுவர ஆறி உலீரும், புரைமாறும் இதற்குச் சிங்கித்தைலமென்று பெயர்.

## 18. வங்காளப் பச்சைத் தைலம்

கொல்லுஞ் சூதங் கெந்தகமுங்
        சூறுந் தாரந் துரிசு துத்தம்
அல்லுங் குக்கில் அபினியுடன்
        அடங்காக் காசுக் கட்டியொடு
சொல்லுஞ் சீமை வங்காளஞ்
        சுகமாம் மருந்து வெள்ளையுள்ளி

| | | |
|---|---|---|
| பால் துத்தம் | விராகனெடை | கவ |
| துரிசு | ,, | ,, |
| ரசம் | ,, | ,, |
| மிருதார் சிங்கி | ,, | ,, |
| நீலம் | ,, | ,, |
| அரிதாரம் | ,, | ,, |
| கட்டவசம்பு | ,, | ,, |
| கொறுக்காய்ப்புளி | ,, | ,, |

இவைகளை எல்லாம் கல்வத்திலிட்டு முலைப்பாலில் ஒரு சாமம் அரைத்துக் கால்படி முலைப்பால் கால்படி கற்றாழை ரசம் அரைப்படி நல்லெண்ணெய் எல்லாம் ஒன்றாய்க் கலந்து கடுகுதிரன், பதத்தில் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இத்தைலத்தை எரிச்சல் உள்ள புண்கள், பிளவை, புற்று பவுத்திரம், பனிச்சை, தண்ணீர்வடியும் நாரப்புண்கள் முதலிய ரணங்கட்குப் போட்டுவர ரணகங்கள் ஆறிச் செளக்கயத்தைக் கொடுக்கும். இதற்குப் பச்சைத் தைலமென்று பெயர்.

## 19. புரைமாறப் பச்சைத் தைலம்

தும்பை முருங்கை துளசியிலை

        தொலையாப் புங்கு நுணாமுருக்கும்

அம்பை கையான் குமரிவில்வ

        மடைவாய் வகைக்குப் பிடியிடித்துச்

சம்பை குக்கில் சாம்பிராணி

தனித்த சூதங் கெந்தகமும்

வம்பை துரிசு துத்தமுடன்

வருத்திக் கழஞ்ச எண்ணெயிடே

எண்ணெய் படிக்குச் சார்படியு

மிதமாய்ப் புங்கன் பாலுழக்கும்

மண்ணை நீரம் பலமொன்று

மயங்க வெரித்துப் புரையிலிடக்

கன்ன சூலை புரைமாறும்

கதித்த பிளவை தான்புற்றும்

விண்ணும் படாத பவுத்திரமும்

விலக்கும் பச்சைத் தைலமிதே

| | | |
|---|---|---|
| தும்பைச்சாறு | படி | வ |
| முருங்கை இலைச்சாறு | ,, | வ |
| துளசி இலைச்சாறு | ,, | வ |
| புங்க னிலைச்சாறு | ,, | வ |
| நுணா இலைச்சாறு | ,, | வ |
| கல்யாண முருங்கை | ,, | வ |
| யிலைச்சாறு | ,, | வ |
| கரி சாலை ரசம் | ,, | வ |
| கற்றாழை ரசம் | ,, | வ |
| வில்வ இலை ரசம் | ,, | வ |
| குக்கில் | கழஞ்ச | வ |
| சாம்பிராணித்தூள் | ,, | வ |

| | | |
|---|---|---|
| பாதரசம் | ,, | வ |
| கெந்தகம் | ,, | வ |
| துரிசு | ,, | வ |
| பால் துத்தம் | ,, | வ |
| நீலம் | ,, | வ |

மூலிகைச்சாறுகளை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து பழகிய மண் பாத்திரலி ட்டுக் குக்கில் முதல் நீலம் வரையுள்ள சரக்குகளைக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் நன்றாய்ப் பொடி செய்து மேற்படி சாற்றில் கலந்து நல்லெண்ணெய்படி அரை புங்கம் பால் ஐந்து பலம் சேர்த்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து கடுகு திரன், பதத்தில் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். கர்ணசூலை, புரையோடி ஆறாதரணங்கள், பிளவை, புற்று, பவுத்திரம் முதலயி ரணங்கட்கு இத்தைலத்தை உபயோகித்துவரப் புரை ரணங்களை ஆற்றி சௌக்கயத்தை அளிக்கும். இது பச்சைத் தைலமென்று வழுங்கப்பம்.

## 20. கிரந்தியரையாப்புக்கெண்ணெய்

பாரேநீ கிரந்தியரை யாப்புச்சூலை பகரறியகரப்பானோயெல் லாந்தீர, வேரே நீபொடுதலைச் சாற்படியிரண்டு வீழிச்சாறுகரி சாலைசங்கங்குப்பி, வாரேதானீருள்ளி, தேதசிச்சாறும் வகைக்கொருபடி வீதமுடன் சாற்றோடொக்க, சேரே நீ சிற்றேரண்டத்தி னெண்ணெய் சேர்த்துக்கொள்ள படியிரண்டு திறமாய்த்தானே.

திறமாகச்சங்கம்வேர் சித்திரமூலம்செம்முள்ளி வேரோடு அமுக்கறாவேர், நறமானதிரிபலயுஞ் செங்கத்தாரி கனபட்டை கஸ்தூரிமஞ்சள்கூட, புறமானகரியசீரகமுஞ் சேருபுகலாதகார் யோகிவித்துஞ்சேரு, மறவானமிளகோடு கரப்பான்பட்டை வாலுழுவை செங்கந்தம் வசம்புகூட்டே.

கூட்டடா தகரவிசை குமரிவேரும் குணமான அத்திதிப்பிளியின்மூலம், நாட்டடாசாரணைவேர் நிம்பப்பட்டை நலமானமுக்கிரட்டை நெருஞ்சிவேரும், கூட்டடாவ

லம்புரிக்காய் நாகப்பூவுஞ் சொல்லுதற் கடகசிங்கிமதுரங்கூட, மீட்டடாவிந்தியொடு ஓடிமெல்லாம் விரைவாக நிலவாகை வேருஞ்சேரே.

வேரோடு உற்றகுமிழ் நல்விளாவேர் வெட்பாலை யரிசிக்காய் கடுகுரோக ணி, பாரோடுசொல்லரிய பங்கம்பாளை பன்னுகருசீரகமும் நாகத்தாளி, ஏரோடுசெ ங்கழுநீர் கோடஞ்சு யெழில்சாரங்காஞ்சோறி சிறியசீரம், பேரோடு கழற்கொடி பங் கூடப் பேசுகிறேன். வகைவகைக்கு நிறைதான்கேவே.

கேளேநீ சரக்கெல்லாம் பலமொன்றாகக் கிளர்த்தினோங் வத்திலிட்டுமைந் தா, வேளேநீ கொடிக்கள்ளிச் சாற்றினோ வெள்ளாட்டுப்பாலும் புங்கம்பாலாகும், காளே நீ மூன்றுமெறாய்க் கல்வத்தாட்டிக் கருதியேயெண்ணை தனிற் கரைத்துவ ாரு வாளே நீயேடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சு மைந்தனே மெழுகுபற வருந்தான்க ாணே.

வருதல்கண்டு மெழுகுபதந் தன்னைப்பார்த்து வடிக்குமப்போ லடிக்கலசந்த ன்னிற்கேளு, கருதல்கண்டு விரைவுடனே ரசகற்பூரம் கழஞ்செடையோ நாலதிலே பொடித்துப்போடு, திருகில்அரிதார பற்பமாண்டுசேர்த்தந்தத் தைலத்தைவடித்துவா விருதானகணேசனுக்குப்பூசைபண்ணு வேடுகட்டித் தானியுடன்வைத்துவாங்கே வாங்கிய நாளென்றுக் கொருகரண்டி வாகாநாள் மூன்று நாளைத்தேழு, தாங்கிே ய ஆள்பலனும் நோய்கலனும் பார்த்துச் சார்ந்தறிந்துஉண்டு வரத்தருவாய்நீயும், ஏங்கியே யலையாதே பத்தியங்காத்து இருக்கச்சொல்லு மறுபத்தியம் போக்கி நீர் வார், ஆங்கியே புளிப்புவகை பொல்லாங்கூட்டு அதில் தீரும்நோயையினியறைக்கே களே.

அறைகிறேன் கிரந்தியரையாப்புச்சூலை அதில்பித்த சிரங்கு சொறிகரப்பான் புண்ணும், இறையானவெடிசூலைப்புண்ணு மெழுவாழைகுமிவாழை யாறாப்புண் ணும், பறையானமேகவெடி கரப்பானூறல் பக்கபுற்றுத் தேமலொடு தாமரை நோய் தானுங் கறையான கண்ணோசி கன்னப்புற்று கருங்கிரந்தி செங்கிரந்தி கள்ளிப்பூ வே.

கள்ளிப்பூக்கிரந்தியொடு குறைநோய் குஷ்டங் கனலண்டவாதமொடு நாக்கி ல்ரோகம், தெள்ளிடுசீழ்ப் பிரேகம் வெள்ளை வீழ்தல் உதிர்ந்திடுமே பெண்கட் குறுக

ரப்பாணோயுங் கள்ளமின்றிச்சொல்லி விட்டேன். இந்தவெண்ணெய் கனமடா கண்டுபார் உள்ளுக்குள்ளே, உள்ளபடி தலைமுழுக இன்னமொன்று உரைக்கிறேன் சூட்சசஞ்சீவியாமே.

## 21. சூத வெண்ணெய்:

சொன்னேன் பார்சூதவெண்ணெய் யெடுக்கு மார்க்கம் சொற்பெரிய நாதாக்கள் செய்யுமார்க்கம், அன்னவே சூதமொரு பலந்தான்பந்து அடிகனத்த பெருஞ்சாலிலிட்டுப் பின்பு, தன்னவே வேப்பிலை தானுருவிக் கொண்டுதாழி நிரம்பக்கொட்டித் தண்ணீர் வார்த்து, பன்னவேமேல்மூடி யடுப்பிலேற்றிப் பருவிற கானருெப்பதனை மூட்டிடாயே.

மூட்டியே வடுகறுக்கு ஈசானத்தில் முறையோடே வஸ்துவொடு சுற்றிமிக்க, காட்டியே வைத்துவிட்டுச் சாயங்காலம் கனமான வடுகனை நீமனதிலோது, நாட்டியே யிரவுபகல் கனவுவறாமால் நலமாகக் காடாக்கினி நணுகிமூட்டு, பாட்டவே சலமெல்லாங் குறுகிவற்றும் பக்குவமா யடியில் நிற்கும் பதத்தைப்பாரே.

பதம்பார்த்து இலையெல்லா மெடுத்துப்போட்டுப் பார்த்திட்டால் நீர்வற்றிச் சூதம் நிற்கும், இதமாக யெடுத்துநறு தாலிவிட்டு இயம்பியசால் நிறையநிக்க இலையைப்போட்டு, அதமான சலமத்திலே நிறையவிட்டு அடுப்பேற்றி மேல்மூடி. வன்னிமுட்டு கதமாக விரவுபகல் மாறாதேநீ கனல்முட்ட நீர்சுருங்கும் பருவம்பாரே.

பருவமாய்க் கருகாமல் மறுபாண்டத்தில் பரித்திட்டிப்படியாக முறைதப்பாமல், விருந்தென்ன வெவ்வேறே சாலுமாற்றி விதமாகக் கைம்முறைகள் வன்னிமூட்டு, மருவென்ன கைம்முறையு நன்றாயப்பா மறவாமல் வடுகனையும் பூசைசெய்து, கருவீசாமண்டலந்தான் சாலுமாற்றி நாலுபத்து ஓர்நான்போச் சாலுமாற்றே.

மாற்றியே நாற்பத்து ஓர் நாளப்பா மைந்தனே சூதவெண்ணெயருணன் போலாம், காத்துமே யாத்தாட்கும் வடுகனுக்கும், கணேசனுக்கும் கந்தனுக்கும் பூசைசெய்தே, பார்த்துமே நாதாக்கள் பூசைசெய்தே, பஞ்சகர்த்தாள் பூசைசெய்து பணிந்து நில்லு, நாத்துமே நவசாபந்தீரச்செய்து ரசவெண்ணெய்தனையெடுத்துப்பதனம் பண்ணே.

பதனம் பார்த்திலையெல்லா மெடுத்துப்போட்டுப் பார்த்திட்டால் நீர்வற்றிச் சூத நிற்கும், இதமாக வெடுத்து மாறுசாலிட்டுப்பார் இயம்ப வொண்ணாரச வெண்ணெய் யார்தான் செய்வார், கதமுற்றகசடர்களோ செய்வார்சித்தர் கைம்முறைகள் செய்ம்முறைகள் யார் கண்டுய்வார், விதமுற்ற போகரிஷி யெனக்குச் சொன்னார் மேற்றார்க்குச் சொன்னாலே பொய்யாம்வாறே.

வாறானரச வெண்ணெய்தனை யெடுத்து மஞ்சாடி வெற்றிலையிற் றடவியுண்ணு, ஆறனபனைவெல்ல மதனிலுண்ணு ஆவின் பால் திரிகடுகு தேனிலுண்ணு, சுஹாயில்லா விட்டால் வெற்றிலையிலுண்ணு குன்மகுட்டஞ் சூலைபதினெட்டும் போகும், ஆறானமேகவகை யிருபத்தொன்றுமதி லெழுந்த நோய் வகைளெல்லாம் போகமே.

போகுமே கிரந்தியரையாப்புச் சூலை புண்புரைகளழுகண்ணி பிளவைப்புற்று, ஆகுமே வாதமெண்பது போகு மக்கிரமித்த முடக்குவகை யிடுக்கண்போகும், வேவகுமேபக்கவாதம் பாரிசவாயு விழலாகும் வாதமென்ற திருபத்தாறும், காருமேகண்ணோசி கன்னப்புற்று கபாலகுட்டம் பவுத்திரமுங் கரப்பான்போமே.

கரப்பான் சொறிசிரங்கு வெடிமேகச்சூலை கடிவண்ட வாயு முதல் யோனிப்புற்று, கரப்பனொடு முலமூளை பவுத்திரங்கள் கால்கெளச விப்புருசி கண்டமாலை, கரப்பனொடு பித்தவாயு உஷ்ணவாயு சயரோகம் நீரிழிவும் கரியும்போகும், கரப்பனொடு குலைமுட்டியந்தரவாய்வு கருங்குட்டஞ் செங்குட்டம் வெண்குட்டம்மே.

குட்டமொடு சருவநோ யெல்லாந்தீருங் குறைநோயும் பெருநோயும் குடிபோஞ் சொன்னோம், கெட்டுயரம்தேகமது பிணிகயருங் கிளர்த்தறியா தாதுவெல்லா மிறுகிக்கட்டும், பட்டமாம் பால்சொரிந்தாற் போலேயப்பா பளபளக்கு முடம்பெல்லாம் பாலையாகுந், திட்டமாய்ச் சொல்லிவிட்டேன் சூதகற்பஞ் சேர்த்துண்ணச்சாவேது தேகங்கல்லே.

கல்லான காயசித்தி தேகசித்தி கற்பமொடுரசவாத மஞ்சனக்குளிகை, கல்லான கௌனமாங் குழிகையோடு கனமானசருவ நோ யெல்லாமைந்து, சொல்லான சூதத்தை விட்டால்வேறு சொல்லுக்கும் வல்லவராய் சொல்லக்கேளு, செல்லவேசித்தர் கடான் பதினெண்பேரும் சீவவிந்தைக் கட்டியல்லோ திறமானாரே

# மாத்திரை

## 1. புசண்டா ராமபாய மாத்திரை :

(அ) தூய்மை செய்த அரிதாரம் 1 வராகன் எடை (3 1/2 கிராம்) (இதனைத் தூள்செய்து கொள்ளவும்). கொள்ளுடன் சேர்த்து வேக வைத்து, கொள்ளு வெந்த பதத்தில் எடுத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். தூய்மை செய்த காந்தம் 1 வராகன் எடை (3 1/2 கிராம்), (இதனையும் தனியே தூள் செய்து கொள்க).இரசம் 1 வராகன் எடை (3 1/2 கிராம்). கெந்தகம் 1 வராகன் எடை (3 1/2 கிராம்) (இவ்விரண்டையும் கலந்து நன்றாக கறுக்கிற வரையில் அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.) இந்துப்பு, பொரித்ததுருசு, பால் துத்தம் இவற்றைத் தனித்தனியே பொடித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை (3 1/2 கிராம்).

(ஆ) மேல் தோல் போக்கின எள்ளு, நாப்து நாள் பசும் பாலில் ஊற வைத்தெடுத்துக் கழுவி உலர்த்தி இடித்த எட்டிக் கொட்டைத் தூள், சாணிப் பாலில் மூக்கு வெட்டிப் போட்டுக் காய்ச்சி எடுத்து உலர்த்தி இடித்த சேராங் கொட்டைத் தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள், மஞ்சள் தூள், ஓமத் தூள், மாசிக்காய்த் தூள், சாதிக்காய்த் தூள், வசம்புத் தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டு, கொள்ளுமா கோட்டத்தூள், கார்போகரிசித் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3 1/2 கிராம்).

தக்கோலம் 2 1/2 பலம் (87 1/2 பலம்), அக்கிராகாரம் 2 1/2 பலம் (87 1/2 கிராம்), இவ்விரண்டையும் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாகக் காய்ச்சி சுண்டவைத்து இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி வைத்துக்கொள்ளவும். கோழிமுட்டை வெள்ளையம்புலி செல்லத்தக்க அளவு.

**செய்முறை:** (அ) விலுள்ள தூள்களையும், (ஆ) விலுள்ள தூள்களையும், எள்ளையும், பூண்டையும் ஒன்றாகக் கலந்து கல்லுரலில் இட்டு இருக்புக் கடப்பரையால் இரண்டு

சாமநேரம் கைவிடாமல் இடித்து நிறுத்திவிட வேண்டும் மறுநாள் (இ) யிலுள்ள குடிநீரை சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் இடித்து நிறுத்திவிட வேண்டும். மூன்றாம் நாள் (ஆ) வில் சொல்லியிருக்கிற கோழி முட்டை வெள்ளையம்புலியைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாம நேரம் இடித்து நான்கு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** இந்த மருந்தைக் கல்வத்தில் அரைக்கலாகாது, அரைத்தாலும் சிறப்பானக் குணத்தைக் கொடுக்கிறதில்லை. இதனை உரலில் இடித்தே மசித்துத் தீர்க்க வேண்டும். எத்தனை நாள் மசிக்கிறோமோ அத்தனை சிறப்பானக் குணத்தைத் தரும். இடிக்கும் போது குடிநீர் போதாவிடில் மீதியிருக்கிற திப்பியில் தண்ணீரை விட்டுக் காய்ச்சிக் கொள்ளவேண்டியது.

**அளவு: 1/2** முதல் **1** மாத்திரை.

**துணை மருந்து:** தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்: அல்குல் புற்று, லிங்கப்புற்று**, கண்டமாலை, **அண்டப்புற்று,** புண், புரை, சூலை, வாயு, **இடிப்புற்று, ஈரல்புற்று, குழிப்புற்று,** வெண்குட்டம், முழங்கால்வாதம், சூதகவாயு முதலியவைபோம்.

**மருத்துணவு:** மோருஞ் சோறும் சாப்பிட்டு வரவேண்டியது. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாவிட்டாலும் மோருஞ் சோறும் ஒரு வேளையாவது சாப்பிட்டு வரவேண்டும். மருந்தை நாற்பது நாள் வரை சாப்பிட வேண்டும். பெண்களும் சாப்பிடலாம். மூன்று மாதம் வரையில் புணர்ச்சி கூடாது. வேறு பத்தியமில்லை.

## 2. சித்தர் குளிகை

சித்திரமூல வேர்ப்பட்டைச் சூரணம், சுத்தி செய்த இரசகர்ப்பூரம், ஓமச் சூரணம் இவை வகை 1க்கு விராகனெடை ஒன்னேகால்,

பனைவெல்லம்விராகனெடைமூணே முக்கால்.

**செய்முறை:** முன் மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒரு மணி நேரமரைத்துப் பிறகு வெல்லத்தையுஞ் சேர்த்து ஆறுமணி நேரமரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

**பிரமாணம்:** மாத்திரை ஒன்று, ஒன்றரை.

**அனுபானம்:** சீனிசர்க்கரை, சுக்கையரைத்தவிழுது, வெண்ணெய் முதலியவைகளாம்.

**உபயோகம்:** இதனைக் காலை மாலை இரண்டு வேளையும் பத்துநாள் உபயோகித்தால் பற்படி விரணங்கள் கிரந்தி ரோகங்கள்**, யோனிப்புற்று**, சூலைகள், கள்ளிப்பூக்கிரந்தி, லிங்கப்புற்று, பௌத்திர ரோகங்கள், கன்னப் பிளவை, பக்கப்ளிவை, மார்ச்சிலந்தி, விப்பருதி, எட்டுவகைக் குன்ம ரோகங்கள், மேகரணங்கள் ஆகியவைகள் தீரும்.

**பத்தியம் :** வியாதிபலம், தேகபலம் முதலிய வியாதிகளுக்குத் தகுந்தபடி புளியை நீக்கி வைத்து உப்பை வறுத்துச் சேர்க்கவும். புகை, பெண் ஆகியவைகளையும் நீக்க வேண்டியது.

## 3. சருவாங்க மாத்திரை

உரைசரு வாங்க மென்னு மொப்பின்மாத் திரையைக் கேண்மோ
கருகாவி சவ்வீ ரக்கற் காந்தமிம் மூன்றுஞ் சுத்தி
அருகாமற் செய்து பின்ன ரருகத்தைச் சூரி வேரோ
டுரியவிவ் விரையு மெல்லா மோரன வாகச் சேரே.

இருப்பவல் பேய்க்கொம் மட்டி யிலை தயிர் வேளை மத்தம்
அருப்பமி னிலத்தின் வாகை யவுரியே குப்பை மேனி

மருக்ளிர் கொடிக்கொற்றனும் வகைவகை யாயி டித்துத்
தருக்கியே பிழிந்த சாற்றிற் றனித்தனி யெட்டு நாளே.

இப்படி யரைத்த பின்ன சிரசித மிவற்றி னுக்குத்
தப்பறச் சரியாய்க் கூட்டி மசைத்திடிற் சாரு மேன்மை
ஒப்பிலா விரசி தஞ்சேர்த் துடனடைச யாம லுஞ்செய்
செய்புமரத் திரையின் வீதஞ் சிறுபய றளவ தாமே.

மண்டல மிம்ம ருக்கை வளம்பெறு மனுபா னத்திற்
கொண்டிடிற் சூலை குன்மங் கோழைகா மாலை யீழை
மண்டுமந் தார காசம் வளாகபம் வெட்டை மேகம்
அண்டுநீ ராமை யேபே ராமையே கிரந்தி சோகை.

மகோதர மி**லிங்கப் புற்று மார்படைப் யோனிப்புற்று**
நகுமேக வாத நாப்குன் ணாசிகா பீடம் கண்ட
மிகுமாலை சொறிசி ரங்கு விடமூறல் பிளவை கைகால்
புகுமுடக் கரையாப் பேவிற் புருதியே கிராணி வாதம்.

சொலிய குமர கண்ட வலிகொடு முறிகிரந்தி
கல்லடைப் பதுவே மிக்க கரப்பனே கெற்ப சூலை
எல்லையின் மண்டை சூலை, வெடிசூலை யோனிச் சூலை
வல்பவுந் திரமே கெற்ப வாயுவிந் திரிய கண்டி

கோதாரிக் கழிச்ச னீங்குங் கூறுமிம் மருந்து தன்னை
ஆதார மாக வேதா னடைவுறு மனுபா னத்தில்
ஒதிய முறையே யீந்தா லுவகையாய்ப் பெறுவார் பிள்ளை
தீதிலிம் மருந்த ருந்திற் றேகம்பொன் னாமே வர்க்கும்.

விரியனே புடைய னாக விடங்கரு வழலை யல்லாற்

றிரிபுலி முகச்சிலந்தி தீயெலி முதல் விடங்கட்
குரியநல் லனுபா னத்தி லூட்டிட வொழிந்து போகும்
புரையிலா விவற்றி புண்ணும்போ முரைத்துப் போடில்.

பிரமியம் பெருவி யாதி பீலிகை பக்க வாயு
வருசிர குட்ட மண்ட வாயுவெய்ப் பிளைப்பு மூலம்
தருதசை யடைப்பே யாதி தவிர்ந்திடும் வாயு வோடு
பரியெட்டுக் குன்மம் போகும் பார்னுக் கமிர்த மாமே.

உருத்திர வாயு யோடே யுட்குத்துப் பிறவீச் சாதி
வருந்திடும் பிணிக ணீங்கும் வளர்சன்னி யெல்லாம் போகும்
உருத்திடுஞ் சேட்டு மங்களூரைவிட டோடுந் தீயின்
எரித்திட்டுப் புகையை யூட்ட னேகுமே கிரந்திப் புண்கள்.

**4. சித்திர மூலக்குளிகை :**

சித்திரமூலம் ஒரு கழஞ்சு, பூரம் ஒரு கழஞ்சு, ஓமம் ஒரு கழஞ்சு. இம்மூன்றின் எடையுள்ள பனைவெல்லம் சேர்த்து, இரண்டு சாமம் அரைத்தெடுத்து, மிளகளவு உருண்டை செய்து, பத்து நாள் சாப்பிட்டுப் பத்தியம் இருந்துவர, விரணம், இரணக்கிரந்தி, யோனிப்புற்று, சூலை, கள்ளிப்பூக்கிரந்தி, லிங்கப்புற்று, பவுத்திரம், கன்னப்பிளவை, பக்கப்பிளவை, மார்சிலந்தி, விப்புருதி, மேகரணம், எட்டுவிதக்குன்மம் இவைகள் போம்.

சித்திரஞ்சேர் மூலமதே சீராகக் கழஞ்சியொன்று
கத்திரஞ்சேர் பூரமது வுங்கழுஞ்சு—சத்தியங்கேள்
ஓம மொருகழஞ்சி யோதுபனை வெல்லமொடு
சாமமிரண்டு தானரைப்பாய் தான்.

அரைத்து மிளகளவு அன்பான வுண்டைசெய்து

தரையிலொரு பத்துதினந் தானருந்த – நிரைகுழலே!
ஏதுக் கலைகிறாய் புண்கிரந்தி புண்களோடு
மாதர்யோனிப் புற்றுமாறு மாம்.

மாறுமே சூலையெல்லாம் வரக்கள்ளி பூக்கிரந்தி
தீருமே லிங்கப்புற்று பவுத்திரநீர்–சீறிடுங்
கன்னப் பிளவைப்பக்கம் காணும் படுப்பிளவை
என்னசொல்வேன் மார்சிலந்தி யோடும்.

ஓடுமே விப்புருதி ஓடுகின்ற குன்மமெட்டும்
நாடுதனில் மேகரணம் நாடாது – மாடுகளே
காடுதனில் மூலிகையைக் காணும் லேனலைவீர்
வீட்டிலிருந் திம்முறைசெய் மின்.

இரத்தப் பெருக்கோடு நாட்பட்ட பேதியிவை
மெத்தச் சுரத்தோ டொழியுங்காண் – இத்தலத்தில்
தூயமணிப் பூணொலிக்கும் தூமயிலே! நாளும்
சாயவேர்ச் சக்கைதனைச் சேர்.

## 5. சூலைக்குடோரி

**சூலைக்கு டோரிசொல்வே னிரதம்லிங்கம்**

**சுத்திசெய்த வெள்ளையொடு காந்தம்சுக்கு**

**கோலத்திப் பிலிவகைக்கு விரான்ரண்டு**

**குணமாங்கார் போகரிசி விராகநான்கு**

**மாலையுறு மஞ்சிஷ்டி விராதனெட்டு**

**மதுரமுள்ள கிணற்றுநீர் விட்டேயாட்டு**

வேலையுந்தான் நாற்ஜாம மானபின்பு

மிகுகடலைப் பிரமாணங் குளிகைசெய்யே

செய்துபனை வெல்லஞ்சர்க் கரைவெண்ணெயில்

திகழ்காலை மாலையேழுநாள் தான்கொள்ள

நையுமரை யாப்புகீல் வாயுசூலை

நவில்மேக வாயுவுடன் யோனிப்புற்று

மெய்யில்வரு கிரந்தியெல்லா மோடும்பீர்க்கு

மிகுகத்த ரிப்பிஞ்சுமுருங்கைப் பிஞ்சு

பையவே கூட்டிடுவாய் புளிபெண்தள்ளு

பத்தியமு நாளிபத் தொன்பதாமே

(வி–ம்) சுத்திசெய்தஇரசம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம், காந்தம், மேல்தொல் சீவின சுக்குச்சூரணம், வறுத்திடித்த அரிசித்திப் பிலிச் சூரணம் இவைவகைக்கு விராகனெடை–2, கார்போகரிசிச் சூரணம், விராக னெடை–4, மஞ்சிஷ்டிச் சூரணம் விராகனெடை–8, தித்திப்பான கிணற்றுத்தண்ணீ ர் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** இரசத்தையும் பாஷாணத்தையும், தொந்தித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றச் சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து ஒருமணிநேர மரைத்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து இதிற்சேர்த்து மறுபடியும் ஒ ருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி குளிர்ந்தஜலத் தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமமரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திை ரகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**பிரமானம் :** மாத்திரை 1/2–1

**அனுபானம் :** பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம். காலை, மாலை இரண்டுவேளையும் ஏழு நாள் வரையில் கொடுக்கலாம்.

**உபயோகம் :** கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகவாயு, கீழ்வாயு, யோனிப்புற்று முதலிய ரோகங்கள் தீரும்.

**பத்தியம் :** கத்திரப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, பிரக்கம்பிஞ்சு, முருங்கைக்கீரை ஆகியறை ஆகும். புளி, புகை, பெண், மீன், ஆட்டிறைச்சி ஆகியவை ஆகா. நெய் தாளிதம் செய்து கொள்ள வேண்டும். மருந்தைவிட்ட நாலாம்நாள் எருமைமோர் சேர்த்துக் கொள்ளலாம். மருந்தைவிட்ட ஒன்பதாம்நாள் ஓமத்தைக் கஞ்சியிலரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டியது. பிறகு மூன்றுநாளைக்கொரு தடவை விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வரவேண்டியது. இவ்விதம் இருபத்தொருநாள் வரை பத்தியங்காத்து அதற்குப்பிறகு நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வழமைபோல் எல்லாப் பதார்த்தங்களையு சேர்த்துக்கொள்ளலாம்.

# மெழுகு

## 1. குருசஞ்சீவி மெழுகு

தூய்மை செய்த லிங்கம், வீரம், இரசகற்பூரம், இரசசெந்தூரம், காந்தம், சூடம், சாம்பிராணி, வெள்ளைப் பாடாணம், பொரித்த துருசு, பால் துத்தம், மிர்தார்சிங்கி, நெல்லிக்காய்க் கெத்தகம், அரிதாரம், இவை வகைக்கு 1 வராகன் எடை (3 1/2 கிராம்), வாளம், 1 முதல் 3 வராகன் எடை, தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:** எல்லாச் சரக்குளையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து இரண்டு சாம நேரம் கைவிடாமரைத்து எடுத்து இரண்டு பாகமாக்கித் தனித்தனியே வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கல்வத்தில் ஒரு வராகன் எடை வாடத்தைப் போட்டு பொடித்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் இரண்டு பாகமாக்கி வைத்திருக்கிற மருந்தில் ஒரு பாகத்தைக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகத் தூவி தேனையும் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில்

பத்திரப்படுத்தவும். இதன் மேல் எண் ஒன்று எனக் குறிப்பிட்டு வைக்க வேண்டியது. பின்பு மூன்று வராகன் எடை வாளத்தைக் கல்வத்தலிட்டுப் பொடித்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து மெழுகு போலாகிய வரையில் அரைத்து முன் எடுத்து வைத்திருக்கிற மறுபாதி மருந்தைச் சிறுகச்சிறுகத் தூவித் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சரம ரேநமரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் வழித்து வைத்து இதன்மீது எண் இரண்டெனக்குறித்து வைக்க வேண்டியது.

**குறிப்பு:** மலம்போகாமல் இருக்க வேண்டியபோது முதல் எண்ணையும், மலத்தை வெளிப்படுத்த வேண்டியபோது எண் இரண்டையும் உபயோகிக்க வேண்டியது.

**அளவு:** **1/4** முதல் **1/2** குன்றி எடை.

**துணை மருந்து:** பனைவெல்லம், சுக்கு, வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகாளம்.

**தீரும்நோய் :** சுரம், சன்னி, மேகநோய்கள், கிரந்திநோய்கள் புண்கள், குழிப்புண், சிலைப்புண், அழிரணம், கண்டமாலை, பவுத்திரம், சூலை**, புற்றுநோய்கள்** முதலிய எல்லா நோய்களிலும் துணை மருந்து விசேஷங்களில் உபயோகிக்கலாம். பெரும்பான்மையான கடின நோய்களில் இதனை உபயோகித்துக் குணங்கண்டிருப்பதால் இதற்குச் சஞ்சீவி மெழுகெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

**மருத்துணவு:** இதற்கு சிறப்புடைய பத்தியம் ஒன்றுமில்லை. ஆயினும் உடல்வலிமை, நோய்வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி உப்பு, புளி, புணர்ச்சி, கரப்பான் பதார்த்தம் ஆகியவைகளை நீக்கிப் பத்தியம் வைக்க வேண்டியது.

## 2. இரச செந்தி மெழுகு

குமிழ்போக்கிய ஒரு பலம சேங்கொட்டையை இரண்டு பலம் சிற்றமணக்கெண்ணெயில் போட்டு மிதக்கக் காய்ச்சி எண்ணெயை சீலையில் வடித்து பீங்கானிலிட்டு பத்திரமாக வைக்கவும்.

ஒரு பலம் வாலை ரசத்தையும், சுத்தி செய்த ஒரு பலம் கெந்தகத்தையும் கல்வத்தில் போட்டு முன் சித்தப்படுத்திய சேங்கொட்டை தைலத்தைத் துளித்துளியாக விட்டு 3–மணி நேரம் மெழுகு பதத்திலேயே அரைத்துச் சுறண்டி அதனை ஒரு முற்றின சிறு தேங்காயின் கண் வழியாய் ஜலத்தைப் போக்கி உட்செலுத்தி வேப்பங்கொம்பினால் வாயை அடைத்துச் சமகனமாகச் சாணத்தை அப்பிக் காயவைத்து இரண்டொரு சீலை செய்து பத்து அல்லது பதினைந்து வறட்டியில் புடமிடுக. தேங்காயின் ஓடு வெடித்து வாசனை வருஞ் சமயம் அதனை எடுத்து ஓட்டை நீக்கி, அம்மியில் வைத்து நெகிழ அதைத்துச் சேதமின்றியதனைக் கல்வத்திற்கு மாற்றி, மெழுகு பதத்திற்கு வருகிற பரியந்தம் நாலைந்து தினம் அரைத்து பீங்கானில் பத்திரப்படுத்துக.

**பிரயோகம்:** வேளைக்கு தேற்றாங்கொட்டைப் பிரமாணம் தினம் இருவேளை ஒரு முறை 5, 10–நாள் கொடுக்கவும். இதனால் குஷ்டம், திமிர், தடிப்பு, கண்டமாலை, மேகசூலை, கிரந்தி, அரையாப்பு, **புத்து**, கருமேகம், மேகஊறல், படை, பவுத்திரம், குழி விழும் ரணஙகளெல்லாம் தீரும்.

**பத்தியம்:** புளி தள்ளி இச்சாபத்தியமாக வைத்தல் நன்று; கடும்பத்தியமாக உட்கொள்ளின் ரோகமானது தீவிரத்தில் குணமாகும் என்பது உண்மை.

**குறிப்பு:** ஒருமுறை சாப்பிட்டு 10, 15–நாள் வரையிலும் மருந்தில்லாமல் விட்டு வைத்து நோயானது பூரணமாகக் குணமில்லை

### 3. இரச கெந்தி மெழுகு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூதம் | பலம் | 1 | தேசாவரம் | வராகனெடை | 1 |
| கெந்தகம் | ” | 1 | வாய்விளங்கம் | ” | 1 |
| பறங்கிச் சக்கை | ” | 1 | வசம்பு | ” | 1 |
| சேங்கொட்டை | ” | 1 | கிராம்பு | ” | 1 |
| பூரம் வராகனெடை | ” | 1 | கடுக்காய் | ” | 1 |
| தானகம் | ” | 1 | கருஞ்சீரகம் | ” | 1 |
| காந்தம் | ” | 1 | காட்டுச்சீரகம் | ” | 1 |
| துருசு | ” | 1 | சிறுதேக்கு | ” | 1 |
| பால் துத்தம் | ” | 1 | தாளிசப்பத்திரி | ” | 1 |
| மிருதார்சிங்கி | ” | 1 | பிரப்பங்கிழங்கு | ” | 1 |
| சுக்கு | ” | 1 | எட்டிவித்து | ” | 1 |
| ஓமம் | ” | 1 | தேற்றான் வித்து | ” | 1 |
| மஞ்சள் | ” | 1 | நீர் முள்ளி | ” | 1 |
| திப்பிலி | ” | 1 | எள்ளு | ” | 1 |
| அரத்தை | ” | 1 | கொள்ளு | ” | 1 |
| கோஷ்டம் | ” | 1 | தேங்காய்கொப்பரை | ” | 1 |
| வாலுளுவையரிசி | ” | 1 | சின்னிவேர் | ” | 1 |
| சோம்பு | ” | 1 | சங்கம்வேர் | ” | 1 |
| ஏலம் | ” | 1 | அமுக்கராக்கிழங்கு | ” | 1 |
| ஜாதிக்காய் | ” | 1 | கொல்லன் கோவை | ” | 1 |
| மிளகு | ” | 1 | கொடிவேலி வேர் | ” | 1 |
| சீரகம் | ” | 1 | திராட்சை | ” | 1 |
| கார்போகவரிசி | ” | 1 | முட்டை கருவு | ” | 2 |
| மாசிக்காய் | ” | 1 | பன வெல்லம் | ” | 9 |

**செய்பாகம்:** முதலில் சூதம், கெந்தகம் இவையிரண்டையும் கல்வத்தில் போட்டு நன்றாய் அரைத்து கருப்பு நிறமாக இருக்கும் சமயத்தில் பூரம் தாளகம், காந்தம், துருசு, பால் துத்தம், மிருதார்சிங்கி இவைகளை ஒன்றன்பின் னொன்றாக் கூட்டி யரைத்து எல்லாம் உறவானபின் மற்றக் கற்கங்களை எல்லாம் இடித்து வஸ்திரகாயம் செய்து கொஞ்சங் கொஞ்சாமாய்ப் போட்டு அரைத்து முட்டை கருவையும் பனவெல்லத்தையும் கூட்டி இடிக்கவும் இப்படி இரண்டு மூன்று நாள் புரட்டிப் புரட்டி இடித்து எல்லாச் சரக்குளும் உறவாகும்படி செய்தல் வேண்டம். இதனை ஒரு ஜாடியில் போட் 60 – நாள் பரியந்தம் உபயோகிக்காமல் வாய் மூடிச் சீலைசெய்து பூமியில்ல புதைத்து வைத்து எடுக்கவும்.

**பிரயோகம்:** வேளைக்குத் தேற்றாங் கொட்டைப் பிரமாணம் தினம் இருவேளை சாப்பிட்டுக்கொண்டுவர இருபது நாளில் குஷ்டம், திமிர், கண்டமாலை, மேகசூலை, கிரந்தி, அரையாப்பு, புத்து, கரும்புள்ளி, மேகஊறல், படர் தாமரை, பவுத்திரம், குழி விரணம், தொடை வாழை முதலிய பிணிகள் தீரும்.

**பத்தியம்:** புளிதள்ளி இச்சாபத்தியம் அல்லது மோரன்னம்.

**குறிப்பு:** ஒரே முறையாக இருபது நாள் உட்கொள்வது கஷ்டசாத்திய –மானதால்7 – அல்லது 10 – நாள் ஒரு முறையாகப் பாவித்து உண்டு பின்னர்ச் சில நாள் விட்டு மீண்டும் ஆரம்பித்து முன்போல் சாப்பிடவும்; இப்படி 2,3–முறை சாப்பிட கஷ்டமான ரோகங்களும் குணமாகும்.

**4. வாலைரச மெழுகு**

| | | | |
|---|---|---|---|
| பறங்கிச்சக்கை | பலம் **1** | பூவரசம்பட்டை | பலம் **1** |
| வாலைரசம் | ” **1** | வெண்சங்கம் வேர் | ” **1** |
| கஸ்தூரி மஞ்சள் | ” **1** | | |

**செய்பாகம்:** வாலைரசம் நீங்கலாக மற்றவைகளை இடித்துச் சூரணம் செய்து கல்வத்தில் போட்டு வாலை ரசத்தைவிட்டு ஒரு மிக்கக் கலந்து தேன் விட்டு **11**–நாள் அரைத்து பச்சை மூங்கில் குழையில் போட்டு வாய்க்கு ஆப்பிட்டு பூமியில் **3**–மாதம் புதைத்து வைத்து எடுத்துக்கொள்க.

**பிரயோகம்:** வேளைக்குக் குன்றியளவு பனவெல்லத்தில் வைத்து தினம் 2 போது கொடுக்கவும் இப்படி ஒருமுறை 7–நாள் கொடுத்து சில நாள் மருந்தில்லாமல் விட்டு வைக்கவும் தேவையாயின் 10–நாள் பொறுத்து மறுபடியும் ஒருமுறை கொடுக்கவும். இதனால் மேகம், பிடிப்பு, தடிப்பு, குடைச்சல், குத்தல், குட்டம், தந்தி வெள்ளை, ஆறாத ரணம், படை, சொறி, சிரங்கு, **புத்து**, பிளவை, புழுவெட்டு, கருமேகம், வெண்குட்டம், கிரந்தி, புரை குழல், தேகமெல்லாம் உண்டான மறுக்கள் எல்லாம் தீரும்.

**பத்தியம்:** மருந்துண்ணும் காலம் வரையில் புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** இம் முறையில் பறங்கிச்சக்கை எவ்வளவுக் கெவ்வளவு உளுத்துப் பழமை பெற்றிருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு விசேஷ குணத்தைக் கொடுக்கும்.

### 5. கோரோசனை மெழுகு

புதிதான சித்திரமூல வேர்ப்பட்டைச் சூரணம் விராகனெடை – 16, சுத்தி செய்த இரசகர்ப்பூரம், விராகனெடை 2, கோரோசனை விராகனெடை 2, குங்குமப்பூ விராகனெடை 2, தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:** குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டு தேனைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துக் குங்குமப்பூ அரைபட்டபின்பு, இரகர்ப்பூரத்தைச் சேர்த்தரைத்து அதுவும் அரைப்பட்ட பின்பு, கோரோசனையைச் சேர்த்தரைத்து அதுவும் அரைப்பட்டபின்பு சித்திர மூலவேர்த் தூளைச் சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச் சாமநேரம் கைவிடாமலரைத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தவும்.

**பிரமாணம்:** குன்றிமணியெடை – 4–5 தேகசுபாவம் வியாதி பலத்திற்குத் தகுந்தபடி உபயோகிக்கவும்.

**அனுபானம்:** சீனிசர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாம்.

**உபயோகம்:** சூலை ரோகங்கள், அரையாப்பு, கண்டமாலை, நுணாக்காய்க் கிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, மேகரணங்கள், சூதகவாயு, **யோனிப்புற்று, லிங்கப்புற்று,** கருப்பவாயு, உதிரச்சிக்கல், பிரசவஸ்திரீகளுக்குக் காணும் உதிரச்சிக்கல், உதிரச்சிக்கலினாலண்டான ஜன்னி தோஷ முதலியவைகள் தீரும். சூதகம் கட்டுப்பட்டிருக்கிறவர்களுக்கும் இதனை உபயோகித்தால் அதையுடைத்து வெளிப்படுத்தும்.

**பத்தியம்:** புளியை நீக்கவேண்டியது. காலை மாலை இரண்டு வேளையுமாக ஏழுநாள் உபயோகித்து எட்டாம் நாள் சிற்றாமணக்கெண்ணெயை, அல்லது, சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசுவின் நெய் ஆக மூன்றும் சேர்ந்த

முக்கூட்டெண்ணெயைத் தேய்த்துச் சனி புதன் ஆகிய நாட்களில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் நாலைந்து ஸ்நானஞ் செய்து பிறகு வழமைபோல் ஸ்நானஞ் செய்யவும் வியாதி இலகுவாயிருந்தால் மூன்று நாள், அல்லது நான்கு நாள் உபயோகித்தால் போதுமானது.

**குறிப்பு:** சில தேகிகளுக்கு வாய் பிடிக்குமாகையால் அத்தகையினர்கள் தினம் நாலைந்து தடவை தாம்பூலம் போட்டுக்கொள்வதினால் வாய் பிடிக்காது. அல்லது கந்தகப்புளிப்பை ஜலத்திற் கரைத்து வாய் கொப்பளித்து வருவதினாலும் அதன் வேகமிராது. துஷ்டவியாதிகளுக்கு இது சஞ்சீவிக் கொப்பான தாகையால் அனுபவப்படி இங்கெழுகப்பட்டிருக்கிறது. வேறெந்த மருந்திலும் தீராத வியாதிகளுக்கு முடிவாக இதனை உபயோகிக்கலாம்.

### 6. சகல மேகங்களுக்கு இரசகெந்தி ராசாங்கமெழுகு

சுரக்க மாந்தர்க்குச் சூட்டு மருந்துகேள்
திறக்கமாம் பூரந் தேர்ந்த ரசமுடன்
சிறக்கச் சிங்கியுஞ் சேர்ந்த வரிதாரம்
முறக்க மாந்த மனோசிலை கூட்டிடே.

கூட்டி லிங்கங் குலாவு பால்துத்தமாம்
நீட்டுந் துருசு நேர்ந்த காசுக்கட்டி
பூட்டும் சத்து புகலும் படிகாரம்
ஆட்டுஞ் சரக்கு வரிய வராகன் தூக்கே.

தூக்குந் தாளிசந் தோன்றுங் கருஞ்சீரம்
தாக்குஞ் சிவதை தான்றிக் கடுக்காயும்
போக்கில்லாத பொருந்துந் திரிபாடு

வாக்குத் தப்பா வலம்புரிக் காய்ச்சேரே.

சேர்த்து முஷ்டி சிறக்கும் வாலுழுவை
கோர்த்து மல்லிகொடிவேலி முள்ளியும்
ஆரத்து மதுர மறையுங் கோஷ்டமுடன்
சேர்த்து விடையஞ் சிறவ்பாகத் தூக்கிடே.

வேலி நொச்சி விளங்குங் குப்பைமேனி
மூவியத்தி முழங்கும் பெருமருத்
தாலி ரோசனை தாக்கு மழிஞ்சிலாம்
கோலியே சமன் கூறச் சமனெடை

எடுத்துமே சரக்கெழிலா மிடித்துமே
தொடுத்த சூரணந் தோன்ற வடிசெய்து
படுத்த பாண்டத்திற் பாலால் புட்டாவிசெய்
சடுத்த மாகவே சார வுலர்த்திடே

உலர்த்தி யானபின் னுரைக்கும் ரசகெந்தம்
அலர்த்தியே முலைப் பாலால் கத்திசெய்து
சரத்துமேயுரல் சாற்றவே கொட்டிடு
பலர்த்த பனைவெல்லம் பாங்காய் சரிகூட்டே

கூட்டுமே யுரல் குலாவி யிருப்புலக்
காட்டி சாமங் கருதும் பணிரண்டு
தீட்டுமே கைவிடாம விடித்திடு
பூட்டு மண்டம் புகலு மிரண்டிடே.

இட்டே சாம மியல்பா யிடித்திடு
திட்டமாய் கண்டைக் காயள வீதமாம்
கட்டமாக கருதவு மண்டலம்
சட்டமா யுண்ணச் சகல நோய் போகுமே.

போகுஞ் சூலை புகலு மறையாப்பு
ஏகும் வெள்ளை யியலுங் கொறுக்குடன்
சாகு மாந்தை சகல வெடிசூலை
நோகுங் கண்டமாலை பிணி நீங்குமே.

நீங்கும் பவுத்திர நெருங்கும் வெடிசூலை
ஓங்குங் குஷ்ட முறையும் மதுமேகம்
ஆங்கும் **புற்று** அறையும் பொறைவீச்சு
தீங்கு சிலந்தி தெறிந்தோடிப் போகுமே.

போகும் வாளை பொருந்தும் விலாவாளை
ஆகுங் கிரந்தி அரிய கிரந்தியாம்
பாகும் சிலந்தி பகரு மிடிப்புண்ணு
ஏகுங் கானக மெழிலாய்ப் பறக்குமே.

பறக்கு மென்றல்லோ பாடினா ரென்குரு
பறக்கு மென்றல்லோ பகர்ந்தனர் சித்தரும்
பறக்கு மென்றல்லோ பாலித்தர் முனிவரும்
பறக்கு மென்றல்லோ பகர்ந்தனர் தேரனே.

**7. வீர மெழுகு:**

பறங்கிப்பட்டை, கொடிவேலிவேர், சிவனார்வேம்புச் சமூலம், சேங்கொட்டை ஓர் எடையாய் நறுக்கிப் பாண்டத்திலிட்டுக் குழித்தைலம் இறக்கிவைத்துக்கொள்க. தூய்மை செய்த சவ்வீரம், இலிங்கம், இரசகற்புரம் வகைக்கு 3 வராகன் எடை; இரசம், அரிதாரம், துருசுபற்பம், இந்துப்பு வகைக்கு ஒரு வராகன் எடை. இவற்றை மையாய்ப் பொடித்துக் கரண்டியில் போட்டு வறுத்து குமரி, எலுமிச்சம்பழம், சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான் இவற்றின் சாற்றில் வகைக்கு ஒரு புடம் போட்டு எடுத்துத் துணைமருந்துகளில் உட்கொள்ள மேக நீரிழிவு, வறட்சி, கிரந்தி, சூலை, பெரும்பாடு, **மேகப்புற்று** ஆகிய நோய்கள் தீரும்.

**8. பஞ்சசூத மெழுகு:**

கட்டின வீரம், அல்லது சுத்தித்த வீரம் பலம் 1, சட்டியிலிட்டுச் செப்புநெரிஞ்சி ச்சார், முலைப்பால், கொடிக்கள்ளிப் பால் வகைக்கு ஒரு ஜாமஞ்சுருக்கீழ்ந்து சாரஜெயநீர் அல்லது காரத்திராவகம், சுத்தித்தபுரம் வகைக்குக்கழஞ்சு 1, மிளகு, திப்பிலி, சித்திரமூலவேர்த்தூள் வகைக்குப்பலம் கால் சேர்த்து மலைத் தேனாலாட்டி மிளகுப்பிரமாணம் அறைத்த மிளகில் வைத்துண்ண ஊழிப்பேதி யென்னும் வாந்திபேதி, உருத்திரசன்னி, விஷச்சன்னி, அலர்ச் சன்னி, பிடரிசன்னி, முகவாதசன்னி, சர்சுரம், ஆனந்தவாய்வு, கைகால் முடக்கு, பாரிசவாய்வு, பவுத்திரம், துடை வாழை, அரையாப்பு, கண்டமாலை, கிரந்திப் புண் குன்மம், சூலை, பாரிசவாய்வு, **யோனிப்புற்று**, மருட்கொறுக்கு முதலிய மேகரோகங்கள் நீங்கும்.

**9. இராமபாண இடிமருந்து**

இடிமருந்து * அரிதாரங் காந்தம் யெள்ளு
 யெட்டிவிதை செங்கொட்டை சித்ரமூலம்
வடிமருந்து * ரசங்கெந்தி மஞ்சள்ஓமம்
 மாசிக்காய் ஜாதிக்காய் வசம்பீருள்ளி

குடிமருந்து * கொள்ளுக்காய் துருசுதுத்தம்

கோழிமுட்டை இந்துப்பு கோட்டங்கார்கோல்

அடிமருந்து * தக்கோல மக்கிராகாரம்

அமைத்திடித்து கலசமிட்டு அறையக்கேளே

அறையக்கேள் யோனிதன்னி லிங்கந்தன்னில்

அண்டத்தில் புடைகரப்பான் புரையின் புண்கள்

விரையக்கேள் மூக்கெரித்தல் கரப்பான்சூலை

வெடிப்புத்துக் குலைப்புத்து யீரல்புத்து

விறையக்கேள் வெண்குட்டம் குரைநோய்குட்டம்

விழித்திருப்பன் விணாத்தண்டின் விஷநீர்ப்புத்து

முறையக்கேள் முடியாத முடக்குசூலை

மூட்டோடே வியாதியெல்லாம் போமுண்பீரே.

உண்பீரேல்பத்தியந்தா நிதற்கோயில்லை

உயிரானயிடிமருந்து ராமபாணம்

உண்பீரேல் சிறுகண்டை யளவிலேதான்

உற்றதொரு மோருஞ்சோ ருண்டுமுன்னே

உண்பீரேல் அடுத்தடுத்து மூழ்கிமூழ்கி

உள்ளபடிமண்டலமே செல்லுமட்டும்

உண்பீரேல்தேகமது பொன்போலாகும்

உள்ளபடி பூவையரைப் புணர்ந்திடாதே.

புருடருக்கும் பூவையர்க்கும் சொல்லுவன்கேள்

புணர்ச்சிதள்ளியிருக்கட்டும் மூன்றுமாதம்

இருடருக்கும்பிணியேது ராமபாணம்

எந்தெந்தநோய்வரினும் யெமன்வந்தாலும்

திருடருக்குபலிக்குமது ராமபாணம்

சித்துவிளையாடுமடா சிவன்மேலாணை
குருடருக்கும் செய்முறையாய் ஜெயமேயாகும்
கோதண்டரகுராமர் பாணந்தானே.

இடி மருந்தென்பது – வெடியுப்பு
வடி மருந்தென்பது – சாராயம்
குடி மருந்தென்பது – கஞ்சா
அடி மருந்தென்பது – சவுக்காரம்

## 10. சகலமேகராஜாங்க ரசகெந்திமெழுகு

| | |
|---|---|
| இரசம் | வாலுழுவை |
| கெந்தி | சோம்பு |
| ரசகற்பூரம் | ஏலம் |
| அரிதாரம் | ஜாதிக்காய் |
| காந்தம் | மிளகு |
| துருசு | சீரகம் |
| துத்தம் | கார்கோலரிசி |
| சுக்கு | மாசிக்காய் |
| ஓமம் | தேவதாரம் |
| மஞ்சள் | வாய்விளங்கம் |
| திப்பிலி | வசம்பு |
| அரத்தை | லவுங்கம் |
| கோஷ்டம் | சேங்கொட்டை |
| கருஞ்சீரகம் | கடுக்காய்தோல் |
| காட்டுசீரகம் | சிறுதேக்கு |
| முந்திரிக்கை | தாளிசம் |

பிரம்மிமூலம்	யெட்டிவிரை
நீர்பூண்டு	தேற்றான்வித்து
கொள்ளு	எள்ளு
தேங்காய்	அமுக்குராவேர்
சின்னிவேர்	கொப்பரைதேங்காய்
சங்கம்வேர்	கொல்லங்கோவை

| | |
|---|---|
| பிரம்மிமூலம் | யெட்டிவிரை |
| நீர்பூண்டு | தேற்றான்வித்து |
| கொள்ளு | எள்ளு |
| தேங்காய் | அமுக்குராவேர் |
| சின்னிவேர் | கொப்பரைதேங்காய் |
| சங்கம்வேர் | கொல்லங்கோவை |

இவைகளை வகைக்கு ஒரு விராகனிடையாக நிறுத்தெடுத்து கல்லுரலில்யிட்டு யிடித்து வஸ்திரகாயம்செய்து அத்துடன் இரண்டு கோழி முட்டைகளை உடைத்து ஊற்றி பிறகு நிறுத்தெடுத்து அதுயிருக்கும் யிடைக்கு சரியிடை பழைய பனைவெல்லஞ்சேர்த்து கல்லுரலில்போட்டு பூணில்லாத மர உலக்கையால் மைபோல் குத்தியெடுக்கவும்.

**தீரும்வியாதிகள்:**

குத்தப்பாயிதுநேரே பனைவெல்லந்தான்
குணமாகநால் ஜாமம் யிடித்துத்தீரும்
பெத்தப்பாவழித்தெடுத்து சிமிழில்வைத்து
பேதமில்லலை சுண்டக்காய் வீதங்கொள்ள
முத்தப்பாமோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாமல் மருந்துண்ணு மண்டலந்தான்
சித்தப்பாமுழுகுநாள் மருந்துண்ணாதே
சிறப்பாகபத்தியந்தா னில்லைதானே.

தானென்றவெடிசூலை மேகசூலை
தயவான யிடிசூலை புடைக்குஞ்சூலை
வானென்ற துடிவாத சூலையோடு

வளமானகால் குடைச்சல் கரணைதீரும்
மானென்ற ஆம்புவிப் புருதிமாலை
மதியாத குட்டமொடு விஷநீர்தீரும்
கோனென்றகுரைநோயும் சிரங்குதீரும்
குணமான புழுவெட்டு தடிப்பும்போமே

போமேநீயோனிதன்னில் லிங்கந்தன்னில்
பொலிவான ஆமையடி சிலந்திமேகம்
தாமேநீசெங்கிரந்தி கருங்கிரந்தி
தயவான அரிகிரந்தி பொரிகிரந்தி
வாமேநீ பருங்கிரந்தி யிடிகிரந்தி
வளமாகயிடிவிழுந்த புரைமேற்புண்கண்
ஆமேநீ அரைக்கடியுந் தண்டிற்புண்ணு
அடைவான குள்ளிமா தேவியாமே.

ஆமேநீதுடைவாழை மூட்டுவாழை
அடைவான குழிவாழை முதுகுவாழை
சேமேநீ புழுகுவாழை விலாவில்வாழை
செயலான தமர்காயாச் சிலந்தியோடு
ஓமேநீகுரிப்புற்று யோனிப்புற்று
ஒளிவான யிடிப்புற்று கன்னப்புற்று
தாமேநீ பல்சிலந்திக் கன்னத்தோசை
சதைவளருங்கண்ணோசை போகும்பாரே.

பாரடாபிளையோடு பிளவைப்பூச்சி
பண்டானராஜ னென்ற பிளவையோடு
கூரடாநேத்திரமேல் பிளவையோடு

கொடிதான துடிசிலந்தி புடைசிலந்தி
தேரடா பவுத்திரங்கள் முளைமூலங்கள்
நெடியபதமெட்டுசக் கரத்தினோடு
வீரடாயிவையெல்லாந் தீருந்தீரும்
விதமாகபோகருட செயலால்தானே.

## 11. சூத வல்லாதி உருண்டை:

குலைத்துவிடும் மேகத்தால் எழுந்த ரோகம்
குடல்வாதம் திமிர்வாதம் குண்டலமாம் வாயு
உலைந்துவிடும் கழல்வாதம் பச்சை வாதம்
உள்நடுக்கல் நரித்தலையாம் வாதத் தோடு
தொலைந்துவிடும் பல விரணம் எல்லாம் திரச்
சூதவல்வாதி ஒன்று சொல்லக் கேளு
அலைந்துவிடும் சேங்கோட்டை பழுது போக்கி
அப்பவே விராகனிகு பத்து நாலே.

பத்தியென்ற குரோசாணி எடைதான் ரெண்டு
பாருலர்ந்த சதாவேரிக் கிழங்கி ரண்டு
வெத்தியுள்ள நிலப்பனையின் கிழங்கி ரண்டு
வெய்யிலிலே தான்வைத்துச் சூர ணித்து
கத்திபெறக் கல்லுரலில் இட்டுப் பின்னை
கடப்பாரை தன்னாலே இரண்டு சாமம்
சித்தியென்ற சேங்கோட்டை ஒவ்வொன்முகச்
சேர்த்திடித்துச் சூதமதின் பூரம் ரெண்டே.

இரண்டிட்டுச் சேர்த்திடித்து மைபோ லானால்
இருபத்து இரண்டுருண்டை பிடித்துக் கொண்டு
உருண்டைதனை அரன்தனக்கு வைத்துப் போற்றி
ஒன்றைவிட்டு இருபத்தொன்று எடுத்துக்கொண்டு
திரண்டபிணி யாளருக்கு ஏழே உண்டை
தின்னவே பத்தியம்தான் செப்பக் கேளு
திரண்டசிறு பயறுடனே கோழி முட்டை
திறமான துவரை என்ற பருப்பு நெய்யே.

பருப்புடனே பாலாகும் ஐந்தாம் நாளில்
பாலகனே வறுத்தவிப்பு சற்றே விட்டு
சுரப்புவாய் வழியோடுஞ் சூலைக் கட்டுஞ்
சொல்லுவேன் முல்லைவெந்த நீரினாலே
கருப்பமாய்க் கொப்பளித்து வெள்ளா டென்ற
கனதலைதான் வெந்தநீர்க் கியாழத் தன்னை
விருப்பமாய்க் கொப்பளித்துக் கறியுங் கூட்டில்
விதமான வாய்ச்சூலை யேகுந் தானே.

ஏகுமே எட்டாம் நாள் ஏரண் டெண்ணெய்
இட்டுநீ மூழ்கிடவே ஏகும் நோய்கள்
சாகுமே கிரந்திகுட்டம் சூலை அரை யாப்பு
சந்தில்வரும் பவுத்திரங்கள் பிளவைப் புற்று
வேகுமே விப்புருதி கண்ட மாலை
விதனஞ்செய் வாதமெல்லாம் விரைந்து பேகும்
தேகமே பெலக்கும்பத் தியமே வேண்டும்
னேவல் வாதிஒன்று தெரிந்து கேளே.

மேற்சொல்லப்பட்ட மேகத்தால் உண்டாக்ககூடிய குடல்வாதம், திமிர்வாதம், குண்டலவாயு, கழல்வாதம், பச்சைவாதம், உள் நடுக்கல், நரித்தலைவாயு, பலவித புண்கள் எல்லாம் வந்து சேரும். இந்நோய்களெல்லாம் தீரும் பொருட்டு ஒரு சூதவல்லாதி என்னும் மருந்தின் செய்முறையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

**செய்முறை:**

சேங்கொட்டை இருபத்துநான்கு விராகனெடை எடுத்துச் சுத்தப்படுத்தி கொள்ளுக.

- குரோசாணி ஓமம்
- தண்ணீர் விட்டான் கிழங்கு
- நிலப்பனைக் கிழங்கு

ஆகிய இவற்றை வகைக்கு இரண்டு விராகனெடை எடுத்துக் கொண்டு வெயிலில் காயவைத்து கல்லுரலில் இட்டு கடப்பாரையால் இரண்டு சாமம் இடித்துப் பொடி செய்து பிறகு சேங்கொட்டையை ஒவ்வொன்றாக நன்கு இடித்துச் சேர்த்து அதிலே இரண்டு விராகனெடை சூதம், பூரம் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். இவ்வாறு சேர்த்து இடித்து மைபோல்ர வரும் பக்குவத்தில் எடுத்து அதை இருபத்திரண்டு உருண்டையாகச் செய்து கொண்டு அவ்வுருண்டைகளைச் சிவனுக்கு படைத்துப் போற்றி ஒன்றை மட்டும் விட்டு மற்றைய இருபத்தொரு உருண்டைகளை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:** நாள் ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் ஏழு நாட்களுக்குக் கொடுக்கவும்.

**பத்தியம்:** சிறுபயறு, கொழிமுட்டை, துரவம்பருப்பு, நெய், பால் இவை ஆகும. பருப்பு கலந்து காய்ச்சிய பாற் கஞ்சியுமாகும். உப்புக்கூடாது. ஐந்தாம் நாளில் உப்பை வறுத்து சிறிது கூட்டிக் கொள்க. இச்சாபத்தியத்தைக் காக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** இவ்வாய் செய்துவரின் சூலைக்கட்டு அடியோடு ஒழிந்து விடும். முல்லைப் பூவையிட்டுக் காய்ச்சியநீர், வெள்ளாட்டின் தலையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஷாயம், இவற்றைக் கொண்டு வாய் கொப்பளித்து அந்த வெள்ளாட்டின் கறியையங் கூட்டி உண்டுவரின் எல்லாவகை வாய்க்குலையும் நீங்கும். எட்டாம் நாள் ஆமணங்கெண்ணெய் தேய்த்து மூழ்கியுடன் கிரந்தி, குட்டம், கரையாப்பு, சூலை, பவுத்திரம், பிளவை, **புற்று**, விப்புருதி, கண்டமாலை, மற்றவாத நோய்கள் இவையெல்லாம் நீங்கும். உடலும் வன்மை பெறும்.

**12. கனைப் புற்றுக்கு மருந்து**

பொய்யா தையா புகலுங் குருமொழி
அய்யா புற்று அறைவே னொருமருந்
தையா பூரமுந் தாங்கும் படிகாரம்
மெய்யா காரமும் விரும்புஞ் சமனெடே

எடுத்து பெண்ணெயி லெழிலா யரைத்துமே
அடுத்து மூன்று நாளன்பாகக் கொண்டி டில்
கடுத்த புற்றுங் கருது மரோசிகம்
யிடுத்துப் போமென விளம்பினர் தோனே.

### 13. சீனவல்லாதி மெழுகு

தெளிவான சீனமென்ற பட்டையோடு
சேங்கொட்டை வெள்ளைஉள்ளி பேரீச் சங்காய்
சுளிவான எள்ளுவகைப் பலந்தா னுறு
சொல்லுகிறேன் மேல்மருந்து சுக்கு ஓமம்
நெளிவான குரோசாணி மிளகு மஞ்சள்
நீண்டமர மஞ்சள்சிற் றரத்தை மல்லி
ஒளிவான குங்குமப்பூச் சித்திர மூலம்
உயர்தெசா புரங்கிராம்பு சாதிக் காயே.

சாதியென்ற பத்திரியும் கடுக்காய் சீரம்
தான்கரிய சீரகமும் தான்றிக் காயும்
ஆதியென்ற சிறுதேக்கு கத்தூரி தானும்
ஆவின்கோ ரோசனையும் வகையொன்றுக்கு,
நீதியென்ற விராகனெடை இரண்டு தூக்கி
நேராக இடித்துவஸ்திர காயஞ் செய்து
வாதியென்ற சேங்கொட்டைச் சுத்தி கேளு
வகையான சுண்ணாம்புக் கல்லில் நீற்றே.

நீற்றுவது காடிவிட்டு நீற்றிக் கொண்டு
நினைவாகக் குளிர்ந்தசலத் தலம்பிப் போடு
ஆற்றுவது மேதியுடை சாணிப்பாலில்
அடைவான புளியிலையின் கியாழந் தன்னில்
மாற்றுவது பிரசம்பூக் கியாழத் தோடு
வகையாமக் கியாழத்தில் ஆவின் பாலில்
கோற்றுவது கஷாயப்பால் கொதிக்கையிலே விட்டு

குளிர்ந்தபின்பு கழுவியெடு சுத்தி யாச்சே.

சுத்திசெய்து வறுத்துக்கல் உரலி விட்டு
துடியாக இடிக்கையில் முன்பொடியைத் தூவு
வெத்தியது பனைவெல்லம் பலம்தான் பத்து
வெள்ளுள்ளி எள்ளுடனே பேரீச் சங்காய்
பத்தியது ஆவின்நெய் படிகா லப்பா
பரிவான தேனதுவும் படிகா லாகும்.
மூத்தியதில் விட்டிடித்து மயனம் போல்
மும்மதத்தோன் முன்வைத்துப் பூசை செய்யே.

பூசைசெய்து மண்டலநெல் லிக்காய் வீதம்
புகழான அந்திசந்தி கொள்ளு போது
தேசமெச்சு மருந்திதுபத் தியத்தைக் கேளு
சிறுபயறு பசுவின்பால் தயிர் நெய்யாகும்
வாசமுற்ற துவரையுடைப் பருப்பு மாரும்
மைந்ததேன புடலங்காய் அவரைக் காயாம்
நேசமொத்த முருங்கைக்காய் சிறு கீரையாம்
நெல்லிக்காய் தூதுவளை நேராம் பாரே.

தேரான வெள்ளாடு சுறாமீன் காடை
நெடியலிரலால் உடும்புடனே முயலுமாகும்
வாரான கரப்பனுடை வஸ்து வாகா
மங்கையரைக் கூடாதே மிளகாய் மாற்று
போரான சூலைபதி னெட்டும் போகும்
பொருந்தியதோர் பதினெட்டுக் குட்டம் போகும்
மேரான கரப்பனது இருபத் தொன்றும்

மேகத்தி னூறலெல்லாம் வெருண்டு போமே.

போமென்ற பவுத்திரங்கள் அந்திரவாயு
பொல்லாத குலைமுட்டி பிளவைப் புற்று
ஆமென்ற வாதமெல்லாம் அகன்று போகும்
அப்பனே தேகமது இறுகிப் போகும்
தாமென்ற தாதுநட்டம் இந்திரிய கண்டி
சங்கையில்லா தோடுமடா தாக்கிப் பாரு
நாமென்ற பராமரனார் உமைக்குச் சொன்னார்
நாட்டோர்க்கு நாமுரைத்தோம் நயந்து பாரே.

| | |
|---|---|
| செங்கோட்டை | பேரீச்சங்காய் |
| பறங்கிப்பட்டை | எள் |
| வெள்ளைப்பூண்டு | இவை வகைக்கு ஆறு பலம் |
| சுக்கு | திப்பிலிமூலம் |
| ஓமம் | கிராம்பு |
| குரோசாணி ஓமம் | சாதிக்காய் |
| மிளகு | சாதிபத்திரி |
| மஞ்சள் | கடுக்காய் |
| மரமஞ்சள் | சீரகம் |
| சிற்றரத்தை | கருஞ்சீரகம் |
| கொத்துமல்லி | நான்றிக்காய் |
| குங்குமப்பூ | சிறுதேக்கு |
| சித்திரமூலம் | கஸ்தூரி |
| கோரோசனை | |

இவை வகைக்கு விரானனெடை **2**

எடுத்து இடித்து துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு சேங்கொட்டையைச் சுண்ணைம்புக்கல்லில் நீற்றிச் சுத்தி செய்து கொள்க. பிறகு அதனைக் காடியை விட்டு நீற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் கழுவியெடுத்துக் கொண்டு எருமைச் சாணிப்பாலில் இட்டு வைக்க வேண்டும். பின்னர் புளி யிலைக்குடிநீர் தயாரித்து அதில் இட்டு வைக்க வேண்டும். அதன் பிறகு புரசம்பூக்குடிநீர் தயாரித்து பசும்பாலை அதில் சேர்த்து அவையிரண்டும் சேர்ந்து கொதிக்கையில் மேற்படி சேங்கொட்டையை அதில் இட்டு அது குளிர்ந்த பின்பு கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே சேங்கொட்டைச் சுத்தியாம். சுத்தி செய்யப்பெற்ற சேங்கொட்டையைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடிக்கையில் முன்பு வடிகட்டிய பொடியைத் தூவ வேண்டும். பின்னர் பனைவெல்லம 10 பலம், வெள் உள்ளி, எள், பேரீச்சங்காய், பசுநெய் படி 1/4 தேன் படி 1/4 இவற்றை விட்டு மெழுகு பதம் பரும்வரை இடித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** நெல்லிக்காய் அளவு ஒரு மண்டலத்திற்கு காலையும், மாலையும் உட்கொண்டு வருக.

**ஆகும் பொருள்கள்:** இக்காலத்தில் சிறுபயறு, பசுவின் பால், தயிர், நெய், துவரம்பருப்பு, ஆகியவை ஏற்றவையாகும். புடலங்காய், அவரைக்காய், முருக்கைக்காய், சிறுகீரை, நெல்லிக்காய், தூதுவளை ஆகிய இவைகளும், வெள்ளாடு, சுறாமீன், காடை, விரால், உடும்பு, முயல், இவைகளும் ஆகும்.

**ஆகாப் பொருள்கள்:** கரப்பான் உண்டாக்கக் கூடிய பொருள்கள் ஆகா பெண்கூடல் ஆகாது. மிளகாயைப் பயன்படுத்தாதே.

**தீரும் நோய்கள்:** இம்முறைகளைக் கடைப்பிடித்துவரின் பதினெண்வகைச் சூலைகளும், பதினெண்வகைக் குட்டங்களும் இருபத்தொரு வகைக்கரப்பான்நோய்களும், மேகத்தால் ஏற்படும் ஊறல்களும் அஞ்சி, ஓடிவிடும்.

பவுத்திரங்கள், அந்தரவாயு, மூட்டுச்சூலை, பிளவை, புற்று பலவகைக்ப்பட்ட வாதநோய்கள் எல்லாம் அகன்றுவிடும். உடலும் வன்மையுறும், தாதுநஷ்டம், இந்திரியகண்டி ஆகியவை நீங்கிவிடும்.

### 14. அமிர்த கெந்திகுக்கில் வல்லாதி

பாரப்பா அமிர்தகெந்திக் குக்கில்வல் லாதி
பாடுகிறேன் கெந்தகத்தான் பலமே எட்டு
வாரப்பா பாண்டத்தில் அமுரி தன்னை
வாய்வேடு கட்டிகெந்தி தனைப்ப ரப்பி
நேரப்பா மேல்மூடிக் சீலை செய்து
நிரந்தரமாய் குழியில்வைத்து வாயில் மட்டும்
சீரப்பா மண்ணிட்டு மேல்புடத்தைப் போடு
சீதனமாய்க் குளிர்ந்தபின்பு எடுத்துக் கொள்ளே.

எடுத்ததனைக் குளிர்ந்தசலத் தப்பிப்போடு
ஈருள்ளிச் சாற்றில்முன்போல் புடத்தைப் போடு
அடுத்ததனை ஆவின்பால் தன்னில் போடு
ஆனைகுட்டித் தக்காளிச் சாற்றில் போடு
விடுத்தனைச் சிறுகீரைச் சாற்றில் போடு
விளங்குமயி லாஞ்சியதைத் தயிரில் சேர்த்துக்
கடுத்ததனை முன்போலே புடத்தைப் போடு
கனகம்போல் கெந்தகம்தான் சுத்தி யாச்சே.

ஆச்சப்பா குக்கிலது பலந்தா னெட்டு
அழகான வேம்புமுத்தம் பட்டை தன்னை
காய்ச்சப்பா கியாழத்தில் குக்கில்முடி யிட்டு

கட்டுமது ஆறாமல் மூன்று நாள்தான்
பாய்ச்சப்பா பின்பெடுத்துக் குளிர்த்தசலம் விட்டுப்
பற்றாமல் பிசைந்துநன்றாய் இறுத்துப் போடு
வீச்சப்பா ஆவின்மோர் படிதான் ஒன்று
விளங்குபழச் சாறரைதான் காடி கூட்டே.

காடிபடி ஒன்றப்பா நாளேழுறில்
கசப்பெல்லாம் வாங்குமடா கழுவிப்போடு
நாடியே ஆவின்பால் படியில் போடு
நலமாகக் கொதிக்கவைத்து உலர்த்திப்போடு
தேடியே ஆவினுடை நெய் தான்விட்டு
சிவக்கவறுத் தெடுத்திடுவாய் பலமும் நாலே.
நாடியே அமிர் தசர்க் கரைதான் நாலு
நல்லகத்தி சேங்கொட்டை வறுத்து நாலே.

நாலுபலம் கழுவியெடுத்து லர்ந்த வெள்ளு
நல்லகெந்தி சுத்தி செய்து நலமாய்க் கேளு
பாலினிற மானதொரு பறங்கிப் பட்டை
பாய்ச்சடா வகையிரண்டு பலந்தான் மூன்று
மேலும் வகை ஏழுக்குப் பலம்பத் தாச்சு
மேல்மருந்தைச் சொல்லுகிறேன் விரைந்து கேளு.
கோலுமே கொடிவேலி வேரின்பட்டை
குறையாமல் பலமிரண்டு கூறக்கேளே.

கேளப்பா வாலுழுவை அரிசி கோட்டம்
கெடியான வால்மிளகு பேரிச் சங்காய்
வேளப்பா சடாமாஞ்சி சிவனார் வேம்பு

வெட்டிவேர் வெள்ளறுகு சங்கங் குப்பி
தாளப்பா திரிகடுகு சிறு நாகப்பூ
தக்கோலம் சீரகமும் தாளி சையும்
நீளப்பா நன்னாரி நெருஞ்சி முள்ளு
நிலைப்பனைதண் ணீர்விட்டான் கொத்துமல்லியாமே.

. ஆமப்பா கல்மதமும் கல்நார் ஏலம்
அப்பனே திரிபலையும் கருவாப் பட்டை
ஓமப்பா கார்போகம் சிற்ற ரத்தை
உற்றகருஞ் சீரகமும் வகையொன் றுக்கு
தாமப்பா பலமொன்று சூரணமே செய்து
தாக்கடா கல்லுரலில் சாமன் நாலு
நாமப்பா பனைவெல்லம் பலத்தைக் கேளு
நாற்பத்து நாலிட்டு இடித்துக் கொள்ளே.

இடிக்கையிலே தேன்வாரு பலந்தா னெட்டு
என்மகனே மயனம்போல் இடித்துக் கொண்டு
பிடிக்கையிலே தான்றிக்காய் அளவு கொள்ளு
பிசகாது மண்டலத்தில் தீரும் நோய்கள்
படுக்கையிலே கிடந்தகைகால் முடக்க மெல்லாம்
பறக்குமடா கிரந்திருட்டம் சூலை வாயு
எடுக்கையிலே புண் புரைகள் வாத மென்ற
எண்பதுடன் பவுத்திரங்கள் ஏகும் தானே.

ஏருமே உள்குத்து மார்ப டைப்பு
என்னசொல்வேன் கரப்பனோடு யோனிப்புற்று
சாகுமே சூசிகா கிராணி குன்மம்

நரியாது கர்ப்பத்தில் எழுத்து ரோகம்
போகுமே கண்ணோசி கண்டமாலை
பொல்லாத அரையாப்பு ருத்திர வாயு
வேகுமே நாசிகா பீடு மெல்லாம்
விப்புருதி பிளவையும்விட் டோடுந் தானே.

ஓடுமே பதின்காதம் மார்பி லாணி
உரைக்கவென்றால் முடியாது உயர்த்தி மெத்த
வீடுமே பெலக்கும்பத் தியத்தைக் கேளு
வெள்ளாட்டு வற்றலுடன் அவரைப் பிஞ்சு
தேடுமே முருங்கைசிறு பயறு மாகும்
சிறந்தபுடல் நெல்லிக்காய் அரைக்கீரை யாகும்
நாடுமே துவரையுடை பருப்பு நெய்யாம்
நல்லாவின் மோராகும் நாடிக் காணே.

**செய்முறை:** அமுரியை மண்சட்டியிலிட்டு அதன் வாயில் வேடுகட்டி, அதில் 8 பலம் கெந்தகத்தைப் பரப்பி, மேல்மூடி கொண்டு மூடி, சீலைமண் செய்து, பூமியில் ஒரு குழி தோண்டி, அக்குழியில் மேற்படி சட்டியை வைத்து கட்டியின் வாய்வரையில் மணலிட்டு அதன்மேல் எருவிட்டு புடமிட்டெடுத்து, நன்றாகக் குளிர்ந்தபின்பு நீரில் கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர், வெங்காயச்சாறு, பசும்பால், ஆனைக்கட்டித் தக்காளிச்சாறு, சிறுகீரைச்சாறு, மயில்துத்தமும், தயிரும் கலந்த கலவை. ஆகிய இவற்றிலும் முன்போலவே தனித்தனியே புடமிட்டெடுக்கக் கந்தகம் தங்கத்தைப் போன்று சுத்தியாகும்.

குங்கிலியம் 8 பலம், முற்றிய வேப்பம்பட்டைக்குடிநீர் 0 தேவையான அளவு குங்கிலயத்தை துணியிலிட்டு முடிந்து வேப்பம் பட்டைக் குடிநீரிலிட்டு மூன்று

நாட்கள் ஊறவைத்தெடுத்துக் குளிர்ந்த நீர்விட்டு நன்றாகப் பிசைந்து, அந்நீரை இறுத்துவிட வேண்டும்.

பசுமோர் 1 படி

பழச்சாறு 1/2 படி

காடி 1 படி

இவற்றிலும் குக்கிலையிட்டு ஏழுநாட்கள் ஊறவைத்து கழுவி எடுக்க, அதிலுள்ள கசப்பெல்லாம் நீங்கிவிடும். பின்னர் ஒரு படி பசுவின் பாலிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் பசுநெய்விட்டு சிவக்க வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| மேலே கூறிய முறைப்படி சுத்தித்த கெந்தகம் | 8 பலம் |
| மேலே கூறிய முறைப்படி பாகப்படுத்திய குங்கிலியம் | 4 பலம் |
| சீந்தில் சர்க்கரை | 4 பலம் |
| நன்றாகச் சுத்தித்து வறுத்த சேங்கொட்டை | 4 பலம் |
| கழுவி உலர்த்திய எள் | 4 பலம் |
| சுத்தி செய்த அமுக்குரா (அசுவ கந்தி) | 3 பலம் |
| பறங்கிப்பட்டை | 3 பலம் |
| கொடிவேலிவேர்ப்பட்டை | 2 பலம் |

| | |
|---|---|
| வாலுமுவையரிசி | தாளிசப்பத்திரி |
| கோட்டம் | நன்னாரி |
| வால்மிளகு | நெருஞ்சிமுள் |
| பேரீச்சங்காய் | நிலப்பனை |
| சடாமஞ்சில் | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| சிவனார்வேம்பு | கொத்துமல்லி |

| | |
|---|---|
| வெட்டிவேர் | கல்மதம் |
| வெள்ளறுகு | கல்நார் |
| சங்கங்குப்பி | ஏலம் |
| திரிகடுகு | கடுக்காய் |
| சிறுநாகப்பூ | நெல்லிக்காய் |
| தக்கோலம் | தான்றிக்காய் |
| சீரகம் | கருவாப்பட்டை |
| கார்போகி | சிற்றரத்தை |
| கருஞ்சீரகம் | வகைக்கு 1 பலம் |

இவற்றைச் சூரணம் செய்துகொண்டு கல்லுரலிலிட்டு 44 பலம் பனைவெல்லம் சேர்த்து நான்கு சாம நேரம் நன்றாக இடிக்க வேண்டும். இடிக்கும்போது 8 பலம் தேன்விட்டு நன்றாக இடித்து, மெழுகுபதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** தான்றிக்காயளவு

**உட்கொள்ளும் நாளளவு:** ஒரு மண்டலம்.

**தீரும்நோய்கள்:** கைகால்முடங்கல், கிரந்தி, குட்டம், குலை வாயு, பண்புரைகள், எண்பது வகைப்பட்ட வாதநோய்கள், பவுத்திரம், உள்குத்து, மார்படைப்பு, சுரப்பன், **யோனிப்புற்று,** சூசிகா, கிராணி, குன்மம், கெர்ப்பத்தில் உண்டான நோய்கள், கண்ணோசி, கண்டமாலை, அரையாப்பு, உருத்திரவாயு, நாசிகாபீடம், விப்புருதி, பிளவை, மார்புஆணி.

**ஆகும் பொருள்கள்:** வெள்ளாட்டுவற்றல், அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, சிறுபயறு, புடலங்காய், நெல்லிக்காய், அரைக்கீரை, துவரம்பருப்பு, நெய், பசுமோர்.

## 15. கெந்தக வல்லாதி

நாடியே யின்மொன்று நவிலக் கேளு
நல்லகெந்தி வல்லாதி நாடிக் காணும்
தேடியே கெந்தகந்தான் பலமூன் றப்பா
சிறப்பான சேங்கொட்டை பலமோரெண்டு
சூடியே செண்பகப்பூ பறங்கிப் பட்டை
சொற்சாதி பத்திரியும் கடுக்காய் ஓமம்
ஆடியே சங்கம்வேர் சிறுகி ளாவேர்
ஆடுதின்னா மூலிசங்கங் குப்பி வேரே.

வேரான நிலவாகை கரந்தை தானும்
மிளகரணை அசவகெந்தி யிலவங்கப் பட்டை
பேரான தலைச்சுருளி மிளகு சுக்கு
பெருமருந்துப் பட்டை பிராயன்பட்டை கோட்டம்
சீரான காட்டுமல்லி கொல்லன் கோவை
சீரகமுஞ் சிற்றரத்தை சாதிக் காயும்
தாரான நெல்லிமுள்ளி லவங்கப்பத்திரி
தவசியென்ற முருங்கைவேர் தான்றிக் காயே.

காயான திப்பிலியும் சித்திர மூலம்
கனத்தகோ ரோசனையுங் கரிய சீரம்
தீயான சிறுசெருப் படியின் வேரும்
செப்புகிறேன் வனமூலி பலமொன் றப்பா
ஓயாமல் உலர்த்தியதை நிறுத்துக்கொண்டு
உத்தமனே கடைமருந்து பலமரைய தாகும்
சாயாதே யிடித்து வஸ்திர காயஞ் செய்து

தவறாமல் இடிந்திடுவாய் சாமம் நாலே.

சாமமது இடிமயன மாகும்போது
சர்க்கரைதான் நாலுபத்து பலமே போடு
சேமமது தேன்படிதான் ஒன்று விட்டு
சேரவே யெடுத்துப்பீங் கானில் வைத்து
நேமமது நெல்லிக்காய் வீதமாக
ஈசனுக்குப் பூசை செய்து மண்டலமே கொள்ளு
ஏமமது போலாகும் தேகந் தானும்
என்னசொல்வேன் நோய்போகும் போக்குத் தானே.

போக்குமே திமிர்வாதம் மண்டைச் சூலை
புற்றுடனே வெடிசூலை கபால சூலை
தீர்க்குமே மருள்கிரந்தி கரப்பன் குட்டம்
திரண்டெ ழுந்த பிளவையுடன் சீழ்மூ லங்கள்
நீக்குமே பலவிரணம் கண்ட மாலை
நீங்காத வாதமுடன் கர்ப்பச் சூலை
கேட்குமே அரையாப்பு பவுத்தி ரத்தை
கேள்தண்டு சூலையோடு லிங்கப் புற்றே.

லிங்கத்தில் இருந்ததொரு ரோக மெல்லாம்
நில்லாது பத்தியத்தை நிசமாய்க் கேளு
சங்கொத்த உப்புதனை வறுத்துக் கூட்டு
தவறாதே துவரையுடை பருப்பும் நெய்யும்
நங்குற்ற மாங்கிஷங்கள் ஆகா தொன்றும்
நாடாதே கரப்பனென்ற பதார்த்தம் தன்னை

சிங்கத்தை வெல்வதற்குப் பலமுண் டாகும்
தீராத நோய்பலவும் திருந் தானே.

| | |
|---|---|
| கெந்தகம் 3 பலம் | மிளகு |
| சேங்கொட்டை 2 பலம் | சுக்கு |
| செண்பகப்பூ | பெருமருந்துப்பட்டை |
| பறங்கிப்பட்டை | பிராயன்பட்டை |
| சாதிபத்திரி | கோட்டம் |
| கடுக்காய் | காட்டுமல்லி |
| ஓமம் | கொல்லன்கோவை |
| சங்கம்வேர் | சீரகம் |
| சிறுகிளாவேர் | சிற்றரத்தை |
| ஆடுதின்னாமுலி | நெல்லிமுள்ளி |
| சங்கங்குப்பிவேர் | இலவங்கபத்திரி |
| நிலவாகை | தவசிமுருங்கைவேர் |
| கரந்தை | தான்றிக்காய் |
| மிளகரணை | திப்பிலி |
| அசுவகெந்தி (அமுக்கிரா) | சித்திரமூலம் |
| இலவங்கப்பட்டை | கோரோசனை |
| ஈசுரமூலி (தலைச்சுருளி) | கருஞ்சீரகம் |
| நெல்லிமுள்ளி | சிறுசெருப்படிவேர் |

இவற்றின் மூலிகைகள் வகைக்கு 1 பலம்

கடைச்சரக்குள் வகைக்கு 1/2 பலம்.

**செய்முறை:** இவற்றில் மூலிகைகளை உலர்த்தியெடுத்து நிறுத்துக்கொள்ள வேண்டும். எல்லா மருந்துகளையும் நன்றாக இடித்துத் துணியில் வடிகட்டிக்கொண்டு 40 பலம் சர்க்கரை சேர்த்து நான்கு சாமம் நன்றாக இடித்து, மெழுகு பதம் வந்த போது, ஒரு படி தேன்விட்டுக் கிளறியெடுத்த, பீங்கானில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** நெல்லிக்காயளவு.

**உண்ணும் நாளளவு:** ஒரு மண்டலம் (48 நாட்கள்)

**தீரும்நோய்கள்:** உடல் பொன்போலாகும். நோய்கள் நீங்கும். உடலில் பலம் உண்டாகும். திமிர்வாதம், மண்டைச் சூலை, கபாலசூலை, மருள்கிரந்தி, கரப்பான், குட்டம், பிளவை, சீழ்மூலம், பலவகை விரணங்கள், கண்டமாலை, வாதம், கர்ப்பச்சூலை, அரையாப்பு, பவுத்திரம், தண்டுசூலை, **இலிங்கப்புற்று**, மற்றும் ஆண் குறியில் தோன்றும் நோய்கள் மற்றும் தீராத நோய்கள்.

**பத்தியம்:** உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

**ஆகும் பொருள்கள்:** துவரம்பருப்பும் நெய்யும்.

**ஆகாப் பொருள்கள்:** மாமிசங்கள், கரப்பான் பொருள்கள், பெண்போகம்.

## 16. அமிர்த நந்தி மெழுகு

(1) ஒரு மடபாண்டத்தில் எருமைச்சாணியையும் புளியம் இலையையும் போட்டு 1–1 1/2 படித்தண்ணீர்விட்டுக் கரைத்து அதில் 40–சேங்கொட்டையைப் போட்டு நீர் சண்ட எரித்துத் தண்ணீர்விட்டு அலம்பிக் குமிழ் நீக்கி ஒவ்வொன்றையும் நான்கு துண்டுகளாகப் பிளந்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு இரும்புக்கடாயில் 12–ரூபாய் எடை பசுவின் செய்யைவிட்டு அடுப்பில் வைத்துச் சேங்கொட்டைத் துண்டுகளைப் போட்டுச் சிறு தீயாக எரித்துக் கொட்டைகளை இரும்புக் குச்சி கொண்டு கிளறிக் கொடுத்துக் கொண்டு வரக் கொட்டையிலுள்ள தைலம் எல்லாம் நெய்யினிட மாகக் கக்கிக்கொட்டைகள் இலேசாகி மிதக்கும் அப்போது நெய் சிதறுமாகையால் சிறிது தூரத்தில் இருந்துகொண்டு ஜாக்கிரதையாகச் செய்யவும். இந்தக்கொட்டைகளை ஒரு கல்வத்தில் போட்டு மெழுகுவண்ணம் அரைக்கவும். மெழுகு ஆகப் போதிய திரவம் இல்லாவிட்டால் இதைப்போட்டுக் காய்ச்சிய நெய்யில் சிறிதுவிட்டு அரைக்கவும். மிகுதி நெய் இருப்பின் ஜாக்கிரையாக எடுத்து வைத்துக்கொள்க.

(2) ஒரு மட்பாண்டத்தில் நவால்மரத்தின் இலையை போட்டுத் தண்ணீர்விட்டு அதனில் 1/2பலம் எட்டிக்கொட்டையைப் போட்டு நீர் சுண்ட எரித்துத் தோல் நீக்கி இரண்டிரண்டு துண்டாகப் பிளந்து அதிலுள்ள முளைகளை எடுத்துவிடவும். அப்பால் 4 ரூபாய் எடை பசுவின் நெய்யை விட்டு எடுப்பில் வைத்துக் கொட்டைகளைப் போட்டுச் சிறு தீயாக எரித்துப் பொன்மேனியாக வரும்போது கொட்டைகளை எடுத்துக் கல்வத்தில் போட்டு அதிலிருந்து கக்கிய நெய்யைவிட்டு மெழுகுவண்ணம் அரைக்கவும். இதில் நெய் மிகுதிப்பட்டால் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(3) ஒரு படி பசுவின் பாலில் 4–பலம் பறங்கிச்சக்கையைத்துண்டு துண்டாக ஈறுக்கிப்போட்டு நன்றாய் வேகவைத்துத் தண்ணீர் விட்டு அலம்பி எடுத்து உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து கொள்க.

(4) மயில்துத்தம், பால்துத்தம், வீரம், ரசம், பூரம். இலிங்கம், ரசசெந்தூரம், வெண்நாபி, மனோசிலை, கந்தகம், அரிதாரம், குதிரைப்பல் பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், கௌரி வகைக்கு வராகனெடை 1/2– ஆக ஒரு வாயகன்ற கோப்

பையில் போட்டு மூழ்க அவுரி இலைச்சாறு விட்டு மூன்றுநாள் ஊறவிட்டு நான்காவது நாள் அப்படியே அதிலுள்ள சாறுடன் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து மெழுகுபதத்தில் ஒரே வில்லையாகத் தட்டி ரவியில் வைத்து உலர்த்தவும். அதன்பின் அவுரி இலையை மெழுகுவண்ணம் அரைத்து மேற்படி வில்லைக்குக் கவசம் செய்து அதன் மேல் ஈனா எருமைக் கடாரி சாணத்தையப்பி அதன்மேல் இரண்டு மூன்று முறை சீலையைச் சுற்றி 10வறட்டியில் புடமிடவும். எப்போது மருந்துப்புகை வருகின்றதோ அற்த சமயம் கவசத்தை வெளியேதள்ளி ஈர மண்ணைக்கொண்டு மேமல் கொட்டிச் சூட்டை ஆற்றிவிடவும். இதற்கு மேல் வில்லையை எடுத்து வைத்துக் கொள்க.

(5) சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சிறுதேக்கு, தாளிசப்பத்திரி, பெருஞ்சீரகம், குரோசாணிஓமம், வாய்விளங்கம், அதிவிடயம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, செவ்வியம், வால்மிளகு, சித்திரமூலம் வேர்பட்டை, கண்டத்திப்பிலி, கசகசா, சடாமாஞ்சில், அக்கராகாரம் இவைகள் வகைக்கு வாரகனேடை 1 1/4–ஆக இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்க.

(6) பனைவெல்லம் பலம்–4, தேன் பலம் – 5.

செய்பாகம் :– முதலாவது இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்டுள்ள சேங்கொட்டை எட்டிக்கொட்டை முதலியவற்றில் மெழுகைக் கல்வத்தில் போட்டு அதனுடன் நான்காவது அங்கத்தில் சித்தப்படுத்தியுள்ள வில்லையையும் போட்டு அரைக்கவும். இவைகள் எல்லாம் நன்றாய் உறவான சமயம் மூன்றாவது அங்கத்தில் கூறப்பட்டுள்ள பறங்கிச்சக்கை சூரணத்தையும் 5–வது அங்கத்தில் கூறப்பட்டுள்ள சூரணத்தையும் போட்டு அரைத்து இவைகள்யாவும் நன்றாய் உறவான சமயம் 6–வது அங்கத்தில் கூறப்பட்ட பனைவெல்லம், தேன், முன் மிகுதிப்பட்டுள்ள நெய் இவற்றைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து இரண்டொரு நாள் நன்றாய் அரைத்து இருபாகமாகப் பங்கிட்டு வைத்துக்கொள்க.

ஒரு பாகத்தை அப்படியே தனி மெழுகாக வைத்துக்கொண்டு மற்றோர் பாகத்தில் 2–3 வாரகனெடை சுத்திசெய்த வாளம்கூட்டி நன்கு அரைத்துப் பேதிமெழுகாக வைத்துக்கொள்ளவும்.

**பிரயோகம் :** இந்தப் பேதிமெழுகில் வேளைக்கு 1 – 1 1/2 குன்றிப்பிரமாணம் வெல்லத்தில் வைத்து தினம் 1–வேளை காலையில் கொடுக்கவும். மாலைப்பொழு தில் சாதாரண மெழுகைக் கொடுக்கவும், பேதி இரண்டொரு தடவை ஆகாவிட்டால் தேகதிடத்திற்கு ஏற்றவாறு அதிகப்படுத்திக் கொள்ளவும். இந்த மெழுகைச் செய்த வுடன் உபயோகப்படுத்தக் கூடாது. 6–மாதம் சென்ற பின்னரே குற்றங்களுமில்லா மல் சாந்தமாக வேலைசெய்யும். இம்மருந்தை ஒருமுறை 5–7 நாள் கொக்க வே ண்டும். மறுபத்தியம் 3–நாள் இருக்கவேண்டும். மறுபடியும் மருந்து கொடுப்பது அ வசியமானால் 10–15 நாள் சென்றபின் ஒரு முறை முன்போல் கொடுக்கவும். இப்ப டி 3–4 முறைகளில் தீராதவியாதி இல்லை. மறுபத்தியம் இருந்து ஸ்நானம் செய் வதாக இருந்தால் ஆகாசத்தாமரைத் தலைம் வான்குமரித்தைலம் அல்லது சிற்ற ாமணக்கெண்ணெய் கொண்டு செய்யவும்.

**தீரும் வியாதி :** விஷக்கடியையும் அதனால் சரிரத்தில் வியாபித்து உண்டா ன பல தோல் சம்பந்தமான ரோகத்தையும் கண்டிக்கும் இன்னும் வாதம்–80, வெ ண்மேகம், அண்டவாதம், குஷ்டம், கிரந்தி அரையாப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற் று, தொடை வாழை, முயல்வலி, காக்கைவலி, குமரக்கண்டவலி, சந்தி, சுரம், சூை ல, பிடிப்பு, குடைச்சல், மேகரணம் முதலியவைகள் குணமாகும் நாவில் விரணம் உள்ளவர்களுக்கு மாத்திரம் கொடுக்கசுடாது.

**பத்தியம் :** கடுகு, நல்லெண்ணெய், புளி, மீன், கருவாடு, இறைச்சி முதலிய வற்றைத் தள்ளி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும். மறுபத்தியத்திலும் இவ்வா றே இருத்தல் வேண்டும்.

## 17. பால் வல்லாதி:

(அ) முன் சொல்லியிறுக்கிறபடி சுத்தி செய்த சேராங்கொட்டை எண்.50, பசுவின் ப ால் 1 படி, தண்ணீர் அரைப்படி, பனைவெல்லம் 1 பலம் (35 கிராம்)

(ஆ) சுத்தி செய்த இரசம், இரசகற்பூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், மிருதார்சிங்கி இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), வீரம் 1 வராகன் எடை (3 1/2 கிராம்).

(இ) மஞ்சள் கடுக்காய்த் தோல் தூள் 12 வராகன் எடை (42 கிராம்)

**செய்முறை:** (அ) விலுள்ள பாலையும் தண்ணீரையும் கலந்து அதில் சேராங்கொட்டைகளை நான்காக நறுக்கிப் போட்டு எண்ணெய் கக்கிச் கொட்டைகள் மிதந்தவுடன் அவைகளை எடுத்து வேறு கொஞ்சம் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எண்ணெய்ப்பசை நீங்கினவுடன் இந்த நீரையும் மேற்படி பாலில் சேர்த்துக் காய்ச்சிக் கைவிடாமல் துழாவிக் கொண்டேயிருந்து எல்லாம் அவ்வாவானவுடன் எடுத்து வைத்துக் கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளில் இரசத்தையும், கெந்தகத்தையும் பூரத்தையும், சேர்த்து அரைக்க வேண்டியது தாளகத்தைத் தனியே மைபோலப் பொடித்து இதனுடன் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டியது. இவ்விதமே மிருதார் சிங்கியையும் தனியே பொடித்துச்சேர்த்துக் கொள்ள வேண்டியது. பிறகு வெல்லத்தை சேர்த்தரைத்துப் பிறகு (ஆ) விலுள்ள கடுக்காய் தூளைச் சேர்த்து இரண்டுடொரு மணி நேரம் அரைத்து எல்லாம் ஒன்றாக மசிந்த பின்பு முன் சித்தப்படுத்தியிருக்கும் பால் அவ்வாவைச் சிறுகச் சிறுகச் சேர்த்து மை போலாகிறவரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டியது.

**அளவு :** 2 முதல் 4 குன்றியெடை

**அனுபானம் :** சர்க்கரை, வெல்லம், பாலேடு, இளகவைகள் முதலியவைகளாகும்

**தீரும்நோய்கள் :** மேக நோய்கள், வாயுநோய்கள், அரையாப்பு, கிரந்தி, கட்டிகள், சூலை, வெட்டை, பவுத்திரம், கண்டமாலை. வெடிசூலை. நரம்புசூலை, இலிங்கப்புற்று முதலிய கொடிய நோய்கள் தீரும்.

**பத்தியம் :** கடுகு, நல்லெண்ணெய், புளி, புளிப்புப்பண்டகள், புகை, புணர்ச்சி ஆகியவைகள் ஆகாது நோய் வலுவிற்குத் தக்கப்படி கடின பத்தியமாகவும் இலேசான பத்தியமாகவும், சமயோசிதம் போலவும், உடல் பலத்திற்குத் தகுந்தபடியும் பத்

தியம் ஏற்படுத்த வேண்டியது. ஆட்டிறைச்சி, கோழி மாமிசம், மீன் முதலியவைகளை மருந்து சாப்பிடுகிறவரையில் உபயோகிக்காமல் நிறுத்தி வைப்பது உத்தமம். எவ்வளவு கெவ்வளவு நாம் பத்தியமாயிருக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக நோய்கள் குணமாகும்.

## 18. இடிவல்லாதி மெழுகு

(அ) முன் கண்டபடி சுத்தி செய்த சேராங்கொட்டைக் குழித் தைலம் 2 பலம் (70 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 8 பலம் (280 கிராம்), மைசாட்சி 8 பலம் (இதனை அம்மியில் மை போலரைத்துக் கொள்ளவும்), இரசம், சீந்திற் சர்க்கரை, கழுவித்தோல் போக்கின எள்ளு, (இதனையும் மைபோல அரைத்துக் கொள்ளவும்) அமுக்குராக் கிழங்குத் தூள், பறங்கிப் பட்டைத் தூள் ஆகிய இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் 2 பலம்.

(ஆ) வாலுழுவையரிசி, கோட்டம், வால்மிளகு, விதை நீக்கின பேரீச்சங்காய் (இதனை தண்ணீர் ஊறவைத்துத் தனியே அரைத்துக் கொள்ளவும்) சடாமாஞ்சில், சிவனார் வேம்பு, வெட்டிவேர், சங்கங்குப்பி வேர்ப்பட்டை, மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள்கடுக்காய்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, சிறுநாகப்பூ, தக்கோலம், சீரகம், உலர்த்தின வெள்ளறுகு, தாளிசப்பத்திரி, நன்னாரி வேர், நெருஞ்சி வேர், நிலப்பனைக்கல்மதம் (இதனைக் கல்வத்தில் தனியே பொடித்துக் கொள்ளவும்) கல்நார் (இதனையும் தனியே பொடித்துக் கொள்ளவும்) ஏலரசி, இலவங்கப்பட்டை, கார்போகரிசி, சிற்றத்தை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவற்றுள் பேரீச்சங்காய், கல்மதம், கல்தார் ஆகியவைகளைத் தவிர மற்றவைகளை தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தூள் செய்து துணியில் வடிவட்டிக் கொள்ளவும். பனைவெல்லம் 50 பலம் (1750 கிராம்)

**செய்முறை :** (அ) விலுள்ள கெந்தகத்தையும், இரசத்தையும் சேர்த்து நன்றாகச் கறுக்கிற வரையிலரைத்துப் பனை வெல்லத்தைத் தவிர மற்றெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். பனை வெல்லத்தைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி ஒரு கொதி வந்தவுடன் வடிகட்டிக், திப்பி முதலியவைகளை

நீக்கி விட்டு மறுபடியும் காய்ச்சிக் கெட்டிப் பதமான பக்குவ்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். முன் சித்தப்படுத்தின தூள்களைக் கல்லுரவில் போட்டு மேற்படி பாகைச் சிறுகச் சிறுகவிட்டு மரவுலக்கையால் இடிக்கவேண்டியது. ஆறுமணி நேரத்துக்குக் குறையாமல் இடித்து எல்லாம் மசிந்து ஒன்றானபின் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1 1/2 முதல் 2 வராகன் எடை

**தீரும் நோய்கள் :** கரப்பான், குட்டம், மேகம், பெருவியாதி கருமேகன், சூலை, இலிங்கப்புற்று, அல்குல்புற்று, கிரந்தி, வெடிசூலை, கண்டமாலை, வாயு, மேகசுரம், அரையாப்பு, நீர்நோய் ஆகியவை தீரும்.

**பத்தியம் :** கடுகு, நல்லெண்ணெய், பறங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய், அகத்திக்கீரை, தேங்காய், மாங்காய் இவை ஆகா.

## 19. கெந்தக மெழுகு

சுத்தி செய்த கெந்தகம் 2 பலம் (70 கிராம்) சுத்தி செய்த வீரம், தூய்மை செய்த இரசகற்பூரம், சுத்தி செய்த இரசம் (இந்த மூன்று சரக்குகளையும் சேர்த்துப் பொடி செய்து அஞ்சனம் போற் செய்து வைத்துக் கொள்ளவும்) கொம்புத் தேன் 2 பலம் (70 கிராம்)

**செய்முறை :** மேற்படி கெந்தகத்தை அகன்ற ஒரு இரும்புச்சட்டியில் வைத்துத் தீயை தீபம்போலெரித்து இரும்புத் துடுப்பினால் கிண்டித் தைலம் போல் வருகிற சமயத்தில் அதில் காற்பலம் கொம்புத் தேனைத் சிறுகச் சிறுக விட்டுக் கிண்டியான பின்பு முன் சித்தப்படுத்த வைத்திருக்கிற தூளையும் தேனையும் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கைவிடாமல் கிண்டிக் கொடுத்துச் சிவந்து மெழுகான பதத்தில் கீழிறக்கிச் சூடாறின பின்பு பீங்கான் சிமிழில் அல்லது கொமபுச் சிமிழில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :** 2 முதல் 4 குன்றிமணி எடை

**அனுபானம் :** இதனைப் பனைவெல்லத்திற்குள் வைத்துப் புழுங்கலரிசித் த விட்டில் புரட்டி விழுங்கவும். காலை, மாலை இரண்டு வேளையும் மூன் நாள் அல் லது ஐந்து நாளைக் கதிகம் உபயோகிக்கலாகாது.

**தீரும் நோய்கள் :** பக்கவாதம், இளம்பிள்ளை வாதம் முதலிய பதினெட்டு வ கை வாதங்களும், எல்லாவகைக் கிரந்திகளும், சூலை நோய், யோனிப்புற்று, லி ங்கப்புற்று, குட்டநோய், குறைநோய் மேகப்புண், புரைகள், அண்டவாதம், அண்ட சூலை, அந்தர வாயு முதலான நோய்களும், குன்மநோய்களும் தீரும்.

**பத்தியம் :** பாசிப்பயறு, முளைக்கீரை, கத்திரிப்பிஞ்சு, துவரம்பருப்பு ஆகியவை வகளாகும். புளி, உப்பு, பெண் ஆகிய வைகளை நீக்க வேண்டும். கரப்பான் பதார்த் தங்களையும் நீக்கவேண்டும். பசுவின்பால் பசுவின்நெய் ஆகியவைகளைக் கூட் டிக்கொள்ளவும். மூன்று நாள் மருந்து சாப்பிட்டால் மறு மூன்று நாள் மறு பத்திய மிருந்து ஏழாம்நாள் தலைக்கு நீர் வார்த்து ஒன்பதாம் நாள் பாலையும், மிளகையு ம் அரைத்துக் கொதிப்பித்துத் தேய்த்து தலைமுழுகச் செய்யவும். பதினோராம் நா ள் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய், பசுவின் நெய் ஆகியவைகளை சமனள வாகச் சேர்த்துக் காய்ச்சித் தேய்த்து தலைமுழுகச் செய்ய வேண்டும். இவ்விதம் வாததேகிகளுக்கு தலைமுழுகச் செய்விக்க வேண்டும். மற்ற தேகிகளானால் வி ளக்கெண்ணெயை மாத்திரம் தேய்த்து தலைமுழுகச் செய்விக்க வேண்டும். மேற் கண்ட கிரமப்படி ஒரு மாதம் வரையில் பத்தியமிருக்க வேண்டியது அவசியம்

## 20. வித்துரச மெழுகு

சுத்தி செய்த இரசம் 5 வராகனெடை (17 1/2 கிராம்), சேராங்கொட்டைப்பருப்பு 1 பல ம் (35 கிராம்).

செய்முறை : இவ்விரண்மையும் கல்வத்திலிட்டு இரண்டு சாமநேரமரைத்து மெழு குபோலான பின்பு பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும்.

**அளவு :** 1/4 முதல் 1/2 குன்றி எடை

**அனுபானம் :** பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :** இதனை இரண்டுவேளையும் ஏழுநாள் அல்லது ஒன்பது நாள் உபயோகித்து வந்தால் வாயு, சூலை நோய், வாதநோய், இரணங்கள், சொறிகள், வீக்கம், கட்டிகள், அரையாப்பு, தோள்வாதம், குதிக்கால்வாதம், அஸ்திக்குடைச்சல், அண்டவாதம், கரளைகட்டினசூலை, கிரந்திவகைகள், லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய பலவகைகள் கடின நோய்கள் தீரும்.

## 21. சண்டமாருதமை;

சன்னியொடு சிலேற்பனங்கள் சூலைவாய்வு
　　தான்தீரச் சண்டமா ருதமையைக்கேளு
பன்னுரசக் கற்பூர லிங்கம்வீரம்
　　பரிவான கெந்தியொடு தாளகமுஞ்சிலையு
முன்னதனைச் சுத்திசெய்து வைத்துக்கொண்டு
　　முழுகவிட்டு உன்னம்பால் ரவியில்வைத்துக்
குன்னியது வற்றவற்ற மேல்பால்விட்டு
　　கொடுரவியில் ஏழுநாள் வைத்துவாங்கே.

வாங்கியே எட்டியின் மரத்தின்பாலை
　　வலுவாக மேல்பூசி ரவியிற்போடு
தேங்கியே மூன்றுதினஞ் சென்றபின்பு
　　தீயிலே வாட்டியெடு கடிகைரெண்டு
ஓங்கியே வில்வக்காய் நொறுக்கியிட்டு
　　உத்தமனே குழித்தயில மாகவாங்கி
தாங்கியே சுருக்கி டுவாய் நான்குசாமம்
　　தப்பாமல் வகையொன்று கழஞ்சியொன்றே.

ஒன்றாகத் திரட்டியே கல்வத்திட்டு

உற்றகரு நாவியது கழஞ்சுமூன்று
குன்றாமல் திரிகடுகு வகையொன்றுக்கு
கூட்டுவாய் முக்கழஞ்சு கூடவாட்டிச்
சென்றாட ஐங்கோலத் தயிலம்விட்டுச்
சேர்த்தரைக்க நாற்சாம மெழுகாம்பாரு
நின்றாடத் தேன்விட்டுச் சாமமாட்டி
நீகொம்புச் சிமிழ்தன்னி லடைத்துக்கொள்ளே.

கொள்ளடா மண்டலந்தான் வாதஞ்சன்னி
கொடியசுரஞ் சூலையொடு தோஷம்போகும்
அள்ளடா அரையாப்புக் கிரந்திகுட்டம்
அண்டத்தில் பிளவைபுற்று பவுத்திரங்கள்
மெள்ளடா அனுபான மறிந்து செய்தால்
விரட்டுமடா குன்றியெடை வேகமெத்த
தெள்ளடா தினந்தோறும் அந்திசந்தி
தீர்ந்துதடா நோய னைத்துந் திருந்தானே.

தீருந்தான் புகையோடு புளியுந்தள்ளு
தேகபல நோயறிந்து மருந்தையூட்டு
ஆருமே பத்தியந்தான் இருக்காவிட்டால்
அவர்பிணிகள் தீராது அறிந்துகொள்ளு
கோருந்தான் குருவினுட பதத்தை நித்தங்
குறித்துந் வணங்கவினை குடிபோம்பாரு
சாருந்தான் கருமத்தைத் தள்ளிநீயும்
தன்மத்துக் குடம்பெடுத்துச் சாற்றநன்றே.

| | | | |
|---|---|---|---|
| 1 | இரசகர்ப்பூரம் | 4 | கந்தகம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | இலிங்கம் | 5 | தாளகம் |
| 3 | வீரம் | 6 | மனோசிலை |

இவற்றைச் சுத்தி செய்து வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து மூழ்கும்படி உன்னம்பால் விட்டு வெளியில் வைத்து பால் குறையக் குறைய மேலும் பால்விட்டு வெயிலில் வைக்க வேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள் செய்து எட்டி மரத்தின் பாலை அதன் மேல் ஊற்றி மூன்று நாட்கள் வெயிலில் வைத்து எடுத்து, அனலில் இட்டு இரண்டு நாழிகை நேரம் வாட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். பின்பு வில்வக்காய்க் குழித்தைலத்தால் நான்கு சாம நேரம் சுருக்குக் கொடுக்க வேண்டும். பின்பு அதை ஒரு கல்வத்திட்டு கருநாபி மூன்று கழஞ்சு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு மூன்று கழஞ்சு சேர்த்து வேண்டிய அளவு ஐங்கோலத்தைலம் விட்டு நான்கு சாமம் அரைக்க மெழுகாகும். பின்பு தேன் விட்டு ஒரு சாம நேரம் அரைத்து எடுத்து சிமிழில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** குன்றியளவு காலை, மாலை,

**துணைமருந்து:** பனைவெல்லம்

**நாளளவு:** ஒரு மண்டலம் (நாற்பது நாட்கள்)

**தீரும் நோய்கள்:** சன்னிவாதம், கொடியசுரம், சூலை, அரையாப்பு, கிரந்தி, குட்டம், பிளவை, **புற்று**, பவுத்திரம்.

**பத்தியம்:** புகையிலை, புளி ஆகா.

# சுண்ணம்

## 1. கார்வங்கச் சுண்ணம்

ஒடுங்கு கார்வங்க முருகிய சுன்னத்தை
அடங்கிநீ மண்டலம் அருந்திடு தேனினில்
முடங்கிய மேகம் மூச்சு சுவாசமும்
இடங் கெட்டோமென்று எழுந்திருந் தோடுமே.

ஒடும் விப்புருதி யொடுக்கும் பரங்கிகள்
நாடுங் காலம் நடுங்கிய சூலையும்
தேடுங் கைகாலில் திருகிய புத்துடன்
வாடி நடுங்கி மயங்கிக் குறிக்குமே.

கார்வங்கச் சுண்ணம்

கார்வங்கச் சுண்ணத்தை தேனில் ஒரு மண்டலம் கொண்டால் மேகம், மூச்சான சுவாசத்தில் வரும் நோய்கள், சூலை, பரங்கிகள், கைகாலில் வரும் புற்று இவை எல்லாம் நடுங்கி ஓடிவிடும்.

# பதங்கம்

## 1. குருப் பதங்கம்

தூய்மை செய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம், நவச்சாரம், பூநீறு இவை வகை 1 க்கு 1 பலம் (35 கிராம்). இரண்டு குண்டுச் சட்டி வாங்கி வாய்பொருந்த தேய்த்து மேற்சட்டிக்குப் பசுவின் பாலை உலர உலரப்பூச வேண்டும். இவ்விதம் மூன்று தடவைகள் பூசியுலர்த்திக் கொள்ள வேண்டும். கறியுப்பு 30 பலம் (1050 கிராம்)

**செய்முறை:** முன் ஐந்து சரக்குகளையும் தனித்தனியே பொடித்த ஒன்றாகக் கலந்து ஒரு சாம நேரமரைத்து எல்லாம் கலந்த பின்புகீழ்ச்சட்டியில் பரவலாகத்தூவி அதன் மீது மேற்படி உப்பைக் கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி வட்டடுப்பின் மீதிலேற்றித் தீபாக்கினி ஒருசாமன், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி ஆறுசாமம் அக எட்டுச்சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிர்த்த பின்பு சட்டியைப் பிரித்துப் பதங்கத்தை புருசால் தூடைத்து எடுத்துப் புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

மேற்படி பதங்கம் 1 பலம் (35 கிராம்), வெள்ளிக் காடிக்காரம் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கல்வத்தில் சேர்த்து ஒரு சாம நேரமரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1/2 முதல் 1 அரிசியெடை

**துணைமருந்து:** பனைவெல்லம், சுக்கையரைத்தவிழுது, இளக

வகைகள்முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:** எல்லாவித வாயுகள், தலையைப் பற்றின நோய்கள், சூதகவாயு, மேகவாயு, பல வகைப்புண்கள் கண்டமாலை கன்னக்கிரந்தி, கன்னக்கிரந்தி, கன்னப்புற்று, சூலை நோய்கள், பட்சவாதம் ஆகிய பல நோய்கள் தீரும்.

சிலேட்டுமம் இழுத்துக் கொண்டிருக்கும்போது இதில் இரண்டு மூன்று அரிசியெடை தேன் அல்லது முலைப்பாலில் கலந்து கொடுக்க அந்தக்கபம் கரைந்து வெளிப்பட்டு எழுந்து போகச் சக்தியுண்டாகும்.

**மருத்துணவு:** வியாதி அதிக வலிமையாகவும், நாட்பட்டதாகவுமிருந்தால் உப்பு, புளி ஆகியவற்றை நீக்கிக்கடின பத்தியம் வைக்க வேண்டியது. நோய்கள் இலேசானதாகவும் மென்மையுடலினதாகவுமிருந்தால் பத்தியமில்லாமலே கொடுக்கலாம். புளிக்குப் பதிலாக அவசியமானால் எலுமிச்சப்பழச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். கரப்பான் பொருட்கள் கசப்பான பொருட்கள் ஆகியவைகளையும் நீக்க வேண்டியது. இந்த மருந்தை மூன்றுநாள் ஆறுவேளை நோய்வன்மைக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டியது.

## 2. இலிங்கப் பதங்கம்

(அ) தூய்மைசெய்த தாளகம், மனோசிலை இவை வகைக்கு 1/4 பலம் (8 3/4கிராம்).

(ஆ) தூய்மைசெய்த நாகம், கருவங்கம், வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்).

(இ)தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், சீமை ஆலர்த்திக்கற்பூரம், மயில்துத்தம், பால்துத்தம், வெள்ளைப்பாடணம், சீனக்காரம், வெடியுப்பு, பூநீறு இவை வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்).

(ஈ) தூய்மை செய்த இலிங்கம் 4 பலம் (40 கிராம்).

(உ) கறியுப்பு 11 பலம் (385 கிராம்), செங்கல்பொடி 11 பலம் (385 கிராம்), சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள் 2 பலம் (70 கிராம்).

இரண்டு குண்டுசட்டிவாங்கி வாய்பொருந்தத் தேய்த்து மேற்சட்டிக்குச் சித்திரமூல இலைச்சாற்றைப் பூசியுலத்திக் கொள்ளவும், மறுபடியும் மேற்படி சாற்றை முன்போற் பூசியுலர்த்தவும், இவ்விதம் மூன்றாந்தடவையும் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**செய்முறை:** (அ) விலுள்ள நாகத்தையும் வங்கத்தையும் உருக்கித் தொந்தித்துக் கொள்ளவும். (அ) விலுள்ள தாளகத்தையும், மனோசிலையையும் பொடித்து, ஒரு மணி நேரம் சேர்த்தரைத்து அத்தூளை மேற்படி தொந்தித்ததை உருக்கிக்கொண்டு அதில் சிறுகச்சிறுகச் கிராசங் கொடுத்துவர அந்த நாகவங்க தொந்தம் வெட்டையாகும். இந்த வெட்டையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து (இ) யிலுள்ள சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து இரண்டு மணி நேரமரைத்து எல்லாம் நன்றாகக் கலந்து பின்பு (ஈ) யிலுள்ள இலிங்கத்தையும் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து எல்லாம் நன்றாகக் கலந்த பின்பு எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று சாமநேரமரைத்துச் தூதுவளங்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் பின்பு முன்சித்தப்படுத்தின சட்டிகளில் அடிச்சட்டியில் (உ) விலுள்ள கறியுப்பையும் செங்கல் பொடியையும் இடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைப்போட்டுப் பரப்பி அமுக்தி அதன்மேல் மேற்படி (உ) விலுள்ள சித்திரமூலவேர்ப் பட்டைத்தாளில் அரைப் பங்கைத்தூவி அதன் மீது மேற்படி உருண்டைகளைப் பரப்பி அதன் மீது மீதயாயுள்ள அரைபங்கு சித்திர மூலவேர்ப்பட்டைத் தூளைத் தூவி அதன்மீது மறுபங்கு உப்பு, செங்கல் பொடிக் கலவையைத் தூவி மேற்சட்டி மூடி ஏழுசிலை செய்துலர்த்தி வட்டடுப்பிலேற்றித் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி, ஒரு சாமம், காடாக்கினி பதினான்குசாமம், ஆகப் பதினாறுசாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர்ந்தபின்பு எடுத்துக்கவசத்தைப்பிரித்துப் புருசால் உள்ளிருக்கும் பதங்கத்தைச்சுறண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு: 2** அரிசி எடை.

**துணை மருந்து:** பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைப் பழத்தை அரைத்த விழுது, பாலேடு, வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:** எண்பது வகை வாதங்கள், நாற்பது வகை பித்தங்கள். தொண்ணூற்றாறு வகைச் சிலேட்டும நோய்கள், தலையிற் காணும் கிரந்தி வகைகள், **கன்னப்புற்று, நாசிப்புற்று, செவிப்புற்று,** கண்டமாலை, பிளவைகள், மார்புச்சிலந்தி, குன்ம நோய்கள், **யோனிப்புற்று, இலிங்கப்புற்று**, அரையாப்பு, பவுத்திரங்கள், தொடைவாளை, குதிகால்புண், கெண்டைச் சதைப்புண்கள், மேகநோய்கள், சூலைநோய்கள் முதலிய எல்லா நோய்களும் தீரும். ஆனால் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளுடன் கொடுக்க வேண்டும். நோய்வன்மை, உடல்வன்மை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் மூன்றுவேளை, ஐந்து வேளை, ஏழு வேளை உபயோகிக்க வேண்டியது. நோய் வன்மையானதாகவும், நாட்பட்டதாகவு மிருந்தால் இடையில் ஒரு வாரம் பத்துநாள் விட்டு மறுபடியும் முன்போல் உபயோகிக்க வேண்டும்.

**மருத்துணவு:** குறைந்த நோய்கட்குத் இச்சா பத்தியமாக உபயோகிக்கலாம். நோய் நாட்பட்டதாகவும் வன்னையானதாகவுமிருந்தால் புளி புகை ஆகியவைகளைத் தள்ளிப் பத்தியம் வைக்கலாம், இது அதிக வேகமான மருந்தாகையால், நெய், பால், இறைச்சி முதலியவைகளை அதிகமாக உபயோகித்து வர வேண்டும். இது இன்னும் அனுபவமாகிய மருந்தாகையால் அதிக விழிப்புடனும், அறிவுடனும் உபயோகித்தால் வன்மையானப் பல நோய்களைக் கண்டித்து நீக்கி வெற்றியடையலாம்.

### 3. சூதப் பதங்கம்

அன்னமிடு முன்னிடும்பூ தூக்குஒன்று
அந்திடைக்குப் பண்ணையிட்டு அதீகமாகச்
சொன்னபடி யிடித்து புதுச் சட்டியிட்டுத்
துகையாக அமுக்கிநடுப் பள்ளம்பண்ணி
நன்னயமாக யரன்பீசம் பலமும்நாலு
நாடியிடு பள்ளத்திற் சட்டிமூடி
முன்னேழு சீலைசெய்து அடுப்பில்வைத்து
முனிவாக யாகோபுமுறை சொன்னாரே

அன்னமிடுமுன்னிடும்பூ-கஞ்சியுப்பு
பண்ணை-வெடியுப்பு, அரன்பீசம்-ரசம்

ஒரு தூக்கு உப்பும், அதன் எடைக்கு வெடியுப்பும் சேர்த்து நன்றாக இடித்து ஒரு புதுச் சட்டியில் இட்டுக் கொண்டு நடுவில் குழி பண்ணி நாலு பலம் சூதம் இட்டு மேலே மூடிச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்து தீ எரிக்கவும்.

நல்லாகக் கனலிட்டு விறகுபாய்ச்சி
நாடியெரி மூவருந்தான் மேலேயேறி
சல்லாப மாயிருக்கும் சாமத்துள்ளே
சரிவரவே கனலாற்றிப் பிரித்தெடுத்து
மல்லாத்திப் பதங்கத்தை வழித்தெடுத்து
மகிமையுள்ள கல்வத்தி லிட்டுநல்ல
மெல்லிநல்லாள் தளப்பாலை விட்டுஆட்ட
மேதினியில் யாகோபு விளம்பினாரே.

நன்றாகக் தீ எரித்தால் ஒரு சாம நேரத்தில் இந்த மூன்று சரக்கும் சேர்ந்து பதங்கமாகி மேலே ஒட்டிக் கொண்டிருக்கும். தீ ஆறிய பின் பிரித்தெடுத்து பதங்கத்தை வழித்துக் கல்வத்தில் இட்டு தாய்ப்பால் இட்டு ஆட்டவும்.

வீசமதிற் பணமெடுத்து நோய்கள்போகும்
விதமான திரிகடுகில் மூன்றுநேரம்
பாசமுடன் சொன்னபடி உண்டுபாரு

பறக்குமே வாதபித்த மையமெல்லாம்
காசமுடன் பதினெட்டுச் சூலைபுண்கள்
கடிவிங்கள் பாண்டுகுஷ்ட மேகமெல்லாம்
யோசனைகள் பண்ணாமல் கடலேபுக்கும்
ஓதினார் யாகோபு உறுதிதானே

அதில் ஒரு வீசம் அளவு எடுத்துக் கொடுக்க நோய்கள் போகும்.திரி கடுகு சூரணத்துடன் சேர்த்து மூன்று நேரம் கொடுக்க வாத, பிச்ச, சுப ரோ கங்கள் எல்லாம், காசம் பதினெட்டுச் சூலை, புண்கள், கடிவி-ங்கள், பாண்டு குஷ்டம் மேக ரோகங்கள் எல்லாமே ஓடோடிப் போய்விடும்
.

ஓதினதோர் பெருவயிற்கா மாலையீளை
உண்ணஒரு மண்டலத்திற் கன்னப்புற்று
நீதியாய் மகோதரமுந் துடையின்வாளை
நிமைகொட்டி விழிக்குமுன்னே நெட்டிட்டோடம்
வாதம் உப்பாகா புளியுமாகா
வடிவமெல்லாம் நோகாது வாய்வேகாது
சோதிதான் முன்னோர்கள் சொன்னநீதி
சொல்தவறா திதனையுண்டு சுகத்தைப்பாரே

பெருவயிறு, காமாலை, ஈளை, கன்னப்புற்று மகோதரம் எல்லா நே ாய்களும் ஒரு மண்டலத்தில் ஓடிவிடும். இந்த மருந்து சாப்பிடும் போது உ ப்பு, புளி சேர்க்கக்கூடாது.

## 4. வீரரசப் பதங்கம்:

அடுத்துயெடு வீரமது பலமுமொன்று
அதில்சேர்க்க உருக்குத்தூள் பலமுமொன்று
தொடுத்துயிடு பொடியாக்கி அரைக்கச்சூதம்
சூட்சமுடன் சுக்குமதைப் பீங்கானிட்டுத்
தடுத்தகல் லுப்புபடி நாலெடுத்துத்
தனைலறுத்த செங்கற்றூள் பொடியுமொன்று
வீடுத்ததனை யிடித்துசட்டி நிறையப்போட்டு
விருப்பமுடன் தூள்நடுவில் குழியைப்பண்ணே.

கல்லுப்பு–கஞ்சியுப்பு

வீரம் ஒரு பலம், உருக்குத் தூள் ஒரு பலம் இரண்டையும் சேர்த்துப் பொடியாக்கி அரைக்க அதிலிருந்து சூதம் வெளிப்படும். அதைப் பீங்கானில் எடுத்துக் கொண்டு கல்லுப்பு நாலுபடி செங்கல் தூள் ஒருபடி இடித்து சட்டி நிறையப் போட்டு அதன் நடுவசில் குழி பண்ணி.

சூதமிடு குழிநடுவே சட்டிமூடித்
துடியான மண்செய்து அடுப்பிலேற்றி
வீதமுட னெரித்திடவே சாரம்மூன்று
வீடுபடவே யேறியது பற்பமாகும்
காதலுடன் வழித்தெடுத்து பதங்கந்தன்னைக்
கலரஅடை குப்பியிட்டு யெரிநால்சாமம்
ஏதலுடன் முக்கண்ணைப் போலேயேறும்
எடுத்துவைத்து யாகோபு யிதஞ்சொன்னாரே

முக்கண்ணைப் போல ஏறுமென்பது–திருகிய தேங்காய்ப்பூ நிறம்போல் பதங்கமேறியிருக்கும் என்றறிக.

அந்தக் குழியின் நடுவில் சூதத்தை வைத்து சட்டியால் மூடி சிலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று சாமம் எரித்தால் அது பற்பமாகும். அதை வழித்தெடுத்து குப்பியில் இட்டு மறுமடியும் நான்கு சாமம் புடம் போட்டால் செக்கச் சிவந்த செந்தூரமாகும்.

நெல்லினிடை னுப்பானந் தன்னிலேதான்
நிர்ணயமாய்க் கொண்டிடவே மேகசூலை
சொல்லுமுன்னே பறந்தோடும் வாதந்தானும்
தொடுத்துவந்த புற்றுகள்தான் கணைங்கிவாடும்
நல்லறிவு வந்துவிடும் முடக்குத்தீரும்
நவிலுமுன்னே சயரோகம் போகுங்கண்டீர்
புல்லறிவு சன்னிமுத லோடுமென்று
பூதலத்தில் யாகோபு புகன்றவாறே.

அதில் ஒரு நெல் எடைதக்க அனுபானத்துடன் கலந்து கொடுக்க வாதம் பறந்து போகும் மேகசூலை சொல்லாமல் ஓடும் புற்றுப் புண்கள் வாடி

மறையும். சயரோகம் முறிந்து ஓடும். சன்னி முதல் எஎல்லா நோய்களும் தீரும்.எடுத்துக் காயத்தில்

**5. புற்று பதங்கம்**

சுத்தி செய்த இரசம், நெல்லிக்காய் கெந்தம், இலிங்கம், அரிதாரம், மனே ாசிலை, வெள்ளைப் பாடாணம்ஈ இரசகற்பூரம், காந்தம், சாதிக்காய் இவை வகை க்கு 2 1/2 வராகன் எடை (8 3/4 கிராம்) குப்பைமேனிச்சாறு செல்லத் தக்க அளவு, உப்பு 2 படி.

**செய்முறை :** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்து நன்ற ாகக் கறுத்தபின் மற்றவைகளையும் தனித்தனியேப் பொடித்துச் சேர்த்து மேற்படி சாற்றால் ஒரு மேணி நேரம் அரைத்து மெல்லிய துணியில் தடவிக் காயவைத்து வைத்துக் கொள்க. உப்பை வெய்யிலில் போட்டு ஈரமுலர உலர்த்தி இரண்டு பாகமா க்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் போட்டு சமமாக அழுத்தி அதன் நடுவில் முன் சித் தப்படுத்தின துணியில் வைத்து அதன் மறுபாதி உப்பைக் கொட்டிச் சமப்படுத்தி மறு சட்டி முடி பலமாக ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி மூன்று சாமம் எரித் து ஆறவிட்டுப் பிரித்து மேற்சட்டியிலும் கீழ்ச் சட்டியிலும் படிந்திருக்கும் பதங்கத்தை தச் சுரண்டி எடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1/4 முதல் 1/2 குன்றிமணி எடை காலை, மாலை இரண்டு வேளையும் அல்லது காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்கவும்.

அனுபானம் : அரை ஆழாக்கு பசுவின் பாலில் வைத்து கொடுக்கவும்.

**தீரும்நோய்கள் :** கன்னப்புற்று, மார்புப்புற்று, வாய்ப்புற்று, அல்குல் புற்று, கால் புற்று, கண்டமாலை, வெள்ளைக்குட்டம், பறங்கிச் சூலை, கைகால் முடக்கு, அரையாப்பு ஆகியவைகள் தீரும்.

**பத்தியம் :** புளி, புகை தள்ளி உப்பை வறுத்துக்கூட்டவும்

**குறிப்பு :** இவ்வித பதங்கம் முதலிய மருந்துகளை இளையவர்களுக்கும் பெண்களுக்கும் உபயோகிக்க வேண்டுமானால் அவரவர்களுக்குத் தகுந்தது போ

ல் இளகம், நெய், எண்ணெய் முதலியவைகளைச் செய்து அதில் அவரவர்களுக்குத் தகுந்தது உபயோகிக்க வேண்டியது. இவ்விதம் செய்வதால் எவ்வித உடலினர்களுக்கும் பொருந்துவதுடன் அவர்களுக்கு உண்டாகியிருக்கும் கொடிய நோய்களும் நீங்கிப் போகும்.

## 6. நீலகண்ட இரச பதங்கம்

சாதிலிங்கம் 1 பலம் (35 கிராம்) இது ஒரேகட்டியாக இருக்க வேண்டும். இதனை அப்பிரேகத்தகட்டின் மீது வைத்துக் காற்படி தாய்ப்பாலைச் சிறுக சிறுக விட்டுச்சுருக்குக் கொடுத்து வைத்துக் கொள்க.

நெல்லிக்காய்கெந்தகம், வெண்காரம், வீரம், மனோசிலை, இரசகற்பூரம், பச்சைகற்பூரம், தீபகற்பூரம், துருசு, வெள்ளைப் பாடாணம், கௌரிப்பாடாண், சீனக்காரம், துத்தநாகம், கருவங்கம், வெடியுப்பு, உவருப்பு இவை வகைக்குப் 1/4 பலம் ( 8 3/4 கிராம்)

**செய்முறை :** வங்கத்தையும் நாகத்தையும் தனித்தனியே உருக்கி மெல்லிய தகடாகச் செய்து சன்னத்தூளாகக் கத்தரித்துக் கொள்ள வேண்டும். மற்றாசரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகச் சேரத்துவைத்துக் கொள்ள வேண்டும். துத்தநாகம், வங்கம் இவ்விரண்டு தூளையும்.

இதற்கு பதிலாக சுத்தி செய்த இரண்டு பலம் லிங்கத்தை உபயோகித்து கொள்ளலாம். ஆனால் லிங்கத்தை உபயோகபடுத்துவது அனுபவமுறை.

**தீரும் நோய்கள் :** மேகவாயுக்கள், பதினெட்டு வகை சூலைகள் கைகால் திமிர், உடல் தமிர், மேகசம்பந்தத்தினால் காணும் புண்கள் மேகத்தடிப்பு மேகச்சொறி மேகவிரணங்கள் பதிவெட்டுவகை குட்டங்கள், கிரந்திகள், வெள்ளைப்படர்ந்த மேகங்கள், கருப்பு மேகங்கள் முதலிய அனேக நோய்கள் தீரும். இன்னும், பின் காணும் பரங்கிப்பட்டைத்தூளில் கலந்துண்ண முன்கண்ட நோய்களும், பின்காணும் நோய்களும் தீரும்.

**பரங்கிப்பட்டைச் சூரணம் :** பறக்கிப்பட்டை 10 பலம் இது இலேசான தாயிருக்க வேண்டும். இதனைச்சீவி மேற்றோலை நீக்கி வைத்துக் கொள்க. இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, கரந்தைச்சாறு குப்பைமேனிச்சாறு, தைவேளைச்சாறு இவை வகைக்குச் சாறு 1/2 படி மேற்படி பட்டையை, சிறு துண்டுகளாகச் செய்து மேற்படி சாற்றில் தனித்தனியே போட்டு ஊறவைத்து உலர்த்தி எடுத்துப்பொடித்துக் கொள்க.

மிளகு 10 பலம் (3 1/2 கிராம்) மூத்திரம், கோமுத்திரம், கை யாந்தகரைசாறு, வெள்ளாட்டு நீர், இவை வகைக்கு 1/2 படி மேற்படி மிளகை ஒரு பாத்திரத்தில் போட்டு மேற்படி திரவகந்தைத் தனித்தனியே விட்டு உலர்த்திப் பொடித்துக் கொள்க.

சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள், உலர்த்தின சங்காய்த்தூள். உலர்த்தின சங்கம் பட்டைத்தூள். உலர்த்தின விழிப்பட்டைத்தூள். இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்)

அதிமதுரம் திப்பிலி மூலம், அக்கிராகாரம், சாடமாஞ்சில், சிற்றரத்தை, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஓமம், வால்மிளகு, செல்லியம், சீரகம், கருஞ்சீரம், மெற்றோல் சீவின சுக்கு, இவை வகைக்கு 1/4 பலம் (8 1/4 கிராம்) இவை எல்லாவற்றையும் சேர்த்திடித்துக் கொள்க.

முன்பண்ட மூவகைகளையும் ஒன்றாக சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டி புதுக்கலயத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.இந்தச் சூரணம் 1 1/2 வராகனெடை, பசுவின் நெய் 1 1/2 வராகனெடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பதங்தத்தைச் சேர்த்துட் கொள்ள வேண்டும். காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் :** முன் சொல்லிய நோய்கள் தீர்வதுந்தவிர, குன்மம், வாயுக்குத்து, கைகால் பிடிப்பு, 80 வகை வாதநோய்கள், கிரந்தி புண், கரப்பான் புண், வண்டுகடி, சில்விடம் நீராமை, லிங்கச்சூலை, அல்குல்புற்று, மகோதரம், ஏழுவகைப் பீனிச நோய்கள், எட்டுவகை காசங்கள், நச்சுநீர் ஆகிய நேக நோய்கள் தீரும்.

# நெய்

## 1. வல்லாரைக் நெய்

(1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வல்லாரைச் சாறு | படி | 1 | பொடுதலைச்சாறு | படி | 1 |
| பொன்னாங்காணிச்சாறு | படி | 1 | எலுமிச்சம்பழச்சாறு | படி | 1/2 |
| ஆவின் பால் | படி | 2 | ஆவின் நெய் | படி | 2 |

(2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதிக்காய் | கழஞ்சு | 2 | காட்டாத்திப்பூ | கழஞ்சு | 2 |
| சாதிபத்திரி | கழஞ்சு | 2 | வால்மிளகு | கழஞ்சு | 2 |
| மாசிக்காய் | கழஞ்சு | 2 | ஏலம் | கழஞ்சு | 2 |
| கற்கடகசிங்கி | கழஞ்சு | 2 | கிராம்பு | கழஞ்சு | 2 |
| அதிமதுரம் | கழஞ்சு | 2 | | | |

**செய்பாகம்:** ஒரு பழகின வாயகன்ற மண்பாண்டத்தில் முதலாவது அங்கத்தில் கூறப்பட்டுள்ள திரவங்களை விட்டு அடுப்பிலேற்றி மிருதுவாக எரித்து கொதி வரும்போது இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்டுள்ள 9 கற்கங்களை இடித்துச் சூரணித்து அம்மிக் கல்லிலிட்டு பால்விட்டரைத்து ஷ பாண்டத்தில் போட்டுக் கலக்கி வண்டல் மெழுகுபதம் திரளுஞ் சமயம் வடித்து ஒரு வாயகன்ற புட்டியில் விட்டு 2 – பலம் சீனி சர்க்ரையைப் போட்டுக் கலக்கிப் பத்திரப்படுத்துக.

**பிரயோகம்:** வேளைக்கு ஒரு உச்சிக்கரண்டி வீதம் தினம் இருவேளைக் கலக்கி சாப்பிட சகல மேகம், கிரந்தி, பிரமியம், மேகச் சூலை, குட்டம், சொறி, சிரங்கு, **யோனிபுத்து** நீர்கடுப்பு, நிரெசிச்சல், நீர் சுறுக்கு முதலியவை தீரும்.

**பத்தியம்:** இச்சாபத்தியமக இருத்தல் சாலச் சிறந்தது.

## 2. பன்றி நெய்

அரசு, ஒதி, வேல், நெல்லி, செம்புரா, இவைகளின் வேர்ப்பட்டை, 3–பலம், புங்கம்வேர் 2 – பலம் இவற்றை இடித்துச் சாறெடுத்து துளசிச்சாறு 1/2 படி கூட்டி களிப்பாக்கு, காய்ச்சுக்கட்டி வகைக்கு ஒரு பலம், தூளாக்கிப் போட்டு நூ வீசைபன்றி நெய் கலந்து மூன்றுநாள்குரிய வெய்யிலில் வைத்து நான்காம் நாள் எரித்து தைலம் வடித்துக்கொண்டு இதைப் பஞ்சல் தோய்த்து மேலுக்குப் போட்டு வர **புற்றினால்** தோலில் உண்டாகும் புண்கள் தீவிரமாகாமல் விரைவில் குணப்படும்.

## 3. தேங்காய் நெய்

**(அ) முற்றல் தேங்காயைத் துருவி பால் பிழிந்து, காய்ச்சின நெய் 16 பலம் ( 560 கிராம்) புங்கம் பால், ஆலம்பால், ஆடுதின்னாப் பாளைச்சாறு வகைக்கு 2 பல ம் (70 கிராம்)**

**(ஆ) சுத்திசெய்த இலிங்கம், பொன்னரிதாரம், மிருதார்சிங்கி, நெல்லிக்காய் கெந்தகம், சீனாக்காரம், கொடுக்காய்ப் புளிப்பட்டைத்தூள், கொடிவேலி வேர்ப்பட் டைத் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை.**

**செய்முறை : (அ) விலுள்ள திரவங்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து கொ ள்க். (ஆ)வில் முன்னுள்ள ஐந்து சரக்குகளையும் தனித்தனியே பொடித்தும், பின் னுள்ள இரண்டுவகைச்சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து தேங்காய்ப்பாலைச ட சிறுகச்சிறுகவிட்டு மைபோலரைத்து முன் சித்தப்படுத்தியிருப்பதில் கரைத்துக் கா ய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.**

**அளவு:** **1 முதல் 2 வரான் எடை, தினம் காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்று வேளையும் உபயோகிக்கவும் மேலுக்கும் பூசவும்.**

**தீரும்நோய்கள்:** **கன்னக்கிரந்தி, கன்னக்காளான், காது ஓசை, கன்னக்கர ப்பான், கன்னப்படுவன், கன்னப்புற்று ஆகியவை தீரும்.**

**பத்தியம்:** **இச்சாபத்தியம்**

# ரசாயனம்

## 1. மதுஸ்மி ரசாயனம்

பார்த்திவாய் புலத்தியனே மேகவகைதீரப்
பண்பான மஸ்துமி ரசாயனஞ் சொல்வேன்
சேர்த்திடுவாய் சீனமுத லமுக்கருவேர்
திறமான வகையொன்று பலம்பத்தாகும்
சாற்றிவாய் நிலப்பனைவோ பலந்தானைந்து
தளமான தண்ணீர்விட்டான் பலந்தாரெண்டு
ஆற்றிடுவாய் நன்னாரி சங்குமூலம்
அன்பான திரிகடுகு திரிபலையுமாமே

மஸ்துமி ரசாயனம் சொல்கிறேன் கேள் ! இதனால் மேக நோய்கள் அனைத்தும் தீரும் சர்க்கரை, சீந்தில், அமுக்குறாவேர் இவை இரண்டையும் வகைக்கு பத்து பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் நிலப்பனைவேர் ஐந்து பலமும், தண்ணீர்விட்டான் கிழங்கு இரண்டு பலமும், நன்னாரி வேர், சங்கன் வேர், திரிகடுகு, திரிபலா

ஆமப்பா லவங்கத்தோல் லவங்கப்பத்திரி
அப்பனே சிறுநாகம் வாய்விளங்கம்
போமப்பா மல்லியிரு சீரக மோமம்
புகழான குரோசானி அரத்தைகெந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங்காலி
நலமான கொடிவேலி விலாமிச்சைமூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகினோடு
தளமான முந்திரிகை பேரீச்சுக்கூட்டே.

லவங்கத்தோல், வலங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வாய் விளங்கம், பெருமல்லி, சிறுமல்லி, வெண்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி, சீரகம், அரத்தை கெந்தமாஞ்சில், சிறுதேக்கு, கண்டங்கத்திரி, பூனைக்காலி, கொடிவேலி, விலாமிச்சைவேர், தக்கோலம், வால்மிளகு, முந்திரி பேரீச்சம்.

கூட்டப்பா வெட்பாலை தாமரைக்கிழங்கு
குலமான சாதிக்காய் கிராம்புபத்திரி
நாட்டப்பா கருவேம்பி நிலைவாகைக்கு
நலமாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
காட்டப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துக்
கருவான குங்குமப்பூ கோரோசனை கர்ப்பூரம்
வாட்டப்பா கழஞ்சிநிறை கூடச்சேர்த்து
வளமான சர்க்கரைசேர் நாலு வாங்கே.

வெட்பாலை, தாமரைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, கருவேம்பு, நிலவாகை போன்ற கடை சரக்குகளை ஒரு பலமுமெடுத்து இளவறுப்பாய் வறுத்துச்சூரணம் செய்து குங்குமப்பூ, கோரோசனை, கர்ப்பூரம் போன்ற மூன்றையும் வகைக்கு ஒரு கழஞ்சும், சர்க்கரை நான்கு சேரும் கூட்டி.

வாங்கியே வாவின்பால் படிதானாலு
வளமான சர்க்கரையைக் கரைத்துக்கொண்டு
பாங்கியே பாகுபதமாகும் போது
பதறாதே சூரணத்தை காய்ச்சிக்கொண்டு
தேங்கியே தேன்படிதா னொன்றுவாறு
திறமான வாவினெய் வரைதானப்பா
வாங்கியே மெழுகுபோல் கிண்டிகிண்டி
வளமான பீங்கானில் பதனம் பண்ணே.

நான்குபடி பசும்பாலை விட்டு கரைத்து அடுப்பில் வைத்து பாகு பதமாகும் வரை காய்ச்சி இதில் தேன் ஒருபடியும், நெய் அரைபடியும் விட்டு மெழுகு போல் கிளறி பீங்கானில் பதனம் செய்ய வேண்டும்.

பண்ணப்பா விருநேரம் பாக்களவுகொள்ளப்
பரிவுடனே தீருகின்ற வியாதிகேளு
புண்ணப்பா கிரந்தியொடு சூலைதீரும்
புதுமையாங் கண்டத்தில் மாலைதீரும்
நண்ணப்பா வாய்வொடு வாதமெல்லாம்
நாடாது பிரம்மியங்கள் லிங்கப்புற்று
தண்ணப்பா சேத்தும நோய் தொண்ணூற்றாறும்
தவறுண்டு போகுமடா பத்தியங் காரே.

இந்த லேகியத்தை காலையும், மாலையும், பாக்களவு வீதம் கொண்டு வந்தால் புண், கிரந்தி, சூலை, கண்ட மாலை, வாயு, வாதம், பிரம்மியங்கள், லிங்கப்புற்று, தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள் யாவும் விலகும். ஆனால் முறைப்படி பத்தியம் காத்தல் வேண்டும்.

காட்டப்பா மாந்தமெல்லாங் காணா தோடும்
கருவான மிகவுமுதல் கண்டிப்பாகும்
தீட்டப்பா பெயர் மந்தம் பொரும லெல்லாம்
நிலை கெட்டே யோடுமடா மின்னங்கேளே.

அடுப்பில் வைத்து காய்ச்சி மெழுகுபதமாகும் வரை காய்ச்சிக் கொண்டு அதை மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு கால் சேர்வீதம் மூன்று நாட்கள் காலை வேளையில் உட்கொண்டு வந்தால் மாத்தம், இசிவு, பொருமல், பேர் மாத்தம் போன்றவைகள் யாவும் அலறிக் கொண்டு ஓடும்.

## 2. கந்தக ரசாயனம்

(1)பழுப்பு நிறமுள்ள நெல்லிக்காய்ச் கந்தகம்–பலம்–10. (1) இதனையொரு இரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின்நெய்யும் விட்டு சிறுதீயிலுருக்கி அரைப்படி பசுவின்பாலிற் சாய்க்கவேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின்பெடுத்து முன்போலவே யிரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின் நெய்யும் விட்டுருக்கி, முன்பாலை நீக்கிவிட்டு, அந்தச் சட்டியிலேயே வேறு அரைப்படி பசும்பால்விட்டு அதில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி பசுநெய்வார்த்துருக்கியுருக்கித் தடவைக்குத்தடவை புதியபாலில் 7 தடவை சாய்க்க வேண்டும்.

(2) பின்பு இவ்விதம் பாலில் சாய்த்து சுத்திசெய்ததை முன் பேலவே–7 தடவைகள் பசுவின் செய்விட்டுருக்கி யுருக்கித் தடவைக்குத் தடவை, 1/4 படி வெங்காயச்சாற்றில் சாய்த்துக்கொள்ள வேண்டும்.

(3) பின்பு இக்கந்தகத்தைத் தூளாக்கிவைத்துக் கொள்க. ஒரு வாயகண்ட மண்பாத்திரத்திற் காற்படி பசுவின்பாலைவிட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய சேலைத்துண்டை வேடுகட்டி, முன் கந்தகத் தூளைப்பரப்பி அதன்மேல் ஒரு சாணகியால் மூடி, சாணகியின் உதட்டின் கற்றிலும் ஒரு அங்கும் மரறயும்படியாகப் பூமியிற்புதைத்துச் சுமார்–50–பலம் விராட்டியயடுக்கிப் புடமிட்டாறினபின்னெடுக்க, கந்தக மெல்லாமுருகிப் பாத்திரத்திற்குள்ள பாலில் விழுந்தும் அதையெடுத்து அதிலுள்ள ஈரத்தை மெல்லியவஸ்திரத்தால் துடைத்து, மறுபடியும் தூளக்கி முன்பே

ாலவே பால்விட்டு வேடுகட்டி முன்போலவே புடமிடவேண்டும் இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்துகொள்வதே கந்தககத்தியாம்.

குக்கில் அல்லது மைசாட்சி பலம்–5, இதனை ஒரு மெல்லிய வஸ்திரத்தில் முடித்து கட்டிக்கொள்க. ஒரு மண் பாத்திரத்தில்–1/2–படி கொள்ளை போட்டு அதனுடன் 1–படி ஜலத்தையும்விட்டு மேற்படி குக்கில் முடிச்சையும் போட்டு சொன்னாளது நன்றாய் வெந்து மலர்கிறவரையில் வேகவைத்துக் கழுவி பரப்பசையில்லாமற் பக்குவம் செய்து மறுபடியும் மெல்லிய சேலைத்துண்டில் முடிந்துகொள்க. ஒரு மண் பாத்திரத்தில்–10–பலம் முற்றின வேப்பம்பட்டையை நையநறுக்கிப்போட்டு, அதில்1–படி ஜலம்விட்டுக்காய்ச்சி அரைப்படியாகச் கண்டினபின்னிறக்கி யிளஞ்சூட்டுடன் வடி கட்டின கஷாயத்தை வேறொரு பாத்திரத்தில்விட்டு, முன் குக்கில் முடிச்சையும் போட்டு, மூன்றுகொதிகள் வருகிறவரையிற் காய்ச்சியெடுத்து நிழலில் ஈரப்பசையில்லாமல் லுலர்த்திக்கொள்வதே குக்கில் கத்தியாம்.

தேவையான பறங்கிப்பட்டையையிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்து கொள்க. ஒரு மண்பாத்திரத்தில் தக்க பசுவின்பால் விட்டு, பத்திரத்தின் வாய்க்கு மெல்லியவஸ்திரத்தால் வேடுகட்டி, அதன்மேல் முன் சூரணத்தை வைத்து மேற்சட்டி மூடி, அடுப்பேற்றி சூரணம் வேகிறவரையில் எரித்துச் சூரணத்தை நிழலிலுலர்த்தி, நன்றாயுலர்ந்தபின்பு, மறுபடிறும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்வதே பறங்கிப்பட்டைச் சூத்தியாம்.

கொடிவேலிவேர்ப் பட்டையையும் பறங்கிப்பட்டையைப் போலவே கத்திசெய்து கொள்ள வேண்டும்.

இரசகர்ப்பூரம் ஒரேகட்டியாய் பலம்–1, இதனை ஒட்டிலிட்டுச் சிறுதீயாயெரித்து முலைப்பாலால்–2–சாமமும், முகமுசுக்கைச்சாற்றல்–2–சாமமும் கருக்கிட்டு, வில்வப்பழத்தைப் பொத்து அதற்குள் முன் கட்டியைச் செலுத்தி வாயை அந்த ஒட்டினால் மூடி–2–3–சீலைமண்செய்து அவிபுடமாகப் போடவும். நன்றாயாறினபின் கட்டியையெடுத்து, இன்னொருபழத்தைப் பொத்து முன்போலவே கட்டியைச் செலுத்திப் பந்தனஞ் செய்து விபுடமிடவும், இவ்விதம் மடக்கி மடக்கி–7–தடவைகள் வில்வப்பழத்தில் புடமிட்டெடுக்க சுத்தியாம். இதனை யெத்தனைதடவை வில்வபழத்தில் அதிகமாய்ச் சுத்திசெய்து கொள்கின்றோமோ அவ்வளவு விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட கந்தகம்–பலம்–2, மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட குக்கில் அல்லது மைசாட்சி வராகனெடை–8, மேற்படிபாகப்படி கத்தி செய்யப்பட்ட பறங்கிப்பட்டைச் சூரணம், மேற்படி பாகப்படி கத்தி செய்யப்பட்ட கொடி வேலிவேர்ச் சூரணம், மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட இரசகர்ப்பூரம், இவை மூன்றும் வகை–1க்கு வராகனெடை–6? அரிசித்திப்பிலி, மிளகு, இலவங்கம், இலஞ்சி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கோஷ்டம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, மற்றும் கருஞ்சீரம், கார்போகரிசி இப்பன்னிரண்டு சரக்குகளையும் தனித்தனி வெய்யிலில் காயவைத்துத் தனித்தனியிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகையாக வாரகனெடை–2, பசுவின்நெய் பலம்–2 1/2, நல்ல கெட்டித்தேன் பலம் – 2 1/2.

**செய்முறை:** கந்தகத்தைக் கல்வத்திலிட்டு நன்றாய்ப்பொடித்து எடுத்துக் இவ் விதமே இரகர்பூரத்தையும் பொடித்தெடுத்துக் கொள்க. பின்பு இவ்விரண்டு தூட்க்க ளுடன் மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து இவ்விரண்டு தூட்க்களுடன் மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்து, குகிலையும் சேர்த்துப் பிசரிக் கல்வத்திலிட்டு, நெய்யையும் தேனையும் ஒன்றாய்க்கலந்து வைத் துக்கொண்டு சிறுகச்சிறுக வார்த்து–6–சாமமரைக்க மெழுகுபோலாம். இதனைப் பீங்காண் டப்பியில் பத்திரப்படுத்தவும்.

**பிரமாணம் வராகனெடை:** 1/4, 1/2, இதனைத் தேகசக்தி, வியாதிபலம் ஆ கியவைகளுக்கு கேற்றவிதமாக குறைந்த அளவாகவும் நிறைந்த அளவாகவும் காலையில் ஒரு வேளையாகவும், காலை மாலை இரண்டுவேளையாகவும் உபயே ாகிக்கலாம்.

**உபயோகம் :** அரிகிரத்தி, சொரிகிரந்தி, யானைக்கிரந்தி, முசுக்கிரந்தி முதலி ய 21–வகை கிரந்திகளும் முகவங்கு, புண்டரீக குஷ்டமென்னும் படர்தாமரை, கரப் பான் வகைககள், அரையாப்பு, பரங்கிப்புண், குஷ்டவகைகள், விஷபாகம், ஊறல், வெடிசூலை, விரைவாதம், அண்டவாதம், குடல்வாதம், அந்திரவாயு, யானைக்கா ல்வீக்கம், நாப்புற்று, வாய்ப்புற்று, லிங்கப்புற்று, தந்தவாயு, குன்மரோகம், மேகவெ ட்டை முதலியவை தீரும்.

**இதற்குப்பத்தியம் :** பாசிப்பயறு, துவரம்பருப்பு, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, தகரைக்கீரை, அரைக்கீரை ஆகியவைகளாம்.

மாமிச பக்ஷணிகளானால் :– வெள்ளாட்டிறைச்சி, முயலிறைச்சி, கவுதாரி காடை, உள்ளான் ஆகிய இப்பட்சிகளின் இறைச்சி ஆகியவைகளாம். இவற்றை உலர்த்தியும் உபயோகித்துக் கொள்ளலாம். திருக்கை, சுறா, கிளங்கான், பங்காலை, பன்னா, கற்றாழை, வரால், குரவை, உளுவை உன்னும் மீன்வகைகளை உப்பி ட்டுலரத்தி உபயோகித்துக்கொள்ளலாம்.

# கட்டு

## 1. பூரகட்டு:

இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்) பருமனான புளிநரைக் கிழங்கு 4.

செய்முறை : ஒரு கிழங்கைக் குடைந்து அதற்குள் பூரக்கட்டியை வைத்து அத்தூள ால் மூடி மூன்று நீலைமண் செய்து உலர்த்தி பத்துப்பலம் வராட்டியில் புடமிட வேண் டும். புடம் ஆறின பின்பு கட்டியை எடுத்து மற்றொரு கிழங்கைக் குடைந்து அதற்கு ள் வைத்து குடைந்தெடுத்த நூளால் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்பே ால் 10 பலம் (350 கிராம்), வராட்டியில் புடமிட்டெடுத்துக் கொள்ளவும். பிறகு முன்பே பால் கிழங்குக்குள் வைத்து சீலைமண் செய்து உலர்த்தி 8 பலம் வராட்டியில் புடம் 1, பிறகு 6 பலம் வராட்டியில் புடம் 1 ஆக நான்கு புடமிட்டெடுத்தால் பூரமானது உரு கி மணிபோலிருக்கும்.

**குறிப்பு :** இந்தப் பாகத்தை செய்து முடிப்பதற்குத் தீயைப் பற்றி அதிகம் க வனிக்க வேண்டியதிருக்கிறது. சிலவமயம் தீ அதிகமாகவும், சில சமயம் தீ குறை வாகவும் வேண்டியதிருக்கிறது. புடம் போட்டெடுத்தால் கிழங்கானது அதிகம் கருகி ப் போகாமால் வெந்த பதமாக இருக்க வேண்டும். செம்மையாக வேகாமல் பச்சை யாக இருந்தால் இரண்டொரு புடம் அதிகமாகப் போட்டுக் கொள்ளவேண்டும். சமயே யாசிதம் போல வராட்டியை அதிகப்படுத்தியும் குறைத்தும் கொள்ளலாம். சற்று நித ானமாகவும் கவனமாகவுஞ் செய்து கொண்டால் தப்பாமால் மணியாகி உருகி நின் றுவிடும். இதனைப் பொடித்து, புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** 1 முதல் 4 அரிசி எடை

**அனுபானம் :** பனைவெல்லம், சீனி சர்க்கரை, சுக்கு, இளகம், வால் மிள கு, இளகம், பறங்கிப் பட்டை இனகம் முதலியவைகளாகும்.

**தீரும் நோய்கள் :** சூலை நோய், இரணநோய், யோனிப்புற்று, கிரந்திநோ ய், நீர்ப்பை ரணம், மேகரணம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**பத்தியம் :** இச்சாபத்தியம், நோய் பலமாயிருந்தால் கடின பத்தியமாகவும் வைத்து உபயோகிக்கலாம்.

# புற மருந்துகள்

## களிம்பு

**1. பலாண்டக் களிம்பு** ;

வங்காளப்பச்சை, வெண்குங்கிலியத் தூள், சுத்தி செய்த இரசம், இவை வகை 1–க்கு விராகனெடை இரண்டரை, ஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு, பசுவின் வெண்ணெய் பலம் ஒன்றரை.

**செய்முறை:** இரசத்தைக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து ரசமடிந்தபின்பு வங்காளப் பச்சையைச் சேர்த்தரைத்துப் பிறகு குங்கிலித் தூளைச் சேர்த்து முன்சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து 2 ஜாம நேரமரைத்து இதனையெடுத்து ஒரு வெண்கலப் பாத்திரத்திற் போட்டு வெண்ணெயையுஞ் சேர்த்து காம்பிரப் பாத்திரத்தினால் 2 ஜாம நேரம் தோய்த்துப் பீங்கான சிமிழிற்பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

**உபயோகம்:** இந்தக் களிம்பை வெற்றிலையிற் கொஞ்சம் தடவி அவசியமான இடத்தின்மீது போட்டு வரப் **புற்றுரணங்கள்**, கிரந்திப்புண்கள், புரைப்புண்கள், ஆறா தரணங்கள், நாள்பட்டரணங்கள் ஆகியவைக ளெல்லாந்தீரும். இன்னும் இதனைத் துணியில் தடவித் திரியாகச் செய்துலர்த்திக் கொளுத்தி இதன் புகையை புண்முதலியவைகளிற்படும்படி செய்வதினாலும் பிரயோசன முண்டாகும்.

**பத்தியம்:** வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பெண், புகை ஆகிய இவைகளை நீக்கி வைக்க வேண்டியதவசியம்.

## 2. குழிப்புண் எலும்பைப்பற்றிய ரணங்கட்குக் களிப்பு ;

| | |
|---|---|
| வெந்த மனிதர் எலும்பு | பலம் |
| வெள்ளைக் குங்கிலியம் | பலம் |
| வெண்ணெய் | பலம் |
| இலிங்கம் | விரகன் |
| ரசகற்பூரம் | விரகன் |

எலும்பு, குங்கிலியம் இரண்டையும் தனி தனியாக பொடித்து வஸ்திரகாயம் செய்து திட்டு, பூரம் சேர்த்து வெண்ணெய்போட்டு முன்று மணி நேரம்

அரைத்து எடுத்துக் கொள்ளவும். இதகைக் குழிப்புண், ஆறத ரணங்கள், புற்றுகள் முதலிய சகல ரணங்களுக்கும் உபயோகிக்க ஆறி உலரும்.

## 3. புற்று உசிதம் ;

கல்லுப்பை நல்லெண்ணெய் வார்தரைத்து புற்றில் பூசி மேலே பாங்கிலை வைத்துக்கட்டிவர புற்று மறைந்து குணமுண்டாம்.

### புகை

**1. இரசவங்கப் புகை**;

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்) காரியம் 1 பலம் (35 கிராம்), வெள்ளைப்பாடாணப்பதங்கம்1 வராகன் எடை, அல்லது மடல் துத்தம் 1/2 பலம் (17 1/2 கிராம்). நெல்லிக்காய்க் கெந்தகம் 3/4 பலம் (26 1/4 கிராம்), ஜாதிலிங்கம் 3/4 பலம் (26 1/4 கிராம்), எருக்கம் பால் செல்லத்தக் அளவு.

**செய்முறை:** இரசத்தையும் வங்கத்தையும் தொந்தித்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து இரண்டு மணி நேரம் கைவிடாமலரைத்துப் பிறகு எருக்கம் பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரமரைத்து சுண்டக்காய் அளவு மாத்திரைகள் செய்து

உலர்த்திவைத்துக்கொள்ளவும். புளியம் புறணியை நெருப்பாக்கி அதில் மேற்படி மாத்திரையைப் போட்டு மேற்கண்டவாறு அந்திசந்தி மூன்று நான் வாய்பிடிக்கிறவரையில் புகை பிடிக்க புண்கள், கிரந்திகள், மேகப்புண்கள், அழிரணம், குழிரணம் முதலிய அநேக ரணங்கள், பிளவைகள், கண்டமாலை, புற்றுகள் முதலியவைகள் தீரும்

.

2. **இரச கற்பூர புகை**;

இரச கற்பூரம் வராகனெடை 1.

இரச செந்தூரம் வராகனெடை 1.

தேன் மெழுகு பலம் 1/4

இரும்புக் கரண்டியில் மெழுகை யுருக்கிக் கொண்டு பூரம், இரச செந்தூரம் இரண்டையும் நன்றாய்த் தூள் செய்து, உருக்கிய மெழுகில் போட்டுக் கலந்து இறக்கி வெள்ளைத் துணியில் ஊற்றி ஐந்து திரி செய்து, நோயாறியைக் காற்று மிகுதியில்லாத அறையில் வைத்து, ஒரு திரியைக் கொளுத்தி வைக்கவும். கண்ணுள்ள தேங்காயோட்டால் அத்திரியை மூடி அக்கண் வழியாய்ப் புகை வருவித்தல் வேண்டும்.

நோயாளியை ஒரு கம்பளிப் போர்வையால் மூடிப் புகை பிடிக்கச் செய்யவும். வத்தி எரிந்து முடிந்து பின் வியர்வை யெல்லாம் துடைத்து விட்டுக் காய்ச்சிய பசும்பால் கால்படி சாப்பிடச் சொல்லவும். மூன்று நாள் வரை பாற் சோறு தான் உண்ணவேண்டும். நான்காம் நாள் நீர்முள்ளி சமூலம் நீரில் போட்டுக் காய்ச்சி ஓமம் அரைத்துத் தேய்த்துக்கொண்டு மேற்படி நீரில் மூழ்கவும்.

**தீரும் நோய்கள்:** மூக்கு நோய்கள் (பீநசங்கள்), பிளவை, புற்று கண்டமாலை, மார்புப் பிளவை, கொருக்குப் புண், அரையாப்பு, பவுத்திரம், வெடிசூலை இவை முதலியன.

**3. குட்டத்திற்குப் புகை** ;

சித்திரமான துத்தந்துருக
சிறந்தவெள்ளை சிலையுடன்
சேருந்தார மூறுநாகஞ்
சிறந்தசாதி லிங்கமும்
முத்தரமான கடுகுதேனின்
மெழுகெருக்கின் கரியடன்
மோலின்வகைக்குக் கழஞ்சிரெண்டு
மொன்றாய்க்கூட்டி யதனுடன்

பக்குவமான கருத்தாநாகம்
பண்பாய்க்கழஞ்சு போட்டபின்
பாராய்பருத்திச் சாற்றாலரைத்துப்
பாங்காயேழு வில்லைசெய்
தந்திரமாகப் புளியம்பொருக்கில்
தானேயேறும் புகையதால்
தளர்ந்தமெய்யி லொழிந்தநோயைத்
தயவாய்ச்சொல்லும் பள்ளிரே.

பள்ளிரேழரை யாம்பொழுதினில்
வெந்நீர்வார்த்து முழுகிடில்
பகர்ந்தகுட்டங் கிரந்திப்புண்ணு
பாண்டும்புத்தரை யாப்புடன்
கொள்ளிக்கரப்பான் மெள்ளவுயர்ந்த
குன்மமான குலையும்
கூட்டியெழுந்த வாதமையங்
கொடியதென்னும் பித்தமும்

மெள்ளக்குனிந்து பள்ளத்தாவு
மிகுபத்தாம் வய்நடவிலே
மீறியெழுந்த நோய்கள்கரிந்த
விதத்தைப்பாருஞ் கணத்திலே
உள்ளதறிவில் மிகுந்தஞான
வள்ளல்பொதிகை யகத்தியன்

உரைத்தசாத்திரப் புகையின்மகிமை
கைகண்டசாத்திரம் பள்ளீரே.

தூய்மை துத்தம், துரிசு, வெள்ளைப் பாடாணம், மனோகிலை, தூய்மைசெய்த அரிதாரம், நல்லபாம்பு சதைத்தூள், தூய்மைசெய்த சாதிலங்கம், கடுகு, தேன்மெழுகு, எருக்குக்கரி இவை வகைக்கு 2 கழஞ்சு (8 3/4 கிராம்) சிறு கண்நாக அரப்பொடி பருத்தியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** எல்லாச் சரக்குளையும் ஒன்றாயச்சேர்த்தரைத்து ஒன்றாகக் கலந்த பின்பு பருத்தி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமம் அரைத்து ஏழு வில்லைகளாச்செய்து வெங்யிலிலுலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தம் விதம் :** நோயாளியை நாற்காலியிலுட்கார வைத்து கழுத்துவரையில் உரப்பான கித்தான் துணியைச்சுற்றித் தொங்கவிட்டுப் புளியம்புறணியை நெருப்பாக்கி அதில் ஒரு வில்லையைத் தூள் செய்துபோட்டு அதைநாற்காலியின் கீழ் வைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் மருந்தின் புகையானது உடலெங்கும் பரவிச்செல்ல ஏதுவாகும். முகம், கண் முதலியவைகளிற்படாமல் வீழிப்பாகச் செய்ய  வேண்டியது. இவ்விதம் ஏழுபொழுது மூன்றரை நாள்கள்செய்து, மறுமூன்றரை நாள் மறுபத்தியம் காத்து எட்டாம் நாள் வெந்நீர் தலைமுழுக்குச் செய்விக்கவும்.

**தீரும்நோய் :** குட்டம், கிரந்திப்புண், **அல்குல் புற்று, லிங்கப் புற்று,** அரையாப்பு, கொள்ளிக்கரப்பன், குன்மம், சூலைநோய் முதலியவைகளும் பாண்டு நோய்களும் தீரும்.

**4. புற்றுப் புகை**

ஏற்றகரிய வங்கமிரண்டு
இசைந்தவிரத மவ்வெடை
எடுத்துவெள்ளைக் கெந்திதுருசி
யிரைந்தசாதி லிங்கமுஞ்
சித்தமுடைய தாரஞ்சிங்கி
சிறந்தகரிய சீரகஞ்
சேர்த்துக்கடுகி னுடனேவெள்ளை

சேரவொன்றாய் வகையெல்லாம்
ஆத்தபொடியிற் பருத்திச்சாறுவிட்
டரைத்துருட்டி யெடுத்ததை
அன்பாயன்பது உருண்டைமுடிந்து
அனலில்கேளும் பள்ளிரே
சாற்றப்புகைகண் டாலுமோடுஞ்
சைதன்னியப்புண்கள் கடும்புற்றுத்
தணியமுனிவ ருரையின்படிக்குத்
தயவாய்க்கொள்வீ ருலகீரே

தூய்மைசெய்த கருவங்கம் 2 1/2 வராகனெடை (8 3/4 கிராம்), தூய்மைசெய்த இரசம் 2 1/2 வராகனெடை (8 3/4 கிராம்) தூய்மை செய்த வெள்ளைப் பாடாணம், தூய்மைசெய்த கெந்தகம், துருசு, தூய்மை செய்த சாதிலிங்கம், தூய்மை செய்த அரிதாரம், தூய்மைசெய்த மிருதார்சிங்கி, கருஞ்சீரகத்தூள், கடுகுமா, வெள்ளைக்கடுகுமா இவை எனக்கு 1 1/4 வராகனடை பருத்தியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** வங்கத்தையுருக்கி இரசத்தில் தொந்தித்துக் கொள்ள வேண்டும். மற்றச் சரக்குகளையும் தனித்தனியே தூள் செய்துக் கொள்ள வேண்டும். பிறகு, எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து ஒருமணிநேரம் அரைத்துப் பிறகு மேற்படி பருத்திச்சாற்றைச் சிறுகச் சிறுவார்த்து இரண்டு சாமமரைத்து ஐம்பது மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய் :**37 ஆம் முறையிற் சொல்லியிருக்கிறபடி புகை போடப் புண்கள், உடல் உளைச்சல், அல்குல் புற்று, லிங்கப்புற்று ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு :** மேற்படி முறையிற் சொல்லியிருக்கப்பட்டதேயாம்.

## 5. பிளவை கிரந்தி முதலிய ரணங்கட்குப் புகை

அரிதாரம் விராகனெடை (க) லிங்கம் (அரை) சாதிக்காய் (அரை) பால்துத்தம் (உ) மயில்துத்தம் (அரை) இவை எல்லாம் கல்வத்திட்டுப் பொடியாக்கி உத்தாமணி இலைச்சாற்றால் எட்டுமணி நேரம் அரைத்து, பின் வெண்ணொச்சி இலைச்சாற்றில் எ

ட்டுமணி நேரம் அரைத்து, பின் பாகல் இலைச்சாற்றில் எட்டுமணி சேரம் அரைத்து , ஒரு சாண் அகலம் ஒரு சாண் நீலமுள்ள வெள்ளைப் புதுத்துணியில் மருந்தைப் பூசி முப்பது திரி செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு திரியைச் சுருட்டுப் பிடிப்பதுபோல் சுங்கானில் வைத்துப் புகைபிடிக்கவும். ஒருநாள் விட்டு ஒருநநாள் வீதம் எட்டுத் தரம் படிக்கவும், கபாலசூலை, மேகரணங்கள், கன்னப்புற்று, கண்டமாலை முதலிய ரணங்கள் தீரும். நோயாளி, ரணங்கள் ஆறினபின் கண்ட ஸ்நானம் செய்ய வேண்டும். பத்தியம், புளி நீக்க வேண்டும்.

## 6. மேகரணங்கள், கண்டமாலை பீனிசங்கள் தீரப் புகை

| | | |
|---|---|---|
| ரசகற்பூரம் | விராககெடை | க |
| ரசச்செந்தூரம் | ,, | க |
| தேன்மெழுகு | பலம் | வ |

இரும்புக்கரண்டியில் மெழுகை உருக்கிக்கொண்டு, பூசம், ரசச்செந்தூரம், இரண்டையும் நன்றாய்த்தூள் செய்து உருக்கிய மெழுகில் போட்டு இறக்கி வெள்ளைத்துணியில் ஊற்றி ஐந்து திரிசெய்து வியர்தியஸ்தனைக் காற்று அதிகம் இல்லாத அறையில் வைத்து ஒரு திரியைக் கொளுத்தி வைக்கவும். கண் உள்ள தேங்காய் ஓடு அல்லது கொட்டாங்கச்சியால் அந்தத் திரியை மூடித்தேங்காய் ஓட்டின் துவாரத்தின் வழியாய்ப் புகை வர வேண்டும். நோயாளியை ஒரு கம்பளிப் போர்வையால் மூடிப்புகைபிடிக்கவும். வத்தி ஆனபின் வேர்வையையெல்லாம் துடைத்துவிட்டுக் காய்ச்சியபசும்பால் கால்படி சாப்பிடச் சொல்லவும். மூன்று நாள் வரை பால்சாதந்தான் சாப்பிட வேண்டும். நான்காம் நாள் நீர்முள்ளி சமூலம் ஜலத்தில் போட்டுக் காய்ச்சி ஓமம் அரைத்து தேய்த்துக்கொண்டு, ஜலத்தில் ஸ்நானம் செய்யவும். அன்று புளி சுட்டு, ரசம் செய்து ரசம் சாதம் சாப்பிடவும். ஆறாவது நாள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யும்.

இதனால் தீரும் நோய்கள் : ஏழுவிதப் பீனிரோகங்கள், பிளவை, புற்று, கண்டமாலை, கன்னப்புற்று, லிங்கப்புற்று, மார்பிளவை, கொருக்குப்புண், அரையாப்பு, பவுத்திரங்கள், வெடிசூலை, தவளைச்சொறி முதலிய சகல ரணங்களும் தீரும் .

# சீலை

## 1. கிரந்திக்கும் யோனிப்புத்துக்கும் காரசீலை

| | |
|---|---|
| நீலம் | அரை பலம் |
| அரிதாரம் | ,, |

இந்த இரண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு 2 பலம் நல்லெண்ணெய்லிட்டு அரைத்து பின்பு தண்ணீர் லிட்டரைத்துக் கழுவி எடுத்துவைத்துக்கொண்டு ரணம், உதிரக்கிரந்தி, உள்வீக்கம், நாய்முள்ளு, அரிகிரிந்தி, ஆறாத புண்கள், பவுத்திரம் இவைகளுக்குச் சீலையில் துவட்டி ரணங்களின்மேல் போட்டுகொண்டு வரவும்.

## 2. குளிர்ந்த பச்சை

**முடங்கு மிருதார் சங்குமஞ்சள்**
**முடுகுங் கருத்த குங்கிலியம்**
**அடைவாழ் வெள்ளைத் துணிசமனாய்**
**அடங்க இடித்துப் பொடியாக்கே**
**மடங்காய் பாங்கிப் புற்றுடனே**
**மாளாப் பிளவை பவுத்திரமும்**
**அடங்கா ரணங்க ளத்தனையு**
**மரியம் குளிர்ந்த பச்சையிதே**

| | | |
|---|---|---|
| **மிருதார்சிங்கி** | **பலம்** | **அரை** |
| **சங்கு** | ,, | ,, |
| **மஞ்சள்** | ,, | ,, |

| | | |
|---|---|---|
| கருங்குங்கிலியம் | ,, | ,, |
| வெள்ளைத் துணி சுட்டது | ,, | ,, |

இவை எல்லாம் நன்றாய்ப்பொடி செய்து பரங்கிப்புற்று, ஆறாத பிளவை, பவுத்திரம், ஆறாத விரணங்கள் இவைகளுக்கு மேல் போட்டுவர எரிச்சல் இல்லாமல் குளிர்ச்சியாய் இருக்கும்.

## 3. வெள்ளைச் சீலை

சங்கு சூதங் குங்கிலியந்
 தயங்கும் வெள்ளைத் துணியோடு
பொங்குஞ் சவுடு சுண்ணாம்பு
 பொலிவா முலைப்பால் விட்டரைத்துத்
தங்குஞ் சிலை தனிலூட்டே
 தயங்காப் பிளவை தான்புற்றும்
மங்குஞ் சண்டி ரணமறுக்கம்
 வலிய வெள்ளை சீலைவிதே

| | | |
|---|---|---|
| சங்கு | பலம் | வ |
| ரசம் | ,, | ,, |
| குங்கிலியம் | ,, | ,, |
| வெள்ளைதுணி | ,, | ,, |
| சவுட்டுப்பு | ,, | ,, |
| கற்சுண்ணாம்பு | ,, | ,, |

இந்த ஆறு தினிசுகளில் சுட்ட வெள்ளைத் துணியையும் நீற்றுப்போன கல் சுண்ணாம்பையும் நிறுத்திக்கொண்டு மற்ற சரக்குகளையுங் சேர்த்து நன்றாய்ப் பொடி செய்து முலைப் பாலில் ஒரு சாமம் அரைத்து இதனைத் துணியில் தடவி, சண்டிப்புண் பிளவை, வாய்ப்புற்று முதலிய ரணகட்குப் போட்டு வர ஆறிக் குணந்தரும். மற்றைய இணங்கட்கும் உபயோகித்துவர அதின குணத்தைக் கொடுக்கும்.

# நோய்கள்

## லிங்க புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 1. | புசண்டா ராமபாய மாத்திரை | ½ - 1 மாத்திரை | தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை |
| 2. | இலிங்க பதங்கம் | 2 அரிசி யெடை | பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைபழத்தை அரைத்த விழுது, பாலேடு வெண்ணெய் |
| 3. | சித்தர் குளிகை | மாத்திரை, 1, 1/2 | சீனசர்க்கரை, சுக்கையரைத்து விழுது, வெண்ணெய் |
| 4. | கோரோசனை மெழுகு | குன்றிமணியெடை | சீனி சர்க்கரை, பனைவெல்லம் |
| 5. | கந்தக தைலம் | 3–5 துளிகள் | பெரியரிசிமா, சீனிசர்க்கரை |
| 6. | பலாரசச் செந்தூரம் | | |
| 7. | கருவங்க செந்தூரம் | | அமிர்த சஞ்சீவி இளகம் |

| | | | |
|---|---|---|---|
| 8. | இரச பற்பம் | 1 காசு எடை | |
| 9. | சருவாங்க மாத்திரை | | |
| 10. | கெந்தக வல்லாதி | நெல்லிக்காயளவு | – |
| 11. | சித்திர மூலக் குளிகை | மிளகளவு | |
| 12. | பவள வங்க செந்தூரம் | குன்றியெடை | சீந்தில் சர்க்கரை |
| 13. | மேக ரணங்கள் கண்டமாலைக்கு பீனிசங்கள் தீரப்புகை | | |
| 14. | கந்தக இரசாயணம் | 1/4 – 1/2 வராகனெடை | |
| 15. | அவிழ்த வகை | | சர்க்கரை, தேன் |
| 16. | அமிர்த நந்தி மெழுகு | | |
| 17. | பால் வல்லாதி | 2 –4 குன்றியெடை | சர்க்கரை, வெல்லம், பாலேடு |
| 18. | இடி வல்லாதி மெழுகு | 1 1/2 – 2 வராகனெடை | |
| 19. | செங்கொட்டை தைலம் | 1–2 வராகனெடை | விளக்கெண்ணெய் + நெய் |
| 20. | முத்து செந்தூரம் | | |
| 21 | கெந்தக சூரணம் | 1/2 – 1 வராகனெடை | வெண்ணெய், நெய், தேன், பறங்கிபட்டை, இளகம், |
| 22 | கெந்தக மெழுகு | 2–4 குன்றிமணி எடை | பனைவெல்லம் + புழுங்கலரிசி |
| 23 | கெந்த பூர பற்பம் | 1 – 1 1/2 குன்றிமணி எடை | கருஞ்சிரக இளகம், எள் இளகம், பறங்கிச்சக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இளகம், வல்லாதி இளகம், வெண்ணெய், நெய், தேன் | |
| 24. | காந்த செந்தூரம் | | சூத பற்பம் | |
| 25 | கெந்தக ரசாயனம் | 1/4 – 1/2 வராகனெடை | | |
| 26 | சிங்கித் தைலம் | | | |
| 27 | விந்து ரச மெழுகு | 1/4 – 1/2 குன்றி | பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் | |
| 28 | காந்தரச வில்லை | 1/4 – 1 குன்றிமணியெடை | பனைவெல்லம், சர்க்கரை, தேன், நெய், வாழைப்பழம் | |
| 29 | காந்த ரச பில்லை | 1–2 உளுந்தளவு | பனைவெல்லம் | |
| 30 | புற்று புகை | | | |
| 31 | மதுஸ்மி இரசாயனம் | பாக்களவு | | |
| 32 | வெள்ளி பற்பம் | பணவெடை அளவு | | |
| 33 | வங்க செந்தூரம் | 1 – 1 1/2 குன்றியெடை | தேன், நெய், வெண்ணெய் | |
| 34 | வங்க செந்தூரம் | | | |
| 35 | சூத பற்பம் | | | |

# யோனி புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 21. | இலிங்க பதங்கம் | 2 அரிசி யெடை | பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைபழத்தை அரைத்த விழுது, பாலேடு வெண்ணெய் |
| 22 | வல்லாரை கிருதம் | உச்சிகரண்டி | |
| 23 | சித்தர் குளிகை | மாத்திரை, 1, 1/2 | சீனசர்க்கரை, சுக்கையரைத்து விழுது, வெண்ணெய் |
| 24 | கோரோசனை மெழுகு | குன்றிமணியெடை | சீனி சர்க்கரை, பனைவெல்லம் |
| 25 | கந்தக தைலம் | 3–5 துளிகள் | பெரியரிசிமா, சீனிசர்க்கரை |
| 26 | சர்வ மேகத்திற்கு லேகியம் | | |
| 27 | யோனி புத்துக்கு காரசீலை | | |
| 28 | **பஞ்ச** சூத மெழுகு | மிளகு பிரமாணம் | |
| 29 | சருவாங்க மாத்திரை | | |
| 30 | சகல மேகராஜாங்க ரசகெந்தி மெழுகு | சுண்டைக்காய்யளவு | பனைவெல்லம் |
| 31. | அமிர்த கெந்தி குக்கில் வல்லாதி | தான்றிக்காயளவு | – |
| 32 | சித்திர மூலக் குளிகை | மிளகளவு | |

| | | | |
|---|---|---|---|
| 33 | அவிழ்த வகை | | சர்க்கரை, தேன் |
| 34 | அமிர்த நந்தி மெழுகு | | |
| 35 | முத்து செந்தூரம் | | |
| 36 | கெந்தக மெழுகு | 2–4 குன்றிமணி எடை | பனைவெல்லம் + புழுங்கலரிசி |
| 37 | கெந்த பூர பற்பம் | 1 – 1 1/2 குன்றிமணி எடை | கருஞ்சிரக இளகம், எள் இளகம், பறங்கிக்சக்கை இளகம், வல்லாதி இளகம், வெண்ணெய், நெய், தேன் |
| 38 | காந்த செந்தூரம் | | சூத பற்பம் |
| 39 | பூரகட்டு | 1–4 அரிசியெடை | பனைவெல்லம், சீனிசர்க்கரை, சிக்கு இளகம், வால் மிளகு இளகம், பறங்கிபட்டை இளகம் |
| 40 | விந்து ரச மெழுகு | 1/4 – 1/2 குன்றி | பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் |
| 41. | சூத வெண்ணெய் | | |

| | | | |
|---|---|---|---|
| 42 | சூலை குடோரி | 1/2 – 1 மாத்திரை | பனைவெல்லம்,<br>சர்க்கரை,<br>வெண்ணெய் |
| 43 | காந்தரச வில்லை | 1/4 – 1<br>குன்றிமணியெடை | பனைவெல்லம்,<br>சர்க்கரை, தேன்,<br>நெய், வாழைப்பழம் |
| 44 | இரச பற்பம் | | |
| 45 | மேகத்தெண்ணெய் | கரண்டியளவு | |
| 46 | வெள்ளி பற்பம் | பணவெடை அளவு | |
| 47 | கெற்ப சூலைக்கு<br>பெருங்காயம் எண்ணெய் | காசெடை | |

# கன்ன புற்று

| | | | |
|---|---|---|---|
| 1. | வங்க செந்தூரம் | 1– 2 குன்றியெடை | நெய், தேன்,<br>வெண்ணெய் |
| 2. | குரு பதங்கம் | 1/2 - 1<br>அரிசியெடை | பனைவெல்லம்,<br>சர்க்கரையத்த<br>விழுது, இளக<br>வகைகள் |
| 3. | இலிங்க பதங்கம் | 2 அரிசி யெடை | பனைவெல்லம்,<br>தேன், தாய்ப்பால்,<br>திராட்சைபழத்தை<br>அரைத்த விழுது, |

| | | | |
|---|---|---|---|
| | | | பாலேடு<br>வெண்ணெய் |
| 4. | கந்தக தைலம் | 3–5 துளிகள் | பெரியரிசிமா,<br>சீனிசர்க்கரை |
| 5. | சகல மேகராஜாங்க<br>ரசகெந்தி மெழுகு | சுண்டைக்காய்யளவு | பனைவெல்லம் |
| 6. | மகாசந்தனாதி தைலம் | | |
| 7. | மகா ஏலாதி தைலம் | | |
| 8. | கன்ன ரோகத்திற்கு<br>தைலம் | | |
| 9. | பஞ்ச பாடாண செந்தூரம் | பணவெடை | தேன், இஞ்சிசாறு |
| 10. | மேக ரணங்கள்<br>கண்டமாலைக்கு<br>பீனிசங்கள் தீரப்புகை | | |
| 11. | புற்று பதங்கம் | 1/4 – 1/2<br>குன்றிமணியெடை | பசும்பால் |
| 12. | தேங்காய், நெய் | 1–2 வராகனெடை | |
| 13. | **பஞ்ச** பாடாண<br>செந்தூரம் | | |
| 14. | சூத வெண்ணெய் | | |
| 15. | காந்தரச வில்லை | 1/4 – 1<br>குன்றிமணியெடை | பனைவெல்லம்,<br>சர்க்கரை, தேன்,<br>நெய், வாழைப்பழம் |
| 16. | காந்த ரச பில்லை | 1–2 உளுந்தளவு | பனைவெல்லம் |
| 17. | சூதப் பதங்கம் | | |

| | | | |
|---|---|---|---|
| 18. | பித்த காமாலைக்கு எண்ணெய் | 1 கரண்டி | |

# அல்குல் புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 48. | புசண்டா ராமபாய மாத்திரை | ½ - 1 மாத்திரை | தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை |
| 49. | சரமாரித் தைலம் | | |
| 50. | புற்று பதங்கம் | 1/4 – 1/2 குன்றிமணியெடை | பசும்பால் |
| 51. | செங்கொட்டை தைலம் | 1–2 வராகனெடை | விளக்கெண்ணெய் + நெய் |
| 52. | கெந்தக சூரணம் | 1/2 – 1 வராகனெடை | வெண்ணெய், நெய், தேன், பறங்கிபட்டை, இளகம், |
| 53. | கெந்தக செந்தூரம் | 1/4 – 1/2 குன்றிமணி எடை | தேன், நெய், வெங்காயம் |
| 54. | நீலகண்ட இரச பதங்கம் | 1 1/2 வராகனெடை | நெய் |
| 55. | காந்த ரச பில்லை | 1–2 உளுந்தளவு | பனைவெல்லம் |
| 9 | புற்று புகை | | |

# ஈரல் புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 1. | புசண்டா ராமபாய மாத்திரை | ½ - 1 மாத்திரை | தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை |
| 2 | செம்பு தொட்டி பற்பம் | | |
| 3 | இராமபாண இடி மருந்து | | |

# அண்ட புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 2. | புசண்டா ராமபாய மாத்திரை | ½ - 1 மாத்திரை | தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை |
| 3. | சரமாரித் தைலம் | | |
| 4. | மன்மத சிந்தாமணி இரசு செந்தூரம் | 1–2 குன்றியெடை | முத்தருக்கற் செவியிலைசாறு |
| 5. | | | |
| 6. | | | |

# மூலை புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 7. | மேக ராசாங்க எண்ணெய் | 1 கரண்டி | |
| 8. | புற்று பதங்கம் | 1/4 – 1/2 குன்றிமணியெடை | பசும்பால் |
| 9. | நாக செந்தூரம் | | தேன், சித்திரலேசேர்பட்டை சூரணம் |

# நாக்கு புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 1. | சரமாரித் தைலம் | | |
| 2 | செங்காத்தாரி எண்ணெய் | 1 காசெடை | |
| 3. | கந்தக இரசாயணம் | 1/4 – 1/2 வராகனெடை | |

# தொண்டை புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 10. | செங்காத்தாரி எண்ணெய் | 1 காசெடை | |
| 11. | உத்திர இரச செந்தூரம் | 1/2 – 1 குன்றியெடை | ஆவாரை விதை தைலம் + வங்க பற்பம் |

# காது புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 12. | இலிங்க பதங்கம் | 2 அரிசி யெடை | பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைபழத்தை அரைத்த விழுது, பாலேடு வெண்ணெய் |

# மூக்கு புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 13. | இலிங்க பதங்கம் | 2 அரிசி யெடை | பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைபழத்தை அரைத்த விழுது, பாலேடு வெண்ணெய் |

# கபால புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 14. | வெள்ளீயச் செந்தூரம் | | இரசபற்பம் + சர்க்கரை |

# மூல புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 1. | புடத் தைலம் | | |

# வாய் புற்று

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 15. | செங்காத்தாரி எண்ணெய் | 1 காசெடை | |
| 16. | வெள்ளைச் சிலை | | |
| 17. | கந்தக இரசாயணம் | 1/4 – 1/2 வராகனெடை | |
| 4 | புற்று பதங்கம் | 1/4 – 1/2 குன்றிமணியெடை | பசும்பால் |
| 5 | கெந்தக ரசாயனம் | 1/4 – 1/2 வராகனெடை | |

# புற்று நோய்கள் (பொதுவாக)

| எண் | மருந்து பெயர் | அளவு | அனுபானம் |
|---|---|---|---|
| 18. | கருவங்க செந்தூரம் | 2–3 அரிசியெடை | தேன் |
| 19. | **பஞ்ச** பாடாண செந்தூரம் | 1–2 அரிசியெடை | தேன், இஞ்சிசாறு, நெய், விளக்கெண்ணெய், |
| 20. | குரு சஞ்சீவி மெழுகு | **¼ - ½** குன்றியெடை | பனைவெல்லம், சுக்கு, வெண்ணெய், இளக வகைகள் |
| 21. | இரச கெந்தி மெழுகு –1 | தேற்றாங் கொட்டையளவு | |
| 22. | இரச கெந்தி மெழுகு – 2 | தேற்றான் கொட்டையளவு | |
| 23. | வாலைரச மெழுகு | குன்றியளவு | பனை வெல்லம் |
| 24. | இரச வங்க புகை | சுண்டைக்காயளவு | |
| 25. | சகல மேகத்திற்கும் இரச கெந்தி ராசாங்க மெழுகு | | |
| 26. | இரசச் செந்தூரம் | | தி ரிகடுகு சூரணம் |
| 27. | சூத வல்லாதி உருண்டை | 1 உருண்டை | |
| 28. | கனை புற்றுக்கு மருந்து | | |
| 29. | சீனவல்லாதி மெழுகு | நெல்லிக்காயளவு | |
| 30. | சண்ட மாருதமை | குன்றியளவு | பனைவெல்லம் |
| 31. | சண்டரச பற்பம் | 1 அரிசியெடை | பனை வெல்லம் |

| | | | |
|---|---|---|---|
| 32. | தாளக பற்பம் | 1/4 பணவெடை | |
| 33. | சகல நோய்க்குமெண்ணெய் | | |
| 34. | கெந்தக பற்பம் | பணவெடை | |
| 35. | வீரரசபதங்கம் | நெல்லியெடை | |
| 36. | இரச கற்பூர புகை | | |
| 37. | குழிப்புண் எலும்பை பற்றிய ரணங்கட்கு களிம்பு | | |
| 38. | நாராயணச் செந்தூரம் | துவரம் பருப்பளவு | திப்பிலி சூரணம் + தேன் |
| 39. | காள மேக நாராயண செந்தூரம் | திரிகடுகு பிரமாணம் | திப்பிலி சூரணம் + தேன் |
| 40. | குக்கில் வல்லாதி இலேகியம் | சுண்டைக்காயளவு | |
| 41. | புற்று உசிதம் | | |
| 42. | பச்சை தைலம் | | |
| 43. | புரை மாறத் பச்சை தைலம் | | |
| 44. | கிரந்தியரையாப்பு எண்ணெய் | | |
| 45. | வச்சிரவல்லி சூரணம் | | |
| 46. | **பஞ்ச** பாடாண செந்தூரம் | 2 அரிசியெடை | |